
CANADA
முகவரி
MUHAVARY
மாதாந்த சஞ்சிகை
எண்: 3 பாதை: 1
செப்டெம்பர் 2014
யுத்த வடுக்களும் விசாரணையும்
முற்கூட்டிய தேர்தல்?
UNHRC adopts resolution on Sri Lanka
An upcoming Social Media, Specifically designed for you.
return to the feudal joy...
ERDEM
Eternal Research Development & Educational Management Inc.

Your House Comfort in your mind...

நேரடியாக விநியோகஸ்தரிடமிருந்து...

தரகர் ~~$~~ + முகவர் ~~$~~ + காட்சியறை ~~$~~ = சேமிப்பு $ ✓

TSSA — All our technicians are TSSA certified

Air Conditioner *from* **$ 1599**

Gas Line *from* **$180.00**



24/7 Service


FREE HOME ESTIMATES CALL:

416 986 9554

GREENI
HEATING&COOLING

Sales, Installation, Annual Maintenance & Repair

Creaa Design


45


72


57


29


25


60



Nallur Kumaran
Crafted to Compliment Her Beauty
North American Leaders in Pure Silk sarees
416 297 6797
367 Pitfield Road, Scarborough, ON M1S 3E5
நல்லூர் குமரன்
பட்டுப் புடவைகளின் சாம்ராஜ்யம்
20 வது வருட நிறைவை முன்னிட்டு
பட்டுப் புடவைகளின்
கண்காட்சியும்
மாபெரும் மலிவு விற்பனையும்
kurthies
New Salwar
Arriving This Week
Cotton Sarees
Modern Sarees
Lowest Price Guarantee
WORLD FAMOUS
PURE SILK KANCHIPURAM
COLLECTIONS
Between:-
McCowan/sheppard & McCowan/Hwy 401
Sheppard Ave. E
N
Midland Ave.
Brimley Rd
McCowan Rd.
Markham Rd.
Pitfield Rd
NALLUR KUMARAN
SHELL
GAS STATION
Invergordon Ave.
Channel 9
Milner Ave.
HWY 401
Progress Ave
Scarborough Town Centre
Ellesmere Rd.

முகவரி

'சிதம்பிப் போயுள்ள' இலங்கையின் அரசியல்!

'நாகதாளிப் பற்றையை' வெட்டி அழிப்பது ஒரு விஷப்பரீட்சை. இனவாத வெறியும், மத வெறிகளும் வேரூன்றியிருந்த நாட்டில் மதவாதமும் 'அலட்சிய அரசியலும்' குடிகுத்திவிட்டது. குறிப்பாக 83 ஜூலை முதல் முள்ளிவாய்க்கால் நிகழ்வுகள் வரை ஒரு வகையில் பாரிய 'குருக்ஷேத்திரப் போர்க்களமே' நடந்து முடிந்துள்ளது.

அடுத்து இனியென்ன? என் கேள்வி முடிவில்லாத 'தொனிகளோடு தொடர்கின்றது. அவலங்களுக்கு எல்லாம் எப்பொழுது முடிவும் தீர்வும் வரப்போகின்றது? இதுவரை மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளும், நிரந்தர அரசியல் தீர்வுகளுக்கான அடிகோலல்களும் அரச பயங்கரவாதத்தினாலும் சகல இணக்கமின் மைகளாலும் சீரழிந்து போய்விட்டன.

வட-கிழக்குப் பிரதேசமே இப்பொழுது அரச முனைப்புகளாலும், இராணுவ முனைப்புகளாலும் உழுது புரட்டப்படுகின்றன. அழிவுகளைக்கூடக் கணக்கெடுக்க முடியாதவகையில் எல்லாமே நடந்தேறிக்கொண்டிருக்கின்றமை தமிழ் பேசும் மக்களைத் துர்ப்பாக்கிய நிலைமைக்குத் தள்ளிக்கொண்டிருக்கின்றது!

வானம் பார்த்த பூமியில் வாழ்ந்த மக்கள் தமது வாழ்வுக்கு உறுதுணையாகப் பயன்படுத்திய நிலபுலங்கள் 'பயிர் பத்தாடை, காணி பூமி, வயல் வெளி அத்தனையும் தூர்ந்து போய்' எதிர்காலம் எப்படி இருக்கும் என்று ஏங்குவதே வாழ்க்கையாகி விட்டது. போர் வேகம் உக்கிரம் எல்லாம் தணிந்த பின்னர் இப்பொழுது தண்ணீருக்குக் கூட ஏங்கும் நிலை உருவாகி வருகின்றது.

நீண்ட காலமாக அரசாங்கம் அரசபயங்கரவாத முனைப்புகளோடு தண்ணீர் ஊற்றி வளர்த்த தேசிய இனப்பிரச்சினை வெறுமனே போரால் மட்டும் தீர்க்கப்படமுடியாதது. அரசியல் தலைமைகள் எல்லாமே தீர்க்கதரிசனமில்லாத உணர்வுகளோடு மந்தைக் கூட்டங்களாகத்தான் நடைபோடுகின்றன.!

மத்தளத்திற்கு இருபக்கத்தில் மட்டும் தான் அடி. இன்று இலங்கைத் தமிழ் மக்களுக்கு சகல பக்கங்களிலும் அடி. 'பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போல்' நாட்டின் தலைமைகள், யாவற்றையுமே ஓரக்கண்ணால் பார்க்க, சர்வதேசநாடுகளும், சமாதானம் பேசும் சக்திகளும்கூட நாடகமாடுகின்றன.

ஜனாதிபதி முதல் சகல அரசியல் தலைமைகளும் 'குருவிச்சை'களாகிப் போயுள்ளன. சர்வதேச உதவிகளின் மனிதாபிமான அனுசரணைகளை எல்லாம் 'விழுங்கிக் கக்கியபடி' அரசியற் சக்திகள் நாட்டாண்மைத்தனம் காட்டுகின்றன. 'அள்ளிக் கொடுக்குமாம் பெருமாள் அதைத் தட்டிப்பறிக்குமாம் அனுமார்' என்ற வகையில் தமிழினம் அரசியல் பச்சோந்திகளின் வசம் சிக்கியுள்ளது!

இன்று தேவையானது சரியான இலக்குகளுடனான அரசியல் தீர்க்கதரிசனம்! இது எங்கிருந்து யார் மூலமாக வரப்போகின்றது? புலம் பெயர்ந்து வாழும் மக்களின் மனங்கள் எல்லாம் பிறந்த மண்ணையே சுற்றிக்கொண்டிருக்கின்றன. அங்கும் இங்கும் என்ன நடைபெறுகின்றது என்ற ஆவல் எவருக்கும் மறைந்து விடவில்லை.

இப்பொழுது 'நம்பிக்கை வரட்சி, முடிவற்ற சோகம், சலனமற்ற வாழ்க்கை' என்ற நிலமையில், நேர்மையீனமான அரசியற் கருத்துக்களின் மத்தியில் தமிழ்பேசும் மக்கள் நிர்க்கதியான தன்மையுடனும் நம்பிக்கையற்ற உணர்வுகளுடனும் வாழ்க்கையைத் தொடர்வது வரலாறாகி வருகின்றது.

தமிழ்ப் பேசும் மக்கள் வேரிலிருந்து வேரடி மண்ணில் இருந்து அந்நியப்பட்டு உலகமெங்கும் சிதறிக் குடி பெயர்ந்து அலைவது வரலாறாகிவிட்டது. மொத்தத்தில் தமிழ்மக்களின் வாழ்க்கைப் போக்கே மாறிக்கொண்டிருக்கின்றது. இது ஒரு கலிகால விசித்திரம்!

இலங்கை மக்களின் சமாதான நகர்வுகளையும், தமிழ்ப் பேசும் மக்களின் அடிப்படையான சுயநிர்ணய உரிமையையும் பேரினவாத சக்திகளும், ஒட்டுண்ணிகளாக நகரமுற்படும் சர்வதேச நாடுகளும், தீர்க்கதரிசனமற்ற அரசியற் சக்திகளும் இஷ்டப்படி முறுக்கிக் கொண்டிருக்கும் வரை தேசிய சமாதானத்தையோ நிரந்தர அரசியல் அமைதியையோ எவரும் எதிர்பார்க்க முடியாது.

பயணங்கள் சறுக்குவண்டில் நகர்வுகளாகிக் கொண்டிருக்கின்றன. தேசிய சமாதானம், நிரந்தர அரசியற் தீர்வு என்பன மலினப்பட்டுப்போயுள்ளன. பேரினவாத அழுத்தங்களால் எல்லாமே சிதம்பிப்போயுள்ளன.

'இன-மதவாதத்திற்கு எவ்வளவு காலம் குடைபிடிக்கப் போகிறோம்'

–ஆசிரியர்



முகவரி

Editor in Chief
Kalasoori A. Sivanesaselvan MA, MSc.

Editorial Board
Dr. Vellaithamby Ameerdeen PhD.
Baskey T. Raj
Nadarajah Kamalaharan (Chennai)

Montreal Bureau Chief
N. Satchithananthan

Advertisements
Trinco George

Public Relations
T. Sivanesan

Technology
Gnanavathanan V R M

Layout & Design
Muhavary

Contact
5215, Finch Avenue East, Unit 263,
GTA Square,
Toronto, Ontario.
M1S 0C2
Canada.

e-mail: info@muhavary.com
phone: (+1) 416 628 6214
fax: (+1) 416 619 0335
web: muhavary.com

நன்றி வரிகள்...

காலத்தில் செய்த உதவி

"முகவரி"யின் வரவையிட்டு,
மகிழ்வுற்று அது நின்று நிலைக்க
ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய,
வழங்க முன்வந்த அனைத்து
வாசகர்கள், நண்பர்கள்
மற்றும் ஊடக நண்பர்கள்
அனைவருக்கும் எமது
மனமார்ந்த நன்றிகள்.

'முகவரி' மாத இதழை
முகவரி அலுவலகத்திலும்
பெற்றுக்கொள்ளலாம்.

சொந்தமான ஒரு வீடு உங்கள் வாழ்க்கையின் மிகப்பெரியதோர் முதலீடு

Buy, Sell and Invest

வீடு வாங்க விற்க



உங்கள் இல்லத்தை இலாபாகரமாக விற்பனை செய்ய
எம்மால் உங்களுக்கு உதவமுடியும் அழையுங்கள்

ஈசன் குலசேகரம் :416 835 1700
Sales Representative info@esanhomes.com

$399,900



Finch / Tapscott
TORONTO
Bedrooms : 3+2 Washrooms : 2

$499,999



Mccowan/Lawrence
TORONTO
Bedrooms : 3+2 Washrooms : 2
Kitchens: 2

$524,900



Markham, Lawrence
TORONTO
Bedrooms : 3 Washrooms : 4
Kitchens: 2

$554,900



Ellesmere & Markham
TORONTO
Bedrooms: 3+2 Washrooms: 2
Kitchens: 2

$599,900




Gore/ Ebenezer
BRAMPTON
Bedrooms : 4+2 Washrooms : 4
Kitchens: 2

$629,900



Cottrelle/Mcvean
BRAMPTON
Bedrooms : 4 Washrooms : 4

$660,000



Morningside/Old Finch
TORONTO
Bedrooms: 5+1 Washrooms: 4

$699,000



Staines / Steeles
TORONTO
Bedrooms : 4 Washrooms : 3

$749,900



Sheppard/Morningside
TORONTO
Bedrooms : 5 Washrooms :3

விக்கி வேலாயுதன் :416 457 7162
Sales Representative vvelauthan@yahoo.com



ஆலோசனைகளுக்கும்
நம்பிக்கையான சேவைகளுக்கும் நாடுங்கள்..

Office: 416-321-2228
Fax: 416-321-0002

RE/MAX
*RE/MAX Vision Realty Inc., Brokerage
*independantly owned and operated.

2210 Markham Road # 1 , Toronto, ON M1B5V6 www.esanhomes.com



யுத்த வடுக்களும் விசாரணையும்!

ஆத்மன

முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த யுத்த அனர்த்தின் வடுக்கள் இலங்கைத் தமிழ் சமூகத்தின் மனங்களில் ஆழமாய்ப் பதிந்தவை. அடைத்து வைக்கப்பட்ட சிறைக்குள் வகை தொகையாக வதைக்கப்பட்ட ஹிட்லரின் ஹொலேகாஸ்ட் படுகொலைகளைப் போல, தப்பிக்க வழியில்லாத் திறந்த சிறைக்கூடம் போல் ஒருபுறம் கடல் மறுபுறம் வாவியென அடைக்கப்பட்ட சிறுதுண்டு நிலத்துள் சிக்குண்ட பல லட்சக்கணக்கான மக்கள் மீது பொழிந்த குண்டுமழையில் முள்ளிவாய்க்கால் பிணக்காடாய் உறைந்தது. நிகழ்ந்தது என்ன என்று இப்போதுதான் விசாரணை தொடங்கியுள்ளது. இப்போதாகிலும் தொடங்கியதே என்ற ஒன்றையிட்டாவது நாம் ஆறுதலடைந்துகொள்வோம்.

ஆனால் அந்த விசாரணை போர்க் குற்ற விசாரணையல்ல. அது உண்மை கண்டறியும் விசாரணை. விசாரணையாளர்களின் மொழியில் சொல்வதானால் இரு தரப்பினராலும் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் அதோடு தொடர்பான குற்றங்கள் தொடர்பான விசாரணை. அவ் விசாரணை முள்ளிவாய்க்கால் அழிவுகள் குறித்ததாக மட்டுமன்றி, அதற்கு பல ஆண்டுகள் முன்னரும் பின்னரும் நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் பற்றியும் ஆராயவுள்ளது. அதாவது 2002 பெப்ரவரி 21ம் திகதி. அன்றைய இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனுக்குமிடையே நோர்வே அரசாங்கத்தின் மத்தியஸ்தில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட நாள்முதல் 2011 நவம்பர் 15ம் திகதிவரையிலான சுமார் 9 வருடம் 8 மாதம் நிகழ்ந்த சம்பவங்களை விசாரணைக்குட்படுத்தவுள்ளது. அவசியம் குறித்து இக் கால எல்லைக்கு வெளியாலும் விசாரணைகள் செல்லலாமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருவாளர்கள் மார்டி அதிசாரி (முன்னாள் பின்லந்து ஜனாதிபதி), சில்வியா கார்ட்ரைட் (முன்னாள் நியூசிலாந்து உயர் நீதிமன்ற நீதியரசர்), அஸ்மா ஜஹாங்கிர் (முன்னாள் பாகிஸ்தானிய மனித உரிமைக் கமிஷன் தலைவி) ஆகியோரின் வழிநடத்தலிலான 12 பேர் அடங்கிய விசாணைக்குழு இவ் விசாரணையை மேற்கொள்கிறது. விசாரணை ஏற்கெனவே ஜூன் நடுப் பகுதியிலிருந்து தொடங்கிவிட்டது. 10 மாத காலம் நடக்கவுள்ள இவ் விசாரணை 2015 ஏப்ரல் 15ம் திகதி நிறைவு பெறும். இருப்பினும் இடைக்கால அறிக்கைகள் இதற்கிடையேயும் சமர்ப்பிக்கப் படலாம். இந்த செப்டம்பர் மாதம் முதலாவது அறிக்கை ஐநாவிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்த விசாரணைகளை இலங்கையில் நடத்த இலங்கை அரசு இவ் விசாரணைக் குழு உறுப்பினர்களுக்கு விசா வழங்க மறுத்துவிட்டது. இந்தியாவும்கூட தன் நாட்டில் இவ் விசாரணையை நடத்த அனுமதிக்கவில்லை. எனினும் இவ் விசாரணையை சர்வதேச நாடுகளில் நடத்தலாமெனத் தெரிவித்து, அதற்கான முறைப்பாடுகளையும் சாட்சியங்களையும் தமக்கு அனுப்பி வைக்குமாறு ஐநா மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் கோரியுள்ளது. அதற்காக oisl_submissions@ohchr.org. என்ற மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்துமாறு அது உலகெங்குமிருந்து தகவல் தர விரும்புவோருக்குத் அறிவித்துள்ளது. இப்படிச் சாட்சியமளிப்பவர்களது பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுமெனவும் அது தெரிவிக்கிறது.

இப்படித் தகவல்களைத் திரட்டுவது முதற் கட்டமென்றும் அதன்பின் அத் தகவல்களை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைத் தாம் எடுப்பரெனவும் அது கூறியுள்ளது. இவ் விசாரணைக் குழுவினர் கொலைகள், காணாமற் போனவர்கள், இடம்பெயர்ந்தவர்கள், சட்டவிரோதமாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளோர், பெண்களுக்கெதிரான வன்முறைகள், சித்திரவதைகள் போன்றவை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வர். இவ் விசாரணைகளில் அளிக்கப்பட்ட சாட்சியங்களின் இரகசியம் பேணப்படும். யார் யார் விசாரிக்கப் படுகிறார்கள், யார் அதை விசாரிக்கிறார்கள், எங்கே அவ் விசாரணைகள் நடந்தன என்பன எவருக்கும் தெரியப்படுத்தப் படாது என்கிறார்கள் விசாரணையாளர்கள்.

இந்த விசாரணைகளின் பின் விசாரணையின் தரத்தை உயர்த்துவதற்காக சர்வதேச நீதிமன்ற விசாரணை ஒன்றுக்கும் ஐநா குழு கோரிக்கை விடுக்கலாமென எதிர்பார்க்கப் படுகிறது. இதேவேளை உலக நாடுகள் இவ் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென எதிர்பார்க்கும் விசாரணைக் குழு, இதற்காக 1948ல் ஐநா சாசனத்தின் கீழ் ஐநா மனித உரிமை அலுவலக அதிகாரிகளுக்குள்ள இராஜதந்திர அந்தஸ்தைப் பயன்படுத்திக் கொள்ளலாமெனவும் இக் குழு எண்ணுகிறது. இச் சாசனத்தின்படி அனைத்து அரசாங்கங்களும் ஐநா விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது கடமையாகும்.



முழுமையான திருப்தியளிக்கும் வகையில் இல்லாவிட்டாலும் இவ் விசாரணைகளை முடிந்த அளவு முயற்சி செய்து தன் பதவிக் காலம் முடிவதற்குள் அரங்கேற்றியுள்ள ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதன் பிள்ளை அதைச் சாதித்த பெருமையோடு ஓய்வு பெற்றுக் கொள்ள அவரது இடத்தை ஜோர்டான் நாட்டு இளவரசர் சயீட் அல் ஹுசைன் பொறுப்பேற்கிறார். இதனை ஒப்பேற்றும் முயற்சியில் பிள்ளை அவர்கள் இலங்கை அரசாங்க அமைச்சர்களால் பெரிதும் அவமதிக்கப்பட்டார். விடைபெற்றுச் செல்லும் அவருக்கு நன்றிசொல்லிவிட்டு, இந்த விசாரணையின் பெறுபேறை எதிர்பார்த்துக் காத்திருப்போம்.

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். குறள் 202

தனக்கு இன்பம் தரும் என்று எண்ணி ஒருவன் செய்யும் தீய செயல்கள் பின் தீமையையே தருதலால் அத்தகைய தீய செயல்கள் தீயைக் காட்டிலும் கொடியன என்று அஞ்சி அவற்றை விலக்கிடல் வேண்டும்.

போர்க் குற்றம்

கௌஷிகன்

போர்க்குற்றம் எனப்படுவது போர் விதிமுறை அல்லது அனைத்துலக மனிதாபிமானச சட்டத்திற்கு முரணாக செயற்படுவதே போர்க்குற்றங்களாகும். அவ்வாறான சில விதிமுறை மீறல்களில் கொலை, வலிந்து கவரப்பட்ட நிலப்பரப்பில் குடியிருக்கும் அப்பாவி குடிமக்களை சரிவர நடத்தாதல் மற்றும் அவர்களை வதை முகாம்களுக்கு குடியேற்றல், போர் பிணையாளர்களை கொலை செய்தல் அல்லது சரிவர நடத்தாதல், பிணையாளர்களை கொல்லுதல், இராணுவ அல்லது குடிசார் தேவை ஏதும் இல்லாத நிலையில் ஏதேனும் அழிவுகள் மற்றும் நகர்ப்புறங்களையோ அல்லது நாட்டுப்புறங்களையோ அழித்தல் என்பனவும் உள்ளடங்கும்.

மேலும் நாட்டிற்குள்ளும், அனைத்துலக ரீதியிலும் ஆயுதப் போராட்டங்கள் தொடர்பான அனைத்துலகச் சட்டங்கள எனலாம். இவ்விதிகளின் படி சில மீறல்கள் மிகவும் பாரதூரமானவை. அப்படி மீறுபவர்கள் உள்ளூரிலும், அனைத்துலக மட்டத்திலும் அக்குற்றங்களுக்கு அவர்களே பொறுப்பாகின்றனர். போரில் ஈடுபடாதவர்கள் அல்லது போரில் தொடர்ந்தும் ஈடுபடாதவர்களைப் பாதுகாப்பதற்காக இவை இயற்றப்பட்டன.

போர்க்குற்றம் சுமத்தப்பட்ட உலகத் தலைவர்களும் அதிகாரிகளும்

உலகில் எத்தனையோ போர்கள் நடந்துவிட்டன. சர்வதேச யுத்தங்களும் நடந்தன. உள்நாட்டு யுத்தங்களும் நடந்தன. நடக்கின்றன. இத்தகைய யுத்தங்களில் பல இனப் படுகொலைகள், மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள், யுத்த விதிகளை மீறிய அனர்த்தங்கள், பேரழிவுகள் பல நிகழ்த்தப்பட்டுள்ளன. இவை தொடர்பாக உலகெங்குமிருந்து நியாயம் வேண்டி எழுப்பப்பட்ட குரல்களால் இப் படு பாதகங்களின் சூத்திரதாரிகளெனச் சந்தேகிக்கப் பட்ட பல்வேறு உலகத் தலைவர்கள் மற்றும் உயர்மட்ட அதிகாரிகள் மீது போர்க்குற்ற விசாரணை நடத்த சர்வதேச தீர்ப்பாயங்கள் முடிவு செய்தன. இலங்கையின் நிகழ்ந்த முள்ளிவாய்க்கால் பேரழிவைத் தொடர்ந்து அதில் நிகழ்த்தப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பான சர்வதேச விசாரணை வேண்டும் என்று நாம் எழுப்பி வந்த குரல்கள் செவிமடுக்கப் பட்டு அது தொடர்பிலான ஐநா விசாரணைகள் ஆரம்பித்திருக்கும் இத் தருணத்தில், இவ்வாறு சர்வதேச ரீதியில் குற்றம் சுமத்தப்பட்ட உலகத் தலைவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் பற்றி அறிந்துகொள்வது பொருத்தமானதல்லவா? இது எமக்கேற்பட்ட அழிவுக்குக் காரணமாணவர்களும் அதற்கான பதில் சொல்ல நேரிடும் என்பதைச் சுட்டிக்காட்டுவதாயும் இத் தருணத்தில் அமையும்.


கீழே உள்ளது அவ்வாறாக போர்க் குற்றம் தொடர்பில் குற்றம்சாட்டப் பட்ட அரச தலைவர்கள், அரசாங்க அதிகாரிகளின் பட்டியலாகும்.

இரண்டாம் உலகப் போருக்குப் பிந்திய காலத்தில்:

* ஜெர்மனிய கடற்படைத் தளபதியும் அரச தலைவருமான **கார்ல் டோனிட்ஸ்**
* ஜப்பானிய பிரதமர்களும் ஜெனரல்களுமான **ஹிடேக்கி டோஜோ** வும் **குனியாக்கி கொய்சோ** வும்
* முன்னாள் யூகோஸ்லோவிய ஜனாதிபதி சொலொபோடான் **மிலோசேவிக்** - இவர் விசாரணை ஆரம்பிக்கப்பட்டு 4 வருடங்களின் பின்னர் 2006ம் ஆண்டு விசாரணை முடியுமுன்னரே தடுப்புக் காவலிலேயே இறந்தார்.
* முன்னாள் லைபீரிய ஜனாதிபதி **சார்ல்ஸ் டெய்லர்**. - இவர் ஹெய்க்கிற்கு கொண்டுவரப்பட்டு போர்க் குற்றஞ் சாட்டப்பட்டு 2007 முதல் 2011 வரையான விசாரணையின் பின் ஏப்ரல் 2012இல் தண்டனைத் தீர்ப்பு வழங்கப் பட்டார்.
* முன்னாள் பொஸ்னிய, சேர்பிய ஜனாதிபதி **ரடோவான் கராட்ஸிச்**. - ஜூலை 18, 2008 அன்று பெல்கிரேடில் கைது செய்யப்பட்டு பெல்கிறேட் போர்க் குற்ற நீதி மன்றின் முன் கொண்டுவரப் பட்டார். பின்னர் நெதர்லாந்துக்கு நாடு கடத்தப்பட்டு தற்போது ஹேக்கில் முன்னாள் யூகோஸ்லாவியாவுக்கான சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் தடுப்புக்காவலில் உள்ளார். 2010ம் ஆண்டு இவர்மீதான விசாரணை ஆரம்பமானது.
* சூடான் நாட்டின் இன்றைய தலைவர் **ஒமர் அல்-பஷீர்** - டார்பூரில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்காக விசாரணைகளை எதிர்நேக்குகிறார்.
* முன்னாள் லிபிய ஜனாதிபதி **முகமட் கடாபி** - 2011ம் ஆண்டு லிபிய உள்நாட்டுப் போரின் போது ஆர்ப்பாட்டக் காரர்களையும் பொதுமக்களையும் கொல்ல ஆணையிட்டமைக்காக போர்க் குற்றம் சாட்டப்பட்டார். எனினும் 2011ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஆரம்பமாக இருந்த விசாரணைகளை எதிர்கொள்ளுமுன்னமே கொல்லப்பட்டார்.



Karl Dönitz



Slobodan-Milosevic



Charles G

போர்க்குற்றச்சாட்டுக்கு உள்ளான ஏனைய அதிகாரிகள்

* **யொஷிஜிரோ உமேசு** - ஜப்பானிய ஏகாதிபத்தியகால ஜெனரல்
* **கெஷய்ஷிரோ இட்டாகாக்கி** - ஜப்பானிய ஏகாதிபத்தியகால போர் மந்திரி
* **ஹெர்மன் கோரிங்** - நாசி ஜெர்மனிய ஆகாயப்படையின் தளபதி
* **ஓர்ண்ஸ்ட் கால்ட்டன் புறுணர்** மற்றும் **அடொல்ப் ஈக்மன்** - நாசி படைப்பிரிவான எஸ்எஸ் இன் உயர் அதிகாரிகள்
* **வில்ஹெம் கெய்ட்டல்** - நாசி ஜெர்மனியின் இராணுவ உயர் பீடத்தின் தலைவன்
* **எரிக் ரேடர்** - நாசி ஜெர்மனியின் கடற்படைத் தளபதி
* **அல்பேட் ஸ்பியர்** - நாசி ஜெர்மனியின் போர்த் தளபாடங்கள் மற்றும் போர் சார்ந்த உற்பத்திக்கான மந்திரி
* **வில்லியம் கலி** - வியட்னாமின் மை லாய் படுகொலையின் சூத்திரதாரியான அமெரிக்க இராணுவ லெஃப்டினென்ட்
* **ரட்கோ மிலாடிக்** - பொஸ்னியப் போரின் போதான மனித உரிமை மீறல்களுக்காக இனவழிப்புக் குற்றம் சாட்டப்பட்வர்
* **ஜோசப் கோனி** - உகண்டாவில் இயங்கிய "ஆண்டவனின் எதிர்ப்புப் படை (Lord's Resistance Army) எனும் கெரில்லாப் படையின் தலைவன்

கம்போடிய யுத்தக்குற்ற விசாரணை

88 வயதில் தண்டனை!

கம்போடியாவில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பான தீர்ப்பினை சென்ற ஆகஸ்ட் 7ம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் யுத்தக் குற்ற தீர்ப்பாயம் அறிவித்தது.

அதன்படி யுத்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட நோன் சே மற்றும் கியு சம்பன் ஆகிய இரண்டு இராணுவ உயர் அதிகாரிகளுக்கு ஆயுள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

1980களில் இடம்பெற்ற கம்போடிய யுத்தத்தில் பாரிய போர்க்குற்றங்கள் இடம்பெற்றதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அந்த காலப்பகுதியில் கம்போடியாவின் தலைவராக இருநத பொல்பொட்டினால் முன்னெடுக்கப்பட்ட யுத்தத்தில் சுமார் இரண்டு மில்லியன் பொது மக்கள் வரையில் கொல்லப்பட்டனர்.

எனினும் 1998ம் ஆண்டு பொல்பொட் உயிரிழந்தார்.

இந்த யுத்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட நோன் சே மற்றும் கியு சம்பன் ஆகிய இரண்டுபேர் மாத்திரமே தற்போது உயிருடன் உள்ளனர்.

அவர்களுக்கு எதிரான தீர்ப்பே தற்போது 34 ஆண்டுகளின்பின் - வழங்கப்பட்டது. மேலும் குற்றம் சாட்டபட்டுள்ள இருவரும் தற்போது முதுமை எய்தி 83 மற்றும் 88 வயதுடையவர்களாக உள்ளனர்.

உங்களின் சகல விதமான மோட்கேஜ் தேவைகளையும்

சிறந்த முறையில் பூர்த்தி செய்யப்படும்!



BonaFide
Mortgage Solutions Inc.
the true freedom

SUREN NATHAN
MORTGAGE BROKER

416 436 1111

7 Eastvale Drive, Unit 203, Markham, Ontario L3S-4N8
Office: 416 548 7475 | Fax: 416-548-7496 | Email: suren@bmsic.com



ஐ.நா. வல்லுநர் குழுவின் இலங்கையில் போர்க்குற்ற அறிக்கையின் சாரம் -பூங்குழலி-

இலங்கையில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வந்த ஆயுதப்போர் 2009 மே 18 அன்று முடிந்ததாக இலங்கை அரசு அறிவித்த ஒரு வாரத்திற்குள் 2009 மே 23 அன்று ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கி மூன் இலங்கைக்குச் சென்றார். இலங்கை அரச விமானத்தில் போர்ப்பகுதிகளைச் சுற்றிப் பார்த்தார். பின்னர் இலங்கை அரசு அழைத்துச் சென்று ஒரு "மாதிரி முகாமை" காண்பித்தது. கொழும்பு திரும்பி, இலங்கை அதிபர் ராஜபக்ஷாவுடன் இணைந்து ஒரு கூட்டறிக்கை வெளியிட்டார்.

அவ்வறிக்கையில், இலங்கையில் நடந்த நிகழ்வுகள் குறித்து பொறுப்பேற்பதற்கான நடவடிக்கை களைப் பான் கி மூன் வலியுறுத்தினார். இலங்கை அரசு அதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாக உறுதி அளித்தது.

நரகத்தைக் கண் முன் கொணர்ந்த கொடூரம்!

இந்த அறிக்கை வெளியிட்டு ஏறத்த ஓராண்டிற்குப்பிறகு, 2010 ஜூன் 22 அன்று, இந்த அறிக்கையின் உறுதிப்பாட்டைச் செயல்படுத்துவதற் தனக்கு ஆலோசனை வழங்க ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூன் ஒ வல்லுநர் குழுவை அமைத்தார்.

இலங்கையில் நடைபெற் ஆயுதப்போரின் இறுதிக் கட்டங்களில் உலகலாவிய மனிதநேய மற்றும் மனித உரிமைச் சட்டங்கள் மீறப்பட்டதன் தன்மைகளையும் அதன் வீச்சையும் கணக்கிற் கொண்டு, பொறுப்பேற்கும் நடைமுறைகள் குறித்த சாத்தியக்கூறுகள் பொருந்தக் கூடிய உலகளாவிய நடைமுறைகள் மற்றும் ஒப்பிடக்கூடிய அனுபவங்கள் குறித்து ஐ.நா. பொதுச் செயலாளருக்கு ஆலோசனை வழங்குவதே குழுவிற்கு வழங்கப்பட்ட பணியாகும். இக்குழுவின் தலைவராக, மர்சூகி தருஸ்மன் (இந்தோனேசியா), உறுப்பினர்களாக ஸ்டீவன் ரட்னர் (வட அமெரிக்கா) யாஸ்மின் சூகா (தென்னாப்பிரிக்கா) ஆகியோரைப் பொதுச் செயலாளர் நியமித்தார். 16 செப்டம்பர் 2010 அன்று குழு அதிகார பூர்வமாகச் செயறபடத் தொடங்கியது.

இதற்கிடையே"நிரந்தர மக்கள் தீர்ப்பாயம்" என்ற அரசு சாரா அமைப்பு ஒன்று, இலங்கையில் நடந்த போர் குற்றங்கள் குறித்த வெளிப்படையான மக்கள் விசாரணையைக் கடந்த 2010 ஜனவரி 14,15,16 தேதிகளில் நடத்தி 2010 ஜனவரி 16 அன்று தனது அறிக்கையை வெளியிட்டது. இதுவே இலங்கை அரசு போர்க்குற்றங்கள் செய்திருப்பதை ஏற்றுக்கொண்ட முதலாவது பன்னாட்டு அமைப்பாகும்.





அதோடு பிரிட்டனைச் சேர்ந்த தொலைக்காட்சி நிறுவனமான சனல்4 போர் முடிந்ததாக அறிவிக்கப்பட்டதிலிருந்து, தொடர்ந்து இலங்கை அரசின் வன் செயல்களை, போர்க்குற்றங்களை நிரூபிப்பதற்கான சாட்சியங்களைச் சேகரித்து வெளியிட்டது.

குறிப்பாக விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் இளைஞர்கள் சிலர், உடைகள் களையப்பட்டு கண்கள் கட்டப்பட்டு,கைகளும் பின்னால் கட்டப்பட்ட நிலையில் சுட்டுக்கொல்லப்படும் காட்சிகளை அது வெளியிட்டது. இது இலங்கையில் நடைபெற்ற கொடூரங்கள் குறித்து உலகெங்கும் முதன்முதலாக அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியது.

இவற்றிற்குப் பிறகே ஐ.நா. பொதுச் செயலாளரின் வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, அது தன் பணிகளைத் தொடங்கியது.

வல்லுநர் குழுவின் பணிகள்:

ஐ.நா. வின் வல்லுநர் குழு தன் பணிகளை நிறைவேற்றுவதற்கான ஒத்துழைப்பை அளிக்க இலங்கை அரசு மறுத்துவிட்டது. வல்லுநர் குழு பலமுறை கோரியும் அவர்கள் இலங்கைக்குப் பயணம் செய்து நிலவரங்களை நேரடியாக அறிந்து கொள்ள அனுமதிக்க இலங்கை அரசு மறுத்து விட்டது. இந்த இடர்களுக்கு இடையிலேயே வல்லுநர் குழு, வெளிப்படையான அறிக்கைகள் மூலம் இலங்கையில் போரின் இறுதிக்கட்டங்களில் நிகழ்ந்தவை குறித்த சாட்சியங்களை அளிக்க முன் வருமாறு மக்களிடம் வேண்டுகோள் விடுத்தது. அதற்கு பதிலாகக் கிடைத்த ஆயிரக்கணக்கான வாக்குமூலங்களையும், பிற சான்றுகளையும் பகுத்துஆராய்ந்தே இவ்வறிக்கையை வல்லுநர் குழு வெளியிட்டுள்ளது. இவற்றைத் தவிரவும், ஐ.நா. விடமே போரின் இறுதிக்கட்டங்கள் குறித்து பெருமளவு ஆவணப்பதிவுகள் இருந்ததாக அறிக்கை குறிப்பிடுகிறது. ஐ.நா. வின் ஆவணங்களுக்கு வலு சேர்க்கவே சாட்சியங்கள் பயன்பட்டன என வல்லுநர் குழு தெரிவித்துள்ளது.

ஏறத்தாழ 5 மாதங்கள் தனது ஆய்வினை மேற்கொண்ட வல்லுநர் குழு 2011 மார்ச் 31 அன்று தனது அறிக்கையை வெளியிட்டது.





அறிக்கையின் சாரம்:

அறிக்கை முதல் பகுதியிலேயே, குழு தான் கண்டறிந்தவற்றின் தீவிரத்தை அழுத்தமாக உணர்த்தியுள்ளது.

'நம்பத்தகுந்தவை என குழு அறிந்துணர்ந்த குற்றச்சாட்டுக்கள் போரின் இறுதிக் கட்டத்தில் நடந்தவைகள் பற்றி இலங்கை அரசு இது நாள் வரை கூறிவந்த நிலைக்கு மாறான ஒரு நிலையை வெளிக்கொண்டு வந்துள்ளது. "பொதுமக்களில் எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படக் கூடாது" என்ற கொள்கையுடன் தான் ஒரு மனித நேய மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதாக அரசு கூறியது. ஆனால் நேர் எதிராக, குழு நம்பத்தகுந்த குற்றச்சாட்டுக்களைக் கண்டறிந்துள்ளது.

தான் கண்டறிந்தவற்றின் அடிப்படையில் கீழ்காணும் குற்றச்சாட்டுக்களைக் குழு முன் வைக்கிறது.

இலங்கை அரசு ஐந்து முக்கிய வகைகளில் மோசமான அத்துமீறல்களை மேற்கொண்டதற்கான தகுதி வாய்ந்த குற்றச் சாட்டுக்களைக் குழு கண்டறிந்துள்ளது.

1. பரவலான குண்டு வீச்சின் மூலம் பொதுமக்களைக் கொன்றது.
2. மருத்துவமனைகள் மற்றும் பிற மனித நேய அமைப்புக்கள் மீது குண்டு வீச்சு நடத்தியது.
3. மனித நேய உதவிகளை மறுத்தது.
4. இடம் பெயர்ந்த மக்கள் மற்றும் சந்தேகத்திற்குரிய புலிகள் இயக்க உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளிட்ட, போரில் தாக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர் பிழைத்தவர்கள் ஆகியோர் அனுபவித்த மனித உரிமை மீறல்கள்.
5. ஊடகங்கள் மற்றும் அரசை விமர்சித்த பிறர் மீது நடந்தமனித உரிமை மீறல்கள்

இதேவேளை, போரின் இறுதிக் கட்டங்களில் விடுதலைப்புலிகளோடு தொடர்புடையதாகவும் ஆறு குற்றச்சாட்டுக்களை இவ் ஐ.நா. வல்லநர் குழு முன்வைத்திருக்கிறது.

இவற்றோடு போரின் கொடூரத்தையும் நடந்த அத்துமீறல்களையும் அறிக்கையின் முன் பகுதி சுருக்கமாக விவரிக்கிறது.

செப்டம்பர் 2008 முதல் 19 மே 2009 வரையிலான காலகட்டத்தில் இலங்கை இராணுவம், வன்னிக்குள் தனது இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள, மிகப்பாரிய மற்றும் மிகப் பரவலான குண்டு வீச்சுக்களைப் பயன்படுத்தியது. இதில் மிகப் பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இந்த நடவடிக்கை வன்னியின் மக்களைத் தனிமைப்படுத்தியது.

இந்த நடவடிக்கையானது வன்னி மக்கள் தொகையைப் பெருமளவு அழித்தது. ஏறத்தாழ 3,30,000 பேர் பொதுமக்கள், தொடர்ந்து சுருங்கிக் கொண்டு வந்த நிலப்பரப்பிற்குள் சிக்கியிருந்தனர். குண்டு வீச்சுகளுக்குத் தப்பி ஓட முயன்றபோதும் இயலாமல், விடுதலைப் புலிகளால் பணயமாக வைக்கப்பட்டிருந்தனர்.


ARUN BAKERY
ARUN BAKERY
TAKEOUT & CATERING
905 303 4141
சுவை மிகு இலங்கை, இந்திய சைவ. அசைவ உணவுவகைகள் பாண், கேக் போன்றவற்றையும் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
தங்கள் வீட்டில் நடைபெறும் அனைத்து விசேட வைபவங்களுக்கும் தேவையான உணவு வகைகளை முன்கூட்டியே ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம்
9699 Jane Street, Unit 23 Maple, ON. L6A 0A4
Jane&Major Mackenzie


fashion & fancy House
Opening hours: Mon-Sun 12.00 Noon to 9.-00 p.m.
காஞ்சிபுரம்,
பட்டுச்சேலை,
முகூர்த்தப்பட்டு,
பான்சி சேலைகள்,
பெண்களுக்கான
நவீன ஆடைகளையும்
எண்ணம் போல் தெரிவு செய்ய
Wide Selection of:
Kanjipuram Silk Sarees
Bridal Sarees
Ceremonial Sarees
Ladies Fancy Sarees
Lenga Suits
5215 Finch Ave East
#205 GTA Square Mall (2nd Floor)
Scarborough, ON M1S 0C2,
416 492 9416, 416 688 9416


JAI SAI FLORIST
Available for Wedding, Pooja and other Occasions
JASMINE 7 DAYS AVAILABLE
Wedding Flower, Wedding Bouquet, Funeral Wreaths
Casket Adornment, Casket Spray, Standing Sprays
416-396-9888 / 416-505-1252 / 647-707-0369
5215 Finch Ave East. #123 GTA Square, Scarborough, ON
www.jaisaiflorist.com



ஊடகங்கள் மற்றும்பிற விமர்சகர்களை மிரட்டவும் அமைதிப்படுத்தவும் அரசு பல வகையான அச்சுறுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதில் வெள்ளை வேன்கள் ஆட்களைக் கடத்திகாணாமல் போகச் செய்வதும் ஒரு வழிமுறை ஆகும்.

பொது மக்களை, பாதுகாப்பு பகுதி என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளில் பெருமளவு திரளச் செய்து கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்லை என்ற உறுதியையும் அளித்து பாதுகாப்பு வலயத்தில் திரண்ட மக்கள் மீது மூன்று முறை தொடர்ச்சியாக பாரிய குண்டு வீச்சுக்களை அரசு மேற்கொண்டது.

ஐ.நா. அமைப்பினர் தங்கியிருந்த குடில், உணவு வழங்கு வரிசைகள் மற்றும் காயம்பட்டவர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களைக் கடற்கரையில் இருந்து அழைத்துக்கொண்டு செல்ல வந்திருந்த உலகளாவிய செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பல்களுக்கு அருகே என பொது மக்கள் கூடிய இடங்களில் அரசு குண்டுவீசியது. ஐ.நா., செஞ்சிலுவைச் சங்கம் போன்றவர்கள் எச்சரித்ததையும் மீறித் தனது சொந்த உளவுத்துறை, அதன் விளைவுகளை விளக்கியதை மீறியும் அது குண்டு வீச்சை மேற்கொண்டது. போரின் இறுதிக்கட்டங்களில் பெருமளவிலான மக்கள் இறந்தது அரசின் குண்டுவீச்சினால் தான்.

வேவு விமானங்கள் மூலம் துல்லியமாகத் தெரிந்திருந்தும், அரசு திட்டமிட்டே மருத்துவமனைகள் மீது நேரடியாக குண்டுகளை வீசியது. வன்னியில் உள்ள அனைத்து மருத்துவமனைகளும் குண்டுவீச்சினால் தாக்கப்பட்டுள்ளன. அதில் சில தொடர்ச்சியான தாக்குதல்களுக்கு ஆளாகின. இந்த இடங்களைப் பற்றி நன்கு அறிந்திருந்தபோதுமே அரசு இதனைச் செய்தது. மேலும் போர் நடந்த பகுதியில் இருந்த மக்களுக்கு உணவு, மருத்துவ உதவிகள் குறிப்பாக அறுவைச் சிகிச்சைக்கான உபகரணங்கள் போன்ற மனித நேய அடிப்படையிலான உதவிகளை மறுத்ததன் மூலம் அவர்களின் துன்பத்தைக் கூட்டியது. இந்த நிலையில் போர்ப் பகுதியில் இருந்த மக்களின் எண்ணிக் கையை அது வேண்டு மென்றே குறைத்து மதிப்பிட்டது. சனவரி முதல் மே 2009 இற்குள் பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். அதில் பெரும்பான்மை யானவர்கள் அடையாளம் தெரியாதபடி போரின் இறுதிக்கட்டங்களில் நடந்த கொடூரத் தாக்குதல்களிலேயே உயிரிழந்தனர்.

போரில் பாதிக்கப்பட்டவர்களும், பிழைத்தவர்களும் போர் நடைபெற்ற பகுதியில் இருந்து வெளியேறிய பிறகு அரசு அவர்களுக்கு மேலும் துன்பத்தையே அளித்தது. விடுதலைப்புலிகள் என சந்தேகத்திற்கு ரியவர்களை அடையாளம் காண்பதற்கான சோதனை எந்த வெளிப்படைத் தன்மையுடனோ அல்லது பொது நபர்களின் முன்போ நடைபெறவில்லை. தனிமைப்படுத்தி அழைத்துச் செல்லப்பட்டவர்களில் சிலர் கொல்லப்பட்டுள்ளனர். சில பெண்கள் பாலியல் வன்புணர்விற்கு ஆளாக்கப்பட்டிருக்கலாம். எஞ்சியிருந்தவர்கள் காணாமல் போயினர். இது அரசு அமைத்த குழுவின் முன் சாட்சியமளித்த அவர்களின் மனைவிமார் மற்றும் உறவினர்களின் ஊடாகத் தெரியவருகிறது. இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் வெளி உலகத் தொடர்பற்ற முகாம்களிலேயே வைக்கப்பட்டடிருந்தனர்.



முகாமின் கொள்ளவுக்கு மீறிய மக்கள் கூட்டம் காரணமாக மிக மோசமான சூழலில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களின் மீதான அடிப்படை சமூக பொருளாதார மற்றும் பொருளாதார உரிமைகள் மறுக்கப்பட்டது. இதன் காரணமாக தேவையின்றி பல உயிர்கள் இறந்தன. முகாம்களில் இருந்த சிலர் விசாரணைக்குட்படுத்தப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டனர். விடுதலைப் புலிகள் என சந்தேகிக்கப்படுபவர்கள் எவ்வித வெளியுலகத் தொடர்புமற்ற இடங்களுக்கு மாற்றப்பட்டனர். இதனால் மேலும் பல துன்புறுத்தல்களுக்கு ஆளாகக்கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.



அறிக்கையின் உள்ளே, நிகழ்வுகளை விவரித்துள்ள வல்லுநர்குழு, ஓர் அதிகார பூர்வ அறிக்கைக்கான மரபுகளைக்கடந்து மிக வெளிப்படையான சொற்களைப் பயன்படுத்தியுள்ளது.

'குழந்தைகளின் உடல் பகுதிகள் வெடித்து மேலுயர்ந்த மரங்களில் ஒட்டிக்கிடந்தன' (பத்தி 85)


'கறுப்புப் புகையும் இறந்த உடல்களின் நெடியும் காற்றை நிரப்பியது. பட்டினி கிடக்கும் தங்களின் குழந்தைகளுக்கான உணவுக்காகவும் காயம்பட்ட அல்லது செத்துக்கொண்டிருப்பவர்களுக்கு உதவவும் சில மக்கள் பிச்சை எடுத்தனர். இந்தக் காட்சியானது நரகத்தைக் கண் முன் கொண்டு வருவதைப் போன்று இருந்ததாக விவரிக்கப்பட்டது.' (பத்தி 118)

'வன்னியில் நடைபெற்ற ஆயுதப்போரின் இறுதியைக் குறிக்கும் நாளாக மே 18, 2009 இருந்தது. செஞ்சிலுவைச் சங்கத்தின் சொற்களில் 'இறுதி நாட்கள் கற்பனைக்கு எட்டாத மனிதப் பேரழிவை ஏற்படுத்தின' (பத்தி 123)



சாரமாக, உலகளாவிய மனித உரிமைச் சட்டங்கள் மற்றும் மனிதநேய சட்டங்கள் மீறப்பட்டதையும் போர்க்குற்றங்கள் நடைபெற்றதையும் அறிக்கை தக்க சான்றுகளோடு நிறுவுகிறது.

தெரிந்தே தாக்கப்பட்ட மருத்துவ மனைகள்! மருந்தின்றியே மடிந்தன உயிர்கள்!



இலங்கை அரசு மீதான ஐ.நா. வல்லுநர் குழுவின் குற்றச் சாட்டுக்கள்:

இலங்கை அரசு மீது 5 குற்றச்சாட்டுக்களை குழு வைக்கிறது. ஒவ்வொன்றிற்கும் தக்க சான்றுகளை அளித்து உறுதிப்படுத்துகிறது.

குறிப்பாக, மருத்துவமனைகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களைத் தேதிவாரியாக அறிக்கை பட்டியலிடுகிறது. ஐ.நா. வின் பிரதிநிதிகள் போர்ப் பகுதிகளில் இருந்தபோதே அவ்வாறான தாக்குதல்கள் நடைபெற்றதை அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

29 ஜனவரி முதல் 4 பிப்ரவரி வரையிலான ஒரு வார காலத்தில் புதுக்குடியிருப்பு மருத்துவமனை தினமும் எம்.பி.ஆர்.எல்கள் (மட்டி பரல் ரொக்கட் லோஞ்சர்) மற்றும் பிற ஆர்டிலறிகளால் தொடர்ந்து தாக்கப்பட்டது. குறைந்தது ஒன்பது குண்டு வீச்சுக்கள் நேரடியாக மருத்துவமனையைத் தாக்கின. இதனால் ஏற்கனவே காயப்பட்டிருந்த பல நோயாளிகளும், மருத்துவமனை ஊழியர்களும் கொல்லப்பட்டனர். அறுவைச்சிகிச்சை அரங்கும் கூடத் தாக்கப்பட்டது. பிப்ரவரி 4, 2009 அன்று மருத்துவமனை தாக்கப்பட்ட போது 2 செஞ்சிலுவைச் சங்க பன்னாட்டு ஊழியர்கள் இறந்தனர். குண்டு வீச்சுக்கள் இலங்கை ராணுவத்தின் நிலைகளில் இருந்தே வந்திருந்தன.' (பத்தி 91)

அதிலும் குறிப்பாக ஆளற்ற வேவு விமானங்களிலிருந்து அடையாளம் காணக்கூடிய அளவில், மருத்துவமனை அடையாளங்கள் பெரிதாக பொறிக்கப்பட்டிருந்த போதும், மருத்துவமனையின் புவியியல் குறியீடுகள் இலங்கை இராணுவத்திற்கும் அரசுக்கும் அறிவிக்கப்பட்டிருந்த போதும் நன்றாக அறிந்தே, மருத்துவமனைகள் மீது இலங்கை இராணுவம் திட்டமிட்ட தாக்குதல்களை நடத்தியது.

'புதுக்குடியிருப்பு மருத்துவமனை அமைந்திருந்த இடத்தின் சரியான புவியில் குறியீடுகள் இலங்கை ராணுவத்திற்கு தெரிந்தே இருந்தது. ஆளற்ற விமானங்களின் பார்வையில் எளிதில் படும்படியாக மருத்துவமனை முத்திரைகள் பெரிய அளவில் தெளிவாகப் பதிக்கப்பட்டிருந்தன.' (பத்தி 92)

மக்களின் பாதிப்புக்கள் அதிகமாகிக் கொண்டிருந்த இந்த நிலையில், மனித நேய உதவிகளைப் 'பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளிப்பதற்கான முயற்சிகளையும் இலங்கை அரசு தடை செய்தது. போர்ப் பகுதிகளிலிருந்த மக்களின் எண்ணிக்கையைக் குறைத்துச் சொல்லியதன் மூலம், போதுமான அளவிற்கு உதவிகள் கிடைப்படை தடுத்தது.

'ஏப்ரல் இறுதியில் 1,27,117 பொதுமக்கள் இன்னமும் சிக்கிக் கொண்டிருப்பதாக ஐ.நா மதிப்பிட்டது. ஆனால் அரசோ 10,000 பேர் மட்டுமே எஞ்சியிருப்பதாகக் கூறியது. அந்த இடத்தில் இருந்து வெளியேறி பின்னர், மனிக் பண்ணை மற்றும் முகாம்களில் வைக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை ஏறத்தாள 2,90,000 ஆகும். இந்த எண்ணிக்கைகளில் ஏற்பட்ட குழப்பத்திற்கு அரசு தேவையான விளக்கத்தை அளிக்கவில்லை' (பந்தி 127)

'அரசின் குறைந்த மதிப்பீட்டின் காரணமாக உலக உணவுத் திட்டம் மூலம் வழங்கப்பட்ட உணவு உண்மையான தேவையுடன் ஒப்பிடுகையில் மிகமிகக் குறைந்த அளவாகவே உள்ளது. இதன் காரணமாகப் பரவலான சத்துக்குறைவு, பட்டினி நிலவியது. அதே போன்று வன்னிக்குள் அனுமதிக்கப்பட்ட மருத்துவப்பொருட்களின் அளவானது குண்டு வீச்சினால் தாக்கப்பட்டவர்களுக்கு மருத்துவம் செய்வதற்கு எந்த வகையிலும் போதுமானதாக இல்லை. இரண்டாவது பாதுகாப்பு வலயத்தில் ஏற்பட்ட காயங்களின் வகைகளைக் கவனத்தில் கொண்டு மயக்க மருந்துகள், இரத்தம் ஏற்றுவதற்கான இரத்தப் பைகள், பூச்சிக்கொல்லிகள், அறுவைச்


A tradition of trust......
Brampton/Castlemore
$769,900
Detached 3,439 sqft, 4 bedrooms + den, 4 washrooms, close to woodbridge
Pickering
$359,000
1 acre of land, close to 407 expansion, ready for your dream home
Vaughan
$629,000
detached home, 3+1 bedroom, 4 washrooms, apartment/ separate entrance, rentable basement
Milton
$429,900
Greenlife building, 3 bedrooom, 2 washroom, maintenance fee is only $138
Brampton
$889,000
Detached 3,400 sqft, 4+1 bedrooms, 5 washrooms, close to highways and amenities
Oshawa
$475,900
Detached house, 3+1 bedroom, 5 washrooms, easy to commute b/w University, college, and the GO transit
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently owned and operated.
Higer Standard Agents,,, Higher Results
உங்கள் முழு மன நிறைவுடன் வீடு
வாங்க, விற்க, முதலிட...
Charles A . Arulanandam
Sales Representative
Business : 416 298 3200
Dircect: 416 459 0445
charlesantonysa@gmail.com
www.homelifetoday.com
210 - 31 Progress Ave ., Toronto. ON M1P 4S6
HOMELIFE
Not intended to solicit properties that are under contract

சிகிச்சை உபகரணங்கள், கையுறைகள் போன்ற மருத்துவப் பொருட்களை மருத்துவர்கள் கோரியிருந்தனர். ஆனால் இந்தப் பொருட்கள் மிகச்சிறிய அளவில் மட்டுமே வன்னிக்குள் அனுமதிக்கப்பட்டது. இதற்குப் பதிலாக பனடால், ஒவ்வாமை மருந்துகள், மற்றும் ஊட்டச்சத்து மருந்துகள் போன்றவையே அவர்களுக்கு வழங்கப்பட்டன. மார்ச் 2009 ல் பொது மக்களின் பாதிப்பு அதிகமான நிலையில் தேவையான மருத்துவப்பொருட்கள் இல்லாததால் பெரும் துன்பமும் இதனால் நிறைய உயிரிழப்பும் ஏற்பட்டது. மருத்துவப் பொருட்களின் போதாமை குறித்துக் கடிதங்கள் மற்றும் ஒளிப்பதிவு செய்யப்பட்ட நேர்காணல்கள் ஊடாக மருத்துவ சேவைக்கான மண்டல இயக்குநரகத்தின் மருத்துவர்கள் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். காயம்பட்ட மற்றும் இறந்து போனவர்கள் பெயர்ப்பட்டியல் மற்றும் நிழற்படங்களை அவர்கள் தொகுத்து அனுப்பினர். மருத்துவ அமைச்சகம் ஊடகங்களிடம் பேசுவதை நிறுத்துமாறும், புகார் அளிப்பதை நிறுத்துமாறும் இவர்களை எச்சரித்தது. நிறுத்தாவிடில் தண்டிக்கப்படுவார்கள் என்றும் கூறியது. மார்ச் 16 அன்று மருத்துவர்கள் சத்தியமூர்த்தி மற்றும் வரதராஜா ஆகியோர் 'முல்லைத்தீவில் தேவையான மருந்துகள் இல்லாததால் ஏற்பட்ட தேவையற்ற சாவுகள் என்று அறிக்கையை அரசுக்கு அனுப்பினர். அதில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளும் தேவையான மருந்துகளும் கிடைத்திருந்தால் மருத்துவமனை சாவுகள் பலவற்றைத் தடுத்திருக்கலாம். எங்களுக்கு கிருமி நாசினிகள், மயக்கமருந்துகள் மற்றும் ஒரு பாட்டில் குளுக்கோஸ்கூட வழங்கப்படவில்லை. உயிர்காக்கக்கூடிய அவசர அறுவைச்சிகிச்சையைக் கூட வழங்க இயலாத மோசமான நிலையில் நாங்கள் விடப்பட்டோம் என்று குறிப்பிட்டானர்.' (பத்தி 128)



'மார்ச் 19,2009 அன்று மருத்துவ மற்றும் ஊட்டச்சத்து அமைச்சகத்தின் செயலாளர் இதற்கு அளித்த பதிலில் முள்ளிவாய்க்கால் மருத்துவமனையில் பயிற்சி பெற்ற மயக்க மருந்து நிபுணர்கள் இல்லையென்பதால் வீரியமிக்க வலி நிவாரணிகளும் நரம்புகளில் செலுத்தத்தக்க மருந்துகளும் மட்டுமே அனுப்பி வைக்க இயலும் என்று கூறியது.' (பத்தி 129)

போர்ப் பகுதிகளை விட்டு வெளியேறி இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வந்தபிறகும் மக்களின் துன்பம் தீரவில்லை. மாறாக அதிகரிக்கவே செய்தது. முகாம்களில் நிரம்பி வழிந்த கூட்டத்தின் காரணமாக நிலவிய சுகாதாரமற்ற சூழல், போதிய உணவு மற்றும் மருத்துவ வசதிகள் இன்மை காரணமாக முகாம்களிலும் உயிரிழப்புகள் தொடர்ந்தன.

அதோடு விடுதலைப் புலிகள் என சந்தேகிக்கப்பட்டவர்கள் தனியே பிரித்தெடுக்கப்பட்டு தனியான விசாரணை மையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் மீதான விசாரணை எவ்வித வெளிப்படைத் தன்மையுமற்று நடைபெற்றது. அவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டவர்களின் நிலைமையைப் பற்றி அறியாமல் அவர்களின் உறவினர்கள் அவதியுற்றனர். பலரைப் பற்றிய தகவல்கள் இன்று வரை அறியப்பாடாத ஒன்றாகவே உள்ளது.

-நன்றி: மாற்றுவெளி ஆய்வுநூல் 8

வன்னி இறுதிக் கட்ட யுத்தம்

விக்கிலீக்ஸ் வெளியிட்ட முக்கிய தகவல்!

மேற்குலகின் இராஜதந்திரிகள் 2009 ஆம் ஆண்டின் முதல் 5 மாதங்களும் இலங்கைத் தீவில் போரினை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு எவ்வாறு முனைப்புடன் முயன்றனர் என்பதை வெளிப்படுத்தும் 38 வரையான-விக்கிலீக்ஸ் ஊடாகக் கசிந்துள்ள அமெரிக்க வெளியுறவு அமைச்சக ஆவணங்களை நோர்வேயின் ஆப்தன் போஸ்தன் நாளிதழ் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக 'ஆப்தன்போஸ்தன்' வெளியிட்டுள்ள கட்டுரை:

2009 மார்ச் மாதம் அமெரிக்க தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக் போரினால் பாரிய மனிதாபிமான அழிவு ஏற்படும் என எச்சரித்திருந்தார். அரசாங்கப் படைகள் அதே தீவிரத்தில் போரைத் தொடருமானால் பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் பலியாக நேரிடும் எனவும், அது அனைத்துலகின் கண்டனங்களுக்கும் போர் மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்கும் இட்டுச் செல்லுமென பிளேக் இலங்கையின் அன்றைய வெளியுறவு அமைச்சருடனான சந்திப்பின் போது எச்சரித்துள்ளார்.

அதேநேரம் விடுதலைப் புலிகளின் தலைமையுடன் தொடர்புகளைக் கொண்டிருந்த ஒரேயொரு மேற்குலக நாடான நோர்வே போரில் விடுதலைப் புலிகளின் தோல்வி உறுதிசெய்யப்பட்டு விட்டதாகவும் பேரழிவு ஏற்படுவதற்கு முன்னர் சரணடையுமாறு அவர்களுக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தது. ஆனால், விடுதலைப் புலிகள் அதற்குச் செவிசாய்க்கவில்லை.

இரத்தக் களரியைத் தடுப்பதற்கு நாங்கள் முழுமூச்சாகச் செயற்பட்டோம். எங்களால் இயன்றதைச் செய்ததாகவே உணருகின்றோம். ஆனபோதும் பல்லாயிரக்கணக்கில் மக்கள் கொல்லப்பட்டதைப் பார்க்கும்போது மிகவும் விரக்தியாக இருந்தது என்கிறார் இலங்கைக்கான அன்றைய நோர்வே தூதுவர் ரோர் ஹார்ரெம்.

போர் வலயத்திற்குள் பொதுமக்கள் எவருமே இல்லை என 2009 மே மாதம் இலங் கையின் பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்தது. அந்தக் கூற்று உண்மையல்ல என்பதையும் பல்லாயிரக்கணக்கில் பொதுமக்கள் உயிராபத்திற்குள் சிக்கியிருப்பதையும் எடுத்துரைக்கும் பல்வேறு அறிக்கைகள் அமெரிக்கத் தூதுவருக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன.

பேரழிவைத் தடுக்கும் நோக்கில் இலங்கை அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகளுக்கு பிளேக் தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டார். காயப்பட்டவர்கள் மற்றும் இறந்தவர்களை வெளியில் எடுத்து வருவதற்கான அனுமதியை அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்திற்கு வழங்க முடியாது என அரச தலைவரின் ஆலோசகரும் அவரது சகோதரருமான பசில் ராஜபக்ச பிளேக்கிடம் தெரிவித்துள்ளார்.

அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்திடம் சரணடைவதற்கு தயாராகவுள்ளதாக விடுதலைப் புலிகளின் தலைமை நோர்வேக்கு கூறியிருந்ததாகவும் சரணடைவை மேற்கொள்ள செஞ்சிலுவைச் சங்க உலங்கு வானூர்தியை அனுப்புமாறும் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவிடம் பிளேக் கேட்டபோது, இப்போது நாங்கள் அந்தக் கட்டத்தை கடந்து விட்டோம் என்று கோத்தபாய பதிலளித்துள்ளார்.

பேரழிவைத் தடுப்பது தொடர்பாக கொழும்பிலிருந்த ராஜதந்திரிகள் கொண்டிருந்த கருத்தினையே உலகெங்கும் பலரும் கொண் டிருந்தனர். நோர்வே வெளியுறவு அமைச் சகத்தின் தலைவர் ஜான் எக்லாண்ட் அக் கருத்தினை கொண்டிருந்தவர்களில் ஒருவரா வார். இது ஏலவே எச்சரிக்கப்பட்ட, அதேவேளை அனைவரும் தடுத்து நிறுத்தத் தவறிய பேரழிவின் வரலாறு. இது அனைத்துலக சமூகத் திற்கு சாதகமாக ஒரு வரலாறு அல்ல என்றார் அவர்.

2009ன் ஆரம்பத்திலிருந்து போர் முடி புக்கு வந்த மே 18 வரையான காலப்பகுதி களிலும் அதன் பின்னர் நடந்தேறிய முக்கிய சம்பவங்களை விக்கிலீக்ஸில் இருந்து ஆப்தன் போஸ்தன் கால வரிசையில் தொகுத்து வெளி யிட்டுள்ளது. அவை வருமாறு.

5 பெப்ரவரி 2009: தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பு ஏற்படுத்துவது கடினமாகி வருவதாக இலங்கைக்கான நோர்வே தூதுவர் ரோர் ஹார் ரெம் அமெரிக்க ராஜதந் திரிகளுக்கு தெரிவிக்கின்றார்.

5 மார்ச் 2009: விடுதலைப் புலிகள் தாம் முறியடிக்கப்பட்டு விட்டதைஏற்றுக்கொள்ளும்அதேவேளைசரணடைவினை ஒரு தெரிவாக ஏற்றுக்கொள்ளத் தயார் இல்லை. பொது மக்கள் தங்கியுள்ள இடங்களை நோக்கி இலங்கைப் படைகள் ஆட்லறி தாக்குதல்களை மேற்கொள்வதை பசில் ராஜபக்ஷ ஒப்புக்கொள்கிறார் போன்ற தகவல்களை ரோர் ஹார்ரெம் அமெரிக்க அதிகாரிகளுக்கு தெரிவிக்கின்றார்.

19 மார்ச் 2009: அரசாங்கம் பல்லாயிரக் கணக்கான பொதுமக்களை பலியாக்க முனைவதாகவும் அவ்வாறு நிகழுமானால் அனைத்துலக கண்டனங்களுக்கும் போர் மீறல் குற்றச்சாட்டுகளுக்கும் அது இட்டுச் செல்லும் என அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் பிளேக். இலங்கை வெளியுறவு அமைச்சர் போகொல்லாகமவை எச்சரிக்கிறார்.

27 ஏப்ரல் 2009: இலங்கையின் வெளியுறவு அமைச்சர் போகொல்லாகம இணைத் தலைமை நாடுகளான அமெரிக்கா, ஐரோப் பிய ஒன்றியம், ஜப்பான் ஆகிய நாடுகளை சந்திப்பதற்கான அழைப்பினை விடுக்கிறார். இணைத்தலைமை நாடுகள் அங்கம் வகிக்கும் நோர்வே அழைக்கப்படவில்லை. இணைத் தலைமை நாடுகளில் ஒன்றாக இனி நோர்வே பார்க்கப்படமாட்டாது என போகொல்லாகம தெரிவித்தார். ஏனைய மூன்று நாடுகளின் கடும் எதிர்ப்புக்குப் பின்னர் தனது நிலைப்பாட்டை மாற்றுவதாக அவர் கூறினார்.

5 மே 2009: செய்ம்மதி மூலம் பெறப்பட்ட ஒளிப்படங்கள் மகிந்த ராஜபக்ஷவிற்கு அமெரிக்காவினால் காட்டப்படுகின்றது. பொதுமக்கள் தங்கியிருந்த பாதுகாப்பு வல யங்களுக்குள் ஆட்லெறித்தாக்குதல்கள் நடத்தப்பட்ட தடயங்கள் ஒளிப்படங்களில் காண்பிக்கப்படுகின்றது. போர்க்கள நிலைமைகள் தொடர்பாக தன்னைவிட அமெரிக்காவுக்கு அதிக தகவல்கள் தெரிந்திருப்பதாக மகிந்த ராஜபக்ஷ ஒப்புக்கொள்கிறார்.

13 மே 2009: இலங்கை விவகாரத்தில் உரிய நடவடிக்கைகளை ஐ.நா. பாதுகாப்பு அவை மேற்கொள்ளாதுவிடின் அது ஒரு வரலாற்றுத்தவறு என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்துகின்றது. பாது காப்பு அவையின் ஒரு அமர்வில் அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் ஆகியன தீர் மானம் நிறைவேற்ற முயன்றபோது சீன மற்றும் ரஷ்யா எதிர்க்கிறது.

17 மே 2009: பேரழிவைத் தடுக்கும் நோக் கில் இலங்கை அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகளுக்கு பிளேக் தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டார். காயப்பட்டவர்கள் மற்றும் இறந்தவர்களை வெளியில் எடுத்து வருவதற்கான அனுமதி அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்திற்கு வழங்க முடியாது என ஜனாதிபதியின் ஆலோசகரும் அவரது சகோதரருமான பசில் ராஜபக் பிளேக்கிடம் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் தலைவர்கள் சரணடையச் சென்றபோது சரணடைவை உறுதிப்படுத்த எதையுமே செய்யவில்லை என வெளியுறவு அரசியல் ஆலோசகர் பாலித ஹோகன முன்னர் தெரிவித்தார். ஆனால் பிறிதொரு சந்தர்ப்பத்தில் அதற்கு முரணாக ஹோகன கூறியமையை பிளேக் கவனத்தில் எடுத்துள்ளார்.

27 மே 2009: ஐக்கிய நாடுகளின் அவையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் இலங்கைக்கு பயணம் மேற்கொள்கிறார். இடம் பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டி ருந்த முகாம்களின் நிலைமைகள் மிக மோசமாக உள்ளதாக அவர் கூறுகிறார்.

01 யூன் 2009: அடுத்த ஐந்து ஆண்டுகளில் படைத்துறை ஆளணிகளை இரட்டிப் பாக்கும் திட்டத்தினை அரசாங்கம் கொண்டி இருப்பதாக பாதுகாப்பு அமைச்சகத்தின் ,ரகசிய ஆவணத்திலிருந்து தெரியவருகின்றது.

15 யூலை 2009: அனைத்துலக மனி தாபிமான சட்டங்களை இலங்கை அரச படைகள் கடுமையாக மீறியதாக அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்தது. பொது மக்களுடன் கலந்திருந்ததாக விடுதலைப் புலிகள் கண்டிக்கப்படுகின்றனர். ஆனால் புலிகள் பொதுமக்களை மனிதக் கேடயங்க ளாக பயன்படுத்தினரா என்பது தொடர்பாக முடிவெடுப்பது கடினம் என செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்தது. செஞ்சிலுவைச்சங்கம் உட்பட்ட ஏனைய தொண்டு நிறுவனங்களை காயப்பட்டவர்களுக்கு மருந்து வழங்கும் மற்றும் குருதி செலுத்தும் பணிகளை முன்னெடுக்கவிடாது அரசாங்கம் தடுத்துள்ளது. எனவே இறந்த சிறுவர்களின் தொகையை கணக்கிடுவதை தாம் கைவிட்டதாக செஞ்சிலு வைச் சங்கத்தின் தெற்காசியத் தலைவர் கூறுகிறார்.

31 ஒகஸ்ட் 2009: அமெரிக்க வெளியு றவு அமைச்சகத்தைச் சேர்ந்த போர்க்குற்றங் களுக்கான பொறுப்பதிகாரி கிளின் வில்லி யம்சனுக்கும் நோர்வேக்கும் இடையில் ஒஸ்லோ வில் சந்திப்பு நிகழ்கிறது. போர்ப்பகுதியில் அமெரிக்காவின் பிரசன்னம் இல்லாதிருந்த மையால் போர் மீறல்கள் தொடர்பான தடயங் கள்-சாட்சியங்களை பெறுவதில் சிக்கல்கள் ,ருப்பதாகவும் கூறிய கிளின் வில்லியம்சன் இறுதி நாளில் நடந்தவை தொடர்பான தகவல் களை நோர்வேயிடம் கேட்டிருந்தார். விடு தலைப் புலிகளின் அரசியல் தலைமை மீதான கொலைகள் சந்தேகத்திற்கிடமானவை என நோர்வே இராஜ தந்திரிகள் தெரிவித்துள்ளனர்.


18 செப்ரம்பர் 2009: அமெரிக்காவின் நிலைப்பாடு தொடர்பாக தான் குழப்பம் அடைந்துள்ளதாக மகிந்த ராஜபக்ஷ விசனம் கொள்கிறார். பயங்கரவாதத்தை ஒழிக்குமாறு முதலில் கூறிய அமெரிக்கா, தான் அதைச் செய்து முடித்துள்ள போது விமர்சிப்பதாகவும் அமெரிக்க இராஜ தந்திரிகளிடம் ராஜபக்ஷ கூறுகிறார்.

26 ஒக்டோபர் 2009: போர் மீறல்கள் தொடர்பான அமெரிக்க செனட் அவையின் அறிக்கையைப் பெறுவதற்கு இலங்கை அரசாங்கத்தின் எந்தவொரு பிரதிநிதியும் முன் வரவில்லை.


17 டிசம்பர் 2009: மகிந்த ராஜபக்ச நாட்டைத் தவறான பாதையில் இட்டுச்சென்றுவிட்டதாக இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றம் சாட்டுகிறார். ராஜபக்ஷ குடும்பத்தினை படிப்பறிவற்ற, பண்பாடற்ற பாதகர்கள் என வர்ணிக்கிறார். நாட்டின் அரசியல் வானில் பழிவாங்கல் அச்சுறுத்தல் நிலைக்குள் தள்ளப்பட்டுள்ள தாகவும் எவருமே அரசாங்கத்தை விமர்சிக்கும் நிலையில் இல்லை எனவும் கவலை தெரி விக்கின்றார்.

2 பெப்ரவரி 2010: சரணடைய முனைந்த போது விடுதலைப் புலிகளின் அரசியல் தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டதான குற்றச்சாட்டு பொய்யானது என பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவிக்கின்றார்.

இந்த விபரங்களை விக்கிலீக்ஸ் ஆவணங்களை மேற்கோள்காட்டி நோர்வே நாளிதழ் ஆப்தன்போஸ்தன் தனது கட்டுரையில் வெளியிட்டுள்ளது. ■



வில்லங்க லிங்கத்தார்...





Friends
MATRIMONY
சனி, ஞாயிறுகளில்
12:00pm-6:00pm
info@friendsmatrimony.com
www.friendsmatrimony.com
Choose Your Life Partnar Here
அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி 10:30a.m- 7:00p.m
Sri Lanka
Ph: 94-112-363663
No-11- 2/1, 33rd lane,
Wellawatta,
Canada
info: 647-709-1536
GTA Square
5215 Finch Ave. E. Unit 257



RENT ME
for any size
416 986 9554



Vaughan India Grocers
"Freshness you can Taste-Values you can Trust"
9222 Keel Street, Vaughan.
(South West Corner of Keel & Rutherford)
905-303-1555
Mon.-Thu.: 9:30am-8:00pm
Fri.-Sat.: 9:00am-
உங்களுக்குத் தேவையான சகல இந்திய மரக்கறி வகைகள் மற்றும்
Tilda
MOONG DAL
MIXTURE
Largest Indian Grocery Store in Vaughan

'ஆதிக்க அரசியலின்' மத்தியிலே எப்படி அமைதியாக வாழ்வது?

ஜனநாயகம் என்ற பெயரோடு இலங்கையில் வேரூன்றியுள்ள ஆதிக்க அரசியல் நாட்டில் வாழும் சிங்கள மக்களை மட்டுமல்ல தமிழர்கள், இஸ்லாமியர்கள், மலையகத் தமிழர்களையெல்லாம் பயங்கரமாகப் பாதித்துள்ளது! எவ்வாறு சுதந்திரமான ஒரு பல்லின நாட்டிற்குள் அமைதியாக யாவரையும் வாழவைப்பது? இது தான் இன்று யாவரையும் குடையும் பாரிய கேள்வி.

அதிகாரங்களைப் பேரினவாத மேலாதிக்கம் இன்றிப் பரந்த முறையிலே நீதியாகவும் சுதந்திரமாகவும் எல்லோரும் அனுபவிக்கக்கூடிய ஒரு ஜனநாயக முறைமையை எவ்வாறு தோற்றுவிப்பது என்பது விடுவிக்கமுடியாத புதிராகத்தான் தொடர்கின்றது.?

யுத்தம் முடிவுக்கு வந்தபின்னர் வருடங்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கையையும், வாழ்வாதாரங்களையும் சிதைக்கும் காரியங்களையெல்லாம் வரிசைக்கிரமமாகத் திட்டமிட்டபடி சிங்கள அரசாங்கம் மேற்கொண்டுவருகின்றது. படைக்குவிப்பும், இராணுவத்தினரின் தலையீடுகளும், குடியேற்ற முனைப்புகளும், பௌத்த விகாரைகளைக் கட்டுவதும், இரவோடிரவாகப் பல்வேறுபகுதிகளிலும் நடந்தேறுகின்றன.

இலங்கையின் அரசியலில் காலம் காலமாக வேரூன்றி வந்த பேரினவாத ஒடுக்குமுறைகள் இப்பொழுது ஆழமாகியுள்ளது.

ஏறத்தாழ முப்பது ஆண்டுகளாக நடந்தேறிய போராட்டங்களும் அழிவுகளும் எந்த விதத்திலும் விடிவைத் தரவில்லை? தமிழ்ப்பேசும் மக்கள் மீண்டும் இனமத வாதங்களின் மத்தியில் நிமிரமுடியாது மீண்டும் அதலபாதாளத்திற்குத் தள்ளப்படும் நிலைமைதான் தொடர்கின்றது!

யுத்தம் முடிவுக்கு வந்தபின்னர் அந்த யுத்தத்திற்கும் மோதல்களுக்கும் இட்டுச் சென்ற காரணங்களை இனங்கண்டு அவற்றை முற்றாக நீக்குவதற்கு முயற்சி செய்யாமல் ஆக்கிரமிப்பு படைகளினூடாக 'அட்டகாசங்களையே' அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

பேரினவாத அரசியல் தலைமைகள், அடக்குமுறை அரசியலையும் அமைதியை எந்த வகையிலும் தோற்றுவிக்க இடங்கொடாத முரண்பாட்டு அரசியலையும் தான் மஹிந்த அரசியல் தலைமையுடன் தட்டி விட்டுள்ளது.

நாட்டின் சகல அரசியற் சக்திகளும், இன-மதவாதத் தப்புக்கணக்குகளோடு, ஒற்றுமை மட்டுமல்ல கொள்கைத் தெளிவுகளும் இல்லாது, நாறும் தேசிய அரசியலையே தொடர்கின்றது.

இலங்கையின் சமாதானத்தேடல்... ஒரு நீண்ட பயணம் தான்!

மாதொருபாகன்

நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான நியாயமான முறைமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு காணப்படாவிட்டால் இலங்கையின் அரசியல் எதிர்காலம் எந்தவகையிலும் அமைதியாக நகரப் போவதில்லை.

தேசிய இனப்பிரச்சினை ஒரு சாபக்கேடாகிப் போய்விட்டது. சர்வதேச நாடுகளில் இருந்தும் தமிழ்ப்பேசும் மக்கள் மத்தியிலிருந்தும் வெளிப்படும் அனைத்துக் குற்றச்சாட்டுக்களுக்கும், அழுத்தங்களுக்கும் முகம்கொடுக்க முடியாமல் வெறுமனே அறிக்கைகளுடன் அரசாங்கம் காலத்தைக் கடத்துகின்றது. மொத்தத்தில் இலங்கையின் அரசியல் சந்தர்ப்பவாத அரசியல்தான்.

ஜனாதிபதி மஹிந்த வெறும் அவதந்திரங்களுடன் அரசியலில் காய்களை நகர்த்தி வருகிறார். தொடருகின்ற குடும்ப அரசியலின் மத்தியிலே பல்வேறு கோணங்களிலும் அவர் ஒரு சூழ்நிலைக் கைதியாகியுள்ளமை, நிறைவேற்று அதிகார முறைமையையே வெறும் கேள்விக்குறியாக்கிவிட்டது. நிர்க்கதியாகி வாழும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மனிதாபிமானக் கோரிக்கைகளை, இலங்கையின் தேசிய அரசியல் கணக்கெடுக்காது யாவற்றையுமே இன-மாதவாதக் கண்கொண்டு ஓரங்கட்டும் நிலைப்பாடுகளுடன், தமிழ் மக்கள் வாழ்விடங்களை மட்டுமல்ல இப்பொழுது ஒரு மாகாண அரசையே முடங்க வைத்துள்ளது.

பிரதான கட்சிகள் தேசிய நல்லிணக்கத்திற்கு முரணான பாதையில் சஞ்சாரம் செய்கின்றன.

இலங்கையில் நடந்தேறிய சம்பவங்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவிற்கு மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை சமர்ப்பித்த அறிக்கைகள் பற்றி தொடரும் விசாரணை முறைமைகள் பற்றி அரசாங்கம் உதாசீனமான போக்கில் தான் செயற்படுகின்றது.

அரசாங்கத்தின் நல்லிணக்க அறிக்கை, அதில் வெளியிடப்பட்ட பரிந்துரைகள் எல்லாமே அப்படியே 'கிடப்பில்' போடப்பட்டுள்ளது. ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயலகம் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் பற்றிய விசாரணைகளையும் பதிவுகளையும் தனது நிகழ்ச்சிநிரலுக்கு ஏற்பத் தொடர்ந்து வருகின்றது.

மொத்தத்தில் சகல சர்வதேச முயற்சிகள், அழுத்தங்களையெல்லாம் உதாசீனம் செய்தபடி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறைமையைக் கேலிக்கூத்தாக்கியபடி சர்வாதிகார ஆட்சிமுறைமையையே மஹிந்த தொடருகின்றார். ஜனாதிபதி ஆட்சி முறைமை வெறுமனே குடும்ப அரசியலின் கோட்டையாகிவிட்டது.

நாட்டில் அடுத்தது என்ன? என்ற விவகாரம் தொடர்ச்சியான கேள்விக் குறிகளையே மிஞ்சவைக்கின்றது. சர்வதேச உறவுகளை எல்லாம் மோதி மிதித்தபடி சர்வதேச அரசியலைக் கணக்கெடுக்காத, தான்தோன்றித்தனப் போக்குகள் என யாவுமே நடந்தேறுகின்றது.

இப்பொழுது ஆளுங்கட்சிக்குள் பாரதூரமான முரண்பாடுகளும், பாராளுமன்றத்தையே கணக்கெடுக்காத வகையிலான நடத்தைகளும் ஜனாதிபதி தரப்பிலிருந்து வெளிப்படுகின்றது. குறிப்பாக ஐக்கிய மக்கள் கூட்டமைப்புக்குள்ளும் கூட பிளவுகள் தான் அதிகரித்து வருகின்றன.

பொதுவாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிகள் ஒருவிதமான சமத்துவ நிலைப்பாட்டையும் கொண்டிருந்தாலும் கடும்போக்குடைய கட்சிகள் எல்லாம் வழமையான போக்கில் தீவிரவாத சிந்தனைகளைத்தான் வெளிப்படுத்துகின்றன.

பல்வேறு கட்டங்களில் ஜனாதிபதி மஹிந்தவை தீவிரமாக, நேரடியாகப், பகிரங்கமாக விமர்சிக்கும் நிலைமைகளும் உருவாகியுள்ளன. ஒரு வகையில் இலங்கையின் அரசியல் உட்பூசல்களும், வெளிப்பூசல்களும் தொடருகின்ற நிலைமையில் எல்லாமே வெறும் பூசிமெழுகிய அரசியலாகவே தொடருகின்றது.

இலங்கையில் தேசிய அரசியல் சகல சர்வதேச அழுத்தங்களின் மத்தியிலும் கூட யாவற்றையும் குட்டி முந்த முற்படுகின்றமை, தொடர்ச்சியான நம்பிக்கையீனங்களையே மிஞ்சவைக்கின்றது.

இலங்கையில் உள்விவகாரத்தில் யாருமே தலையிடக்கூடாது என்ற கோஷங்களுடன், பின்னோக்கியபடி நாட்டின் அரசியல் அடுத்த தேர்தலுக்கான வாக்குத்தேடும் கைங்காரியங்களும் நடந்தேறுகின்றன.

அரச பயங்கரவாதம், மனிதவுரிமை, மீறல்கள், ஜனநாயச்சீரழிவுகள், தான்தோன்றித்தனமான போக்குகள் என எல்லாமே பயங்கரமாக வெளிப்படுகின்றன.

சிறுபான்மை இனங்களுக்கான பாதுகாப்பு என்ற முனைப்போடு ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன உருவாக்கிய நிறைவேற்று அதிகார முறைமை இப்போது இனவாதிகளின் அரக்கு மாளிகையாகிவிட்டது.!

இந்த அரக்கு மாளிகையின் அரசியலின் பின்னணியில் நாடே எரிந்து சாம்பலாகிப் போகும் நிலைமைதான் வெளிப்பட்டுள்ளது.

எதிர்கட்சிகளோ அல்லது இடதுசாரிக் கட்சிகளோ நிறைவேற்று அதிகார முறைமையை மாற்ற முயன்றாலும் அதற்கு இடங்கொடுக்காத வகையில் இனவாத மோதல்தான் வெளிப்படுவது தொடரப்போகிறது.

இப்பொழுது ஜனாதிபதி ஆட்சிமுறைமை என்ற முகமூடியின் பின்னால் ஒதுங்கியுள்ள பௌத்த சிங்கள இனவாதம் பேசும் மஹிந்தவின் குடும்பம் 'குருவிச்சை'யாகி பொருளாதார நெருக்கடிகளின் மத்தியில் நாட்டையே விழுங்கிவிட்டது. தமிழ்மக்கள் தேசிய இனப்பிரச்சினைக்கு விடிவுகாணும் பின்னணியில் தலைவலிக்கு மருந்து தேடியபடி மஹிந்த ஆட்சியில் முயற்சியில் முதலை வாய்க்குள் தலைவைத்தபடி திருகுவலியுடன் சீவிக்கும் நிலமை தான் மிஞ்சியுள்ளது.

இதுவரை குடும்ப நலன்கள் சுழன்று வீசிவரும் குடும்ப அரசியல் இனிமேல் ஒரு பெரிய அரசியல் சூறாவளியைத்தான் கொண்டுவரப்போகிறது.

இத்தனைக்கும் மத்தியில் தமிழ்த் தலைமைகளும், புலம்பெயர் சமூகமும் பாதைதெரியாத பயணங்களில் தான் இப்பொழுது சஞ்சாரம் செய்கின்றன.

GTA Square

INDOOR MALL



Welcome to GTA Square Indoor Mall. Over 50 Stores , Offices & Restaurant.

5215 Finch Ave East, Toronto. Middlefield & Finch. Open 7 Days A Week. 9:00 AM -10:00 PM

#101 **Rising Beauty**
Spa, Skin care and Salon
416.727.0927

#102 **Lovely**
Grocery Store
416.834.2266

#103 **A1 Studio**
Photo Studio
416.587.5583

#104 **Arajen**
Beauty and skin care
416.546.2227

#105 **Lovely**
Gold House
416.834.2266

#106 **Sai Ram**
Fashion
647.874.1501

#107 **AirCom Plus**
Internet
416.266.6328

#108 **[illegible]**
Dry Cleaner
416.291.9777

#109 **Back to Beauty**
Spa and Beauty Salon
647.298.8091

#111 **Ineeka**
Jewellery & Gifts
647.924.5153

#112 **ASA Wireless**
[illegible] (Mobile accessories)
[illegible]

#[illegible] **MJS Gold House**
Gold House & Money Trans-
[illegible]

#115 **Western Jewellerys**
Jewellery & Money Transfer
416.335.9500

#117 **BenHo**
House Of Gold Fx
416.754.3100

#118 **Noble Reign Inc**
Security & Communications
416.826.5831

#119 **Gift Plus**
Unique Gifts For All Occasions
416.804.8999

#120 **Ahsiya Beauty Salon**
Unisex Hair Salon
416.412.3330

#122 **Ambiha Silk**
Sarees. Costumes. Cosmetics
416.297.5261

#123 **Jai Sai Flourist**
Fresh Jasmin & Garlands
416.505.1252

#124 **Millenium Sarees**
Unique Textile Store
416.332.2242

#125 **Kids N Cotton**
100% Cotton & Organic
416.854.5436

#126 **Shakthi Designers**
Churidars. Shalwar. Pattiyala
416.297.1670

#[illegible] **Nimmi's Silks**
Sarees. Salwars. Sherwanis
416..619.7831

#152 **SNS Selections**
Sarees & Salwars
416.419.1257

#154 **A1 Ink Rainbow**
Computer.Toner.Copier
416.286.0333

#156 **Nathan Traders**
Fancy. Utensils. Textiles
647.709.8231

#158 **Q Copy**
Copy & Print Centre
416.900.9100

#159 **Ashmitha**
Lotto & Video Centre
416.298.0505

#160 **Ideal Escape**
For All Your Vacations
416.841.1833

#161 **Sabari Text**
All Kind Of Textiles
647.979.2907

#162 **Ragi Tailoring**
Tailoring & Textiles
647.712.4652

#163 **SNS Selection**
Clothings
416.419.1257

#164 **New Ranganas**
Jewel House
647.702.2159

#165 **TechLinx**
Cell Phones & Accessories
647.289.2628

#201 **Vlambaram**
Tamil News Paper
416.282.8059

#203 **HomeLife GTA**
Realty Inc, Brokerage
[illegible]

#205 **Fashion & Fancy House**
Silk, Bridal & Ceremonial Sarees
416.492.9416

#206 **GTA ChiroPractic**
Centre
416.321.0482

#207 **Sai Tailoring**
Yoga , Kid's & adult
647.858.5143

#210 **Medical Office**
Family Practice
416.412.7350

#211 **Value Plus Pharmacy**
For Your Medical Drug Needs
416.754.4442

#213 **Tharani Tharmalingam**
Law Office
416.291.4900

#214 **Experts Educational**
Tutoring
647.709.1298

#215 **Crown Tailoring**
All Type Of Tailoring Needs
416.999.1566

#216 **Ekaruvi**
Media

#217 **Canam. V Financial Service**
Mortgage, Accounting & Tax
416.261.0070

#219 **Raphael Maharaja**
Law Office
416.847.7077

#220 **Anu Wellness Clinic**
647.340.6046

#221 **Kannan Ramnath**
Law Office
416.609.1300

#223 **Intersol**
Business Consulting
416.648.7064

#228 **Aarusha Cake House**
Cakes For All Occasions
416.292.7347

#232 **Heroes Catering**
Takeout & Catering
416.286.9334

#250 **Eye-Quality Optical**
Eye Care
416.401.6377

#251 **Tony's**
Hair Saloon
647.883.0039

#256 **Leo Financial Services**
Mortgages & Loans
647.977.1536

#257 **Friend's Matrimony**
Match-making
647.709.1536

#258 **Available**

#259 **Krishna Tailoring**
Textile & Dry Cleaning
416.497.6427

#[illegible] **Muhavary**
News Paper Publications
416.628.6214

#264 **Athishta Dollar'n Gift**
Gifts, Helium Balloons & More
416.761.1433

எவ்வித போராட்டமும் இல்லாமல் சுதந்திரம் பெற்ற 'இலங்கைத்தீவு' இனவாதத்தையும் மதவாதத்தையும் நீரூற்றி வளர்த்தபடி பெரும்பான்மையின ஆதிக்கவலுவோடு இதர இனங்களை மோதி மிதித்தபடி அமுக்கும் அரசியலைத் தொடர்ந்தமை பேரழிவுகளை மட்டுமல்ல பூகம்ப அரசியலையே தோற்றுவித்துவிட்டது.

இலங்கைத்தீவின் இறைமையைப் பெரும்பான்யினம் கைப்பற்றியபடி நாட்டின் அரசியலையே கூறுபோடுவதற்குரிய தளங்களை உருவாக்கிவிட்டது.

இலங்கைத் தேசிய அரசியலிலும், தமிழ்பேசும் மக்களின் அமைதிக்கும் சமாதானத்துக்குமான நகர்வுகளிலும் யாருமே சர்வதேசத்தினர்கூட நியாயபூர்வமாக நடக்க முன்வரமாட்டார்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் காரியங்கள் நடந்தேறியுள்ளன.

இரணுவப் பலத்தைக் கொண்டோ, யுத்தத்தின் மூலமாகவோ ஒருபோதும் தேசிய சமாதானத்தையும் இணக்கங்களையும் காணமுடியாது.

முப்பது ஆண்டுகால யுத்தமுனைப் போராட்டங்களின் பின்னர் தமிழ்பேசும் மக்களும், புலம் பெயர்ந்த தமிழ்மக்களும் இலங்கை அரசியலிலும், சர்வதேச அழுத்தங்களிலும் வெளிப்படும் அரசியல் மாரீசங்களின் பின்னணியில் தமிழ் மக்களுக்கான விடிவுப்பாதையை எவ்வாறு காணப்போகின்றார்கள்

இலங்கையின் தேசிய அரசியலைப் பொறுத்தவரையில் ஜனநாயக அரசியல் விழுமியங்களையும், சமாதான அரசியலுக்கான அடிப்படைகளையும் பெறுவதற்குச் சர்வதேச அரசியல் எவ்வாறு உதவக்கூடும்.

இலங்கையில் அரசியல் சக்திகள் உள்வீட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு உள்ளேயிருந்து தான் வரவேண்டும் எனக் கூச்சலிடுகின்றது. மக்கள் நலனைக் காப்பாற்ற இலங்கை அரசாங்கமும் தமிழ் தலைமைகளும் எந்தப் பாதையில் இனிச் செல்லப்போகிறது?

தமிழ்ப் பேசும் மக்களின் நிரந்தர அமைதிக்கான ஒரு பண்பாட்டுத் தளத்தை அரசியல் பின்னணியுடனும் பொருளியற் பின்னணி வலுவாக்கத்துடனும் உருவாக்கவேண்டும்.

இதற்கான நகர்வு நீண்ட அரசியல் பயணமாகத்தான் இருக்கப்போகின்றது. நந்திக்கடலோரத்திலும் முள்ளிவாய்க்காலிலும் மக்கள் சிந்திய கண்ணீரும், இரத்தமும் தந்த பாடங்களிலிருந்து அல்லது பட்டறிவிலிருந்து திருந்தி தமிழினம் மட்டுமல்ல இலங்கையின் தேசிய அரசியலே அமைதிகாணவேண்டும். ☛

தக்கோன் எனத்திரி

கணவனின்றிக் கர்ப்பமாகும் பணிப்பெண்கள்!

வாழ்க்கை எனும் வண்டிலை இரண்டு மாடும் இழுத்தால்தான் நகரும் என்ற நிலைவந்தபின், ஆண்மாடு இழுக்கிறதோ இல்லையோ தான்தன்னும் இழுத்தாகவேண்டுமென்று பணிப்பெண்களாக மத்திய கிழக்கிற்குச் செல்லும் இலங்கைப் பெண்கள் பலர் பாவங்களைச் சுமக்கும் பெண் யேசுநாதர்களாகிப் போயுள்ளனர்.

அவர்கள் சுமக்கும் பாவம் யாதெனில் எஜமானர்களது கருக்களே!



கடந்த இரண்டு வருடங்களில் மட்டும் கணவனின்றிக் கற்பமான சுமார் 300 பெண்கள் இலங்கை அழைத்துவரப்பட்டனர். சிலர் குழந்தைகளுடனும் வந்திறங்கினர். என்ன கொடுமையென்றால் அரபுநாட்டு எஜமானர்களின் பலாத்காரமே பெரும்பாலும் இப் புத்திரபாக்கியத்துக்குக் காரணமென்பது எல்லோருக்கும் புரிந்தாலும், அதை அங்கு சட்டரீதியாக வழக்காடி நிரூபிக்க இந்த அபலைகளுக்குப் பணமோ, ஆதரவோதுணிவோகூட இல்லை. விசாரணைகளிலோ, மருத்துவ சோதனைகளிலோ அவர்களின் விருப்பத்துடனேயே இது நடந்ததாக தீர்ப்புக்கூறப் பண்ணிவிடுகிறார்கள்.

கணவனின்றிக் கருத்தரிப்பது மத்திய கிழக்கில் கடுமையான குற்றம். அதனால் அவர்கள் குற்றவாளிகளாகவும் பார்க்கப்பட்டு, அவர்களை நாட்டுக்குத் திருப்பி அழைப்பதற்கே பெரும் பணம் செலவு செய்ய வேண்டியதாயும் ஆகிவிடுறது



அப்புறம் என்ன? வேலையிழந்து, குழந்தை சுமந்து, அவமானத்துடன் கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கும் இப் பெண்கள், பலரின் ஏளனப் பார்வைக்கு முன் தலைகுனிந்தபடி வெளியே செல்கிறார்கள்.

அந்நாடுகள் இப் பெண்களை இப்படி நடத்துவதற்கும் குற்றம் சாட்டுவதற்கும் எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கத் திராணியற்ற இலங்கை அரசோ, இப்படி வந்திறங்கும் பெண்களை ஏதோ தவறான ஒழுக்கம் கொண்டவர்களுக்கு அறிவுரை கூறுவதுபோல் கவுன்சிலிங்கிற்கு உள்ளாக்கி, குடும்பங்களுடன் சேர்த்து வைப்பதற்கு ஏற்பாடு செய்திருப்பதாக கூறுகிறார்கள்.

அவர்கள் இப்படியெல்லாம் அவமானப்படுத்தப்பட்டு வீடுசெல்லும்போது அங்கென்ன செங்கம்பள வரவேற்பா கிடைக்கப்போகிறது? ஊருக்கொரு சிலுவைமரம்தான் இவர்களுக்காகக் காத்திருக்கப்போகிறது!



Find your Dream Home with
NANO COMPUTER
• Residential
• Commercial
• Downtown Condos
• Investment Properties
• Lands for Sale
Call for Free Home Evaluation
HIGHER STANDARDS
HomeLife/Future
Realty Inc., Brokerage*
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Independently Owned and Operated
Raj Nadarajah
Nagendrarajah
Sales Representative
416-333-6115
nanohomes@gmail.com



The BRICK
உங்கள் இல்லத்திற்கு தேவையான அனைத்து வித தளபாடங்களுக்கும், ஆடம்பர வரவேற்பறை,
படுக்கைஅறைக்குத் தேவையான தளபாடங்களுக்கும்
தமிழில் உரையாடி உங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்யலாம்.
Appliances
Electronics
Home Theatre
To book an appointment for the best deal in town
Certified sleep expert
Furniture Sales Consultant:
Anata Francis
647 962 5609

முற்கூட்டிய தேர்தலுக்கு முனைகிறாரா ஜெயலலிதா?



முதல்வர் ஜெயலலிதா முற்கூட்டிய தமிழகத் தேர்தலுக்குத் தயாராகிறாரா? தாராளமாக அவர் வழங்குகிற 'இனாம்' களும் இப்போதுதான் முடிந்துள்ள அவை அமர்வுகளில் அவர் வழங்கிய சமூக நலன் மற்றும் அபிவிருத்தி தொடர்பான 110 அறிக்கைகளும் 2016ன் நடுப்பகுதியில் நடக்கவேண்டிய மாநிலத் தேர்தல்களை முன்னகர்த்துவதற்கு அஇஅதிமுக தலைவி தீவிரமாக ஆலோசிப்பதனையே காட்டுகிறது. அடுத்த ஆண்டு ஏப்ரல், மே, மாதமளவில் தமிழ்நாடு தேர்தலைச் சந்திக்கலாம் எனச் சிலர் கூறுகிறார்கள்.

முதல்வரினால் அறிவிக்கப்பட்ட "அம்மா" நலத் திட்டங்களில் இறுதியாக அறிவிக்கப்பட்டது "அம்மா குழந்தை பராமரிப்புப் பொதி" யாகும். அது அரச வைத்தியசாலைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு வழங்கப்படவுள்ளது. 16 பொருட்களைக்கொண்ட இந்தப் பொதியிலுள்ள பொருட்கள் சிறப்பாகத் திட்டமிடப்பட்டுள்ளது. அவை துவாய், குழந்தைக்கான உடை, படுக்கை, நுளம்பு வலை, கைக்குட்டை, 100 மில்லிலீற்றர் குழந்தை எண்ணெய், 60 மில்லிலீற்றர் ஷம்பூ, சவர்காரப் பெட்டி, சவர்க்காரம், நகம் வெட்டி, இரண்டு விளையாட்டுப் பொருட்கள், கிலுகிலுப்பை, 250 மில்லிலீற்றர் கைக் கிருமிநீக்கி, தாய்க்கான 100 கிறாம் சவர்க்காரம், தாய்ப்பாலை அதிரிக்க வைக்கும் சௌபாக்கியா சுண்டி லேகியம் மற்றும் இவையனைத்தையும் வைப்பதற்கான பெட்டி, ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கும்.

இந் நிதியாண்டில் மட்டும் அரசாங்கம் 67 கோடி ரூபாய்களை இந்தப் பொதிகளுக்காகச் செலவிடும். இதனால் 6.7 லட்சம் குழந்தைகள் பயனடைவர் என்று முதல்வர் தனது 110 அறிக்கைகளில் ஒரு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

ஆயிரக்கணக்கான ஏழை மக்களுக்கு மட்டுமன்றி பல மத்தியதர வர்க்கத்து மக்களுக்கும் காலை, மதிய மற்றும் இரவு உணவுகளை மிகக் குறைந்த விலையில் வழங்குகிற 'அம்மா' உணவகம் ஏற்கெனவே அனைத்துலக கவனத்தை ஈர்த்த விடயமாக உள்ளது. அவர்கள் வரிசையாக அதற்காகக் காத்திருப்பது கண்கூடு. ஒரு மனிதன் தனது ஒரு நாள் சாப்பாட்டுக்கு 19 ரூபாய்களை மட்டுமே செலவழிப்பது போதுமானது. காலையிலே 5 ரூபாய்க்கு இட்லிகள், மதியம் 5 ரூபாய்க்கு ஒரு தட்டு சாம்பாரும் சாதமும் (அல்லது லெமன் றைஸ்) மற்றும் 3 ரூபாய்க்கு தயிர் சாதம், இரவு உணவாக 4 சப்பாத்திகளும் பருப்பும் 6 ரூபாய்க்குக் கிடைக்கிறது.

ஒவ்வோரு தேர்தல் தொகுதிகளிலுமுள்ள இளைஞர்கள், வேலையில்லாதவர்கள், பெண்கள், விவசாயிகள் போன்ற, அனைத்துத் தரப்பினரும் சிறப்பாகக் கவனித்துக் கொள்ளப்படுகின்றனர்.

குறைந்த விலையில் உணவு கிடைப்பதனால் மக்கள் சுகமாக வீதிகளில் பயணித்துத் திரிகின்றனர். அத்துடன் மிக மலிவான கட்டணத்தில் "அம்மா திரையரங்குகள்" வந்தவுடன் சிறப்பாக பொழுது போகலாம் என்ற எண்ணம் மக்களிடம் காணப்படுகிறது. "பயிற்சிக்கும் வேலை வாய்ப்புக்குமான அம்மா திட்டம்" ஜுலை 24ல் வெளியானதால் கல்விச் சாலைகளும் வீடுகளும் உற்சாகமடைந்துள்ளன. பொறியியல் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா தாரிகளது தொழிற் தகமைகளை தாம் வியக்கத் தக்க விதத்தில் அதிகரிக்கப் போவதாக அவர்கள் கூறுகிறார்கள். அவர்களில் பெரும்பாலானோர் தற்போது மிகக் குறைந்த தொழிற் திறன்களுடன் அரச காரியாலயங்களில் பணி புரியும் பியூன் ஒருவரை விடவும் குறைவான ஊதியத்தைப் பெறுபவர்களாக உள்ளனர்.



இந்த அனைத்து 'அம்மா' திட்டங்களும் உறுதிப்படுத்தப்பட்டு, அரசுக்கெதிராக வாக்களிக்கும் உணர்வு மக்களிடம் பெரிதும் இல்லாத இந்தச் சந்தர்ப்பத்தில் அடுத்த தமிழகத் தேர்தலுக்கான அழைப்பு விடுக்கப்படுமானால் ஜெயலலிதா தமிழ்நாட்டு வாக்கு வங்கியின் சகல தரப்பினரிடமிருந்தும் குறிப்பிடத்தக்க அளவு ஆதரவைப் பெறுவார். 'தேர்தலுக்குச் செல்லலாம் என்று அம்மா கூறுகிற சந்தர்ப்பத்தில் நாம் மிகப் பெரும் வெற்றியை ஈட்டக்கூடிய அளவுக்கு மக்களது மனோநிலை உள்ளது. லட்சக்கணக்கான மக்கள் பயன்பெறும் வகையிலான பல திட்டங்களை அம்மா ஒன்றன்பின் ஒன்றாக ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்' என்று கூறுகிறார் சமூக மேம் பாட்டுத்துறை அமைச்சர் பி. வளர்மதி. இவ்வாறு ஆரவாரத்துடன் பேசுவது இவ்வொரு அமைச்சர் மட்டுமல்ல, எந்தவொரு அஇஅதிமுக உறுப்பினரையும் தோளில் தட்டிக் கேளுங்கள். - அவர் அம்மாவின் புகழ் பாடுவதுடன் மக்கள் அவருடனேயே என்று கூறுவார்.

மாறாக எதிர் முகாமிலுள்ளவர்களது மன உறுதி தொடர்ந்து வீழ்ந்து செல்கிறது. "கப்டன்" விஜயகாந் திமுகவை ஓரம்கட்டுவதற்காக 2011 மாநிலத் தேர்தலில் அஇஅதிமுகவின் நண்பனாக தேர்தல் களமிறங்கியிருந்தார். எனினும் அம்மாவுடன் வேகமாக முரண்பட்டுக்கொண்டு இப்போது வழமையான தனது உறுமலுக்கு வெறும் நிழலாக மட்டும் இருக்கிறார். லோக்சபா தேர்தலில் அவர் பாஜக வுடன் கூட்டமைத்தார். எனினும் தேர்தலில் படுதோல்வியடைந்த பின்னர் இப்போது பாஜக அவரைப் பெறுமதியானவராகக் கருதுகிறதா என்பது எவருக்கும் தெரியாதது.



பல காலமாக அரியணையில் இருந்திருந்தும்கூட திமுக நல்ல நிலையில் இல்லை. இக் கட்சி லோக்சபா தேர்தலில் தமிழ்நாட்டின் 39 தொகுதிகளிலும் பாண்டிச்சேரியின் அனைத்துத் தொகுதிகளிலும் தோல்விகண்டது. இப்போது இன்னும் மோசமான உள் முரண்பாடுகளில் சிக்கித் திணறுகிறது. இறுதியாக திமுக பொருளாளர் மு.க. ஸ்டாலின் தான் நீண்டகாலம் தனி வாரிசாக இருந்துவிட்டதை உணர்கிறார் எனத் தோன்றுகிறது. எனினும், தலைமைச் செயலகமான அண்ணா அறிவாலயத்தில் கட்சியின் தளபதிகள் தமது சம்பிரதாய வருகைகளின்போது உறுதியான முகங்களைக் காட்டிச் செல்கின்றனர். அடுத்த தேர்தலில் நீங்கள் எம்மைக் கோட்டையிலே (அதிகாரத்தில்) காணலாம். "தலைவர் (கருணாநிதி) வல்லமைமிக்க கூட்டு ஒன்றை ஏற்படுத்துவார்" என்கிறார் திமுக முக்கியஸ்தரான முன்னாள் சென்னை மேயர் மா.சுப்பிரமணியன்.

சென்னையிலிருந்து ஆர்.பகவான் சிங்

எனினும் ஒரு திமுக அடிமட்டத் தொண்டனின் தோள்மீது தட்டிப்பாருங்கள். அவர் மா. சு வின் வீரத்தினை எளிதாக நிராகரிப்பார். இதுதான் அஇஅதிமுக விலும் திமுகவிலும் மேல்மட்டத்திலிருந்து கீழ்மட்டம் வரை பரவிக் கிடக்கின்ற மன உறுதியின் அளவுகட்கிடையிலான வேறுபாடு.

கட்சி மட்டங்களில் உள்ள உயர்ந்த மன உறுதி, அவரது நிர்வாகத்திற்குப் பொதுமக்கள் மத்தியிலுள்ள வரவேற்பு அத்துடன் எதிர்க்கட்சிகளில் ஏற்பட்டுள்ள உடைவுகள் என்பனதான் ஜெயலலிதாவை தேர்தலை முன்னகர்த்தி வைக்கக்கூடிய காரணிகள் என அவதானிகள் கருதுகிறார்கள். அவையிலே உள்ள 234 ஆசனங்களில் 151 பெரும்பான்மை ஆசனங்களை அவர் தற்போது தக்கவைத்திருப்பதால் 2015 நடுப்பகுதியில் மீண்டுமொரு ஐந்தாண்டு காலத்துக்கான புதிய ஆட்சியை அமைப்பதற்கான வாய்ப்பு குறைவதற்கான சந்தர்ப்பம் இல்லை.



அத்துடன் இம்முறை மாநிலத் தேர்தலில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியையும் மாக்ஸிஸ்டுகளையும் உதறித் தள்ளிவிட்டு பெரும்பாலும் பாஜக வுடன் கூட்டமைத்துக் கொள்ளுவதற்கான வாய்ப்பு பெரிதும் காணப்படுகிறது. கடந்த பாராளுமன்றத் தேர்தலிலேயே அவர் இடதுசாரிகளுக்கு கல்தா கொடுத்துவிட்டு பாண்டிச்சேரி உட்பட தமிழகத்தின் 40 தொகுதிகளிலும் தனியே போட்டியிடத் தீர்மானித்திருந்தார். பாராளுமன்றத் தேர்தல் பிரச்சாரக் காலத்திலான குறுகிய கால சச்சரவை விட்டுவிட்டுப் பார்த்தால் நரேந்திர மௌடிக்கும் அவருக்குமான உறவு இதுவரை நன்றாகவே இருந்து வந்துள்ளது. அத்துடன் அவர்கள் இருவரது கட்சிகளுக்கும் இடையிலான நல்லுறவுக்கு அஇஅதிமுக வின் உறுப்பினர் எம். தம்பித்துரை அண்மையில் துணை சபாநாயகராக நியமிக்கப் பட்டமை ஒரு நல்ல சான்று. சாதாரணமாக இப் பொறுப்பு பிரதான எதிர்க் கட்சிக்கே வழங்கப்படுவதுண்டு. இம்முறை காங்கிரசை ஒதுக்கிவிட்டு தனது நண்பர் ஜெயலலிதாவின் அஇஅதிமுக விற்கே மோடி அப் பதவியினை வழங்கியுள்ளார்.

எப்போதும் தனது அரசியல் கணக்கீடுகளில் திறமையாகச் செயற்படுகின்ற ஜெயலலிதா இம்முறை மோடியுடன் அணிசேர்ந்து கொள்வார், அதன்மூலம் மத்திய அரசுடனான தனது உறவை வலுப்படுத்திக் கொள்வாரென எதிர்பார்க்கப் படுகிறது. மாநில அவையிலே பாஜக விற்கு 15 ஆசனங்களை அவர் வழங்கினால் தமிழ்நாடு பாஜக மிகவும் திருப்தியடையும். இதன்மூலம் அவர் அடையும் ஆதாயம் பெருமளவாக இருக்கும்.

இவ்வாறானதொரு பாஜகவுடனான கூட்டு ஏற்படுவதற்கு எதிரான வாதம் ஒன்றே ஒன்றுதான் உள்ளது; அவர் முஸ்லிம்களது வாக்குகளை இழப்பது பற்றிக் கவலைப்படுவார். எனினும் முஸ்லிம்களது ஆதரவு இவருக்கு எதிராகவே இருந்து வந்துள்ளது என்பதுடன் முஸ்லிம்களது வாக்குகள் மிகச் சில தொகுதிகளிலேயே அவருக்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்பதனால் அது ஒரு பெரிய விடயமாக இருக்காது.



கச்சதீவு ஒப்பந்தமும் மீனவர் தலைவலியும்

என். ஆர். சோழ

இந்திய இலங்கை நாடுகளுக்கிடையில் நட்புறவை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாக இந்தியாவுக்குச் சொந்தமான கச்சதீவை தாரை வார்த்து - இலங்கைக்கு சொந்தமாக்கிய நாள்.

அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியும் - இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவும் இணைந்து இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாள்.

இந்தியாவின் கடற்பகுதியில் அமைந்துள்ள கச்சதீவு இலங்கைக் கரையிலிருந்து 18 கடல் மைல் தூரத்திலும், ராமேஸ்வரம் கரையிலிருந்து 10 கடல் மைல் தூரத்திலும் அமைந்திருந்ததால் அது தமிழ்நாட்டுக்குரிய பகுதியாகவே கருதப்பட்டது. வரலாற்றுச் சான்றுகளும் இதை உறுதிப்படுத்துகின்றன. இதைக் கருத்தில் எடுத்து ஒப்பந்தம் போட்டதாகத் தெரியவில்லை. ஏனென்றால் தமிழ்நாடு அரசின் முழுச் சம்மதமில்லாமல் கச்சதீவு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. இருப்பினும் அன்று முதலமைச்சராக இருந்த கலைஞர் மு.கருணாநிதியின் விடாமுயற்சியால் தமிழக மீனவர்களுக்கு சாதகமான சில திருத்தங்கள் இவ்வொப்பந்தத்தில் சேர்க்கப்பட்டன.



* **இந்திய மீனவர்கள் கச்சதீவுக் கடலில் மீன் பிடிப்பதற்கும், அதன் நிலப் பகுதியில் தங்கி வலைகளை உலர விடுவதற்கும் அனுமதியளிப்பதென்றும்.**

* **வருடாவருடம் நடைபெறும் கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவத்தில் இருநாட்டு மக்களும் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகளை இருநாட்டு அரசுகளும் செய்து கொடுப்பதென்றும்** இந்த ஒப்பந்தத்தில் வழிவகை செய்யப்பட்டிருந்தது.

இந்திய மீனவர்களுக்கு குறிப்பாக தமிழ்நாட்டு மீனவர்களுக்கு சாதகமான இந்த இரு திருத்தங்களும் சேர்க்கப்பட்டதால் கச்சதீவு மீதான தமிழ்நாட்டு மீனவர்களின் உரிமை பாதுகாக்கப்பட்டது. இந்தியப் பாராளுமன்றத்திலும் - மாநிலங்கள் அவையிலும், கச்சதீவு ஒப்பந்தத்துக்கு எதிராக தி.மு.க. உறுப்பினர்கள் கண்டனக் குரல் எழுப்பி தங்களது எதிர்ப்பைப் பதிவு செய்திருந்தார்கள். அதிகார மையத்திலிருக்கும் மத்திய அரசின் முடிவை மாநில அரசுகள் ஒரு வரம்புக்கு மீறி எதிர்க்க முடியாத சூழ்நிலையில், தமிழ்நாட்டு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதியால் முன்வைக்கப்பட்ட திருத்தங்கள் கச்சதீவு ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன. இதனையாவது மத்திய அரசு அனுமதித்ததே என்று ஆறுதல் கொள்ளலாம்.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை அடிப்படையில் இரு நாடுகளுக்கிடையில் உருவான இவ்வொப்பந்தத்தை மாநில அரசால் கட்டுப்படுத்த முடியாது. இது மத்திய அரசின் அதிகார வரம்பிற்குள் இருப்பதால் அதைத் தடுக்கவும் முடியாது.

கச்சதீவை இலங்கை கேட்டது - இந்தியா அதை கொடுத்தது என்று சாதாரணமாக சொல்லிவிட முடியாது. இந்தியாவின் கடல் பிரதேசத்தில் அமைந்துள்ள கச்சதீவை இலங்கைக்கு விட்டுக்கொடுத்தலில் ஒரு ராஜதந்திரப் பின்னணி புதைந்திருந்தது. இலங்கையுடனான வெளியுறவுக் கொள்கையில் இந்திய அரசுக்கு ஏற்பட்டிருந்த ஒரு சரிவை சரிக்கட்டுவதற்காகவே இந்த ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்டது. 1971ம் ஆண்டு நடந்த இந்திய பாகிஸ்தான் யுத்தத்தில் கிழக்கு பாகிஸ்தான் வங்காள தேசமாக உருவானபோது இலங்கையுடனான வெளியுறவுக் கொள்கையில் விரிசல் ஏற்பட்டு இந்தியாவுக்கு பகை நாடாக இலங்கை மாறியது. யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது பாகிஸ்தானுக்குச் சொந்தமான விமானங்கள் இந்திய வான் வெளியிற் பறப்பதற்கு இந்திய அரசு தடை விதித்தபோது அதற்கு எதிராக பாகிஸ்தானுக்கு உதவ இலங்கை அரசு முன்வந்தது. தனது நாட்டு வான்வெளியிற் பறப்பதற்கும் கொழும்பு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கி எரிபொருள் நிரப்புவதற்கும் பாகிஸ்தான் போர் விமானங்களுக்கு அனுமதி வழங்கியது. இலங்கையின் இந்த முடிவால் இந்தியா அதிர்ச்சியடைந்தாலும் தனது தாக்குதலை அதிகரித்தன் மூலம் பாகிஸ்தானை பணிய வைத்து இந்திய உபகண்டத்தில் தனது வல்லாதிக்கத்தை இந்தியா நிரூபித்துக் காட்டியது. யுத்தத்தில் பாகிஸ்தானை வெற்றி கொண்டு, வங்காள தேசத்தை தோற்றுவித்தாலும், இலங்கையின் எதிர்மறையான போக்கை இந்தியாவால் புரிந்துகொள்ள முடியவில்லை. அதனை நட்பு நாடு என்று சேர்த்துக் கொள்ளவும் முடியவில்லை. பகை நாடென்று விலக்கி வைக்கவும் முடியவில்லை. யானையின் காதுக்குள் கட்டெறும்பு புகுந்த நிலையில் இந்தியா தவித்தது. ஆனால் இதைப் பற்றியெல்லாம் இலங்கை அலட்டிக் கொள்ளவில்லை. தனது நட்பு நாடு கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் பாகிஸ்தானுக்கு உதவியதாக இலங்கை தன்னிலை விளக்கம் அளித்து இந்தியாவுக்கு மேலும் அதிர்ச்சியூட்டியது. இலங்கையின் தன்னிலை விளக்கத்தைக் கேட்டு இந்தியா கோபமடைந்தாலும், ராஜதந்திரத்துக்கு முன்னுரிமை கொடுத்து இலங்கையுடனான நட்புறவைத் தொடரவே விரும்பியது. இந்தியாவின் வடக்கே பாகிஸ்தானும் சீனாவும் பகை நாடுகளாக இருப்பதால், தெற்கே தனது நட்பு நாடாக இலங்கையை வைத்திருக்கவேண்டிய கட்டாயத்தில் இந்தியா இருந்தது. இந்தத் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் கச்சதீவை தானம் செய்தது சரியான ராஜதந்திர நடவடிக்கைதான் என்று அரசியல் அவதானிகளும், பாதுகாப்பு அதிகாரிகளும் கருத்துத் தெரிவித்தனர்.

ஆனால் இந்தியாவின் கடற்பிராந்தியத்தில் அமைந்துள்ள கச்ச தீவை இலங்கை தனதாக்கிக் கொள்ள ஏன் விரும்பியது என்ற சர்ச்சைக்குரிய விவாதத்திற்குள் போக விரும்பாத இந்திய அரசும், அதன் அதிகாரிகளும் இத்துடன் தமது ராஜதந்திரக் கடமையை முடித்துக் கொண்டனர். ஆனால் 1967ஆம் ஆண்டில் தமிழ்நாட்டு ஆட்சி அதிகாரத்தை இழந்த காங்கிரஸ் தலைமை இப்போது கச்சதீவை இலங்கையிடம் பறிகொடுத்ததன் மூலம் தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சிக்கே சங்கூதிவிட்டது.

‘கடுகு சிறிதானாலும் காரம் பெரிது’ என்பார்கள். இலங்கை சிறிய நாடாக இருந்தாலும் அதன் செயற்பாடுகள் பெரியதாக இருந்தது. கச்சதீவை தனதாக்கிக் கொண்டதில் இலங்கை தனது கடல் பிராந்தியத்தை விரிவுபடுத்தியதோடல்லாமல், மீன் வளத்தையும் அதிகரிக்க செய்துள்ளது. இந்தியாவின் தென்பகுதி தமிழ்நாட்டையும் இலங்கையின் வடபகுதி யாழ் குடா நாட்டையும் இணைக்கும் பாக் நீரிணை ஆழம் குறைந்த பகுதியாக இருப்பதாலும், கச்சதீவு ஒப்பந்தம் மூலம் இலங்கையின் ஆளுமைக்குள் இப்பகுதி முழுமையும் வந்ததாலும், இந்தியக் கடற் பகுதிக்குள் தனது எல்லையை இலங்கை விரிவுபடுத்திக் கொண்டது.

மீன்களின் வாழ்நிலைக்கு ஏதுவாக யாழ்ப்பாண வட கடற்பகுதியின் கிழக்கே பீற்ரூ (PETRUE) கடலடித்தள மேடையும், மேற்கே மன்னார் கடலடித்தள மேடையும் இயற்கையாக அமைந்திருப்பதால், அங்கே மீன் இனங்கள் தங்கி இனப்பெருக்கம் செய்து வாழ்வதற்கான தட்ப வெப்ப நிலையும், அவற்றிற்கான உணவும் நிறைந்திருப்பது சிறப்பம்சமாகும். வருடம் முழுவதும் மீன் பிடிப்பதற்கான மீன் வளம் பெருகிப் பரந்து கிடப்பதால் இறால், மீன்கள் அதிகமாகக் கிடைக்கும் கடற்பிரதேசமாக இப்பகுதிகள் விளங்கின. இக்கடற் செல்வங்கள் நிறைந்த இப்பகுதிகளுடன் இப்போது கச்சதீவு கடல் பகுதியும் இணைவதால் இலங்கையின் வடகடலில் மீன்பிடித் தொழில் வளங் கொழிக்கும் தொழிலாக மாறியிருக்கிறது. இருநாட்டு மீனவர்களும் இப்பகுதியில் மீன் பிடிப்பதால் அவர்களின் வாழ்வாதாரமும் உயர்ந்துள்ளதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

மீன் பிடிக்கும் முறையில் இருநாட்டு மீனவர்களுக்கு மத்தியில் ஒற்றுமை இருந்தாலும், முறை வைத்து மீன் பிடிக்கத் தவறியதால் பிரச்சனைகள் ஏற்படத் தொடங்கின.

இரு பகுதி மீனவர்களும் தமிழர்களாக இருந்ததால், மோதல்கள் தவிர்க்கப்பட்டு சகிப்புத்தன்மையுடன் சுமுகமான நிலையே தொடர்ந்தது. ஆனால் இதுவும் அதிக நாள் நீடிக்கவில்லை. இறால், மீன்களை அதிகம் பிடிக்கவேண்டும் என்கிற தமிழக மீனவர்களின் பேராசை பெரும் பிரச்சனையாக மாறியது. இலங்கை நாட்டுப்படகு மீனவர்களின் வாழ்வாதாரமே பாதிக்கப்பட்டது. தமிழ்நாட்டு மீன்பிடித் தொழிலில் புதிய தொழில்நுட்பம் புகுத்தப்பட்டு இழுவைப் படகுகளின் (ரோளர்) எஞ்சின் வேகம் அதிகரிக்கப்பட்டது. புழக்கத்திலிருந்த மூன்று சிலிண்டர் உள்ள சிறிய எஞ்சின் நீக்கப்பட்டு ஆறு சிலிண்டர் உள்ள பெரிய எஞ்சின் பொருத்தப்பட்டு வேகம் அதிகரிக்கப்பட்டது. இதன் வேகத்துக்கு ஏற்றாற்போல் இறால், மீன்பிடி வலைகளும் பெரிதாக வடிவமைக்கப்பட்டது. இதன் மூலம் தமிழ்நாட்டு மீனவர்கள் கச்சதீவுக் கடலிலும், அதைத் தாண்டியும் இறால் மீன்களை பிடிப்பதில் ஆர்வம் காட்டினர். அதற்கேற்ற பலனும் அவர்களுக்குக் கிடைத்தது. இழுவை விசைப் படகுகளின் வேகமும், புதிய தொழில் நுட்பத்திலான மீன்பிடி முறையும் அதிக அளவில் இறால், மீன்களைப் பிடிப்பதற்கு வழிகோலின. இதனால் தமிழ்நாடு மீனவர்களின் வாழ்வாதாரம் உயர்ந்து பணம் கொழிக்கும் தொழிலாக மாறியது.

ஆனால், இந்த வகையான இழுவை விசைப் படகுகளின் மீன்பிடி வேகத்துக்கு இலங்கை தமிழ் மீனவர்களால் ஈடு கொடுக்க முடியாத நிலையில், அவர்களது மீன்பிடித் தொழில் பெரிய அளவில் முடங்கிப் போனது.

ராமேஸ்வரம், மண்டபம், கோட்டைப்பட்டணம், ஜெகதாப்பட்டணம், மல்லிப்பட்டணம், வேதாரண்யம், ஆற்காட்டுத்துறை, நாகப்பட்டணம் போன்ற இடங்களில் இருந்து, கச்சதீவு கடல் நோக்கி புறப்படும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீன்பிடி விசைப்படகுகள் மின்விளக்குகளின் ஒளிவெள்ளத்தில் இலங்கைக் கடல் எல்லையைத் தாண்டி நுழையும்போது, ராமேஸ்வரமே மிதந்து வருவதுபோல் காட்சியளிக்கும். எல்லை தாண்டி வரும் இக்காட்சியைக் காணும் இலங்கை மீனவர்கள் கதி கலங்கிப் போய்விடுவார்கள். ஏனென்றால் மீன்களுக்காக கடலில் போடப்பட்ட வலைகள் அவர்களின் கண் முன்பாகவே காணாமல் போய்விடும். அந்த அளவுக்கு தமிழ்நாடு விசைப்படகுகளால் யாழ்ப்பாண மீனவர்களின் வலைகள் அறுக்கப்பட்டு, வாழ்வாதாரமே பாழாகிவிடுகின்றது. நாட்டுப்படகு மீன்பிடி முறையில் (நைலோன் வலை) வல்லுனர் களான யாழ்ப்பாண மீனவர்கள் பல லட்சங்களை முதலீடு செய்து, பெரிய அளவில் இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் எல்லை தாண்டிவரும் தமிழ்நாட்டு விசைப்படகுகள் அவர்கள் கடலில் போட்ட வலைகளுக்கு மேலால் தாண்டி சென்று சேதப்படுத்தி விடுகின்றன. இது தினந்தோறும் நடைபெறும் துயரம். மீன்பிடித் தொழிலுக்காகப் போடப்பட்ட முதலீடு கடலோடு கரைந்து காணாமல் போய்விடுகின்றது. இதனால் யாழ்ப்பாண மீனவர்களின்டெ எதிர்காலமே கேள்விக்குறியாகி விடுகிறது.

ஆனால், தமிழ்நாட்டு மீனவர்கள் இதைப் பற்றி கவலை கொள்ளாமல் கச்சதீவின் கடல் பகுதியிலுள்ள கடல் செல்வங்களை அள்ளிச் செல்வதில் குறியாக இருந்ததுதான் கவலைக்குரிய விடயம். படகொன்றுக்கு சராசரி 80 முதல் 100 கிலோ வீதம் ஆயிரம் விசைப்படகுகள் நாள் ஒன்றுக்கு பிடிக்கும் இறாலின் நிறை அளவு 80 ஆயிரம் கிலோவுக்கும் அதிகமாகும். பிடிபடும் மற்றவகை மீன்கள் தனிக் கணக்கு. அவற்றிற்கும் தனி விலை உண்டு. நாள் ஒன்றுக்கு 80 ஆயிரம் கிலோ இறால் பிடிபடுவது ஒரு சராசரிக் கணக்காகும். ஆனால், இதற்கு மேலாகவும் இறால் வகை மீன்கள் தினமும் பிடிபடுகின்றன. இது 1980 - 1985 ஆண்டு கணக்காகும். அள்ள அள்ளக் குறையாத கடற்செல்வங்களான இறால் வகை மீன்கள் கச்சதீவுக் கடலிலும் அதைத் தாண்டிய இலங்கைக் கடல் பகுதியிலும் நிறைந்திருப்பதால் அதைத் தமிழ்நாட்டு மீனவர்கள் மட்டும் அள்ளிச் செல்வது எந்தவிதத்தில் நியாயமானது? கச்சதீவு இப்பொழுது இலங்கைக்கு சொந்தமானாலும் மீன் பிடிக்கும் உரிமை தமிழ்நாட்டு மீனவர்களுக்கும் உண்டு. அதற்காக தமிழக மீனவர்கள் இப்படியா நடந்து கொள்வது? தமிழ்நாட்டு விசைப் படகுகளால் இலங்கை மீனவர்களுக்கு ஏற்படும் பொருளாதார இழப்புகளை கண்டுகொள்ளாமல் விட்டால் எதிர்காலத்தில் இரு நாட்டு மீனவர்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டு அது தவிர்க்க முடியாத சோகமாகிவிடும்.

ஆனாலும், காலப்போக்கில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் இருநாட்டு மீனவர்களையும் இரத்தம் சிந்தும் அளவுக்கு கொண்டு போய் நிறுத்தியது. 1983 யூலை இனக்கலவரம் எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றிப்போட்டது. சிங்கள இராணுவத்தின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு பயந்து ஆயிரம் ஆயிரம் இலங்கைத் தமிழ் மக்கள் படகுகள் மூலம் அகதிகளாக தமிழ்நாட்டில் தஞ்சமடைந்த போதுதான் பிரச்சனைகள் ஆரம்பமாயின. இதன் தொடர்ச்சியாக இலங்கைத் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் வலுவடையத் தொடங்கியது. இலங்கைத் தமிழர்களுக்காக தமிழ் நாட்டில் ஏற்பட்ட எழுச்சி இந்திய அரசைத் திரும்பிப் பார்க்க வைத்தது. எம்.ஜி.ஆர். ஆட்சியிலிருந்து ஆதரவுக்கரம் நீட்டினார். கலைஞர் கருணாநிதி எதிர்க்கட்சியிலிருந்து குரல் கொடுத்தார். இதன் விளைவு இந்திய அரசு இலங்கைப் பிரச்சனையில் தலையிட்டது. தமிழ் இளைஞர்களுக்கு பல உதவிகளை செய்தது. இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் சுதந்திரமாக நடமாடுவதற்கும், பாக் நீரிணையை கடல் போக்குவரத்திற்கு பயன்படுத்திக் கொள்வதற்குமான அனுமதியும் இந்திய அரசால் மறைமுகமாக வழங்கப்பட்டிருந்தது.

இதன் பின்பே நிலைமைகள் மேலும் மோசமாகத் தொடங்கின. இலங்கை அரசு கச்சதீவு கடற்பகுதியில் தனது ஆளுமையை நிலைநாட்ட தனது கடற்படையின் நடமாட்டத்தை அதிகப்படுத்தியது. அத்துடன் இலங்கைத் தமிழ் மீனவர்களுக்கு மீன் பிடிக்க தடையும் விதித்தது. இது தமிழ்நாட்டு மீனவர்களுக்கு ஆபத்தாக முடிந்தது. கச்சதீவை தாண்டிவரும் மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் சுடப்பட்டு விரட்டியடிக்கப்பட்டார்கள். இத்தாக்குதலில் தமிழ்நாட்டு மீனவர்கள் பலர் கொல்லப்பட்டார்கள். 1983 ம் ஆண்டு முதல் 2013 ம் ஆண்டு வரையிலான 30 வருட காலத்தில் 500 க்கு மேற்பட்ட மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டும் - ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயப்படுத்தப்பட்டும், படகுகள் வலைகள் அழிக்கப்பட்டும் இன்றுவரை அது தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

இலங்கை இந்தியாவின் நட்பு நாடாக இருக்க வேண்டும் என்பதற்காக 1974 ம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட கச்சதீவு ஒப்பந்தம் இன்று இந்தியாவுக்கு பெரும் தலைவலியாக மாறிவிட்டது.

இலங்கைக் கடற்படையிடமிருந்து தனது சொந்த நாட்டு மீனவர்களைக் காப்பாற்ற முடியாமல் தவிக்கும் ஒரு சங்கடமான நிலையே இந்திய அரசுக்கு ஏற்பட்டுவிட்டது. தமிழ்நாட்டு மீனவர்கள் எல்லைதாண்டி மீன் பிடிக்கக்கூடாது என்று இந்திய அரசு அறிவித்திருந்தாலும் நடைமுறையில் அது சாத்தியமில்லை. ஏனென்றால் ராமேஸ்வரம் கரையிலிருந்து கச்சதீவு 10 கடல் மைல் தொலைவில் இருப்பதால் மீனவர்களின் விசைப்படகுகள் சாதாரணமாகவே எல்லையை தாண்டிவிடும். இதுகாலவரை எல்லை தாண்டியே தமிழ்நாட்டு மீனவர்கள் இறால், மீன்களைப் பிடித்து வருகிறார்கள். இலங்கைக் கடற்பகுதியில் மீன் வளம் இருப்பதால் அதை நோக்கியே தமிழ் நாட்டு மீனவர்கள் உயிரைப் பணயம் வைத்து மீன் பிடிக்கச் செல்கிறார்கள். தங்கள் பிழைப்புக்காக உயிரையும் விடுகிறார்கள்.

இது நீண்ட காலமாக தொடரும் சோகம். இதை முடிவுக்குக் கொண்டு வர இருநாட்டு அரசுகளும் பேசித் தீர்க்க வேண்டும். முடங்கிப் போயிருக்கும் இருநாட்டு மீனவர்களின் பேச்சுவார்த்தையை முன்னெடுத்து பிரச்சனைகளுக்குத் தீர்வு காண மத்திய மாநில அரசுகள் முன்வரவேண்டும். அதற்கு இருநாட்டு மீனவர்களும் ஒத்துழைப்புக் கொடுக்கவேண்டும். அதேநேரத்தில் இருநாட்டுத் தமிழர்களின் தொப்புள்கொடி உறவுமுறையும் அறுந்து போகாமல் காப்பாற்றப்படவேண்டும். இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்பு அரணாக என்றும் இருப்பவர்கள் தமிழ்நாட்டுத் தமிழர்கள்தான். இதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

இந்திய - இலங்கை அரசுகளுக்கிடையில் ஏற்பட்ட கச்சதீவு ஒப்பந்தம் இன்று திசைமாறிச் சென்று கொண்டிருப்பதால், ஒப்பந்தத்தை திரும்பப் பெறவேண்டும் என்ற கோபம் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளிடமும் - மக்களிடமும் மேலோங்கி வருகிறது. அதே நேரத்தில் இலங்கைக் கடற்படையின் தாக்குதல்களும் கைது நடவடிக்கைகளும் தமிழக மீனவர்களை மேலும் கொதிப்படையச் செய்து வருகின்றன. அவர்களின் போராட்டங்கள் கண்டுகொள்ளப்படாத நிலையில் தங்களது படகுகளில் வெள்ளைக் கொடிகளை ஏற்றிக் கொண்டு இலங்கை கடல்படையிடம் சரணடைவதற்காக கடலில் இறங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தமிழக மீனவர்கள் தள்ளப்பட்டுவிட்டனர். இதற்காக என்ன செய்யப் போகின்றன மத்திய அரசும் மாநில அரசும்? ஆட்சி மாறினாலும் காட்சிகள் மாறவில்லை என்ற நிலைதான் இன்னும் தொடர்கிறது. தமிழ்நாட்டு மீனவர்கள் கச்சதீவு என்னும் குண்டுச் சட்டிக்குள் நின்று குதிரை ஓட்டாமல் தங்கள் மீன்பிடி முறையில் புதிய தொழில்நுட்பத்தைப் புகுத்தி ஆழ்கடல் மீன்பிடி முறைக்குள் நுழையவேண்டும். இந்தியப் பெருங்கடல் அந்தமான் - நிக்கோபார் தீவுகள் வரை நீண்டு இந்திய மீனவர்களுக்காக காத்துக்கிடக்கிறது. மத்திய அரசும் - மாநில அரசும் ஆழ்கடல் மீன்பிடி முறையை ஊக்கப்படுத்தினால் இந்த உலகிற்கே இந்தியா மீன் உணவை வழங்கலாம். அந்த அளவுக்கு இந்தியா கடல்வளம் நிறைந்த நாடு. மத்திய அரசு ஏன் இதைக் கண்டு கொள்ளவில்லை என்பதுதான் கவலையான விடயம்.



இரத்தம் வழியும் யுத்த பூமி

இரா. ஜவஹர்

"பாலஸ்தீனத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டும். ஒரு பகுதியில் யூத இனத்தவர் தங்களது சுதந்திர நாட்டையும் மறுபகுதியில் அரபு இனத்தவர் தங்களது சுதந்திர நாட்டையும் அமைத்துக் கொள்ள வேண்டும்."

"இன்று 10 குழந்தைகள் உட்பட 50 பேர் கொல்லப்பட்டார்கள்"

"இன்று 20 குழந்தைகள் உட்பட 100 பேர் கொல்லப்பட்டார்கள்"

என்பன போன்ற செய்திகள் நாள்தோறும் வெளியாகின்றன.

பாலஸ்தீன நாட்டின் காசா பகுதியில் இஸ்ரேல் இராணுவம் நடத்திவரும் கொடூரமான குண்டுவீச்சில் கொல்லப்படும் பொதுமக்கள்தான் இவர்கள்.

இஸ்ரேலிய இளைஞர்கள் 3 பேர் பாலஸ்தீனத்தின் மேற்குக் கரைப் பகுதியில் கொல்லப்பட்டார்கள். "இவர்களை ஹமாஸ் அமைப்பினர்தான் கொன்றார்கள். எனவே ஹமாஸ் அமைப்பினர் வலுவாக உள்ள காசா பகுதியில் தாக்குதல் நடத்தி அவர்களை அழிக்கப் போகிறோம்" என்று இஸ்ரேல் கூறியது. ஆனால் அதற்கான எந்த ஆதாரத்தையும் அளிக்கவில்லை.





கடந்த ஜூலை 8-ம் தேதி இஸ்ரேல் ராணுவம் தாக்குதலைத் தொடங்கியது. இதனால் இதுவரை 2000க்கு மேற்பட்டோர் கொல்லப் பட்டார்கள். இதற்குப் பதிலடியாக ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் மீது குண்டு வீசியதில் 50-க்கு மேற்பட்ட இஸ்ரேலியர்களும் கொல்லப்பட்டனர்.

அங்கே இஸ்ரேல் என்ற நாடு செயற்கையாக உருவாக்கப்பட்ட 1948ம் ஆண்டு முதல் கணக்கிட்டால், கொல்லப்பட்ட பாலஸ்தீனியர்களின் எண்ணிக்கை ஆயிரம் இல்லை ஒரு லட்சத்துக்கும் மேல்.

அதுமட்டுமல்ல லட்சக்கணக்கானோர் படுகாயம் அடைந்து ஊனமானார்கள். 70 லட்சம் பேர் வெளிநாடுகளில் அகதிகளாக உள்ளனர். மற்றவர்கள் சொந்த நாட்டிலேயே மேற்குக்கரைப் பகுதியில் 25 லட்சம் பேரும், காசா பகுதியில் 15 லட்சம் பேரும் அகதிகளைப் போல் வாழ்கிறார்கள்.

எப்படி ஏற்பட்டது இந்தச் சோகம்? இதன் வரலாறு என்ன?

"ஆபிரஹாமை நோக்கிக் கர்த்தர் சொன்னார். 'நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனாருடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ". (கர்த்தர் என்பது யேசுக் கிறிஸ்து அல்ல)

கர்த்தர் காட்டிய தேசம், 'கானான் தேசம்'. அப்போது அந்த தேசத்தில் பிலிஸ்தீனியர்கள், கானானியர்கள், பீனிசியர்கள் உட்படப் பல பழங்குடியினர் இருந்தார்கள். இந்தக் கானான் பிரதேசத்தில் ஆபிரஹாமும் அவரைச் சார்ந்தவர்களும் குடியேறினார்கள்.

ஆபிரஹாமின் சந்ததியில் தோன்றிய ஜேக்கப் தனது இனத்தவருக்குப் பெரும் தலைவராக விளங்கினார். ஜேக்கப் பின்னாளில் 'இஸ்ரேல்' என்று அழைக்கப்பட்டார். அவரது சந்ததியினர் தான் 'இஸ்ரேலியர்' அல்லது 'யூதர்கள்' என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் வாழ்ந்த கானான் தேசம் 'இஸ்ரேல்' என்று அழைக்கப்பட்டது.

எனினும் அண்டை நாடுகளில் அடுத்தடுத்து அமைந்த பேரரசுகள் இஸ்ரேலை ஆக்கிரமித்து, யூதர்களைக் கொடுமைப்படுத்தி, விரட்டியடித்தன. இஸ்ரேலின் பெயரும் பின்னாளில் மாற்றப்பட்டுப் 'பாலஸ்தீனம்' என்று பெயரிடப்பட்டது.

எனவே 'பைபிள்' படி 'கடவுள்' கொடுத்த தேசமான பாலஸ்தீனத்தில் மீண்டும் யூதர்கள் குடியேறி, இழந்த நாட்டைக் கைப்பற்ற வேண்டும்" - எனக் கூறி, 'ஜியோனிஸ்ட் இயக்கம்' தோன்றியது 1897-ம் ஆண்டில்.

இதை மறுத்தார்கள் அரபு இனத்தைச் சேர்ந்த பாலஸ்தீனியர்கள்.

"பைபிள்படியே பார்த்தால் கூட பாலஸ்தீனத்தின் பழங்குடியினர், மண்ணின் மைந்தர்கள் பிலிஸ்தீனியர்களும், மற்ற பழங்குடியினரும் தான். பிலிஸ்தீனியர்களின் தேசம் தான் பாலஸ்தீனம் எனப்பட்டது. அவர்களது சந்ததியினர்தான் அரபு இனத்தைச் சேர்ந்த பாலஸ்தீனியர்களாகிய நாங்கள். மறுபுறம் வரலாற்றின்படி பார்த்தால் சிரியாவின் ஒருபகுதியாகத்தான் பாலஸ்தீனம் இருந்தது. சிரியா, அரபு நாடுதான். எனவே எங்கள் தாயகமான பாலஸ்தீனத்தை வேறு எவரும் ஆக்கிரமிக்க விடமாட்டோம்" என்றார்கள் பாலஸ்தீனியர்கள்.

அப்போது பாலஸ்தீன மக்கள் தொகையில் 92 சதவிகிதம் பேர் பாலஸ்தீனியர்கள், 8 சதவிகிதம் பேர்தான் யூதர்களும், மற்ற இனத்தவர்களும்.

இந்த நிலையில் குறுக்கிட்டது முதல் உலகப்போர்.

போரில் அராபியர்களின் ஆதரவைப் பெறுவதற்காக மெக்காவின் ஷெரீஃபுக்கு பிரிட்டன் ஒரு வாக்குறுதி அளித்தது. "மேற்கே மத்தியதரைக்கடல் முதல் கிழக்கே பாரசீக வளைகுடா வரை உள்ள பெரும் நிலப்பகுதிகளில் அரபு மக்கள் தங்களது 'அகன்ற அரபு தேசத்தை' அமைத்துக்கொள்ள பிரிட்டன் ஏற்பாடு செய்யும்."

மறுபுறம் இதற்கு நேர் மாறாக, யூதர்களின் ஆதரவைப் பெற யூதர்களுக்கும் பிரிட்டன் ரகசியமாக வாக்குறுதி அளித்தது. "யூதர்களுக்கு ஒரு தனி நாட்டை பாலஸ்தீனத்தில் அமைக்க பிரிட்டன் ஏற்பாடு செய்யும்."

இரட்டை வேடம் அல்ல! மூன்று வேடம்.

மூன்றாவது வேடம்: பிரான்சுக்கும் பிரிட்டன் வாக்குறுதி அளித்தது. "போரில் துருக்கிப் பேரரசு முறியடிக்கப்பட்டதும் அதன் ஆதிக்கத்தில் உள்ள பாலஸ்தீனம் உட்பட அனைத்து நாடுகளையும் பிரான்சும் பிரிட்டனும் பங்கு போட்டுக்கொள்ளலாம்."

போர் முடிந்தது. 1918-ம் ஆண்டில், போரில் துருக்கி தோற்று சரணடைந்தது. துருக்கியின் ஆதிக்கத்தில் இருந்த சிரியா நாட்டை பிரான்ஸ் ஆக்கிரமித்துக்கொண்டது. துருக்கியின் ஆதிக்கத்தில் இருந்த பாலஸ்தீனம், ஜோர்டான், ஈராக் ஆகிய நாடுகளை பிரிட்டன் ஆக்கிரமித்தது.

அரபு மக்களுக்கு அளித்திருந்த வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிட்ட பிரிட்டன், பாலஸ்தீனத்தில் யூதர்களைக் குடியேற்றுவதில் தீவிரமாக இறங்கியது.


இதையடுத்து பாலஸ்தீனத்தில் யூதர்களுக்குத் தனி நாடு அமைக்க அனுமதி கோரி ஐ.நா. சபையில் பிரிட்டனின் ஆதரவோடு யூதர்கள் மனுச் செய்தார்கள். இதை ஏற்று பாலஸ்தீனத்தைத் துண்டுபோடும் தீர்மானத்தை ஐ.நா.சபை நிறைவேற்றியது.

"பாலஸ்தீனத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டும். ஒரு பகுதியில் யூத இனத்தவர் தங்களது சுதந்திர நாட்டை அமைத்துக் கொள்ளவேண்டும். மறுபகுதியில் அரபு இனத்தவர் தங்களது சுதந்திர நாட்டை அமைத்துக்கொள்ள வேண்டும். இந்த இரண்டு நாடுகளுக்கும் இடையில் குறுக்கிடும் சாலைகள், பகுதிகள் ஐ.நா.சபையின் நேரடி நிர்வாகத்தில் இருக்கும். பாலஸ்தீனத்தில் உள்ள புனித நகரான (முஸ்லீம்கள், யூதர்கள், கிறிஸ்துவர்கள் ஆகியோரின் புனித நகரமான) ஜெருசலேம், ஐ.நா.சபையின் நேரடி நிர்வாகத்தில் இருக்கும்" என்று கூறிய அந்தத் தீர்மானம் ஐ.நா.சபையின் மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டியுடன் 1947 நவம்பர் 29-ந் தேதி நிறைவேற்றப்பட்டது. இந்தியா, ரஷ்யா உள்ளிட்ட பல நாடுகள் எதிர்த்து வாக்களித்தன.

யூதர்கள் தங்களுக்கு கிடைத்த பகுதிக்கு 'இஸ்ரேல்' என்று பெயர் சூட்டி, 1948 மே 14-ல் சுதந்திர நாடாக அறிவித்தார்கள். அரபு மக்கள் இதை ஏற்க மறுத்தார்கள். அன்று தொடங்கியது அரபு-இஸ்ரேல் யுத்தம்.


1948, 1956, 1967, 1973 ஆகிய ஆண்டுகளில் கடும் யுத்தம் நடந்தது. அமெரிக்கா, பிரிட்டன் ஆகியவற்றின் முழு உதவியுடன் போரிட்ட இஸ்ரேல், பாலஸ்தீனம் முழுவதையும் ஆக்கிரமித்து சிரியா, ஜோர்டான், லெபனான், எகிப்து ஆகிய நாடுகளின் பல்வேறு பகுதிகளையும் சேர்த்து ஆக்கிரமித்துக் கொண்டது.

பின்னர் 1978-ம் ஆண்டில் எகிப்தும் இஸ்ரேலும் சமரசம் செய்து கொண்டதன் அடிப்படையில் எகிப்தின் சினாய் பகுதியை இஸ்ரேல் திருப்பிக் கொடுத்துவிட்டது. இதற்கிடையில் பாலஸ்தீனத்தை விட்டு லட்சக்கணக்கான பாலஸ்தீனியர்கள் வெளியேற்றப்பட்டார்கள். அவர்கள் வெளிநாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்து பரிதவித்து வருகிறார்கள். அவர்களின் எண்ணிக்கை இப்போது சுமார் 70 லட்சம். சுமார் 40 லட்சம் பாலஸ்தீனியர்கள் சொந்த நாட்டிலேயே


tico.ca
ACTA
Travel with us
with the lowest fare,
We'll give you
the best service
and care...
ideal escape Vacation Ltd.
AIR CANADA
air transat
UNITED
QATAR
Emirates
BRITISH AIRWAYS
OUR SERVICES
Worldwide Air Ticketing
Cruises
Bus Tours
Car Rental
Travel Insurance
Visa Arrangements
Vacation Packages (all inclusive)
Ideal Escape Vacation Ltd.
GTA Square Mall
5215 Finch Ave E, Unit #160
Scarborough, ON
Tel: 416-841-1833
Fax: 647-847-7552
idealescape@gmail.com
www.idealescape.ca


Back To The Beauty
Salon & Spa
Facial (Regular, Gold, Fruit & Herbel)
Threading, waxing,
Hair colouring & Highlighting,
Latest Bridal Makeup, Saree Pleating,
Manicure & Pedicure,
Hair Styling,
Face Scaning,
Face Clean up
Free beauty Consulting
Contact: 416 298 8091
109-5215 Finch Avenue East
Scarborough, ON.
M1S 0C2





அகதிகளாக வாழ்ந்து வருகிறார்கள். சுமார் ஒரு லட்சம் பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டார்கள்.

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பைக் கண்டித்து ஐ.நா. சபை 'ஆயிரத்தெட்டு' தீர்மானங்கள் போட்டது. தீர்மானங்கள் எல்லாம் பேப்பரில் மட்டுமே இருந்தன.

இந்தச் சூழ்நிலையில் 1963-ம் ஆண்டில் தொடங்கப்பட்டது 'பாலஸ்தீன விடுதலை இயக்கம்'. 1969-ல் யாசிர் அராபத் இதன் தலைவரான பின்பு பிரமாண்டமான போராட்டங்கள் நடந்தன. ஆயுதம் தாங்கிய போராட்டமாகவும், ஆயுதமற்ற போராட்டமாகவும் பாலஸ்தீனத்திலும், வெளிநாடுகளிலும் வகைவகையான போராட்டங்கள் நடந்தன.

இந்தியா, சீனா, ரஷ்யா உட்பட உலகின் பெரும்பாலான நாடுகள் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை அங்கீகரித்தன. ஆனால், "பாலஸ்தீன விடுதலை இயக்கம் என்பது ஒரு பயங்கரவாத இயக்கம். அதை அழித்துவிட்டுத்தான் மறுவேலை" என்று அறிவித்துச் செயல்பட்டது இஸ்ரேல்! அதற்கு ஆதரவளித்தன அமெரிக்காவும் பிரிட்டனும் மற்ற சில ஆதரவு நாடுகளும்.


மறுபுறம், "இஸ்ரேல் அரசு ஒரு சட்டவிரோத அரசு. அதை அழித்துவிட்டுத்தான் மறுவேலை" என்று அறிவித்துச் செயல்பட்டது பாலஸ்தீன விடுதலை இயக்கம்.

இரண்டும் நடக்கவில்லை. மாறாக, பாலஸ்தீனியர்களும், மற்ற அராபியர்களும், இஸ்ரேலியர்களும் லட்சக்கணக்கில் கொல்லப்பட்டதுதான் மிச்சம்.

இதற்கிடையில் இஸ்ரேல் அரசுக்கும், பாலஸ்தீன விடுதலை அமைப்புக்கும் இடையே சமரசம் ஏற்படுத்தப் பல முயற்சிகள் நடந்தன. கடைசியில் 1993-ம் ஆண்டில் சமரச உடன்பாடு ஏற்பட்டது. முதல் முறையாக இஸ்ரேல் நாட்டையும், அரசையும் பாலஸ்தீன விடுதலை அமைப்பு அங்கீகரித்தது. அதேபோல் பாலஸ்தீன விடுதலை அமைப்பையும், பாலஸ்தீனத்தில் சுயாட்சி அதிகார அமைப்பையும் இஸ்ரேல் அரசு அங்கீகரித்தது. அனைத்துப் பிரச்சினைகளுக்கும் சமாதான முறையில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண கால வரம்புடன் கூடிய திட்டம் உருவாக்கப்பட்டது.

ஆனால் இதற்கு இஸ்ரேலிலும், பாலஸ்தீனத்திலும் தீவிரவாத அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்தன. இஸ்ரேல் பிரதமர் இட்சாக் ராபின் இஸ்ரேலியத் தீவிரவாதியால் சுட்டுக் கொல்லப்பட்டார். பாலஸ்தீனத்தில் ஹமாஸ் என்னும் அமைப்பு செல்வாக்குப் பெற்றது. இப்போது பாலஸ்தீனத்தின் மேற்குக் கரைப் பகுதி பாலஸ்தீன விடுதலை அமைப்பின் கட்டுப்பாட்டிலும், காசா பகுதி ஹமாஸ் அமைப்பின் கட்டுப்பாட்டிலும் உள்ளன.

சமீபத்தில் இஸ்ரேலிய இளைஞர்கள் மூவர் கொல்லப்பட்டதைச் சாக்காக வைத்து, காசா பகுதியை சுடுகாடாக்கும் கொடூர நடவடிக்கைகளில் இப்போது இஸ்ரேல் ராணுவம் ஈடுபட்டுவருகிறது. நாள் தோறும் படுகொலைச் செய்திகள்...



இரு தரப்பும் போர் நிறுத்தம் செய்து, பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்று வழக்கம் போல ஐ.நா. சபைப் பொதுச் செயலாளரும், மற்ற பலரும் வேண்டுகோள் விடுத்துவருகிறார்கள்.

இந்தியா, ரஷ்யா, சீனா, பிரேசில், தென் அமெரிக்கா ஆகிய ஐந்து நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட பிரிக்ஸ் அமைப்பு 15, ஜூலை, 2014 அன்று இது தொடர்பாகத் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. "இரு தரப்பும் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும். 1967, ஜூன், 4 அன்று இருந்த எல்லைப் பகுதிகளைக் கொண்ட, கிழக்கு ஜெருசலேமைத் தலைநகராகக் கொண்ட பாலஸ்தீனம் அமைக்கப்பட வேண்டும்" என்று அதில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

இதுதான் சாத்தியமான சரியான தீர்வு. இதை நோக்கியே உலக ஜனநாயக சக்திகளின் செயல்பாடுகள் அமைய வேண்டும்.

புழுதிப்படிவுக்குள் புதையுண்டு போய்விடுகிறது பாலஸ்தீனத்தின் பெருமூச்சு...!

சாம்பலாகிப்போன ரோம் நகர் போல
தீப்பிடித்து எரிகிறது காசா
இதையும் கூட
முள்ளிவாய்க்கால் போல
பாராமல் போவாயோ
எல்லோருக்கும் பொதுவான ஈசா

காலாதிகாலமாக பாலஸ்தீனர்
ஆண்டவர் பூமி இப்போது
மாண்டவர் பூமியாக
மாறியிருக்கிறது.

தொழுகைச் சத்தம் கேட்டபூமியிலே
அழுகைச் சத்தமே
எதிரொலிக்கிறது எங்கும்

ஒவ்வொருவரையும்
ஒவ்வொரு சுவரையும்
துளைத்து துளைத்து விசாரிக்கிறார்கள்
வினாக்களால் மட்டுமல்ல
துப்பாக்கிச் சன்னங்களாலும் கூடத்தான்

மரத்துளிரை வெட்டவே
அரச அனுமதி எடுக்கவேண்டிய தேசத்திலே
நகத்தை வெட்டுவது போல
முகத்தை அல்லவா வெட்டி எடுக்கிறார்கள்

அவர்களோ உங்கள் வீடுகளையெல்லாம்
கல்லாக இடித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.
நீங்களோ அதையெடுத்து வீசிவிட்டு
வாழும்வழிமுறையை
உருவாக்கிக் கொண்டுதான் இருக்கிறீர்கள்.
தில்லாக

கையிலே எடுக்கும் கல் கூட
யாரையும் கொல்வதற்காகவல்ல
தங்களது கோரிக்கையை சொல்வதற்காகவே

பாலஸ்தீனர்கள் வீசி எறியும் சொல்லுக்கும்
கூழாங்கல்லுக்கும்
பதில் சொல்ல இஸ்ரேலியரே
நீங்கள் பீரங்கிவாய்களை திறக்கலாமா

பாலஸ்தீனத்தின் மூலஸ்தானம் வரை
துளாவத் துடிக்கிறது
இசுரேலிய ஏவுகணை
குழந்தைகளின்
குருத்தெலும்பை உடைத்துவிடுகின்றன
பருத்த நரிகள் ஏவிவிடும்
ஏறிகணை

அவர்கள் நெஞ்சிலிருந்து
வழிந்து விழுகின்ற நீண்ட பெருமூச்சு
மேற்குக கரையோர
புழுதிப்படிவுக்குள் புதையுண்டு
போய்விடுகிறது

[illegible]
கனடா



ஸ்காபுரோ நீல்ஸன்-செப்பேர்ட் சந்தியில் ஒரு சைக்கிள் கட்டப்பட்டுள்ளது. அது முழுமையாக வெள்ளை நிறம் பூசப்பட்டு - பூக் கொத்துக்கள் சொருகப்பட்டு அபத்தமாகக் கண்களை உறுத்தியபடி அனாதரவாய் நிற்கிறது. ஏதோ விபரீதம் நிகழ்ந்திருக்கிறதென்ற உறுத்தலில் சுற்றுமுற்றும் பார்த்தால், சந்தியின் மையத்திலுள்ள தீவிலும், கம்பத்தைச் சுற்றி பூக் கொத்துக்கள். கீழே உருகி வழிந்த மெழுகுதிரிகள். அதைக் கடந்து செல்பவர் நெஞ்சில் ஒரு இனந்தெரியாத சோக நிட்சயம் தோன்றி மறையத்தான் செய்யும்.

எல்லாம் என்ன? வீதி விபத்துக்கு மற்றொரு சாட்சியம்தான். ஆகஸ்ட் 1ம் திகதி மாலை 5.30ற்கு, ஒரு 17 வயது பையன் இமானுவேல் சின்னத்துரை - செப்பேர்ட் வீதியில் மேற்கு நோக்கி சைக்கிளில் சென்றுகொண்டிருக்க, 16 வயதுகொண்ட பையன் ஒருவன் ஓட்டி வந்த பி.எம்.டபிள்யு கார் மோதி, தூக்கி வீசப்பட்டு, சனிபுறுக் வைத்திய சாலைக்கு கொண்டோடப்பட்டு - பலனின்றி இறந்தான்! லெஸ்டர் பியேர்ஸன் பள்ளியில் 12ம் வகுப்பு முடித்துவிட்டு, நேர்ஸிங் படிக்கும் கனவோடு, மல்வன் கிறிஸ்டியன் அசம்பிளியின் கட்டட வேலையில் தொண்டராகப் பணிசெய்து விட்டு திரும்பிய வேளையில் திடீரென எல்லாக் கனவுகளும் பறிக்கப்பட்டவரானாக, பெற்றோரிடம் இருந்தும் மூன்று சகோதரிகளிடமிருந்தும் தன் இனிய நண்பர்களிடமிருந்தும் பிரிக்கப்பட்டவனாக, அந்தக் கோர விபத்தில் மரணித்தான்.

காரைச் செலுத்தியவன் சட்டத்தால் தண்டிக்கப் படலாம், ஆனால் மரித்தவர்..? இப்படியான வீதி விபத்துக்களை நாம் அடிக்கடி கேள்விப்பட்ட வண்ணம்தான் இருக்கிறோம். விபத்து என்று அறிந்தவுடன் உடனே கோலெடுத்து எம்மவர் யாருக்கும் ஒன்றுமில்லையே என்பதை முதலாவதாக உறுதிப்படுத்தி விட்டு, அடுத்து இறந்தவர் யார் எவரென்று விசாரித்து விபரம் சேகரித்துக்கொண்டு, அடுத்து நாம் சந்திக்கும் பார்டி ஒன்றில் மற்றவர்களோடு கதை பகிர்ந்து கொள்வதோடு ஓய்ந்துவிடுகிறோம். ஆனால் நாம் இத்தகைய விபத்துகளுக்கு காரணமாக இருக்கும் எம் அசட்டைத்தனங்கள் பற்றி அக்கறையுடன் சிந்தித்து, திருத்திக் கொள்வதற்கான முனைப்புகளை மேற்கொள்வதில்லை.கனடாவில் நிகழும் வீதி விபத்துக்களில் டீன் ஏஜ் இளவயதினர் சம்பந்தப்பட்ட விபத்துக்களே அதிகமாக நிகழ்கிறது. இளம் கன்று பயமறியாது, என்பதுபோல் இவ் இள வயதினர் வாகனங்களை வேகமாகச் செலுத்தி விரைவாகவே வாழ்வை முடித்துக் கொள்வது பரிதாபமானது. வாகனம் செலுத்துவதற்கு முதன் முதல் வாய்ப்புக் கிடைத்த உற்சாகம், வேகமாக செலுதினாலே சிறந்த வாகன ஓட்டுநரென மெச்சப்படுவோமென்ற தப்பெண்ணம், போட்டிக்கு வாகனமோட்டும் திறில், ஓடும் வேகத்தில் அடிபடும் போது என்ன விளைவு ஏற்படும் என்று கணக்கிட முடியாத சிறுபிள்ளை மனம் என்பனவே இதற்குக் காரணம்.

ஆனால் எம் சமூகத்தில் வளர்ந்தவர்களும்கூட தவறான வாகனம் செலுத்துகின்றனர். அவர்களது மனம் இன்னும் இலங்கை வாகன ஓட்டப் பாணியிலிருந்து விடுபடாதிருப்பதும் ஒரு காரணம். அங்கு வீதி ஒழுங்குகளை பெரிதும் நாம் பேணுவதில்லை. மஞ்சல் சிக்னலை நாம் நிறுத்தற்குறியாக எடுத்துக்கொள்வதில்லை. மஞ்சலைக் கண்டதும் அது சிகப்பாகுமுன்னர் விரைந்தோடி வீதியைக் கடந்துவிட எத்தனிக்கும் மனோபாவம் பலரிடமுண்டு. இதற்கு மற்றொரு காரணம் எமது நேரத்தை திட்டமிடுவதிலுள்ள அசட்டைத் தனம். கடைசி நிமிடத்தில்தான் வேலைக்கு விழுந்தடித்தபடி ஓடுவது எம் பழக்கம். எந்த நிகழ்ச்சிக்கும் நாம் குறிப்பிட்ட நேரத்துக்கு செல்வதில்லை. இந்தத் தாமத குணம் எமது வாகன ஓட்டத்தில் அவசரத்தையும் அவதானமின்மையையும் ஏற்படுத்தி விடுகிறது. எம் கண்கள் வாகனத்தின் வேக மீட்டரையன்றி நேரகாட்டியையே அடிக்கடி பார்க்கிறது.



அத்தோடு நாம் பொறுமையாக வாகன ஓட்ட விதிகளைக் கற்றுக்கொள்வதில் சிரத்தை எடுப்பதில்லை. விரவாக லைசன்ஸ் எடுத்துவிடவேண்டுமென்ற தவிப்பில், முறையாக வாகனப் பயிற்சிப் பள்ளிகளுக்குச் சென்று வகுப்புகளில் தோற்றி அடிப்படை விடயங்களைப் பயிலாமல், நேரடியாக ஓட்டப் பயிற்சிக்கு சென்றுவிடுகிறோம். ஓட்டப் பயிற்சியில்கூட வாகன ஓட்டத்தின் சகல அம்சங்களும் கைவரப்பெறாமல் அரை குறை நிலையிலேயே ஓட்டச்சோதனைக்கு தேற்றி ஏதோ வழியில் லைசன்ஸ் பெற்றுவிடுவதிலேயே குறியாக இருக்கிறோம். பயிற்சிக்கான செலவைக் குறைக்கும் நோக்கமும் அவ் அரைகுறைப் பயிற்சிக்கு மற்றொரு காரணம். ஆனால் இது வாழ்க்கைக்கே ஆபத்தாக முடியும் என்று நாம் உணருவதில்லை. இவ் அரைகுறைப் பயிற்சியானது எம்மில் பலருக்கு சந்திகளில் இடப்புறம் திரும்புவதில் பெருத்த தடுமாற்றத்தை ஏற்படுத்துகிறது. இடப்புறம் திரும்புவதற்கான சிக்னல் குறியீடு இல்லாத சந்திகளில் இவர்கள் பெரிதும் திண்டாடுகிறார்கள். பச்சை விளக்கில் எதிர்ப்புறமிருந்து வரும் வாகனங்களுடன் மோதாமல் திரும்பக்கூடிய தூரத்தை எடைபோடத் தவறி விபத்துக்குள்ளாகிறார்கள். அத்தோடு எதிரே வரும் வாகனத்தில் மட்டும் பதிந்திருக்கும் இவர்களின் பார்வை, வாகனத்தைத் திருப்பும் பக்கத்தில் கடந்துகொண்டிருக்கும் பாதசாரிகளைக் கவனிப்பதில்லை. திரும்ப முடிவெடுத்து சடுதியாகத் திரும்பியவுடன் குறுக்கே கடந்து சென்றபடியிருக்கும் பாதசாரிகளைக் கண்டு அதிர்ச்சியடைந்து, அவர்களை மோதிவிடுகிறார்கள், அல்லது சடுதியாக பிறேக் அடித்து, பக்கவாட்டில் வரும் வாகனத்தால் மோதுறுகிறார்கள்.

பலருக்கு பஸ்களுக்குப் பின்னால் செல்லும் பொறுமை இருப்பதில்லை. பஸ்களை முந்துவதற்கான எத்தனத்தில் அடுத்த லேனால் வருபவர்களை அசட்டை செய்து விபத்துக்குள்ளாகிறார்கள். ஹைவேக்களில் லேன் சேன்ஜ் பண்ணுவதிலும் விபத்துகள் நேருகின்றன. பிளைன்ட் ஸ்பொட் செக் பண்டுவதைப் பலர் அசட்டை செய்கிறார்கள். குறிப்பாக இரவில் வாகனமோடும்போது மிகுந்த அவதானம் தேவைப்படுகிறது. என்னதான் சட்டங்கள் போட்டு அறிவுறுத்தினாலும் நாம் செல்போன் விஷயத்தில் மஹா தப்பு செய்கிறோம். செல்போன் பேசியபடி வாகனம் ஓடினால் பொலிஸ் கண்டால் ஃபைன் விதிக்கும் என்பதுதான் எமக்குத் தெரியும். செல்போனால் விபத்து நேரும் என்பதை நாம் சிந்திப்பதில்லை. பொலிஸ் காணாதபடி மறைத்துப் பேசிக்கொண்டு வாகனமோட்டுவதை எமது கெட்டித்தனம் என எண்ணிக்கொள்கிறோம். அதனால் முன்னால் சென்ற வாகனம் சிக்னலில் நின்றதே தெரியாமல் பின்னால் சென்று முட்டிவிட்டு இன்சுரன்ஸ் கட்டுகிறோம்.

மதுபான விடயத்திலும் நம்மில் சிலர் அவ்வாறுதான். மதுபானம் மணக்காமலிருக்க பல உபாயங்களை பார்ட்டிகள் தோறும் பரிமாறிக்கொண்டு பொலிஸிடம் மாட்ட மாட்டோமென்ற துணிவுடன் வாகனம் செலுத்துகிறோம். இது எம் லைஸன்ஸ் பறிபோகும் விடயமல்ல, மாறாக எமதும் மற்றவர்களதும் உயிரைப் பணயம் வைக்கும் விடயம் என்பதை நாம் உணர்வதில்லை. எம் வீதி ஒழுங்கு பற்றிய விதிகளில், சைக்கிள், மோட்டார் சைக்கிள் போன்ற இரட்டைச் சில்லு வாகனங்களை முந்திச் செல்லும்போது, அவற்றை நான்கு சில்லு வாகனங்கள் போலக் கருதி, அவை ஓடும் லேன்களை விலத்தி அடுத்த லேனால் அவற்றை முந்துதல் வேண்டுமென அறிவுறுத்தப் பட்டுள்ளது. ஆனால் நாம் அதைப் பொருட்படுத்தாமல், அதே லேனிலேயே விலத்திச் செல்ல எத்தனிக்கிறோம். குறிப்பாக சைக்கிள்களை நாம் வாகனமாகக் கணக்கெடுப்பதில்லை. அதன் குறைந்த வேகம் எம்மை தடுத்து வைப்பதாக சினம்கொள்ள வைத்து முந்திச் செல்லத் தூண்டு கிறது. இது விபத்துகளுக்கு வழிகோலுகிறது.

வாகனம் ஓட்டுபவர்கள் மட்டுமன்றி வீதிகளைக் கடக்கும் பாதசாரிகளிடையேயும் பெரும் அசட்டை நிலவுகிறது. இலங்கை வீதிகள் போலன்றி, கனேடிய வீதிகள் விசாலமானவை. அங்கு வீதிகளைக் கடப்பதுபோல் இங்கு கடக்க முடியாது. அங்கு ஓடும் வாகனங்களின் வேகம் மிகக் குறைவு. வீதியில் ஆள் நடமாட்டம் கண்டதும் உடனே நிறுத்தி விபத்தைத் தவிர்க்க வாய்ப்புண்டு. இங்கோ வாகன வேகம் அதிகம். அவர்களால் சடுதியாக வாகனத்தை நிறுத்தி விட முடியாது. எம்மவர் கண்களுக்கு வீதியின் விசாலத்தையும் வாகனம் வரும் தூரத்தையும் அதன் வேகத்தையும் கணித்து அவ் வீதியைக் கடக்க எடுக்கும் நேரத்தை மதிப்பிட முடிவதில்லை. அதனால் குறை மதிப்பீடு செய்து விபத்துக்குள்ளாகிறோம். வீதியில் கடக்கத் தொடங்கிய பின்னர்தான் அது நினைத்ததை விட அதிக தூரம் என்பதும், கடக்க அதிக நேரம்எடுப்பதுவும் புரிகிறது. அத்துடன் தூரத்தில் தெரிந்த வாகனம் அதிக வேகத்தில் நெருங்கிவிடுவதையும் உணருகிறோம். இந்த அனுபவத்தை எம்மில் பலரும் பெற்றிருப்போம். இத்தகைய தடுமாற்றம் முதியவர்களுக்கு அதிகம் ஏற்படுகிறது. வீதிக் கடவைகள் இல்லாத இடங்களில் தற் துணிவுடன் வீதியைக் கடக்கும் முனைப்பும் எம்மில் அதிகம். பஸ்சைப் பிடிப்பதற்காக வீதியை அவதானிக்காமல் கடத்தல், செல்போனில் கதைத்துக் கொண்டு வீதியைக் கடத்தல், காதில் இயர்போனைச் சொருகி ஐபொட்டில் பாட்டுக் கேட்டவண்ணம் வீதி கடத்தல் போன்றவையும் எம்மவரின் விபத்துக்களுக்குக் காரணம். வீதி விபத்துக்கள் பற்றி நாம் இனியும் அவதானம் செலுத்தாவிட்டால் இன்னும் எத்தனை உயிர்கள் பறிபோகப் போகின்றன?



Marham Rd / Scranton Rd
Bedrooms:3
Washrooms: 2
Toronto
Orton Pk / Lawrence
Bedrooms: 4
Washrooms: 2
Toronto
Lawrence Ave/Mccowan Rd
Bedrooms: 3
Washrooms: 2
Toronto
$469,000
Front St W/Bathurst St
Bedrooms: 1
Washrooms: 1
Toronto
$279,900
Ninth Line/Reeves Way Blvd
Bedrooms: 4
Washrooms: 3
Stouffville
$714,900
Hoover Park Dr/10th Line
Bedrooms: 4+1
Washrooms: 4
Stouffville
$719,900
Hoover Park Dr/10th Line
SOLD
9th Line/Millard St
SOLD
265 Glad Park Ave
9th Line/Millard St
Why Pay Rent ? When You Can Buy With...
0% Down / No Credit / Bad Credit...
Please Call
RE/MAX
All-Stars Realty Inc.
Raj Paramasamy
416-587-1619
"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"



Got
Junk?
JUNK REMOVAL
தொல்லை கொடுக்கும்
பழைய, பாவனைக்கு உதவாத உபகரணங்கள், குக்கர்,
பிரிட்ஜ், வாசிங்மெசின், டிரையர், டிஷ் வாஷர், மற்றும்
உலோகத் தளபாடங்கள்
இலவசமாக அகற்றிக்கொடுக்கப்படும்.
அழையுங்கள்
ராஜ்:- 416 388 9466

யாழில் நிலத்தடி நீரின் அவல நிலை

சிந்தனைக்கூடம் ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தின் சூழநிலைக் கலந்துரையாடலின் பின்னரான அறிக்கை.

அண்மைக் காலத்தில் யாழ்ப்பாணத்து மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினை பற்றிப் பல்வேறு கருத்துக்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. இவற்றினை தொகுத்து பின்வரும் முக்கிய விடயங்களை வரிசைப்படுத்தலாம்.

யாழ்ப்பாணத்தில் நிலத்தடி நீர் பல்வேறு காரணிகளால் குடிநீர் பயன்பாட்டிற்கு உகந்ததற்றதாகி வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் நிலத்தடி நீரை மீளப்புதுப்பிப்பதற்குப் பல்பக்க அடிப்படையிலான பல நடவடிக்கைகள் பலவற்றை செயற்படுத்த வேண்டும்.


ஒரு உடனடி உபாயமாக யாழ்ப்பாணப் பகுதியில் கிடைக்கக் கூடிய மழை நீரை உரிய முறையில் சேகரித்து நிலத்தடி நீரை மீண்டும் சுத்தமான குடிநீராக மாற்றுவது என முன்மொழியப்பட்டுள்ளது.

இன்னொரு மாற்று உத்தியாக இரணைமடுக் குளத்தில் இருந்து ஒரு பகுதி நீரை தென்மராட்சி ஊடாக யாழ்ப்பாணத்திற்கும் தீவுப் பகுதிக்கும் கொண்டு செல்வது என்ற திட்டச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாகப் பொதுமக்கள் அறிந்திருக்க வேண்டிய விபரங்கள் போதியளவாக இன்னும் முன்வைக்கப்படவில்லை. யாழ்ப்பாணத்து நிலத்தடி நீர் பெருமளவில் பாதிப்படைவதற்குக் கடல் நீர் உட்புகுதல் , கடல் நீர் தடுப்பு முறைகளை பராமரிக்கப்படாமல் விட்டமை, அதிகளவு விவசாய உர உபயோகம், கட்டுப்பாடற்ற முறையில் நிலத்தடி நீரை உறிஞ்சி எடுத்தமை, கட்டுப்பாடற்ற வகையில் கிணறுகளையும் ஆழ்கிணறுகளையும் தோண்டியமை , பாதுகாப்பற்ற மலசலகூட முறைமைகளால் கழிவுகள் நிலத்தடி நீருடன் சேர்கின்றமை, நகர்ப்புறங்களில் மலசலகூடக் கழிவுகள் அகற்றும் முறைமை முறையாக இல்லாமை போன்றவற்றினைக் கூறலாம். இக் காரணிகள் கடந்த 50 வருட காலத்தில் ஒன்று திரட்டிய வகையில் ஏற்படுத்திய தாக்கமே இன்றைய யாழ்ப்பாணக் குடிநீர்ப் பிரச்சினையாகும். இதை விட சுன்னாகம் மின்பிறப்பாக்கி நிலையத்தில் கழிவு எண்ணைக் கசிவினால் ஏற்பட்ட பாதிப்பின் விஸ்தீரணம் இன்னும் உரிய முறையில் மதிப்பிடப்பட்டு வெளிப்படுத்தப்படவில்லை.

ஓய்வுநிலைப் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன்,
பணிப்பாளர், சிந்தனைக்கூடம்.

யாழ்ப்பாணக் குடிநீருக்கான ஒரு பாரிய திட்டம் மிகவும் அவசரமானது என்ற விடயம் தற்போதைய நிர்வாக கட்டமைப்பினால் போதியளவிற்கு முன்னிலைப் படுத்தப்படவில்லை. பொதுமக்கள் மத்தியில் ஏனோதானோ என்ற மனப்பான்மையும் இது வேறு யாருடையதோ பிரச்சினை என்ற மாதிரியான எண்ணமும் மிக உயர்வான அளவில் காணப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணம் தனிப்பட்ட எதிர்கால அரசியலை உள்நோக்காக வைத்து அறிவு பூர்வமான தகவல்களை வேண்டுமென்றே மறைத்து வேண்டாத உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பி, அதன் வழி கிளிநொச்சி - யாழ்ப்பாணம் குடிநீர்த்திட்டத்தினை முடக்கிவிட நினைக்கும் அரசியல்வாதிகளும் அறிவுபூர்வமான தகவல்கள் இருந்தும் அவற்றினை ஆரோக்கியமான வகையில் பொதுமக்கள் மத்தியில் கொண்டுசெல்வது மக்கள் கருத்துருவாக்கத்திற்கு உதவ முன்வாரத நேர்மையற்ற புத்திஜீவிகளுமே என்பது வெளிப்படைக் காரணமாக இருக்கின்றன. எல்லா அழிவுகளுக்கும் பின்னர் வழக்கம் போல எமக்கு இது இப்படி என்று தெரியாதே என பொதுமக்கள் அங்கலாய்ப்பர் என்பது திண்ணம்.



பொதுமக்கள் முன் மறைக்கப்பட்டுள்ள சில முக்கியமான விடயங்களை இங்கு குறிப்பிடுகின்றோம். கட்டுப்பாடற்ற விவசாய முறையினால் அதாவது ஆயிரக்கணக்கான நீர் இறைக்கும் இயந்திரங்கள் கொண்டு தொடர்ந்து நீரை ஐம்பது வருட காலங்களுக்கு மேலாக வெளியே இறைத்தமையால் ஆயிரக்கணக்கான வருடங்களாக இயற்கையினால் உருவாக்கப்பட்டிருந்த நன்னீர் வில்லைகளில் இருந்த நீரின் தரம் உவர்த் தன்மையடைய ஆரம்பித்ததோடு நீரின் அளவும் குறையத் தொடங்கியது.

கட்டுப்பாடற்ற உர இரசாயனநாசினிகளின் உபயோகத்தின் காரணமாக நைத்திரேற்றுக்களின் அளவு பெருமளவு நிலத்தடி நீருடன் கலக்க நேர்ந்ததால் குடாநாட்டில் இன்றுவரை உள்ள நிலத்தடி நீர் நுகர்வுக்குரியதற்றதாக மாறியது. இதன் அளவு பத்து ஆண்டுகளுக்கு முன்னரேயே உலக சுகாதார நிறுவனத்தின் நியமங்களைவிட குறையத்தொடங்கி இருந்தது. அதே போல தரக்கட்டுப்பாடில்லாத மலசல கூடங்களின் பெருக்கம் காரணமாக நிலத்தடிநீருடன் மலக்கழிவுக்கிருமிகள் கலக்க ஆரம்பித்தன. இதன் வேகத்தைக் குறைப்பதற்கு மலசலக் கழிவுகளை அகற்றுவதற்கான வடிகால் அமைப்புத்திட்டம் ஒன்றுகூட குடாநாட்டில் இல்லை. இவற்றின் தாக்கமாக யாழ்குடாநாடு இலங்கையின் புற்றுநோய் உற்பத்தியில் அதிக வளர்ச்சி வீதத்தைக் கொண்டதாகவும் சிறுநீரகப் பாதிப்பை அதிகமாகக் கொண்ட பிரதேசமாகவும் நெருப்புக்காய்ச்சல் நோயாளிகளை உருவாக்குவதில் முதலிடம் வகிக்கும் மாவட்டமாகவும் மாறியுள்ளது.



இவை பற்றிய தகவல்கள் அறிவு பூர்வமாக புத்திஜீவிகளால் முன்வைக்கப் படாமையால் யாழ் குடாநாட்டில் கிடைக்கும் குடிநீர் உண்மையில் மாசடையவில்லை இது வெறும் புரளி என்ற கருத்தைக் கூட சிலர் துணிந்து முன்வைக்கின்றார்கள். விவசாயத் துறைக்கு ஈடாக மக்களது பொருளாதார, வாழ்வாதார தேவைகளுக்கு வழிவகைகளை முன்வைக்க வேண்டும் என்பதும் விவசாயத்தின் பேண்தகு அளவு மட்டத்தினை நிர்ணயித்துக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவேண்டும் என்பதும் இங்கு பேசப்படவேயில்லை. நிலத்தடி நீர் முகாமை பற்றிப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வும் போதாது.

நீர் இறைக்கும் இயந்திரங்களையும், நீர் வெளியேறும் அளவினையும் கட்டுப்படுத்துவதற்கு உபவிதிகளோ, முகாமையாளர்களோ, முறைமைகளோ இல்லை. நீர் இறைக்கும் இயந்திரங்களை விவசாய தேவைக்கு எவ்வளவு உபயோகிப்பது, நிலக்கீழ் நீரை உறிஞ்சுவது தடுக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் ஏதாவது குடாநாட்டில் உண்டா? என்பனபோன்ற ஆய்வுப்பெறுபேறுகளும் வெளியிடப்படவில்லை. நிலத்தடி நீர் அற்றுப்போகும் பிரதேசம் என எந்த ஒரு பிரதேசமும் வரையறுக்கப்படவில்லை.

இரணைமடுத் திட்டம்

யாழ்ப்பாணத் தீபகற்பத்தினுடைய நிலக்கீழ் நீர் அமைப்பு தோன்றி வளர்வதற்கு ஆயிரக்கணக்கான வருடங்கள் எடுத்தன என்பதும் இது இயற்கைச் சக்திகளினால் உருவாகிய ஒரு சமநிலையில் தங்கியிருந்தது என்பதும், கடந்த ஐம்பது வருட, அறுபது வருட காலத்தினுள்ளேயே இதற்குப் பாதிப்பு ஏற்பட்டது என்பதும் யதார்த்தமாகும்.

நுணுக்கமான இந்த முறையினை இயற்கையாகக் கிடைக்கும் மழையினைக் கொண்டு மீளப்புதுப்பிப்பதற்கு மீண்டும் எத்தனை வருட காலங்கள் தேவைப்படும். நிலக்கீழ் அமைப்புகள் முழுவதும் மழைநீரினால் மீண்டும் கழுவப்பட்டாலேயே இது சாத்தியமாகும். வேறு குறுக்கு வழிகள் இதற்கு இல்லை. இதற்கு ஆகக் குறைந்தது மிகக் கடுமையான கட்டுப்பாட்டு முறைமைகளைக் கொண்டு வந்தாலும் கூட ஐம்பது தொடக்கம் நூறு வருட காலங்களாவது தேவைப்படும். அது வரை நீரை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுகின்ற தாக்கங்கள் குறைந்து செல்வதற்கான வாய்ப்புகள் ஏதும் இல்லை.

யாழ்ப்பாணத்திற்கான குடிநீர் நிலமேற்பரப்பு நீரினைக் கொண்டு வரும் திட்டங்களின் மூலமே குறுகிய காலத்தில் தீர்த்துக் கொள்ளமுடியும். இந்த யதார்த்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டே ஆக வேண்டும். இதன் காரணமாகவே பல்வேறு முன் யோசனைகளின் பின்னர் வடமாகாணத்தினுள் மழை மூலம் கிடைக்கின்ற நீரினை புத்தி பூர்வமாகக் குறுகிய காலத்தில் முகாமை செய்து யாழ்ப்பாணக் குடிநீர்ப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

அரசியல் காரணங்களுக்காக வெளிப்படையாகக் கூற முடியாத பிரச்சினைகளும் இதன் மூலம் தவிர்க்கக்கூடியதாக இருக்கும். இரணைமடுவில் இருந்து நீர் எடுக்க முடியாது என்ற எதிர்ப்புக் கோபத்தைக் கிளப்பியதன் மூலம் அரசாங்கம் மொறகஹகந்த திட்டத்தினை அங்கீகரித்து அதன் மூலம் மகாவலி நீரினைக் கொண்டு வருவதாகத் தீர்மானித்துள்ளதாக தெரிகிறது. இதன் தாற்பரியமும் தாக்கங்களும் மிக இலகுவாக ஊகிக்கக் கூடியனவாகும்.

சர்வதேச நிதி வழங்கல் நிறுவனங்களின் நெருக்கடிகள், மாறிவரும் கொள்கைகள், இலங்கை தன்னை தான் ஒரு நடுத்தர வருமானத்தைப் பெறும் நாடு என பிரகடனம் செய்தமையால் சலுகை அடிப்படையிலான பெறுகைகளுக்குத் தகைமை இழந்தமை, பல்பக்க நிதிநிறுவனங்களின் முன்னுரிமைகள் போன்ற பல்வேறு நெழிவுசுழிவுகளினூடாகக்கிளிநொச்சிமாவட்டவிவசாயிகளின் பிரச்சினைகளுக்குப் பெருமளவில் தீர்வு வழங்குகின்ற அதே நேரம் நீர்ப்பாசன முறைமைகளை அபிவிருத்தி செய்தல், கிளிநொச்சி பூநகரி தீவுப்பகுதி உட்பட நீண்ட பிரதேசத்திற்குக் குடிநீர் வழங்குதல் மற்றும் யாழ்நகருக்கான திண்ம கழிவகற்றும் வடிகாலமைப்பு முறைமையொன்றை நிறுவுதல் போன்ற பல்வேறு முக்கியமான அம்சங்களையும் ஒன்று திரட்டி மிகப் பெரியதொரு முதலீட்டுத் திட்டத்தினை ஆசிய அபிவிருத்தி வங்கி நிபுணர்கள் வடிவமைத்துத் தந்தார்கள்.

மக்கள் மிகவும் புத்திபூர்வமாக வகுக்கப்பட்ட அத் திட்டத்தினை வெறுமனே உணர்ச்சிகளின் அடிப்படையில் நிராகரித்தால் அது புத்திஜீவிகளின் தோல்வியாகவே கருதப்படவேண்டிவரும். எனவே தயவு செய்து இத்திட்டத்தினை மாகாணசபை அவசரப்பட்டு நிராகரித்திருந்த போதும் பல்வேறு மட்டங்களுடனும் தொடர்பு கொண்டு உடனடியாக அதனை அமுல்நடாத்துவதற்கு முயற்சிகளைச் செய்யுமாறு எதிர்கால சந்ததியின் சார்பில் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

யாழ்ப்பாணச் சமூகம் பேண்தகு சமூகமாக நீண்ட பாரம்பரிய நாகரிகத்தைத் தொடர்ந்தும் பேணும் சமூகமாக நிலைபெற நாம் வழிசமைத்துக் கொடுத்தல் வேண்டும். மக்களும், சமூக நிறுவன அமைப்புகளும் தொடர்ந்து குரல்கொடுத்து எமது எதிர்காலத்தைக் காப்போமாக.





PEEL
TAE-KWON-DO
"Independent studies show that martial arts can improve mental focus, Increase attention span and the ability to make better decisions"
1 WEEK Trial Special $10
GORE CENTRE
4525 Ebenezer Road, Unit 25
Brambton ON L6T 2K8
905 913 2571
170 Boviard Drive West. Unit 9
Brambton ON L7A 1A1
905 840 5268



இரா மக்கள் சந்தை
ERAA Supper market
உங்கள் நாளாந்த தேவைகளை பூர்த்தி செய்ய
இரா
உங்களை வரவேற்கின்றது.
இப்பொழுது இரண்டு இடங்களில்
Finch Store
5930 Finch Ave. EastFinch
Eglinton Store
2607 Eglington Ave East
(Neilson & Finch, Midland & Eglington சந்திப்புகளுக்கருகில்)
Tel: 416 269 2622

கனேடிய குடியுரிமை

கடினமடையும் சட்டம்

கனடாவின் குடியுரிமைச் சட்டங்களில் சில கடினமான மாற்றங்கள் கொண்டுவரப்படவுள்ளன. இதனால் குடியுரிமை பெறும் வாய்ப்பு மேலும் கடினமாகப் போகிறது. இது சம்பந்தமாக இலவச குடியுரிமை பட்டறை நிகழ்த்திய றெக்ஸ்டேல் சமூக சட்ட உதவி நிலையம் சில விளக்கங்களை வழங்கியிருந்தது.

அதன்படி, இப் புதிய மாற்றங்களின் பின் குடியுரிமை விண்ணப்பதாரிகள் 6வருடங்களில் 4வருடங்கள் கனடாவில் வசித்திருக்க வேண்டும். முன்னர் இக்கால அளவு 4வருடங்களில் 3வருடங்கள் கனடாவில் வசித்திருக்க வேண்டுமென்று இருந்தது. எனவே, இனி ஒருவர் குடியுரிமை பெற அதி குறைந்தது நான்கு வருடங்களாவது கனடாவில் இருந்திருக்க வேண்டுமென்பதால் முன்னரைவிட ஒரு வருடகாலம் கூடுதாலகக் காத்திருக்க வேண்டும். அவர் இடையே வெளிநாடு போய் வந்திருந்தால் விண்ணப்பிக்கும் நாளிலிருந்து ஆறு வருடங்களுக்குள் அவர் 4வருடகாலம் கனடாவில் வாழ்ந்ததற்கான ஆதாரம் இருக்க வேண்டும். ஆறு வருட கால அவகாசம் கிடைத்தது ஒரு சாதகமான நீடிப்பு என்றாலும் 4வருட காலம் வசித்திருக்க வேண்டுமென்பதால் குடியுரிமை பெறுவதற்கு விண்ணப்பிக்க அதிக காலம் காத்திருக்க நேரிடும்.

அடுத்தது மொழி மற்றும் குடியுரிமை பரீட்சைக்கான வயதெல்லை விதிவிலக்கு 55வயதிலிருந்து 65ஆக நீடிக்கப்பட்டுள்ளது. அதாவது 55 வயதுக்கு மேற்பட்டோர், மொழிப் பரீட்சை, குடியுரிமைப் பரீட்சை ஆகியவற்றுக்குத் தோற்றத் தேவையில்லை என்றிருந்த விதிவிலக்கு இப்போது மேலும் 10 வருடம் பிற்தள்ளப்பட்டு 65 வயதுக்கு மேல்தான் அச் சலுகை என்று மாற்றப்பட்டுள்ளது. புதிய சட்டத்தின் பிரகாரம் அதிக கல்வித்தகைமை அல்லது மொழி தேர்ச்சி அற்ற அகதிகள் குடிவரவாளர்கள் உரிமைகள் அற்றவர்களாக இருக்க வாய்ப்புக்கள் அதிகமாகிவிடலாம்.

எனினும் இம்மாற்றம் அடுத்த வருடம் யூன் மாதம் வரை அமுலுக்கு வரமாட்டாதென குடிவரவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கனடாவில் ஏரளமானவர்கள் நீண்டகாலமாக வாழ்ந்து வருகின்றனர். வேலைகள் குடும்பங்கள் மற்றும் சமூகத்தில் நன்கு ஒருங்கிணைக்கப்பட்டவர்களாக வாழ்ந்து வருகின்றனர். ஆனால் குடியுரிமை பெறுவதற்கு 55வயதை அடைய காத்திருக்கின்றனர். ஆனால் இவர்கள் எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் விண்ணப்பிக்காவிட்டால், மேலும் 10 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருக்கும்.

எனவே தகுதியான விண்ணப்பதாரிகள் கனடிய குடியுரிமை பெறுவதற்கான புதிய திட்டங்கள் நடைமுறை படுத்தப் படுவதற்கு முன்னர் குடியுரிமைக்கு விண்ணப்பிப்பதே உசிதம்.



அவுஸ்திரேலியா, 'அகதிகள் பிரகடனங்களுக்கு' முரணான வகையில் செயற்பட்டு வருவதாக சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சுமத்தியுள்ளது. புகலிடக் கோரிக்கையாளர்களின் உரிமைகளை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என சர்வதேச மன்னிப்புச் சபையின் புகலிடக் கோரிக்கையாளர் விவகாரங்களுக்கான அவுஸ்திரேலிய இணைப்பாளர் கிரெமி மெக்ரிகொர் தெரிவித்துள்ளார்.

புகலிடக் கோரிக்கையாளர் படகுப் பயணிகள் திருப்பி அனுப்பி வைக்கப்படுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல எனவும், இதன் மூலம் சர்வதேச ரீதியான அழுத்தங்களை அபோட் அரசாங்கம் எதிர்நோக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புகலிடக் கோரிக்கையாளர்களின் புகலிடக் கோரிக்கைகளைப் பரிசீலனை செய்யாது புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவித்துள்ளார். புகலிடக் கோரிக்கையாளர் தொடர்பிலான விபரங்கள் அவுஸ்திரேலிய மக்களுக்கு வெளிப்படுத்தப்படுவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நவுரு தீவுகளில் அமைந்துள்ள புகலிடக் கோரிக்கையாளர் தடுப்பு முகாமின் நிலைமைகளை பார்வையிடுவதற்கு சர்வதேச மன்னிப்புச் சபைக்கு அனுமதி கிடைக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

‘மொஹஞ்சதாரோ’ நாகரிகம் பின்னணியில் வெளிப்படுகின்ற புதிய வரலாற்றுப் பரிமாணங்கள்!

பாரம்பரிய கலாசாரம் நாகரிகம் பற்றிய தேடல்களும் ஆய்வுகளும் நூற்றாண்டுகளுக்கு மேலாக நடைபெறுகின்றன. ஏறத்தாழ 3000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பண்டைய நாகரிக ஆய்வுகள் இப்பொழுதும் முடிவில்லாமல் தொடர்கின்றன. பலவேறு புதிய விடயங்கள் வெளிப்பட்ட வண்ணமிருக்கின்றன. மொகஞ் சதாரோ, ஹரப்பா நாகரிகங்கள் எப்பொழுது எப்படி அழிந்தன என்றின்னோரன்ன விடயங்கள் சரிவர இன்றும் தெளிபுபடவில்லை. பழமை வாய்ந்தவை எகிப்திய நாகரிகங்கள் என்ற கருத்து வரலாற்றாசிரியர்கள் மத்தியில் உள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சிந்துநதி ஆய்வுகளில் தீவிரமாக ஈடுபட்ட ஜோன் மார்ஷல் முதல் பலரும், இந்திய நாகரிகத்தின் பழமை பற்றி கூறினாலும் இன்னும் இவ்வாய்வுகளில் முழுமையோ தெளிவோ செம்மையாக ஏற்படவில்லை.

கடந்த இரு ஆண்டுகளில் முன்னர் சிந்துநதிப் பிரதேசத்தில் பெருவெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. வரலாற்றாசிரியர்களும் ஆய்வாளர்களும் ஏறத்தாழ 4000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பண்டைய நாகரிகத்தின் உண்மைகள் வெளிப்படமுன்னர் முழுவதும் அழிந்து விடுமோ என ஏக்கமடைந்தனர். குறிப்பாக 2012 ஆண்டில் ஏற்பட்ட பருவகாலப் பெரு மழை பாரிய வெள்ளப்பெருக்கையும் பேரழிவுகளையும் ஏற்படுத்தியது.

பல்வேறு கணிப்புகளின் படி சிந்துநதி நாகரிகம் ஏறத்தாழ கி.மு. 2600-1900 ஆண்டுவரையிலான காலப்பகுதியைச் சேர்கிறது. பாகிஸ்தானின் பெரும்பகுதி, வடமேற்கு இந்தியாவின் பெரும்பகுதிகளை உள்ளடக்கியது. குறிப்பாக 1920 களில் தொல்லியல் ஆய்வாளர் அன்று லாயிலர் சிந்துநதி தீரத்தில் அகழ்வுகளை மேற்கொண்ட போது இந்த நாகரிகம், மறைந்து போயிருந்த எகிப்து, மற்றும் மெசப்பெற்றேமியா நாகரிகத்திற்கு இணையானது. ஒரு வகையில் முற்பட்டது என்ற உண்மை பற்றி பல ஆய்வாளர்கள் சிந்திக்க முற்பட்டனர். சிந்துநதிப் பிரதேசத்தின் ஹரப்பா பகுதித்தளத்தில் ஆய்வு 1921இல் ஆரம்பிக்கப்பட்ட பொழுது 4000 ஆண்டுகளுக்கு முற்பட்ட நாகரிகத்தின் உண்மைகள் வெளிப்படலாயிற்று துரதிஷ்ட வசமாக 1850ம் ஆண்டளவில் பிரித்தானிய பொறியியலாளர்கள் லாகூர் பகுதிப் புகையிரதப் பாதையை அமைக்கும் போது இப்பகுதியிலிருந்து பெற்ற சுட்ட செங்கட்டிகளை அகழ்ந்தெடுத்துப் பயன்படுத்தினர். இதன் காரணமாக இத் தொல்லியல் தளம் பாரிய அழிவுகளுக்கு உள்ளாகியது.

ஹரப்பாவின் அகழ்வாராய்வுகளைத் தொடர்ந்து சில மாதங்களிற்குள், மொகஞ்சதாரோ ஆய்வுகள் ஆரம்பமாகியது. பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில், ஹரப்பாவிலிருந்து 375 மைல் தூரத்தில் 60 அடி உயரமான பகுதியிலேதான் மொகஞ்சதாரோ அமைந்திருந்தது. அதிஷ்டவசமாக இப்பகுதியில் ஹரப்பாவில் உள்ளது போன்று சுட்ட செங்கட்டிகளாலான தளத்தில் கட்டிடங்கள் அமைந்திருந்தன. பிளிஸ்ரோசின் காலப்பகுதியில் உருவாகிய மேட்டுப் பகுதியில், சிந்து நதி தீரத்தில் உள்ள 600 ஏக்கர் நிலப்பரப்பில் மொகஞ்சதாரோ அமைந்திருந்தது. இப்பகுதியின் அமைப்புக்களின் பிரகாரம் சுமார் 40,000 மக்கள் வாழ்ந்திருக்கலாம் என ஆய்வாளர்கள் அனுமானித்திருந்தனர். இது ஒரு வகையில் குறைத்து மதிப்பிடப்பட்ட மேலெழுந்த வாரியான கணிப்பு. ஏறத்தாழ 100,000 மக்கள் தொகையை உள்ளடக்கியதாக, எகிப்தின் மெம்பசிஸ் மொசப்பெற்ரேமியாவின் ஊர், இன்றைய ஈரானின் ஒரு பகுதியாகிய ஈழம் சூசா ஆகியனவற்றிலும் பெரிதான நகராக மொகஞ்சதாரோ அளவிடப்பட்டது.




மொஹஞ்சதாரோ நகரப்பகுதி விரிந்து அகலமான வீதிகளையும் 60க்கும் மேற்பட்ட ஆழமான கிணறுகளையும் உறுதியான அத்திவாரங்களைக் கொண்ட கட்டட அமைப்புக்களையும், மதில் சுவர்களையும் கொண்டிருந்தது. இது வரை அகழ்வாய்வுகள் நடந்த பகுதி 25 மைல் பிரதேசத்தை உள்ளடக்கியது. இந்த மக்கள் வாழிடங்களுக்கு எதிராக உயர்ந்த மேட்டுப்பகுதி கொண்டு அமைந்த இந்தப் பகுதியை தொல்லியலாளர்கள் ''கோட்டம்'' என அழைத்தனர்.அகழ்வாய்வு வேலைகள் 1940கள் 1950 கள் வரை தொடர்ந்த பிரதான அகழ்வுகள் 1960 வரை தொடர்ந்தன. பாகிஸ்தானிய அரசாங்கமும் யுனெஸ்கோவும் துரித வேலைப்பணிகளைத் தொடர்ந்தன. உப்புக்கசிந்த நிலக்கீழ் நீர்க் கசிவுகள் காரணமாக பழமையான கட்டிடச் செங்கட்டிகள் உதிரத்தொடங்கின. இதனைத் தொடர்ந்து மில்லியன் டொலர்கள் செலவுகளுடன், நீரிறைக்கும் யந்திரங்கள் பயன்படுத்தி இப்பகுதியைச் சீர்செய்ய முயன்றும் அவை பயனளிக்கவில்லை. இவ்வகை செங்கட்டி உதிர்வுக்குக் காரணம் மாரிகாலக் காற்றே என்பது இனங்காணப்பட்டது.

கலாசூரி **ஆ. சிவநேசச்செல்வன்**

தொடர்ச்சியான பெரிய ஆய்வுகள் மேற்கொண்ட போதிலும் தொல்லியல் ஆய்வாளரைப் பொறுத்த வரையில் இப்பிரதேசம் பற்றித் தெளிவற்ற நிலைமையே தொடர்ந்தது! செழிப்பான தொல்லியல் சான்றுகளின்றிக் கணிசமான சிலைகளும், உதிரியாக அங்குமிங்கும் இலச்சினைகளும், அவற்றில் பதியப்பட்டுள்ள எழுத்துக்களைக் கொண்டு எதையும் தெளிவாக அறியமுடியாத நிலைமையே தொடர்ந்தது. கோட்டங்களாக அமைந்த பெரிய கட்டிடப்பகுதிகளில் பாரிய மண்டபம் போன்ற அமைப்புக்கள் பொது குளிப்பு இடமென அடையாளம் காணப்பட்டன. எகிப்திலோ, மொசப்பொற்றேமியாவிலோ கணப்பட்டது போல வெள்ளிக்காலத்திற்குரிய கோவில்களோ, அரச மாளிகைகளோ இங்கு காணப்படவில்லை.

மொகஞ்சதாரோப் பகுதியில் பொதுவான கட்டிடங்களே காணப்படன. ஒரே தரத்திலான செங்கட்டிகள், பொதுவான அமைப்பொருட்கள், அணி வகைகள், ஒரு நகரமைப்புக்குரிய வகையில் காணப்பட்டன. நல்ல ஒழுங்கமைப்புக்குட்பட்ட சமூகம் வாழ்ந்த தமைக்கான தடயங்கள் காணப்பட்டாலும் 700 வருடகால இந்த நகர இருப்பின் போது யுத்தமோ அழிவுகளுக்கான தடயங்களோ எவையும் காணப்படவில்லை. இப்பகுதியில்பெறப்பட்ட கணிசமான தொல்லியல் சான்றாதாரங்களைக் கொண்டு எவ்வகை நாகரிகம் அமைந்திருந்தது, இப்பிரதேசத்தின் அரசியற் பின்னணி, சமய நம்பிக்கைகளை விளக்கும் சான்றாதாரங்கள் எவையும் காணப்படவில்லை. எந்த விதமான பொருளியற்சூழல் இந்தப் பகுதியில் நிலவியது என்பது கூடத் தெரியவில்லை.

இருபதாம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் ரோமாபுரியைச் சேர்ந்த தொல்பொருளியலாளர் ஜியுசெப்பி ருசி, தினந்தோறும் ஆய்வுகள் நடந்தேறினாலும் சிந்துவெளி நாகரிகத்தைப் பற்றி பெரிதாக எதுவும் வெளிவரவில்லையே என்ற





தமது ஆதங்கத்தை வெளியிட்டார். இவருடைய உணர்வுகளின்எதிரொலியாகப்பலதசாப்தங்களுக்குப் பின்னர் பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தொல்பொருளியலாளர் கிரகரி பொஸ்வெல், சிந்துநதிப் பள்ளத்தாக்கில் வாழ்ந்த மக்கள் தம்மை எவ்வாறு அழைத்தனர். அங்கிருந்த நகரங்கள் எவை, அவற்றின் பெயர்கள் என்ன, அங்கு ஆட்சி புரிந்த அரசர்கள் பெயர்பட்டியல் என்ன, படிமுறை வரலாற்றுத் தொடர்பு, வர்த்தகக் கணக்குகள் அல்லது சமூக அமைப்பு பற்றிய ஆவணங்கள், சமகால நாகரிகங்களோடு எவ்வாறு தொடர்பு பட்டிருந்தனர் என்றின்னோரன்ன எவையுமே கிடைக்கவில்லை என்ற தமது கருத்தைத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து சில தசாப்தங்களாக அந்தப் பகுதியில் தமது ஆய்வுகளைத் தொடர்ந்த தொல்பொருள் ஆய்வாளர் இங்கு எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு விடையாக சில விடயங்களை வெளிப்படுத்தினார். சிந்து வெளி நாகரிகத்தின் முழுமையான வடிவையும் அமைப்பையும் இனங்காணக்கூடிய வகையில், பிரதான நகர அமைப்புக்கள், நூற்றுக்கணக்கான நகரத்தொகுதிகள், கிராமங்கள் ஆகியன பற்றிய முழுமையான

விபரணங்கள் வெளிப்பட்டன. 1920களில் ஆய்வுகளில் ஈடுபட்டவரிலும் பல படி மேலாக சிந்து வெளி நாகரிகப் பரம்பலும் புவியியல் ரீதியான எல்லைகளும் விரிவானவை என்ற உண்மை புலப்பட்டது.

சுமார் 625,000 சதுரமைல்களை உள்ளடக்கிய பகுதி, எகிப்திய, மொசப்பத்தேமிய நாகரிக எல்லைகளிலும் கூடுதலானது என்ற உண்மையும் தெளிவானது. சிந்து வெளிப்பிரதேசத்தில் பல்வேறு கிளை நதி தீரங்களை உள்ளடங்கிய பகுதியில் விவசாய சமூகம் பல மில்லியன் கணக்கான மக்களின் வாழ்வாதாரங்களைக் கொண்டமைந்திருந்திருக்கலாம் என்பது உணரப்பட்டது. ஈரான் நாட்டின் எல்லைப் பகுதியிலிருந்து ஆப்கானிஸ்தான் மலைப் பிரதேசம் முதல் தற்போதைய டெல்கி வரையுள்ள பகுதியை இந்நாகரிகம் உள்ளடக்கியதாக அமைந்திருந்தது!

விஸ்கொன்சின் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர் லரண்டல் லா பரந்த மொகஞ்சதாரோ பிரதேசத்தில் செறிந்திருந்த கற்கள் உலோகங்களின் பரம்பல் பற்றிய குறிப்புக்களை 2008 இல் வெளிப்படுத்தியிருந்தார். சிந்து வெளிப்பிரதேசத்தில் செறிந்திருந்த வர்த்தகங்கள், பருவப்பெயர்ச்சிக்காற்றின் இயல்புச் சூழலுக்கு ஏற்ப, அராபியர்களுடன் வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்தமையை வெளிப்படுத்தினார். இன்றைய ஈராக்கிற்கு தூரகிழக்குப் பகுதிகள் வரை செறிந்திருந்தமைமையும், மொசப்பத்தேமிய ஆவணங்களில் 'மெலுகான்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சிந்து நதி வர்த்தகத்தோடு தொடர்பு கொண்டமையை விளக்கினார். 'மெலுகான்' என்பது ஒரு சுமேரியப் பதமாகும். 'மெலுகான்' மொசப்பற்றெமிய நீதி மன்றுடனான ஒரு மொழிபெயர்ப்பாளர் எனவும் இனங்காணப்பட்டது.




பாரம்பரிய வரலாற்றிலே, மொகஞ்சதாரோ திட்டமிட்டு வடிவமைக்கப்பட்ட முதலாவது நகரம். கிறிஸ்துவுக்கு முற்பட்ட மூன்றாவது சகாப்தத்தின் நடுப்பகுதியிலே சிந்துநதி நகர நாகரீகம் பெரிதாக வளர்ந்திருக்கலாம் என்னும் கருதுகோள் முதன்மைப் படுத்தப்பட்டுள்ளது. ஏறத்தாள 20 அடிக்கு கீழே பெறப்பட்ட சான்றாதாரங்களைக் கொண்டு இந்த நாகரிகம் கி.மு. 2800 வரையினதாக இருக்கலாம் என்ற கருத்தும் வலுப்பட்டுள்ளது. மொகஞ்சதாரோ ஆய்வில் நன்கு பரிச்சயப்பட்ட இத்ததாலிய தொல்பொருளியலாளரான மாசிமோ விடேல், நிலப்பகுதியின் 20 அடிக்கு கீழ் நீர்க்கசிவுகள் ஏற்படுவதைச் சுட்டிக்காட்டி பரந்த புதிய தரைப்பகுதியில் நகரக் கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்டன. மூன்று அடிக்கு கீழ் பானை ஓடுகளை கூர்மையான காலஆய்வுக்கு உட்படுத்தியே இந்த நாகரிகம் கி.மு 2800 வரையிலானதாக இருக்கலாம் என்ற முடிவுக்கு வர முற்பட்டார். இதனை இவரோடு சேர்ந்து ஆய்வு செய்த விஸ்கொற்சின் பல்கலைக்கழக தொல்பொருளியலாளர் யோநாதன் மாக்நோயரும் ஏற்றுக்கொண்டு கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.



மொஹஞ்சதாரோ நகரம் திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்ட போது 200 யார் நீளம் 400 யார் அகலமான மேட்டுப்பகுதியில், பௌத்த தாதுகோபம் அமைக்கப்பட்டது. 1920 இல் ஆய்வுகளை மேற்கொண்டோர் உயரமான மேட்டைப் பௌத்த தாதுகோபம் எனவும், அப்பகுதியில் பௌத்த பிக்குகளுக்கான, சிறு கூடவறைகள் காணப்பட்டன எனவும் இனங்கண்டனர். இப்பிரதேசத்தில் பௌத்த மதம் செழிப்புற்றிருந்த காலப்பகுதிக்கான தடயங்களும், அதே காலப்பகுதியினைச் சேர்ந்த நாணயங்களும் கூட இனங்காணப்பட்டன. ஆயினும் 2007ம் ஆண்டில் நேப்பிள் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற தொல்பொருளியலாளர் ஜீயோவனி வெராடி இப்பிரதேசத்தை ஆய்வு செய்து பௌத்த தாதுகோபப் பின்னணியை முற்றாகவே மறுத்தார். தாதுகோபம் போல மேடாக அமைந்திருந்த பகுதி நீள் சதுரமாக அமைந்திருந்தது. அங்கு இனஙங்காணப்பட்ட பௌத்த பிக்குகளுக்கானதெனக் கூறப்பட்ட கூடவறைகளும், மற்றும் செஙங்கட்டி ஓடுகளும் பிந்திய காலப்பகுதிக்கானதெனவும் கூறினார். இந்தச் செங்கட்டிகளாலான மேட்டுப்பகுதி நீள்சதுரமாக அமைந்திருந்தது. அங்கு இனங்காணப்பட்ட பௌத்த பிக்குகளுக்கானதெனக் கூறப்பட்ட கூடவறைகள் மற்றும் செங்கட்டிகளாலான மேட்டுப்பகுதி இரு தட்டுக்களைக் கொண்ட பிரமிட் எனவும், காணப்பட்ட பெண் உருவச்சிலை, சமய வழிபாட்டோடு தொடர்புடைய மிருகபலி நிகழ்வைக் காட்டுவதாகவும்இனங்கண்டார்.

சிந்துநதி நாடுளில் பிரதேசத்தில் ஆலயங்களோ வழிபாட்டுத்தலங்களோ காணப்படாத நிலையில் ஜியோவனி வெறாடின் கருத்து சரியானதா? என ஜென்சன் முதலான பல தொல்லியலாளர்கள் கருதினர். எவ்வாறாயினும் மொஹஞ்சதாரோ பற்றிய முழுமையான புதிர்கள் எவையும் இன்னும் வெளிப்படவில்லை.

அழிகிறதா சங்கிலியன் மந்திரி மனை?



சங்கிலியன் மன்னன் சிலை



யாழ்ப்பாணத்தை ஆண்ட கடைசி மன்னனான சங்கிலிய மன்னனின் மந்திரி மனை எனக் கூறப்படும் கட்டடம் இது. நல்லூரில் அமைந்துள்ளது. இதை இன்றும் வெளிநாட்டவர்கள், தென்னிலங்கை மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் பார்வையிட்டு வருகின்றனர். ஆனால் இந்தக் கட்டடம் இன்று உரிய முறையில் பராமரிக்கப்படாமல் அழிந்து போகும் நிலையில் காணப்படுகின்றது.

இதனைத் தமது உடமையாக்கும் முயற்சியிலும் கூட தனியார் சிலர் ஈடுபட்டு வருகின்றனர். இந்தக் கட்டடம் தொடர்பாக ஏற்கனவே யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வரின் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்று இதனை பராமரிப்பது உட்பட ஏனைய நடவடிக்கைகளுக்கான ஒரு குழுவும் நியமிக்கப்பட்டது. ஆனால் எதுவுமே செய்யாமல் மாநகரசபையின் ஆட்சிக் காலமும் முடிவடையவுள்ளது.

தமிழர்களின் அடையாளச் சின்னங்களில் ஒன்றாக விளங்கும் இதை வட மாகாண சபையாவது அக்கறை எடுத்து இதனை சீர் செய்ய வேண்டியது அவசியம். ஆனால் இதைச் செய்யும்போது யாழ். பல்கலைக் கழகத்தின் தொல்பொருள் திணைக்களத்திற்கூடாக மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் அக் கட்டடம் முறைப்படி தன் ஆரம்ப வடிவத்தில் மீளமைக்கப்படும் என்கின்றனர் விபரமறிந்தோர்.

சிந்துவெளியில் தமிழ் ஊர்ப் பெயர்கள்



மானுட வரலாறு என்பது பயணங்களால், இடப் பெயர்வுகளால் ஆனது. மனிதன் ஒரு ஊரை விட்டு இடம்பெயரும்போது, அவனது நினைவுகளைச் சுமந்து செல்கிறான். புதிய இடத்தில் குடியேறும்போது, பழைமையுடன் தொடர்புகொள்ளும் விதத்தில் தன் ஊர்ப் பெயரை அங்கே வைக்கிறான். இது ஒரு பாதுகாப்பு உணர்வைத் தருகிற சமூக உளவியல். அப்படி அவன் விட்டுச் சென்ற ஊர்ப்பெயர்களும், சுமந்து சென்ற ஊர்ப் பெயர்களும் சொல்வது மனித குலத்தின் வரலாறு.

ஈரானில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள ஏராளமான ஊர்ப் பெயர்கள், அப்படியே ஒரிசாவில் கொனார்க்கில் உள்ள சூரியக்கோயிலைச் சுற்றியுள்ள ஊர்களில் இருப்பதைக் கண்டேன். இதன் சாத்தியம் என்னை ஆச்சரியப்படுத்தியது.

பின்னர், தமிழ்நாடு-கேரள எல்லையில் உள்ள இடுக்கி, பழனி, குமுளி, தேனி, தேக்கடி, கம்பம், போடி போன்ற ஊர்ப் பெயர்கள், மத்தியப்பிரதேசம் மற்றும் வடமாநிலங்களில் இருப்பதைக் கண்டேன்.

இன்னொரு ஆச்சரியமான விஷயம்: ஒரிசாவுக்கும் நைஜீரியாவுக்கும் உள்ள ஒற்றுமை. ஒரிசா-ஆந்திர எல்லையில் உள்ள கொராபுட் மாவட்டத்தில் உள்ள சுமார் 463 ஊர்களின் பெயர்கள் அப்படியே நைஜீரியாவில் உள்ளன. ஆதிமனிதன் முதன்முதலில் ஆப்பிரிக்காவில் தோன்றினான் என்றும், பின்னர் அங்கிருந்து பிற பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தான் என்றும் இன்றைக்கு நவீன மரபியல் ஆய்வுகள் சொல்வது, இந்த இடப் பெயர்வுடன் பெரிதும் பொருந்துகிறது. இது பற்றிய எனது கட்டுரை உலக அளவில் பலராலும் எடுத்தாளப்படுகிறது.

சுமார் 9ஆண்டுகளுக்கு முன், ஒரு நாள் இரவு. சிந்து சமவெளி நாகரிகம் கண்டெடுக்கப்பட்ட பகுதியில் (தற்போதைய பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், கிழக்கு ஈரான் ஆகியவற்றை உள்ளடக்கிய பகுதியில்) உள்ள பல்வேறு ஊர்களின் பெயர்களை கணினியில் சேமித்து, அவற்றில் தமிழகத்தின் பழங்கால ஊர்ப்பெயர்கள் ஏதேனும் இருக்குமா என்று தேடிக்கொண்டிருந்தேன்.

நான் முதலில் தேடிய பெயர் 'கொற்கை'. ஆப்கானிஸ்தானிலும், பாகிஸ்தானிலும் 'கொற்கை' என்ற பெயரில் ஊர்ப்பெயர் இருக்கிறது என்றது கணினி. முதலில் இதை ஒரு விபத்து என்றே கருதினேன்.

அடுத்து 'வஞ்சி' என்ற ஊர்ப்பெயரைத் தேடினேன். அதுவும் அங்கே இருந்தது. எனக்குள் சுவாரஸ்யம் பெருகிற்று.

தொண்டி, முசிறி, மதிரை (மதுரை), பூம்புகார், கோவலன், கண்ணகி, உறை, நாடு, பஃறுளி என பழந்தமிழ் இலக்கியத்தில் வரும் பெயர்களை உள்ளிட்டுக் கொண்டே இருந்தேன். நூற்றுக்கும் மேற்பட்ட அத்தகைய பெயர்கள் இப்போதும் பாகிஸ்தானில், ஆப்கானிஸ்தானில் இருப்பதை கணினி காட்டிக் கொண்டே இருந்தது.

ஆர்.பாலகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ்.

தற்போது இந்திய தலைமை தேர்தல் அதிகாரியாகப் பணியாற்றும் ஆர்.பாலகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ். சிந்துசமவெளி பற்றிய ஆய்வில் முக்கியமானவர். அவரது ஊர்பெயரியல் ஆய்வு குறித்த அறிமுகக் கட்டுரை.

4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக செழித்து விளங்கி, பின் காணாமல் போன சிந்து சமவெளி நாகரிகம், 1924-ல் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த நாகரிகம் விளங்கிய இடத்தில் வாழ்ந்த மக்கள் யார்? அவர்கள் என்ன மொழி பேசினார்கள்? ஏன் அந்த நாகரிகம் மண்ணோடு மண்ணானது? என்பன யாருக்கும் தெரியாது. ஆனால், அந்த நாகரிகம் விளங்கிய பகுதிகளில் இருக்கும் ஊர்கள் இன்றும் தமிழ்ப் பெயர்களை தாங்கி நிற்கின்றன.

எனில், சிந்துவெளி நாகரிகம் விட்ட இடமும், சங்கத் தமிழ்ப் பண்பாடு தொட்ட இடமும் ஒன்றுதான். சுமார் 4ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் சிந்துவெளிப் பண்பாடு அழிந்தது. தமிழகத்தில் கிடைத்துள்ள அகழாராய்வு முடிவில் கி.மு.800 வரையிலான சான்றுகள் கிடைத்துள்ளன. அதற்கு முந்தைய ஒரு 1000 ஆண்டுகள் இடைவெளியை பின்னோக்கி ஆய்வுகள் மூலம் சென்று நிரப்பினால் சிந்துவெளிப் புதிரை அவிழ்த்து விடலாம்.

பழந்தமிழர் வாழ்வுடன் தொடர்புடைய, அவர்களின் தொன்மங்களுடன் தொடர்புடைய பெயர்கள் இன்று சிந்துவெளியில் கிடைத்திருப்பது ஏதோ விபத்தால் நிகழ்ந்தது அல்ல என்றே கருதுகிறேன். கிடைத்திருப்பது ஓர் ஊர்ப்பெயர் மட்டுமல்ல சங்க இலக்கியத்தில் உள்ள அவ்வளவு பெயர்களும் அங்கு இருக்கின்றன.

இடப்பெயர்வு நடந்திருக்கலாம். அங்கிருந்து இங்கு மனிதர்கள் புலம்பெயர்ந்து வந்திருக்கலாம். கொஞ்சம் பேர் அங்கிருந்து புலம் பெயர்ந்த பின், மிச்சம் இருந்தவர்கள் அங்கே வந்தவர்களுடன் கலந்து தங்கள் மொழியை, தனி அடையாளங்களை இழந்திருக்கலாம். ஆனாலும் இன்னமும் அந்த ஊர்ப்பெயர்கள் மட்டும் தப்பிப் பிழைத்திருப்பதாக வைத்துக் கொள்ளலாம். அங்கிருந்து கிளம்பி வந்தவர்கள் புதிதாக குடியேறிய இடத்தில் பழைய நினைவுகளை தங்கள் ஊர்ப்பெயர்களாக வைத்திருக்கலாம். கொற்கை, வஞ்சி, தொண்டி, காஞ்சி எல்லாமே இப்படி இருக்கலாம்.

சங்ககாலப் புலவர்கள் சமகால நிகழ்வுகளை மட்டும் இலக்கியத்தில் பதிவு செய்யவில்லை. அவர்களது காலத்திற்கு முற்பட்ட காலத்து பழைய நிகழ்வுகளையும் வாய்மொழி மரபுகளையும் தங்களது பாடல்களில் பதிவு செய்துள்ளார்கள். அவை வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ்கூறும் நல்லுலகம் என்கிற பரப்புக்குள் தமிழர் இருப்பைச் சொல்கிறவை மட்டுமல்ல. அவை சொல்லும் தொன்மங்கள் இந்த எல்லையைக் கடந்தவை.

சங்க இலக்கியத்தில் "வான் தோய் இமயத்து கவரி" என்று வரும். கவரி என்பது இமயத்தின் உச்சியில் திபெத் பக்கமாக வாழும் யாக் என்கிற விலங்கு. இந்த கவரி ஒரு வகை வாசனை மிகுந்த புற்களைத் தேடித்தேடி உண்ணும் என்றும் சங்க இலக்கியம் சொல்கிறது. இன்று இந்த யாக் விலங்கின் பால், ஒரு வகைப் புல்லை உண்பதால் மிகுந்த வாசனையுடன் இருப்பதாகவும், அதை'யாக் தேநீர்' என்று விளம்பரப்படுத்தி திபெத்தில் விற்கிறார்கள் என்றும் அறிகிறோம். எங்கோ குளிர் பிரதேசத்தில் இருக்கும் யாக் விலங்கு பற்றி சங்ககால கவிஞனுக்கு எப்படித் தெரிந்தது? பழைய நினைவுகள், கதைகள், தொன்மங்களின் எச்சங்கள் அவனுக்கு இதை சாத்தியமாக்கி இருக்கலாம்.

(வள்ளுவர் "மயிர் நீப்பின் உயிர்வாழா கவரிமான்" என எழுதியிருப்பதாக பரவலாக ஒரு கருத்து இருக்கிறது. ஆனால் அவர் "கவரிமான்" என்று சொல்லவில்லை. "கவரிமா" என்றுதான் சொல்கிறார். மா என்பது விலங்குகளைக் குறிக்கும் பொதுச் சொல். கி.பி.535 வாக்கில் இந்தியா, இலங்கை உள்ளிட்ட ஆசியாவின் பல பகுதிகளில் பயணம் செய்த காஸ்மாஸ் இண்டிகோப்லுஸ்டெஸ் என்ற ஐரோப்பியப் பயணி, "வால்முடியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக தனது உயிரையே விடத் தயாராக இருக்கும் விலங்கான கவரி" பற்றி தனது நூலில் குறிப்பிடுகிறார்.)

தமிழர்களின் ஐந்திணைகளில் பாலையும் ஒன்று. நம்மிடம் அந்த நிலப்பரப்பு இல்லை. ஆனால் அகநானூற்றில் மருதன் இளநாகனார், "உணவுக்கே வழியில்லாத பாலையில் ஒட்டகம் எலும்பைத் தின்னும்" எனக் குறிப்பிடுகிறார். இது ஒட்டகம் வளர்க்கும் தார் பாலைவனத்தில் உள்ளவர்களுக்கே தெரிந்த செய்தி. தொல்காப்பியர், ஒட்டகத்தின் குட்டியை கன்று என்று சொல்ல வேண்டும் என இலக்கணம் வகுக்கிறார். உறையூர் மணல்மாரியால் மூடியதால் சோழர்கள் இடம் பெயர்ந்ததாக பழந்தமிழ் மரபுகள் சொல்கின்றன. மணல்மழை பாலைவனத்தில் தான் சாத்தியம்.

இன்னொரு உதாரணம் சொல்கிறேன். "பொன்படு கொங்கானம்" என்ற வரி. கொங்கணம் அதாவது கோவா, மகாராஷ்டிரப் பகுதி. இப்போதைய கொங்கண் பகுதியில் உள்ள டைமாபாத் என்ற இடத்தில் சிந்துவெளி நாகரிகக் கூறுகள் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஆக, சிந்துவெளி நாகரிகம் விட்ட இடமும் தமிழ்ச் சங்க இலக்கியம் தொட்ட இடமும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவையாக இருக்கக் கூடும் என்றே கருதுகிறேன்.

தமிழனின் பழைய வரலாறு என்ன என்கிற கேள்வியும், சிந்துவெளியில் வாழ்ந்தவர்கள் யார் என்கிற கேள்வியும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள்.

ஊர்ப் பெயர்கள் சாகா வரம் பெற்றவை. அவை புலம்பெயரும் மனிதனின் நினைவோடு சென்று உயிர் பெறுகின்றன. பிறதுறை ஆய்வுகளின் உதவியுடன் செய்யப்படுகிற அறிவுப்பூர்வமான ஆய்வுகள், இந்திய வரலாற்றை உண்மையின் ஒளி கொண்டு மீட்டெடுக்க வழி செய்யும் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை. ✿

வாழ்வாங்கு வாழ்வமென...

போகிறோம் கையசைத்து, விழிநீர் வழிய, குளறும் நாவில் சொற்கள் குலைய, பிரியமறுத்துப் பார்த்துப் பார்த்துப் பின்புறமாக நடந்தபடி......

விதி ஒரு விமானமாக வந்திறங்கி எமக்காகக் காத்திருக்கிறது. இந்தப் பயணம் எங்கே போகிறது? நேரத்துக்கு நேரம் மாறுகின்ற காலத்துக்கெதிரான பயணம். கடல்கடந்து வான் வெளிகளை ஊடறுத்து சூரியனைத் தேடிப் போகிறோமா? ஆம். எம் வாழ்வுக்கு இன்னொரு சூரியன் எங்கேனும் இருக்குமென்று தேடுகிறோம். உலகத்தின் மூலை முடுக்கெல்லாம் சிதறிப்போய்த் தேடுகிறோம் எல்லோருமாக.

நாம் வந்திறங்கிய மண்மீது வரவேற்புக்கு விரிக்கப்பட்ட கம்பளம் போல பனி படர்ந்திருக்கிறது. உடல் சிலிர்த்து கொள்கிறது. ஆங்கிலச் சினிமாக்களின் உல்லாச புரிகளை திரைகளில் மட்டும் கண்டு ஏங்கிய விழிகளுக்கு நிஜதரிசனம் கிடைக்கிறது. பிரிவால் அழுது வாடிக்கிடந்த இதயத்தின் பள்ளத்துக்குள் ஆச்சரியம் வந்து நிரப்பிக்கொள்கிறது. கால்கள் புதைந்த பனிகளின் விறைப்பு ஊசியாய்க் குத்தி உணர்த்திய பின்னர்தான் இம்மை திரும்பி நடக்க நினைக்கிறோம்.

எங்கும் செல்வத்தின் செழிப்பு. மின் விளக்குகளின் ஜொலிப்பு. வானுயர்ந்த கட்டிடங்கள், அகன்ற பெருந்தெருக்கள். இந்த உலகம் விரிந்து கிடப்பதைக் கண்டோம். உடலும் சுருங்கி உள்ளமும் சுருங்கி ஒருவரை ஒருவர் மிதித்துக்கொண்டு வாழ்வை நிதமும் சபித்துக்கொண்டு, இதுவரை வாழ்ந்த இன்னோர் உலகை இப்போதெண்ணி விசனித்துக்கொள்கிறோம். கறையான் அரித்த ஏடுகள் போல கடந்த நாட்களைத் தூக்கி வீசுவோம்.

இப்போது எமது வாழ்க்கை புதியது. எம் தந்தையர், பாட்டனார் கண்டிராதது. எங்கள் பெயர் கூட மாறிப்போச்சு. ஒன்றே குலமென்று உரைத்தது போல எல்லார்க்கும் ஒரு பெயர் பொதுவாய் ஆச்சு. அகதிகள் அயினோம்.

சாதியென்ற பேதமில்லை. மதங்களென்ற பிரிவுமில்லை. குலமென்றும் கோத்திரமென்றும், யாரெந்த ஊரென்ற கேள்விகட்கு இடமேயில்லை. ஆணுமில்லை, பெண்ணுமில்லை, அனைவர்க்கும் ஒரே பெயர் அகதி! அழகானதல்லவா?

அகதிகள் என்பதால் நாங்கள் கேவலமானவர்கள் என்று மட்டும் எண்ணிவிடாதீர்கள். கேவலமான அகதிகளும் இருக்கிறார்கள். இவர்கள் இந்தியாவிலும், இலங்கையிலும் வாழ்க்கையின் சிலுவை அறையப்பட்ட பாவிகள். அவர்களுக்காகப் பிரார்த்திப்போம். அவர்கள் ஏழை அகதிகள். நாமோ பணக்கார அகதிகள். அவர்களுக்கும் ஏன்தான் அகதியென்ற பெயரைச் சூட்டினார்களோ? அகதி என்பது எவ்வளவு பெருமையான பெயர்! இரவிரவாய்க் கண்விழித்துப் படித்துப் பல்கலைக்கழகம் புகுந்து எம்.ஏ., பி.ஏ., எம்.பி.பிஎஸ்., என்று பட்டதாரிகள் எடுக்கும் பட்டங்களை விட அகதிப் பட்டம் பெறுமதி வாய்ந்தது. அவர்களே தங்கள் பட்டப்படிப்புகளை உதறி விட்டு இங்கு ஓடிவந்து சேருவதிலிருந்தே இது புரிகிறதல்லவா? எமது மதிப்புக்கள் பல்கலைக்கழகங்களாலோ, எமது தொழில்களாலோ தீர்மானிக்கப்படுவதில்லை. ஏஜென்சிகளின் கட்டணத்தொகையால் தீர்மானிக் கப்படுகிறது. ஒரு கனேடிய அகதியின் இன்றைய மதிப்பு குறைந்தது அறுபது லட்சம் ரூபாய்!

இப்போதெல்லாம் செத்தவீட்டு விளம்பரங்களிலோ, மற்றும் கலியாணவீடு, பிறந்தநாள் வாழ்த்து விளம்பரங்களிலோ, முன்னர் போல அடைப்புக்குறியுள் எமது படிப்பின்



பட்டங்கள் இடப்படுவதில்லை. மாறாக "தங்கள் பிரிவால் துயருறும் மகன் லோகேஸ்வரன் (கனடா) மருமக்கள் கலா, ரூபி (இங்கிலாந்து)...." இப்படி எம் அகதிப் புகலிடங்களே பெருமைச் சின்னங்களாகக் குறிக்கப்படுகின்றன. சரணாகதியென்று நாம் பற்றின பாதங்களுக்கேற்ப எம் மதிப்புக்கள் உயர்கின்றன. இருந்த போதிலும்....

இனி நாம் உண்மைகளுக்குப் போவோம். நாமும் அழுகிறோம். நம்புவீர்களா? தண்ணீரிலே மீன் அழுதால் கண்ணீரைத் தான் யாரறிவார் என்ற பாடல் வரிகளைப் போல எமது அழுகை. விரும்பிக் குமுறி, இதயம் குலுங்க "கோ" வென்று கதறி அழவேண்டிய அழுகை. அது கூட முடங்கிச் சுருண்டு எங்கோ இதயத்தின் மூலையில் தனித்து நின்று மௌனமாய் அழுகின்றது. ஆம் அழுகிறோம். எமக்குள்ளேயே.

வரும்போது வனப்புமிகு சோலைகளென்ற கனவோடு கால்வைத்த வெளிநாடு இன்றும் எமக்கு அப்படியே இல்லை. சோலைகள் இருந்தன. அழகு மட்டும் இருந்தது. ஆனால் ரசனை மட்டுந்தான் எம்மிடம் இல்லை. உலகம் திரிந்து அழகை ரசிக்க உல்லாசப் பயணிகளாய் நாம் வரவில்லையே! எம் அவலங்களைத்தான் காவித்திரிந்து ஒவ்வொருவர் முன்னும் மண்டியிட்டு கருணையை யாசித்துக் கையேந்தச் சென்றோம். வேடிக்கை பார்க்க இது வொன்றும் நாடகமல்ல. ஆயினும் வேடிக்கை இருந்தது. நாடகம் நடந்தது.

கொல்லையும் குறிச்சியும் கொப்பாட்டன் பெயரும் உரசிப்பார்த்துச் சாதி பிரிக்கும் புடம்போட்ட சாதியின் தங்கத்தோல் கூட வெள்ளையர் முன்னால் மங்கித்தான் போனது. அது தான் பரிதாபம்!

விடுதலைக்காகத் தம் விரல்கூட உயர்த்தாதவர்கள் போராட்டத்தில் தங்கள் விழுப்புண்களைக் காட்டினார்கள் சைக்கிள் பெடல் கீறிய காயம்கூட பேனெட்டால் குத்திக்கிழித்ததாய் மாறியது. அம்மைப்பால் குத்திய தழும்பை மட்டும் எல்லோருக்கும் இருந்ததால் சொல்லாமல் விட்டார்கள். உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்கள் ஊமையாக மனதினுள் அழுதார்கள். நாடகம் முடிந்தது. வேடிக்கை முடிந்தது. அகதிகளாக வாழ்க்கை தொடங்கியது.

விடிந்தாற் பறப்போம். இரவில் அடைவோம். வேலை வீடு வேலை வீடு இதுதான் எமது வாழ்க்கை வட்டம்.

சுதந்திரம் என்ற சொற்களுக்கான அர்த்தம் தேடி அலைந்தவர்கட்கு அகதி வாழ்க்கையில் சுதந்திரம் தெரிந்தது. தட்டிக்கேட்க யாருமில்லை. யாரையும் யாரும் மதிப்பதும் இல்லை. நாடு என்றும் மக்கள் என்றும் இனமென்றும் மொழியென்றும் எமக்கு எந்தப் பொறுப்பும் இல்லை. பண்பாட்டுக்கு இலக்கணமில்லை. நாளை பற்றிய கவலையுமில்லை. நேற்றைய நாட்களின் நினைப்பும் இல்லை. வீதிகள் செல்லும் பாதையை அறியா நாடோடிக் கூட்டமாய் நாமும் அலைந்தோம்!

ஏக்கத்துடன் நாம் அண்ணார்ந்து பார்த்தோம். எமக்கு மேலே வானமிருந்தது. வானத்தின் மேல் விண்மீன்கள் இருந்தன. விண்மீன் வரைக்கும் விழிகள் சென்றன. அதையும் தாண்டிக் கற்பனை சென்றது. கால்கள் மட்டும் தரையோடு நின்றன.

யாரும் எம்மை பார்ப்பதாய் தெரியவில்ல. அருகே சென்றாலும் வெள்ளைக்காரர் எம்மைத்

தம்மோடு சேர்ப்பதாய் இல்லை. இத்தனைக்கும் நாம் ஆங்கிலம் பேசினோம். பிள்ளைகள் பெயரிலும் ஆங்கிலம் பூசினோம். பிறெஞ்சும் ஜேர்மனும் ஆங்காங்கே உரைத்தோம். தமிழைத்தெண்டித்து மறந்திட முயன்றோம். இருந்தாலும் எம்மீது கடைக்கண் விழவில்லை. இன்னும் எம்மை மனிதராய்க் காட்ட என்ன தேவையென்று எமக்குப் புரியவில்லை. எமது கைகளைப் பின்புறம் புரட்டினால் கறுத்த தோலாய் இருப்பது கண்டோம். கொல்லையும் குறிச்சியும் கொப்பாட்டன் பெயரும் உரசிப்பார்த்துச் சாதி பிரிக்கும் புடம்போட்ட சாதியின் தங்கத்தோல் கூட வெள்ளையர் முன்னால் மங்கித்தான் போனது. அது தான் பரிதாபம்!

ஏக்கத்துடன் நாம் அண்ணார்ந்து பார்த்தோம். எமக்கு மேலே வானமிருந்தது. வானத்தின் மேலே விண்மீன்கள் இருந்தன. விண்மீன்வரைக்கும் வழிகள் சென்றன. அதையும் தாண்டி கற்பனை சென்றது. கால்கள் மட்டும் தரையோடு நின்றன.

எட்டாத பழங்கள் புளிக்கத்தொடங்கின. எமக்குள்ளே ஏதோ உறுத்தத்தொடங்கியது. சுற்றும் முற்றும் திரும்பிப்பார்த்தால் புற்றீசல்போல் நாம் பல்கிக்கிடந்தோம். யாழ்ப்பாணத்துக் கிடுகு வேலியை இங்கே தருவிக்கவும் வழியில்லையெனினும் எப்படியோ பிரிவுகள் போட்டு எமது அந்தஸ்தை இங்கே நிறுவலாம். அந்தஸ்துக்கானபுதியவரையறையாப்பதில்நாங்கள் மூளையைப் பிசைந்தோம். உழைத்த பணத்தை அந்தஸ்தாய் வைப்பதா எடுக்கும் விழாக்களை அந்தஸ்தாய் வைப்பதா எல்லாவற்றிற்கும் பொதுப்படையாய் ஏதேனுமொரு அளவுகோல் உண்டா? எமக்கு இன்னும் முடிவாகவில்லை. ஒவ்வொருவரும் அந்தந்த அந்தஸ்தை அவரவர் நிறுவினர். நிறுவியபின்னர் மறுபுறம் திரும்பி மற்றவரைப் பார்த்து எள்ளி நகைத்தனர்.

இப்போது எமக்கு இன்னொரு கேள்வி. எங்கள் கலாசாரம் எப்படியமையும். காலாச்சாரமென்பது தனித்துவத்தைக் காட்டுவது. எமக்கோ இரண்டும் கெட்டான் நிலை. வெள்ளயைர் கலாச்சாரத்திற்கு மாறவும் முடியவில்லை. பண்டைய கலாச்சாரத்தைப் பேணவும் விருப்பமில்லை. எப்போதும் சற்று வித்தியாசமாகக் காட்டவேண்டுமென்பது மட்டும் மனதின் ஆதங்கம். பெரிய சோதனை மொழிக்குத்தான் வந்தது. மொழியென்ற ஒரு தொடர்புச் சாதனம் அழகுபடுத்தப்பட்டு இலக்கியமாகிறது. தமிழின் அழகுக்கு குறையேதுமில்லை. இலக்கியவளத்திற்கோ அளவேயில்லை. இருந்தும் எமக்குத் தமிழைப்பற்றி ஏதோ ஒரு தாழ்வுச்சிக்கல். படிக்காதவருக்காய் ஒதுக்கப்பட்ட அஃறிணை மொழியாய்த் தமிழை நினைத்தோம். உயர்திணையென்று ஆங்கில மொழியை அந்தஸ்துச் சின்னமாய் உதட்டினிற் பூசினோம். தமிழனைத் தமிழன் சந்திக்கும்போதும் தமிழில் பேசுவது தரக்குறைவாகியது. தனது பிள்ளைகளுக்குத் தமிழே தெரியாதென்று பெருமையாய்ச் சொல்வதில் தாயுள்ளம் பூரித்தது. தமிழேதெரியாத தமிழர் தலைமுறை வெளிநாடெங்கும் விரைவில் தோன்றும். வெட்கப்படவல்ல பெருமைப்பட.

நேரம் பொன்னானது என்பது இங்குதான் உண்மையிலும் உண்மை. ஒவ்வொரு மணிநேரமும் இங்கு பொன்னாகிறது. வீணாக்குகின்ற ஒவ்வொரு மணியும் மண்ணாகின்றது. சந்திக்கின்ற ஒவ்வொரு தெரிந்தவனும் பொன்னான நேரத்தில் மண்ணள்ளிப் போட்டு விடுவானென்பதால் தெரிந்துகூடத் தெரியாதவர் போல் போய்விடுகின்றோம். இரவின் உள்ளும் நேரம் ஓடுவதை இங்கு வந்த பின்னர்தான் கண்டறிந்து கொண்டோம்.

அதனால் துயிலையும் விற்றோம். முதுகை நிமிர்த்தும் முள்ளந்தண்டுபோல் ஆன்மாவுக்கு ஓர் ஓர்மம் தருவதாய் தன்மானமென்றும் கௌரவமென்றும் ஈகோ என்றும் இருப்பதாய் சொல்வாரே அதையும் அடகு வைத்தோம். தொழிலில் இழிவில்லை! ஊரில் இருக்கும்போது புரியாத தத்துவம் இங்கு வந்தபின்தான் எமக்கும் உதிக்குது. வாழ்நிலைதானே சிந்தனையைத் தருகிறது.

இரவும் பகலும் உழைத்தாற்கூட நின்மதி மட்டும் எம்மிடம் இல்லை. கண்களை இறுக மூடிக்கொண்டு எந்திரம் போல் உழைத்திடச் சொல்லி ஏதோ ஒரு கரம் எம்மைத் தள்ளுது. திறந்த நாட்டில் இருந்தும்கூட பரந்த மக்களுடன் கலந்திட முடியாமல் ஒதுங்கிப் போய் நாம் ஒடுங்கி வாழ்கிறோம். பலரது வாழ்க்கை புறாக்கூண்டு அறைகட்குள் விடிந்தாற் பறப்போம். இரவில் அடைவோம். வேலை வீடு, வேலை வீடு இது தான் எமது வாழ்க்கை வட்டம் இடையில் யாரையும் சந்திக்க நினைத்தால் விண்ணப்பித்து அனுமதி பெறுவோம். தனிமைச் சிறையில் அடைபட்டு வதங்கும் வேலைக்குச் செல்லாத சீதைகட்கெல்லாம் இந்த அறைகள் இன்னோர் அசோகவனம்.

இதயத்தின் பள்ளத்துள் நிரம்பியிருந்த ஆச்சரியங்கள் உருகி வழிந்ததும் வேதனை மட்டும் மண்டிக்கிடக்குது. பெருமூச்சு இப்போது அடிக்கடி பிறக்குது. வீட்டுக் கூரைமேல் பனிதான் கொட்டினும் மனது மட்டும் புழுங்கிவெதும்புது. கிணற்றுத் தண்ணீரை அள்ளிமுழுகி திண்ணைப் பாயில் மல்லாந்து படுத்த நாட்களை எண்ணிமனமோ ஏங்குது. நாட்டிற்கு நாங்கள் அனுப்பும் பணமோ பல்கிப்பெருகி வெள்ளமாய் வருவதால் எம்மவர் கண்டு மலைத்து நிற்பர். மரக்கறி விலையிலும் பேரம் பேசி நான்கைந்து கடைகள் ஏறி இறங்கி மலிவைத்தேடும் எம்மவர் இப்போ சொன்ன விலைக்கு கூடவும் கொடுப்பர். கண்மண் தெரியாமல் காசை வீசி எங்கள் பெருமையில் தம்பட்டம் அடிப்பர். போலியாய்ப் பெருமையைப் போர்த்துக் கொண்டு மனதினுள்ளே அழுகிறோமென்பதை யாரிடம் போய் நாம் வருத்தப்படுவது? வறுமையில்கூட வாழ்க்கை இருந்தது-இங்கோ வெறுமையில் எமக்கு என்னதான் உள்ளது?

வாழ்வாங்கு வாழ்வமென வந்தோம். வந்தும்
வாழாது வாழ்கின்ற வாழ்வினை வாழ்வதில்
வேதனை தவிர வேறென்ன கண்டோம்?
வாராது வந்த வாழ்வென்று வெறும்
வார்த்தைகளால் மட்டும் விளம்பிக் கொண்டோம்
வாழ்ந்தாக வேண்டுமென்று வாழ்கிறோம்
எம் வாழ்வினை நம்பிவாழ்பவர்க்காக.

-மதுரகவி

குறுங்கதை

லண்டனில் படித்துக் கொண்டிருக்கும் தனது மகன் சமீரைப் பார்க்கும் ஆசையில் அவனது தாய் திருமதி சயீத் பயணம் புறப்பட்டாள்.

அவன் தங்கியிருக்கும் அப்பார்ட்டமன்டுக்குச் சென்ற போதுதான் சமீர் சில்வியா என்ற பெண்ணுடன் அங்கு வாழ்வது தெரிய வந்தது. 'இந்தப் பயலா இப்படி இருக்கிறான்' என்று திருமதி சயீதுக்கு ஆச்சரியமாக இருந்தது. இருவரிலும் திருமதி சயீதுக்கு ஒரு சந்தேகம் தட்டியது. எல்லாவற்றையும் மிகக் கூர்மையாக அவதானித்த தாயாரின் அவதானக் கூர்மையை உணர்ந்து கொண்ட சமீர், தாயாரிடம் சொன்னான்,

'நீங்க என்ன யோசிக்கிறீங்கன்னு எனக்கு வெளங்குதும்மா... சில்வியா எனது ரூம்மேட்... அவ்வளவுதான்'

சமீரின் தாயார் சொந்த நாடான லெபனானுக்குத் திரும்பிச் சென்று ஒரு வாரத்துக்குப் பின்னர் சில்வியா, சமீரிடம் சொன்னாள்,

'சமீர்... ஓங்கம்மா போனத்திலயிருந்து சின்ன சில்வர் கோப்பையைக் காணவில்லை. அவ எடுத்துக் கொண்டு போயிருக்கலாமெண்டு நினைக்கிறியா?"

'நான் எதுக்கும் ஒரு மின்னஞ்சல் அனுப்பி உம்மாக்கிட்ட விசாரிக்கிறேனே' என்றான் சமீர்.

அவனது மின்னஞ்சல் பின்வருமாறு இருந்தது.

அன்பின் தாயாருக்கு,

வீட்டயிருந்து சில்வர் கோப்பையை நீங்கதான் கொண்டு போனீங்கன்னு நான் சொல்லவில்லை. ஆனால் நீங்க கொண்டு செல்லவில்லை என்றும் சொல்லவில்லை. உண்மை என்னவென்றால் நீங்க போன நாளிலிருந்து அந்தக் கோப்பையைக் காணவில்லை!

அன்பு மகன் -சமீர்.

சில தினங்களுக்குப் பிறகு தாயாரிடமிருந்து சமீருக்கு மின்னஞ்சல் வந்தது

அன்பு மகன் சமீருக்கு,

நீயும் சில்வியாவும் ஒன்றாக வாழ்வதாக நான் சொல்லவில்லை. அதே வேளை அவளும் நீயும் ஒன்றாக வாழவில்லை என்றும் சொல்ல முடியாமல் இருக்கிறது. ஆனால் உண்மை என்னவென்றால் சில்வியா 'தனக்குரிய' கட்டிலில் படுத்திருந்தால் அந்தக் கோப்பையை அப்போதே கண்டுபிடித்திருப்பாள்.

அன்பின் தாயார்.

(நன்றி-முகநூல்)



SHOOTING SPOTS

எங்கள் இந்திய சினிமாக்களில் கதை ஒருபக்கம் இருக்க கண்களை வசியப்படுத்துவது யாதென்றால் கவர்ச்சிக் கன்னிகள் அணிந்தி
படமாக்கப்பட்ட லொக்கேஷன்கள்தான். அத்தகைய லொக்கேஷன்களைக் கண்டுபிடிப்பதற்கென்றே ஒரு தனி பட்

பேகல் கோட்டை

பாம்பே படத்தில் அரவிந்த்சுவாமி காதலின் ஏக்கத்தில் உருகியுருகி பாடிக்கொண்டிருக்க, மனிஷா கொய்ராலா அவரைத் தேடி ஓடி வரும் காட்சியை மறக்க முடியுமா?!...அந்தப் பாடல் காட்சி படம்பிடிக்கப்பட்ட இடம்தான் பேக்கல் கோடை. கேரளாவின் மிகப்பெரிய கோட்டையாக அறியப்படும் இந்தக் கோட்டை, காசர்கோட் மாவட்டத்தில் உள்ள பேக்கல் நகரில் அமைந்துள்ளது.





பெரியார் காட்டுயிர் ச

நடிகர் திலகம் சிவாஜியின் பேரன்
திரைப்படத்தில் 'சொல்லிட்டாளே
பெரியார் காட்டுயிர் சரணாலயத்தி
காட்டுயிர் சரணாலயம், தேக்கடி
எடுக்கப்பட்டுள்ளன.



போடி மெட்டு

'மைனா' திரைப்படம் உட்பட எண்ணற்ற தமிழ் மற்றும் பிறமொழி படங்கள் போடி மெட்டு பகுதியில் படம்பிடிக்கப்பட்டுள்ளன.





THAT **IMPRESSED US**

ும் ஆடைகளும் அணியாத ஆடைகளும் மட்டுமல்ல, பின்புலத்தில் நின்று அசரவைக்கும் மற்றொரு பிரதான பாத்திரம் அக் காட்சிகள்
துக்கப்பட்டுவிடும். இப்படித் தேடித் தேடிப் படம்பிடித்த அசத்தலான லொகேஷன்கள் சிலவற்றை இங்கே தருகிறோம்.

அதிரப்பள்ளி அருவி


அதிரப்பள்ளி அருவியை இந்தியாவின் நம்பர் ஒன் ஷூட்டிங் ஸ்பாட் என்றே சொல்லலாம். அந்த அளவுக்கு இங்கே சினிமா படப்பிடிப்புகள் நடந்துள்ளன. உலகநாயகன் கமல்ஹாசன் நடித்த 'புன்னகை மன்னன்' படத்தில் வரும் அதிர்ச்சியூட்டும் தற்கொலைக் காட்சியை யாராவது மறக்க முடியுமா? அதேபோல இராவணன் படத்தில் வரும் 'உசுரே போகுது' பாடல், பையாவின் 'அடடா மழைடா', அசோகா (இந்திப்படம்) உள்ளிட்ட எண்ணற்ற திரைப்படங்கள் இங்கே படம்பிடிக்கப்பட்டுள்ளன. அதிலும் டூயட் பாடல்கள் எடுக்கவேண்டுமென்றால் படப்பிடிப்பு குழுவினருக்கு அதிரப்பள்ளி அருவிதான் நியாபகத்துக்கு வரும்!





...லியம்

...ம் பிரபு அறிமுகமான கும்கி
...தல...' எனும் பாடல் காட்சி இந்த
... படம்பிடிக்கப்பட்டது. மேலும் பெரியார்
...ட்ட இடங்களில் எண்ணற்ற படங்கள்



ஆலப்புழா படகு வீடு

ஷாரூக்கானும், பிரீத்தி ஜிந்தாவும் காதலில் உருகித் திளைத்த 'நெஞ்சினிலே நெஞ்சினிலே...' பாடல் ஆலப்புழாவின் படகு வீடுகளில்தான் படம்பிடிக்கப்பட்டது.






KEETH APPLIANCE SERVICES
Heating and cooling
Heating, Cooling, Gas Line Hook Ups, Hot Water Tanks,
Stove, Washer, Dryer, Humidifier, Air Cleaners
Service, Repair, Installation for All Models
All Your Appliance Repair Or New Appliance Installation Please Contact Us
குளிர் காலமா இல்லை கோடைகாலமா உங்கள் வீட்டில்
உள்ள அனைத்து உபகரணங்களையும் சரி பார்த்துக்
கொள்வதுடன் உங்களுக்குத் தேவையான புதிய
உபகரணங்களை மிக நம்பிக்கையுடன்
பொருத்திக்கொள்ளவும் எம்மை நாடுங்கள்.
KEITH
416 995 3938
chellaiahkeith@yahoo.com


PS RENOVATION
MOEN
Buy it for looks. Buy it for life.®
DELTA
see what Delta can do
Touch O® Technology
RE-MODELING, RE-FACING
RE-DESIGN, FLOORING &
BASEMENT FINISHING
அனைத்து விதமான வீட்டுதிருத்த வேலைகளுக்கும், தரம் வாய்ந்த சமையலறை,
குளியலறை உபகரணங்களைப் பொருத்துவதற்கும் தள வேலைகளுக்கும்
CALL FOR FREE ESTIMATE
faucets
from $100
installed
THANUSAN:
647-996-6491

பறவையைக் கண்டான் விமானம் படைத்தான்... இவை பாடல் வரிகள். மனிதன் வேக வேகமாகப் பறக்கிறான். உலகின் ஒரு மூலையிலிருந்து மறு மூலைக்குக் கடுகதியிற் பறக்கிறான். இராமாயனப் புட்பக விமானங்கள் எம் கண் முன்னே என்றோ வந்துவிட்டன. ரைட் சகோதரர்கள் அதை இன்றைய வாழ்வில் கொணர்ந்தவர்கள். இந்தப் பறப்பு இன்னும் ஆபத்தானதாகவே உள்ளது. இந்த ஆண்டில் இதுவரை பதிவாகிய விமான விபத்துக்கள் இதோ...

1) 18/01/2014 கயானாவின் ஒலிவர் கிறிக் பகுதியில் செஸ்னா 208 பீ ரக சிறிய விமானம் காட்டில் விழுந்து விபத்துக்குள்ளானது. இதில் இருந்த இரண்டு விமானிகளும் கொல்லப்பட்டனர். இதனுடன் 2014ஆம் ஆண்டுக்குரிய விமான விபத்துக்கான பதிவுகள் ஆரம்பமாயின.

2) 20/01/2014 ரோமேனியாவின் பிரிஸ்னா வில் பனிப் படுக்கையில் 7 பேருடன் விபத்துக்குள்ளானது பீ.என் 2 ஏ 27 ரக சிறிய அளவிலான விமானம். விபத்தில் உடனடியாக எவரும் இறக்காத நிலையில் காயங்களினால் பின்னர் விமானியும் இன்னொருவரும் இறந்தனர்.

3) 16/02/2014 15 பயணிகளுடனும் 3 பணியாட்களுடனும் சண்டிகர், நேபாளத்தில் விபத்துக்குள்ளான நேபாள் ஏயர்லைன்ஸ் இற்குச் சொந்தமான நடுத்தர அளவிலான இந்த விமானம் சீரற்ற வானிலையால் பனியால் மூடப்பட்ட மலையில்மோதி தீப்பிடித்து எரிந்தது. விமானத்திலிருந்த 18 பேரும் கொல்லப்பட்டனர்.



4) 21/02/2014 3 நோயாளிகளையும், மருத்துவக்குழுஒன்றையும் ஏற்றிக் கொண்டு லிபியாவிலிருந்து துனிசியாவின் துனிஸ் நகரை நோக்கி 11 பேருடன் புறப்பட்ட அன்ரனோவ்-26 ரக சரக்கு விமானம் அதன் இயந்திரத்தில் ஏற்பட்ட தீயினால் விவசாய நிலத்தில் விழுந்து நொருங்கியது. 11 பேரும் கொல்லப்பட்டனர்.



இந்த ஆண்டில்

வீழ்ந்து நொருங்கிய விமானங்கள்

5) 26/02/2014 ஹவாயின் லனாய் விமான நிலையத்திலிருந்து 6 பேருடன் புறப்பட்ட பைபர் ரக சிறிய விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் விழுந்து நொருங்கியது. இந்த விபத்தில் விமானியும் இரண்டு பயணிகளும் கொல்லப்பட 3 பேர் உயிர் தப்பினர். விமானம் ரிந்து சாம்பலாகியது.

6) 08/03/2014 227 பயணிகளுடனும் 12 பணியாட்களுடனும் மலேசியாவின் கோலாலம்பூரிலிருந்து சீனாவின் பெய்யிங் நோக்கிப் புறப்பட்ட போயிங் 777 ரக விமானம் புறப்பட்ட இரண்டு மணி நேரத்தின் பின் ராடரில் இருந்து மறைந்தது, என்ன ஆச்சுது ஆச்சுன்று 3 மாதங்கள் வரை தேடியும் எந்தத் தடயமும் இல்லாது மாயமாகப் போனது எம் எச் 370 என்று குறியீட்டு இலக்கமிடப்பட்ட இவ் விமானம் விமானப் போக்குவரத்திலும் வரலாற்றில் 17ஆவது இடத்திலுள்ள இந்த மர்மம். ஏதாவது நல்ல செய்தி கிடைக்கும் என்று இன்னும் இதில் பயணம் செய்தவர்களின் உறவினர்கள் ஏக்கத்துடன் காத்திருக்கிறார்கள்.

7) 22/03/2014 குயின்ஸ்லாண்ட்-ஒஸ்ரேலியாவில் ஸ்கை-டைவிங் குழுவினை (4 பேர் கொண்ட) ஏற்றிச்சென்ற சிறிய அளவிலான செஸ்னா விமானம் விபத்துக்குள்ளானதில் அதிலிருந்த 5 பேரும் சம்பவ இடத்திலேயே இறந்தனர்.

8) 28/03/2014 லொசீட்ரக இந்திய இராணுவப் போக்குவரத்து விமானம் பயிற்சியில் ஈடுபட்டுருந்த வேளை மலை முகடு ஒன்றில் உராய்வுக்குள்ளாகி கட்டுப்பாட்டை இழந்து ஆற்றுப்படுக்கை ஒன்றில் விழுந்து விபத்துக்குள்ளானதில் அதிலிருந்த 5 பேரும் கொல்லப்பட்டனர்.

9) 8/04/2014 வட அமெரிக்காவின் அலாஸ்காவில் செஸ்னா ரக பயிற்சி விமானம் விபத்துகுள்ளானதில் அதிலிருந்த இருவரும் எரிந்து இறந்தனர்.

10) 9/04/2014மெக்சிக்குகாவின் ராமொஸ்-அரில்பி என்ற இடத்தில் 8 பேருடன் தரையிங்க முற்பட்ட விமானம் பனிமூட்டத்தின் காரணமாக தரையிறங்க வேண்டிய இடத்திற்கு அரை மைல் முன்னதாக தரையிறங்கி விபத்துக்குள்ளானதில் விமானியும் சிப்பந்தியும் உட்பட 8 பேரும் இறந்தனர்.


11) 20/04/2014 பின்லாந்தில் 10 ஸ்கை-டைவோர்ஸ் உடன் புறப்பட்ட பரீட்சார்த்த விமானம் கட்டுப்பாட்டை இழந்து காட்டுப்பகுதியில் விழுந்து விபத்துக்குள்ளானது. விமான ஒட்டியும் இரண்டு சாகசக்காரர்களும் பரசூட்டின் உதவியுடன் உயிர்பிழைக்க 8 சாகசக்காரர்கள் விபத்தில் உயிரிழந்தனர்.

12) 08/05/2014 அலிசான்சா கொலம்பிய என்ற விமானப் போக்குவரத்து நிறுவனத்திற்குச் சொந்தமான சரக்கு விமானம் மலையில் மோதி விபத்துக்குள்ளானதில் இரண்டு விமானிகளும் 4 சிப்பந்திகளும் கொல்லப்பட்டனர்.


13) 17/05/2014 கிழக்காசியாவின் லாஒஸ் பாதுகாப்புப் படைக்குச் சொந்தமான போக்குவரத்து விமானம் பாதுகாப்பு அமைச்சருடனும் உயர் அதிகாரிகளுடனும் பறந்து கொண்டிருந்த வேளை காட்டுப்பகுதியில் விபத்துக்குள்ளானதில் பாதுகாப்பு அமைச்சர் உட்பட 16 பேர் உயிரிழந்தனர். ஒருவர் உயிர் தப்பினார்.

14) 31/05/2014 மசாசுசெட் பெட்போட் தனியார் வாடகை விமானம் புறப்படத் தயாரான வேளை ஓடுபாதையிலிருந்து விலகி விபத்துக்குள்ளானதில் விமானத்திலிருந்த 7 பேரும் இறந்தனர்.

15) 14/06/2014 லுகாஸ்க்-கிழக்கு உக்ரைனில் பிரிவினைவாதப் படைகளினால் உக்ரைனிய இராணுவப் போக்குவரத்து விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டதில் 49 இராணுவ அணியினர் கொல்லப்பட்டனர்.



16) 2/07/2014 கென்யாவின் ஜொமோ கென்யாடா சர்வதேச விமான நிலையத்திலிருந்து சோமாலியா நோக்கிப் புறப்பட்ட சரக்கு விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் விழுந்து நொங்கியதில் அதிலிருந்த நால்வரும் கொல்லப்பட்டனர்.



17) 5/07/2014போலந்தில் ஸ்கை-டைவிங் குழுவுடன் புறப்பட்ட 12 பேர் கொண்ட பைபர் ரக சிறிய விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் விபத்துக்குள்ளானதில் 11 பேர் உயிரிழந்தனர். ஒருவர் உயிர் தப்பினார்.

18) 17/07/2014 அம்ஸ்ரடாமிலிருந்து கோலாலம்பூர் நோக்கிப் புறப்பட்ட மலேசியன் ஏயா லைன்ஸ் இன்ம் எச் -17 ரக விமானம் 32,000 அடிக்கு மேற்பட்ட உயரத்தில் வைத்து சுட்டு வீழ்த்தப்பட்டது.

இந்த விமானம் ரஸ்ய தயாரிப்பான 'பக்' என்றழைக்கப்படும் தரையிலிருந்து வான்பரப்பில் தாக்கும் விமான திர்ப்புப் பீரங்கியினால் சுட்டு வீழ்த்தப்பட்டதாக நம்பப்படுகிறது. தாக்குதலுக்கு யாரும் இதுவரை உரிமை கோரவில்லை. உக்ரைனிய அரசோ கிழக்கு உக்ரைனிய பிரிவினை வாதப் படைகளே பொறுப்பு என்று கூறுகிறது. சுடப்பட்ட விமானம் கிழக்கு உக்ரைனில் டோனாற்ஸ்க் பிராந்தியத்தில் பிரிவினைவாதப் படைகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வீழ்ந்தது. இதிலிருந்த 283 பணிகளும் 15 சிப்பந்திகளும் கொல்லப்பட்டனர். இந்த விமானம் வீழ்த்தப்பட்டதற்கு 17 ஆண்டுகளுக்கு முன்பு அதே தினத்தில் தனது முதலாவது பறப்பை மேற்கொண்டது.

19) 23/07/2014 ட்ரான்ஸ் ஏசியா நிறுவனத்திற்குச் சொந்தமான விமானம் தைவானில் விபத்துக்குள்ளானதில் 47 பேர் கொல்லப்பட்டதுடன் 11 பேர் காயங்களுடன் உயிர் தப்பினர். விமானம் அவசராமாகத் தரையிறங்க முற்பட்ட வேளை இவ்விபத்த நிகழந்தது.

20) 24/07/2014 எயர் அல்ஜெரி 5017 விமானம் வானில் கரும் சூறாவளியில் சிக்கி புறாகினா புஸோ எல்லைக்கருகில் மாலியில் விழுந்து நொருங்கியது.இதிலிருந்த 112 பயணிகளும் 6 சிப்பந்திகளுமாக மொத்தம் 118 பேர் உயிரிழந்தனர்.

21) 10/8/2014 ஈரானின் தெக்ரான் விமான நிலையத்திலிருந்து 48 பேருடன் புறப்பட்ட பயணிகள் விமானம் சிறிது நேரத்தில், சமநிலையை இழந்து குடியிருப்புப் பகுதிக்குள் விழுந்து தீப்பிடித்துக்கொண்டதில் 39 பேர் கொல்லப்பட்டனர்.

22) 13/8/2014 பிரேசிலின் றியோ டீ ஜெனரோவிலிருந்து குவாறுஜா நோக்கிப் புறப்பட்ட தனியார் பயணிகள் விமானம் தரையிறங்குவதற்கு 3 கி.மீ தொலைவில் மழையிலும் பனிமூட்டத்திலும் சிக்குண்டு விபத்திற்குள்ளானதில் அதிலிருந்த 7 பேரும் இறந்தனர்.

23) 16/8/2014 நான்கு பேர் கொண்ட மருத்துவக் குழவுடன் கனடாவில் நியுபுரொன்ஸ்விக் மாநிலத்தின் கிராண்ட் மனன் தீவில் சிறிய ரக விமானம் ஒன்று விபத்திற்குள்ளானதில் இருவர் கொல்லப்பட்டனர்.

ம. மணிவண்ணன்

பித்தநிலை நடிப்பு

உலகத்திரைப்படங்களில் நடிப்புக்கலையை முன்வைத்து ஓர் உரையாடலை நிகழ்த்தினால் அதன் மையப்புள்ளி ஜெர்மானிய நடிப்பாளுமையான கிளாஸ் கின்ஸ்கியாகத்தானிருக்கும்.

வெறுமனே இயக்குனர் சொல்லித்தருவது மட்டுமே நடிப்பு என்பதைப் புறம் தள்ளிவிட்டு அக எழுச்சியிலிருந்து வெளித்தோன்றும் காட்சிகளை Aguirre, the Wrath of God படத்தின் ஒவ்வொரு காட்சியிலும் உணரலாம். ஜெர்மானிய புதிய அலை சினிமாவின் முன்னோடியான வெர்னர் ஹெர்ஸாக் இயக்கிய அப்படம் 11 ஆம் நூற்றாண்டில் பெருநாட்டின் காடுகளுக்குள் தங்கப்புதையல் தேடிப்போன குழுவைப் பற்றியது. படைத்தளபதியைக் கொன்றுவிட்டு தானே அப்பொறுப்பை ஏற்று வெறிகொண்ட அதிகாரத்தைத் தன் உடல் முழுதும் பூசிக்கொண்ட அகூர் என்னும் பாத்திரத்தில் அவர் வெளிப்படுத்தும் உடல் மொழியின் வன்மம் நடிப்புக்கலையின் உச்சம் என்றே சொல்ல வேண்டும்.

அவரோடு புதையல் தேடிவந்த அனைவரும் இறந்து போக, மீளவழியற்றுத் தனியனாகி, கிடைத்த தங்கப்புதையல்களுடன் வானத்தை நோக்கிக் கத்தும் இறுதிக்காட்சியில் ஆக்ரோஷமும், கையறுநிலையும், பித்தப்பிறழ்வும் மாறிமாறிக் கொப்புளிக்கும் காவிய சோகம் மாபெரும் நடிப்பாளுமையை நம் கண்முன் நிறுத்துகிறது.



கின்ஸ்கிக்கு அமைந்தவை இருண்மையான கதாபாத்திரங்களே. மூர்க்கமும் வன்மமும் கொண்ட இருண்ட மனிதர்களின் உள்முகம் நோக்கிய பயணப்படுதலாக அவை அமைந்திருந்தன. மனப்பிறழ்வு கொண்ட, உளவியல் சிக்கல் நிரம்பிய, மனிதஉறவுகளின் மீது மதிப்பீடுகளேதுமற்ற பித்த வெளியில் அலைந்து கொண்டிருக்கும் சவாலான கதாபாத்திரங்கள். இவைகளை உயிரூட்டுவதற்கு தானும் அதுவாகவே நிஜவாழ்வில் மாறிப்போய் நடிப்பு எது அசல் எது எனத் தெரியாமல் இயைந்து போய் நின்றார்.

'கடவுள் பாதி மிருகம் பாதி' என்கிற படிமம் அவருக்குள் கட்டமைய, கலையையும் வாழ்வையும் ஒரே நேர்கோட்டில் நிறுத்திக் காட்டி ஒரு புதிய நடிப்பிலக்கணத்தை உருவாக்கியவர்.

அவரது அளப்பரிய நடிப்பாற்றலுக்காகவே ஹெர் ஸாக் படங்களை உருவாக்கினார் என்றெல்லாம் திரைப்பட விமர்சகர்கள் கூறுவதுண்டு. இதேபோன்ற உளவியல் சிக்கல்களும் தகிக்கும் மனநிலைகளும் கொண்டவர்தான் ஹெர்ஸாக். இவரைப்பற்றிய செய்திக்கதம்பங்கள் தமிழில் நிறைய வந்திருக்கின்றன. 'துப்பாக்கிகள் கடத்தியவர்', 'கேமராவைத் திருடிக்கொண்டு போய் படம் எடுத்தவர், பந்தயத்துக்காக தனது காலணியைச் சமைத்துச் சாப்பிட்டவர்'...

அதேபோல கின்ஸ்கியைப் பற்றியும். 'படப்பிடிப்பில் துப்பாக்கியைக் காட்டி மிரட்டித்தான் நடிக்க வைக்கமுடியும்', 'படப்பிடிப்பு தளத்தில் கேமராவை உடைத்தவர்', 'தனது நடிப்பை மக்கள் ரசிக்கவில்லை என்று நாடக மேடையைத் தீ வைத்துக் கொளுத்தியவர்', வெளிப்புறப்படப்பிடிப்பில் தூக்கத்திற்கு இடையூறு செய்கிறார் என்று ஒரு துணைநடிகரைத் துப்பாக்கியால் சுட்டவர்', 'டிராகுலாவாக நடித்தபோது நடிகையின் குரல்வளையைக் கடித்தவர்'... இந்த மேலோட்டமான தகவற் குறிப்புகளைத் தவிர்த்து கலைத்துவத்தின் உள்முகம் நோக்கிப் பயணப்படவேண்டும்.

கின்ஸ்கியிடம் உள்ள பித்தம் கொண்ட மனநிலை அகஎழுச்சியிலிருந்து உருவாகி பொதுபிம்பத்தில் வெடித்துச் சிதறுவது கலையின் புறநிலைத் தோற்றம். ஹெர்ஸாக்கிடம் உள்ள மனநிலையோ உள்நோக்கிய கொந்தளிப்பு கலையின் அகத்தேடல். அவர்கள் இருவரும் ஒன்றிணையும்போதுதான் அகமும் புறமும் இணைந்து அபூர்வ தரிசனமாக மலருகிறது.

முட்டாள்த் தனத்தின் அதிகாரத்தையும் அதிகாரமின்மையின் மேதமையையும் அகூராக ஹெர்ஸாக் உருவகப் படுத்தும்போது அதற்கு வடிவம் கொடுப்பது கின்ஸ்கியின் உடல்மொழியாக இருக்கிறது. இப்படி அகமும் புறமும் இயைந்த ஒரு கலைவையோடு நடிப்பிலக்கணத்தின் உச்சத்தை உருவாக்க இரு முனைகள் தேவைப்படுகின்றன.

அதை உணர்ந்ததனால்தான் கின்ஸ்கியும் ஹெர்ஸாக்கும் மிக மோசமாக விதத்தில் அடிதடிகள் விரோதங்கள் கசப்புகள். அவதூறுகள் என்று இருந்தாலும் மீண்டும் மீண்டும் இணைகின்றனர். 'கின்ஸ்கி முன்னால் நின்றாலே புதிது புதிதாய் காட்சிகள் தோன்றிக்கொண்டேயிருக்கின்றன' என்று ஹெர்ஸாக்கும், 'எனக்குள்ளிருக்கும் கலையின் ஆதார உணர்ச்சியை உசுப்பியவர்' என்று கின்ஸ்கியும் நெகிழ்ந்த தருணங்களும் உண்டு.

கின்ஸ்கியைப் பற்றி My Best Fiend: Klaus Kinski என்ற தலைப்பில் ஒரு ஆவணப்படம் ஒன்றை எடுத்தார் ஹெர்ஸாக். உடனே Yo necesito amor என்ற தனது நூலில் ஹெர்ஸாக்கைப்பற்றி அவமதிப்புடன் எழுதினார் கின்ஸ்கி.

கௌதம சித்தார்த்தன்

ஆனாலும் சின்னப்பசங்க சண்டையைப்போல அடுத்த கணமே அவர்கள் இணைந்து கலையாக மாற்றம் பெறுவார்கள். அதனால்தான் உலகப்புகழ்பெற்ற இயக்குனர் கப்போலா உருவாக்கியதை விடவும் பன்மடங்கு வீரியம் கொண்ட டிராகுலாவை ஹெர்ஸாக்கால் உருவாக்க முடிந்தது.

இவர்கள் இருவரையும் ஒருசேரப்பார்க்கும்போது ஒரே உருவின் இரட்டைகள் (doppelgänger: ஜெர்மானிய மொழியில் கதே போன்ற கவிஞர்களால் உருவாக்கப்பட்ட இலக்கியவகை) என்று தான் மேஜிக்கலாக நான் நம்புகிறேன். இந்த இரட்டை பற்றிய படிமங்களும் கோட்பாடுகளும் நவீன உலக இலக்கியத்தில் பிரசித்தமானவை. 'தானே அந்த மற்றொரு உருவாக மாறிப்போய் நிற்கும்' படிமமான இரட்டை (தமிழ்படங்களில் காட்டும் மலினமான இரட்டைவேடங்கள் அல்ல) என்னும் இலக்கியவகை தாஸ்தாவ்ஸ்கியின் (The Double: A Petersburg Poem) நாவலில் நேர்த்தியாக அமைந்திருக்கிறது. எட்கார் அலன்போவின் 'வில்லியம் வில்சன்' போர்ஹேயின் 'மற்றவன்' போன்ற சிறுகதைகளிலும் விளாடிமிர் நபக்கோவின் 'Despair போன்ற நாவலிலும் இந்தப் படிமங்கள் மிக அழகியலாகக் கட்டமைந்திருக்கின்றன. இந்த நாவலை புகழ்பெற்ற ஜெர்மானியப் புதிய அலை இயக்குனரான பாஸ்பைண்டர் திரைப்படமாக எடுத்துள்ளார்.

இந்த அபூர்வமாக பித்த நடிப்புக்கலையை ஜெர்மானிய நாடக அரங்கிலிருந்து வரும் இஸ்த்வான் ஸாபோ என்னும் இயக்குனர் மிக நேர்த்தியாகக் கையாளுகிறார். 1981 ல் உலகஅரங்கில் பலவிருதுகளை வென்ற 'மெஃபிஸ்டோ' என்னும் படத்தில் ஹென்றிக் என்கிற நடிகனாக நடித்திருக்கும் கிளாஸ் பிராண்டாயரின் வருகை கிளாஸ் கின்ஸ்கியை ஞாபகமூட்டியது.

இந்தப்படத்தை 'மெஃபிஸ்டோ' பற்றிய புராணிகக் குறியீடுகளோடு அணுகும்போது இதனுள் மறைந்திருக்கும் ஒரு மாயையான தோற்றம் புலப்படும்.

புகழ்பெற்ற ஜெர்மனியக் கவியான கதேயின் உலகப் புகழ்பெற்ற காவியம் 'ஃபாஸ்ட்'. மெஃபிஸ்டோ ஃபிலிஸ் என்கிற 'சாத்தானுக்கும்-கடவுளுக்கும்' 'நல்லவனைக் கெடுக்க முடியாது" என்று ஒரு வாதம் வருகிறது. கடவுளுடன் சபதம் செய்து கொண்டு பூலோகத்தில் உள்ள டாக்டர் ஃபாஸ்டைக் கெடுப்பதற்காக வருகிறான் மெஃபிஸ்டோ. ஃபாஸ்டைச் சந்தித்து நீ என்னை ஏற்றுக் கொண்டால் நான் உன்னை உலகம் முழுக்க புகழ் ஓங்கச் செய்வேன் என்கிறான். சிற்சில தடுமாற்றங்களுக்குப் பிறகு மெஃபிஸ்டோ என்னும் சாத்தானை டாக்டர் ஃபாஸ்ட் ஏற்றுக் கொள்ள, அவரது கீர்த்தி உலகெங்கும் பரவுகிறது. ஆனால் முக்கியமான தருணத்தில் மெஃபிஸ்டோவை ஏற்றுக் கொள்ளாமல் நிராகரித்து விடுகிறார் ஃபாஸ்ட். மெஃபிஸ்டோ தோல்வியடைகிறான். இது ஜெர்மன் மித்.

படத்தில் வருகிற ஹென்றிக் என்கிற நடிகன் தனது நடிப்பாற்றல் உலகம் முழுமைக்கும் பரவவேண்டும் என்பதற்காக மெஃபிஸ்டோ என்கிற கதாபாத்திரத்தை ஏற்று நடிக்கிறான். அந்த அபாரமான நடிப்பில் உலகமே மயங்குகிறது. கொஞ்சம் கொஞ்சமாய் புகழின் உச்சியை நோக்கித் தள்ளப்படுகிறான். நாஜிப்படைகளின் முதன்மைத் தளபதி அவனை மிகமிகப் பாராட்டுகிறார். மேலும் அவனோடு நட்பு வைத்துக் கொள்வதில் பெருமை கொள்கிறார். நாஜிகளின் பிடியில் ஜெர்மனி மாட்டிக் கொண்டிருந்த காலகட்டம் அது. கேள்வி கேட்காமல் அவன் கண்முன்னால் கலைஞர்களையும் அவனது நண்பர்களையும் வதைமுகாம்களுக்கு அழைத்துச் செல்லும்போது கொஞ்சம் கூட எதிர்ப்புத் தெரிவிக்காமல் கண்டுகொள்ளாமல் இருக்கிற சூழல் அவன் மேல் திணிக்கப்படுகிறது. முரண்பாடு மற்றும் எதிர்ப்புணர்வுகளை விழுங்கி விட்டு முழுக்க முழுக்க எல்லாவற்றையும் மறந்து மெஃபிஸ்டோ என்கிற பிம்பத்தை மேலும் மேலும் புகழின் உச்சிக்கு நகர்த்துகிறான். தான் மெஃபிஸ்டோ என்கிற பிம்பமாய் மாறிப்போய்விட்டதாகவும், உலகம் முழுக்க தனது முகம்தான் எஞ்சியிருக்கிறது எனவும், தானே மெஃபிஸ்டோ எனவும் ஆத்மார்த்தமாக நம்புகிறான். சட்டென ஒரு தருணத்தில் உணர்கிறான். மெஃபிஸ்டோ தான் அல்ல. அந்த நாஜித்தளபதிதான் என. உறைந்த இருட்டின் வழியே கசியும் வெளிச்சத்தில் இறுகிப்போய் நிற்கிறான். அதிகாரம் மற்றும் அரசியல் ஒரு கலைஞனை எப்படியெல்லாம் மயக்கிவைத்திருக்கிறது என்பதைக் கவிதை நடையில் சொல்லிப்போகிறது படம்.

இவ்வளவு அற்புதமான கலைஞர்களான இஸ்த்வான் ஸாபோவும் பிராண்டாயரும் அதன்பிறகு காணாமல் போய்விட்டனர். பிராண்டாயர் வேறு சில இயக்குனர்களின் படங்களில் தலைகாட்ட, ஸாபோவும் சிலபடங்களை எடுத்தார். ஆனால் அவை குறிப்பிட்டுச் சொல்லும்படியாகவோ, முக்கியமான நிகழ்வுகளாகவோ இல்லாமல் நழுவிவிட்டன. தொடர்ந்து இருவருடைய இணைவுகளும் இல்லாததனால்தானோ என்று நான் யோசித்திருக்கிறேன்.

அதன்பிறகு, இந்தவகை நடிப்பின் உடல்மொழியை ஹாலிவுட் மலினமாகப் போலிசெய்தது. எல்லா அற்புதமான கலைகளையும் தனக்குள் பஸ்மீகரம் செய்து நீண்ட

அபானவாயுவை வெளிப்படுத்தும் ஹாலிவுட்டின் பார்வையில் ஜிம்கேரி இதை ஒரு கொண்டாட்டமான விடலைத்தனம் கொண்ட மூன்றாந்தர அங்கதத் தன்மையுடன் கையிலெடுத்தார். பேட்மேன், ஜோக்கர் வகையறாக்கள் இந்த அபூர்வமான பித்தவெளியைத் துவம்சம் செய்து தள்ளினார்கள்.



பித்தக்கலை என்னும் நடிப்பின் உச்சபட்ச நடிப்பாற்றலை தமிழ்த்திரை மொழி பரிசீலனை செய்ததா, அதுபற்றிய பகுப்பாய்வுக்குள் தன்னைப் பொருத்திக் கொண்டதா, அதன் சிறுசிறு அசைவுகளையாவது, ஓர் ஒற்றைப் பரிமாணத்தையாவது தனக்குள் நிகழ்த்திப்பார்த்ததா என்றெல்லாம் தீவிரமான பார்வைத்தேடலை முன் வைக்க வேண்டியிருக்கிறது.

தமிழின் பொதுபிம்பத்தில் 'நடிப்பு' என்னும் படிமத்திற்கு பல்வேறுவிதமான மலினமான அர்த்தங்களை ஏற்படுத்தி வைத்திருக்கிறது தமிழ்த்திரைமொழி. ஒரு நடிகர் எல்லாவிதமான பாத்திரங்களின் குணாதிசயங்களையும் வெளிப்படுத்துவதுதான் ஆகச்சிறந்த நடிப்பு என்றும் கட்டமைத்து வைத்திருக்கிறது. ஆனால், அது ஒரு 'போலிசெய்தல்' என்னும் நடிப்புத்திறமைதான் வெகுஜன ரசனைப்பார்வைதான்.

ஒவ்வொரு இயக்குனருக்கும் ஒரு வகைமாதிரி (Genre) உண்டு. தமிழில் பாரதிராஜாவால் 'கிழக்குச் சீமையிலே' தான் எடுக்க முடியும். பாலுமகேந்திராவால் 'நீங்கள் கேட்டவை' எடுக்க முடியாது. ராதா மோகனின் வகை 'மொழி' தான். இந்தப்படங்களின் வெற்றி தோல்வி குறித்துப் பேசவில்லை. அவரவர் மனஉணர்வுகள் சார்ந்த விருப்பத்தின் வெளிப்பாடுகளே கலாபூர்வமான நேர்த்தியையும், அழகியலையும் தரும். திரைப்படம் மட்டுமல்லாது, எழுத்து, ஓவியம், இசை போன்ற தளங்களில் செயல்படும் தீவிரமான கலைஞன் ஒவ்வொருவருக்கும் அவர்களது அகஎழுச்சி சார்ந்த வகைமாதிரிகளிலேயே கவனம் செலுத்துவார்கள்.

ஒரு தீவிரமான கலைஞன் கலையையும் வாழ்க்கையையும் பிரித்துப் பார்க்கமுடியாத முனையில் காலூன்றி நிற்கிறான்.

அதுபோல, நடிகர்களின் ஆழ்மனசில் பதுங்கிக் கிடக்கும் மனவெழுச்சியின் வெளிப்பாடுகளே அவர்களது வகைமாதிரியை இனங்காட்டும். கின்ஸ்கி தனது அகஉலகத்தின் நினைவோட்டத்தில் மிதந்து கொண்டிருக்கும் உடையடாத குமிழியின் பிம்பத்தில் தன்னைப் பொருத்திக் கொண்டதால்தான் உலகநடிப்பாளுமையாக முன்நிற்கிறார்.

தமிழில் அதுபோன்ற ஒரு தரிசனத்தை நிகழ்த்தும் அடையாளமாக நாசர் மற்றும் கமல்ஹாசன் போன்றோரை சொல்லலாம். இவர்கள் இருவரும் மேற்குறிப்பிட்ட இரு கலைஞர்களுடன் வைத்து பேசப்படக்கூடியவர்கள்தான்..

ஆனால், நான் இங்கு விமர்சனப் பார்வைக்கு எடுத்திருக்கும் கருத்தியல், ஒரு தீவிரமான பித்த நிலை எப்படி ஒரு பித்தக் கலையாக உருமாறுகிறது என்ற நோக்கில்.

தமிழில் அதுபோன்ற ஒரு தரிசனத்தை நிகழ்த்தும் அடையாளமாக பூரணத்துவம் கொண்ட ஒரு ஆளுமையும் இல்லை. கமல்ஹாசனின் ஆளவந்தான் என்கிற படத்தை இங்கு முன் வைக்கலாம். நாசரின் ஒரு சில கதாபாத்திரங்களை நினைவூட்டலாம்.

ஆனால், வாழ்க்கையையும் கலையையும் ஒன்றாக முன் வைத்து, தொடர்ச்சியாக பித்த நிலை போன்ற தனது வாழ்வியலை அதன் நீட்சியோடு பித்தக் கலையாக மாற்றும் இளைய தலைமுறைக் கலைஞனாக மிக மிக மிகக்குறைந்த பட்சமாக நடிகர் தனுஷைச் சுட்டிக்காட்ட முடியும். இந்த இடத்தில கின்ஸ்கியுடன் சரிசமமான விதத்தில் தனுஷின் ஆளுமையை நிறுவுவதல்ல இந்தக் கட்டுரையின் நோக்கம்.


இன்னும் விளக்கமாகச் சொல்வதானால், தனது வாழ்வில் உறைந்து கிடக்கும் பித்த நிலை என்கிற அற்புதமான உளவியலை பித்தக் கலையாக மாற்றுவதில் முன் நிற்பவர் என்று சொல்லலாம். இந்தப் பார்வையிலேயே அவருக்கு முந்தைய தலைமுறையில் வந்த ரகுவரன், பிரதாப்போத்தன் ஆகியோர் இதுபோன்ற பித்தநிலையை நிகழ்த்திப் பார்க்க பெரிதும் முயற்சி செய்திருக்கிறார்கள் என்பதை அவர்களது நிஜத்திலும் நிழலிலும் உணரலாம். அவர்கள் இருவரிடமும் பெரிதும் செயல்பட்டது பித்தநிலை மட்டுமே. அது கலையாக வாய்க்கவில்லை. அதை கலையாக மாற்றத் தவறிவிட்டனர். அவர்கள் தவறிவிட்ட புள்ளியிலிருந்து ஒரு ஆவேசமான வீச்சுடன் மேலெழும்பிப் பயணம் போகிறவராக தனுஷை இனங்காணமுடியும்.

'காதல் கொண்டேன்' படத்தின் இறுதிக்காட்சியில் சந்தோஷமும், ஆனந்தமும், வெறிக்கூச்சலும், ஆவே சத்தாக்குதலுமாக நிலை மாறுகின்ற கணங்களில் அவரது உடல்மொழி மனப் பிறழ்வின் பிரக்ஞைக்குத் தாவுகிறது. அப்பாவித்தன்மை கொண்ட முகம் நொடிக்கு நொடி வன்மமாகவும், பைத்தியமாகவும், குழந் தைமையாகவும் மாறுகிற காட்சிகளில் தனுஷின் மனச்சீற்றத்தின் நுண்ணுணர்வுகள் அபாரமாக நடித்திருக்கின்றன.

'புதுப்பேட்டை' படத்தில் வக்கிரம், குரூரம், ஆனந்தம், மூர்க்கம் எல்லாவற்றையும் கலந்த பைத்தியத்தின் உச்சநிலையை சிறையில் அடைபட்டிருக்கும் முதல் காட்சியிலேயே காண்பித்து விடுகிறார். திருமணம் ஆகப்போகிற பெண்ணை காமம்கொண்டு தானே திருமணம் செய்து கொள்வதும், துப்பாக்கியை நீட்டி அவளைப் புணர்வதும், காமத்தின் பின் சற்றே நிலைத்திருக்கும் மகிழ்ச்சியான தருணங்களை தனது சகாக்கள் குலைக்கும்போது ஆவேசமாகக் கத்துவதும், அதிகார வெறிக்காக அலைபடுவதுமாக பித்தப்பிரக்ஞை கொண்ட மனிதனின் உன்மத்தம், உடல்மொழியாக அந்தக்கலையின் மையத்தை நோக்கி நெருங்கிப் போவதை உணரமுடியும்.

கின்ஸ்கிக்கும் மிஃபுனேவுக்கும் அதேமாதிரியான மனநிலைகள் கொண்ட இரட்டைகள் இயக்குனர்களாகக் கிடைத்திருப்பதுபோல இவரையொத்த மனநிலை கொண்ட இயக்குனராக செல்வராகவன் கிட்டியிருப்பது இவரது நடிப்பாற்றலுக்கு மாபெரும் கொடை.

அகூர் வெளிப்புறப் படப்பிடிப்பில் காட்டிற்குள் சுற்றித் திரிந்த போது, 'தான் ஒரு பறவையாக உருமாறிப்போனதாகக் கின்ஸ்கி கூறும் சொற்களைச் சுழட்டியடிக்கிறார் தனுஷ் இவ்வாறு: 'பெரு நகரப் பாதைகளில் அலையும்போதெல்லாம் என்னை ஒரு மிருகமாகவே உணர்ந்தேன்...'









சிவாஜியின் மறுபெயர் கம்பீரம்




வெ. சந்திரமோகன்

ஸ்ரீதர் இயக்கிய 'சிவந்த மண்' திரைப்படத்தின் இந்திப் பதிப்பான 'தர்த்தி' 1970-ல் வெளியானது. ராஜேந்திர குமார், வஹீதா ரஹ்மான் நடித்த அந்தப் படத்தில் புரட்சி வீரனாக, கவுரவ வேடத்தில் சிவாஜி தோன்றினார். இந்தப் படம் குறித்து சுவாரசியமான தகவல் ஒன்று உண்டு. படம் வெளியான அன்று பம்பாயில் லேசான நில அதிர்வு ஏற்பட்டதாம். அதைக் குறிப்பிட்டு சிவாஜியிடம் ராஜேந்திர குமார் சொன்னாராம், 'உங்கள் நடிப்பைப் பார்த்து பம்பாயே நடுங்கிவிட்டது!'

சிறிய வேடம் என்றாலும் சிவாஜியின் 'திரை வீச்சு' (ஸ்கிரீன் பிரெசன்ஸ்) அத்தனை கம்பீரமானது. அதனால்தான், இன்றும் கம்பீரமான பாத்திரங்களில் நடிக்கும் நடிகர்கள் சிவாஜியுடன் ஒப்பிடப்பட்டே மதிப்பிடப்படுகிறார்கள்.

சிவாஜியின் நடிப்பு நிச்சயம் விமர்சனத்துக்கு அப்பாற் பட்டதல்ல. மற்றவர்கள் இயல்பாக வசனம் பேசும் காட்சிகளில், அதீத உணர்வுடனும் அழுத்தமான உச்சரிப்புடனும் திரையில் தனிக் கவனம் பெறும் அவர் மீது காத்திரமான விமர்சனங்கள் பல உண்டு. அவற்றையெல்லாம் மீறி, அற்புதமான தன் நடிப்புத் திறனால், பல படங்களின் வெற்றியை உறுதி செய்தார் சிவாஜி. தன்னை விட அதிக வயதுள்ள நாயகர்கள் இளைஞர்கள் வேடத்தில் நடித்துக்கொண்டிருந்த காலகட்டத்தில், 'மோட்டார் சுந்தரம் பிள்ளை' படத்தில் 13 குழந்தைகளுக்குத் தந்தையாக நடிக்கும் துணிச்சலை வேறு எவரிடமும் எதிர்பார்க்க முடியாது. 'திருவருட்செல்வர்' தொடங்கி எத்தனையோ வயோதிகப் பாத்திரங்களில் நடிக்கத் தயங்கியதில்லை.



வேறென்ன செய்ய முடியும்?

உண்மையில், நடுத்தர மற்றும் சற்றே வயதான வேடங்களில் நடித்தபோது சிவாஜியிடம் கம்பீரமும் மிடுக்கும் கூடியிருந்ததைப் பார்க்க முடியும். 'தெய்வமகன்' படத்தின் புகழ்பெற்ற அந்த கோரமுக மகன் பாத்திரத்தைவிடத் தந்தை பாத்திரத்தில் வரும் சிவாஜிதான் சிறப்பாக நடித்திருப்பார். மகனைப் புறக்கணிக்க நேர்ந்ததால் எழும் குற்றவுணர்ச்சியும், சமூகத்தின் முன் அவனைத் தன் மகனாக அறிவிக்கத் தயங்கும் போலி கவுரமும் தன்னை அலைக்கழிப்பதை நுட்பமாக வெளிப்படுத்தியிருப்பார். ஒரு காட்சியில், கேமராவுக்கு முதுகைக் காட்டியபடி சிவாஜி விசும்பிக் கொண்டிருப்பார். அப்போது எதிரில் மேஜர் சுந்தர்ராஜன் அசைவற்று அவரையே பார்த்துக்கொண்டு நிற்பார். அதை ஒரு விமர்சனத்தில் இப்படி எழுதியிருந்தார்களாம்: 'சிவாஜியின் முதுகுகூட நடித்துக்கொண்டிருந்தது. மேஜர் சுந்தர்ராஜன் தேமேயென்று நின்றுகொண்டிருந்தார்' என்று. பின்னாட்களில் அதைக் குறிப்பிட்டு மேஜர் சுந்தர்ராஜன் சொன்னார், 'சிவாஜி நடித்துக்கொண்டிருக்கும்போது அதைப் பார்த்துக்கொண்டு நிற்காமல் வேறென்ன செய்ய முடியும்!'

சிவாஜி வந்து நிற்கும் தோரணையைக் கண்டு, அதற்கு முன் ஆர்ப்பாட்டமாகப் பேசிக்கொண்டிருப்பவர்கள், பேச மறந்து உறைந்து நிற்கும் காட்சிகளைப் பல படங்களில் பார்க்கலாம். 'முதல் மரியாதை' படத்தில் மரணப் படுக்கையில் படுத்திருக்கும் சிவாஜியை, சில சிறுவர்கள் வேடிக்கை பார்க்க வந்து நிற்பார்கள். அந்த நிலையிலும் தன் கோபத்தைக் காட்ட ஒரு உறுமு உறுமுவார். அடுத்த கணத்தில் சிறுவர் குழாம் சிதறி ஓடும். படத்தின் தொடக்கத்தில் இடம்பெறும் இந்தக் காட்சியே, சிவாஜியின் கதாபாத்திரம் எத்தனை மரியாதைக்குரியது என்பதை உணர்த்திவிடும். 'பாசமலர்' படத்தில் தொழிலாளர்களுக்கு ஆதரவாக ஜெமினி கணேசன் எழுப்பும் கேள்விகளைக் கேட்டுக் கொதிப்படைந்து சிவாஜி பேசும் வசனங்கள் மிகுந்த வரவேற்பைப் பெற்றவை. 'யாருடைய துணையுமின்றித் தனியாகவே நான் உழைப்பேன்' என்று கர்ஜித்துவிட்டு, முத்தாய்ப்பாக "கெட் அவுட்" என்று மெல்லிய குரலில் சொல்ல சிவாஜியால்தான் முடியும்.

எப்போதும் மரியாதை

மிகை நடிப்பு என்று அவரை விமர்சிப்பவர்கள்கூட பின்னாட்களில் 'முதல் மரியாதை', 'தேவர் மகன்' ஆகிய படங்களில் அவர் ஏற்று நடித்த பாத்திரங்களை வியக்கின்றனர். குறிப்பாக, தேவர் மகன் படத்தில், முகத்தில் படர்ந்த வீர மீசையும், தோளைச் சுற்றிய சால்வையுமாக அவர் வந்து நிற்கும் கம்பீரம் அலாதியானது. சிவாஜியைப் புகைப்படம் எடுக்கும் கவுதமி, அவர் சற்று திரும்பி முறைத்ததும் தடுமாறும் காட்சியே சொல்லும் சிவாஜியின் கம்பீரத்தை.

திரைக்கு வெளியிலும் தன் கம்பீரத்தைக் கடைப்பிடித்தார் சிவாஜி. ஒருமுறை அவரது மகன் ராம் குமார் குறிப்பிட்டார்: 'வெளிநாடு களுக்குச் செல்லும் போது அப்பா மிக நேர்த்தியாக உடையணிந்துகொள்வார். விமான நிலையங்களில் எங்களையெல்லாம் சோதனை செய்வார்கள். அப்பா நடந்துவரும் தோரணையைப் பார்க்கும் விமான நிலையக் காவலர்கள் அவரை ஒருபோதும் சோதித்துப் பார்க்கத் துணிந்ததில்லை.' அதுதான் சிவாஜியின் ஆளுமை!

சிவாஜி கணேசனின் 13வது வருட நினைவுதினம் ஜூலை 21ம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது.

(நன்றி ஹிந்து)

சாய் பாபாவைப் பார்ப்பதற்கு சிவாஜி ஒருமுறை சென்ற போது, பாபா அவரை நெடுந் தூரப் பாதையொன்றால் நடந்து வரச் சொன்னாராம். ஏன் தெரியுமா? சிவாஜி நடந்துவரும் கம்பீரத்தை பாபா ரசிக்க விரும்பினாராம் - சிவா சிவப்பிரகாசம்

சிவாஜி' கணேசன் 300க்கும் மேற்பட்ட தமிழ் திரைப்படங்களில் நடித்துள்ளார். ஒன்பது தெலுங்குத் திரைப்படங்கள், இரண்டு ஹிந்தித்திரைப்படங்கள் மற்றும் ஒரு மலையாளத் திரைப்படத்திலும் நடித்துள்ளார்.

விருதுகளும் கௌரவங்களும்

- ☑ ஆப்பிரிக்க - ஆசியத் திரைப்பட விழாவில் (கெய்ரோ,1960), சிறந்த நடிகருக்கான விருது.
- ☑ பத்ம ஸ்ரீ விருது (1966)
- ☑ பத்ம பூஷன் விருது (1984)
- ☑ செவாலியே விருது (1995)
- ☑ தாதா சாகேப் பால்கே விருது (1996)
- ☑ 1962ல் அமெரிக்க நாட்டின் சிறப்பு விருந்தினராக சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது, நயாகரா மாநகரின் 'ஒரு நாள் நகரத்தந்தையாகக்' கௌரவிக்கப்பட்டார்.ஜ3ஸ

சென்னை மெரினா கடற்கரை சாலையில் சிவாஜி கணேசன் சிலை 21 ஜூலை 2011 அன்று அமைக்கப்பட்டது.


PYRAMIDGROUP.COM
$48,800
Daisy Mart
Ajax - Williamson/Westney Road
FOR SALE
$158,800
Toronto - Markham/Finch
FOR SALE
$158,800
Toronto - Markham/Finch
FOR SALE
$208,800
Toronto - Steeles & Kipling
FOR SALE
$219,800
Toronto - Warden / Finch
3 Rooms, 3 Washrooms
$219,800
Toronto - Sheppard/Mccowan
3 Rooms, 2 Washrooms
$288,800
Toronto - Markham/Sheppard
2+1 Rooms, 2 Washrooms
$438,800
Toronto - Finch/Tapscott
3+2 Rooms, 2 Washrooms
Basement finished
$499,000
Whitby - Brock/Dryden
4+1 Rooms, 3 Washrooms
Basement finished
$499,999
Whitby - S/E Taunton/Country Lane
4+1 Rooms, 3 Washrooms
$519,000
Whitby- Thickson/Taunton
4+1 Rooms, 4 Washrooms
Basement finished
$519,900
Whitby - Rossland Rd/Thornton Rd
4 Rooms, 3 Washrooms
$519,900
Whitby - Watford/Carnwith
4 Rooms, 3 Washrooms
$519,900
Whitby - Baldwin/Taunton
4 Rooms, 3 Washrooms
$524,900
Whitby - Thickson/Blackfriar
4+1 Rooms, 4 Washrooms
Basement finished
$528,800
Brampton - Sandalwood/Mclaughlin
3 Rooms, 4 Washrooms
Basement finished
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/Future Realty Inc., Brokerage
#205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
Bus : 905 201 9977 / Fax: 905 201 9229
Independently Owned and Operated, REALTOR * Sales Representative
Uthayan Sivarajah
416 301 5555
Sugan Sivarajah
905 201 0066
Raj Sivarajah
416 843 3333
SivaKumar Sivarajah
416 453 7777

இன்றோ காதலர்கள் தங்கள் இச்சைகளையும் உணர்ச்சிகளையும் பச்சை பச்சையாகச் சொல்லி விடுகிறார்கள். பின்னர் மிக விரைவிலேயே காதல் சலிப்புத்தட்டுவதாக அலுத்துக் கொள்கிறார்கள், சிலர் முறித்துக் கொள்கிறார்கள்.

ஆனால் முன்னைய காலத்தில் அப்படியல்ல. எதையும் நேரடியாகச் சொல்ல மாட்டார்கள். மறை பொருள் வைத்து கவித்துவமாகவே காதலைப் பரிமாறுவார்கள். அதனால் அவை காதல் வயப்பட்டவர்களுக்கு ஆழமாக சிந்தித்து உட்பொருள் காண வேண்டியதாய் அமைவதால் அவர்கள் அதை நினைத்து நினைத்து ரசிக்கும் வகையில் இருப்பது மட்டுமன்றி, அந்தக் கருத்துக்களின் ஆழம் அவர்களது காதலையும் ஆழமானதாக நிலையூன்ற வைப்பனவாய் அமையும்.

அத்தகைய சூட்சுமமான காதல் பரிபாஷைகள் சிலவற்றைப் படியுங்கள் இங்கே.

அந்த மான் எந்த மானுக்குச் சொந்தம்?

மூன்று அழகிய இளம்பெண்கள் தண்ணீர் எடுக்கக் குளக்கரைக்கு போனார்கள். அங்கே மூன்று இளைஞர்கள் பல் விளக்கிக்கொண்டிருந்தார்கள். அதில் ஒருத்தன் தன் தோழியின் காதலன் என்று புரிந்து கொண்ட ஒருத்தி அவன் யாரென்று அறியத் தன் தோழியிடம் இப்படி ஒரு விடுகதையாய் கேட்கின்றாள்.

'அந்தமான் இந்த மான்
புள்ளி மான் மூன்று மானில்
பிரிந்த மான் எந்த மான்?'

இதைக் கேட்ட அவள் தன் காதலன் அவர்களில் யாரென இப்படி இன்னோர் விடுகதையால் பதிலளிக்கிறாள்.

'தலையதை தீர்த்தவளே
தண்ணி கொண்டு போறவளே
தழையதைத் தின்னும் மான்
தனிப்பட்ட மான்'

அதாவது அந்த மூன்றுபேரில் ஒருத்தன் நுனியில் உள்ள தழையை ஒடிக்காமல் பல் விளக்கிக் கொண்டிருக்கிறான். அதைப் பார்ப்பதற்கு, தழையதைத் திக்கிறமாதிரி இருக்கிறது. அதைத்தான் அவள் 'தழையதை தின்னுமான்' என்று ஜாடையாகச் சொன்னாள். அதாவது மூணு பேர்ல தனியாக நிக்கிறவன், 'தழையைத் தின்றவன், அவன்மீது தான் ஆசை வச்சிருக்கேன்'னு சொல்லித் தன் தோழிக்குப் புரிய வைத்தாள் புத்திசாலிப் பெண்.

ஏரிக்கோரை தீய வேண்டும்

ஒருவன் ஒருத்தியை விரும்பினான். அவளும் அவனை விரும்பினாள். ஆனால் அதை நேரடியாகச் சொல்லாமல் விடுகதையில் சொன்னாள் இப்படி

'ஏரிக்கோரை தீய வேண்டும்
சம்பளமில்லாத சேவகன் தூங்க வேண்டும்
சட்டிக்கும் மத்துக்கும்
நடுவால வர வேண்டும்'

'நான் சொன்னதைப் புரிஞ்சுகொண்டு நீங்க வந்தா நாங்க பேசலாம்மென்று சொல்லி விட்டு அவள் ஓட, இவன் ரெண்டு மூணுநாளா தலையைப் பிசைந்து விடுகதையை கண்டு பிடிச்சு அவள் விடுகதையாய் சொன்னவாறே அவளைச் சந்தித்து அவள் காதலைப் பெற்றான்,

அந்த விடுகதையின் அர்த்தம் இதுதான்.



அகல்விளக்கில் ஊற்றிவச்சிருக்கும் எண்ணெய்தான் ஏரி. அதன் திரி, குளத்தில் இருக்கும் கோரை மாதிரி தெரிகிறது. 'ஏரிக்கோரை தீய வேண்டும்' என்றால் விளக்கு எண்ணெய் தீர்ந்து திரி தீய்ந்ததற்குப் பின்னர் வாறநேரம் பார்த்து வரவேண்டும் - இருட்டி, விளக்குஅணைந்ததன் பின் வரவேண்டும் - என்று அர்த்தம். 'சம்ளமில்லாத சேவகன்' யார்? நாய் தானே, அந்த நாயும் தூங்கின பிறகு வா என்கிறாள். எங்கேயெனில் சட்டி செய்யும் குயவன் வீட்டுக்கும், மத்து செய்யும் தச்சன் வீட்டிற்கும் நடுவிலே இருக்கிற அவளோட வீட்டுக்கு. அதுதான் 'சட்டிக்கும் மத்துக்கும் நடுவால வர வேண்டும்' என்றாள். புரிகிறதா?

அதாவது விளக்கு அணையும் வரைக்கும் காத்திருந்து நாயெல்லாம் அசந்து தூங்கினதுக்குப் பிறகு, நடு ராத்திரியில, குயவன் வீட்டுக்கும் தச்சன் வீட்டுக்கும் நடுவிலிருக்கும் அவளோட வீட்டுக்கு வர வேண்டும் என்கிறாள்!

டாக்டர் ஆறு.இராமநாதன்

வராதவரை காத்திருப்பேன்

கும்மிருட்டில் தன் காதலி வரவேண்டுமென்று காதலன் வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தான். அவள் வரவேயில்லை. இரவெல்லாம் காத்திருக்க வைத்து ஏமாற்றிவிட்டாளே என்று அவன் வெறுப்புற்ற வேளை, ஓலை கொண்டுவந்தான் ஒரு சிறுவன்.

அதில் இவ்வாறிருந்தது:

'அது விழுந்தினால் நான் விழலை
அது விழலைன்னா நான் விழுந்திப்பேன்
அது செத்ததுன்னால நான் சாகலை
அது சாகலைன்னா நான் செத்திருப்பேன்
அது வந்ததினால் நான் வரலை
அது வரலைன்னா நான் வந்திருப்பேன்'

அதைப் படித்ததும் சற்று யோசித்தவன், பின்னர் காதலி வரும் வழியிலே நடந்து சென்றான். அங்கு ஒரு செத்த பாம்பை முதலில் கண்டான். அதைக் கடந்து சென்றபோது இருட்டிலே பூமிக்கடியில் நட்சத்திரங்கள் மின்னுவதைக் கண்டு திடுக் குற்றான். பின்னர் அது ஒரு பாழுங் கிணறென்று கண்டான். பின்னர் மறுபடி அக் கடிதத்தைப் படித்துவிட்டு தனக்குள் சிரித்துக்கொண்டு பதில் எழுதி சிறுவனிடம் கொடுத்து அனுப்பினான்.

'அது வராதவரை காத்திருப்பேன்.'

வரும்வரை காத்திருப்பேன் என்றெல்லவோ சொல்வர், எப்படி வராதவரை காத்திருப்பது..? புரியவில்லையே என்று தலையைச் சொறிகிறீர்களா? அவர்களின் பரிபாஷை உங்களுக்குப் புரிந்துவிட்டால் அவர்களின் அந்தரங்கமெல்லாம் பகிரங்கமாகிவிடுமே! இதுதான் வியம்

ராத்தரி, கும்மிருட்டுல அந்தப் பெண், தன் காதலனைச் சந்திப்பதற்காகப் போய்க் கொண்டிருந்தாள். வழியிலே ஒரு பாழுங்கிணறு. தவறி அதுக்குள்ள விழப் போனப்போனபோது கிணற்றுக்குள் நட்சத்திரவெளிச்சம் விழுந்திருப்பதைக் கண்டு விழாது தப்பினிட்டாள். அதைத்தான் அவள்

'அது விழுந்ததினால நான் விழலை அது விழலைன்னா நான் விழுந்திருப்பேன்' என்றாள்.

அதையும் தாண்டி அவள் நடந்து போக, வழியில் கிடந்த பாம்பொன்றை மிதித்துவிட்டாள். நல்ல வேளை, அது செத்த பாம்பாக இருந்ததால் அவளைக் கடிக்கவில்லை. அது உயிரோடு இருந்திருந்தால் அவளைக் கடித்திருக்கும். அவளும் செத்திருப்பாள் அதைத்தான் 'அது செத்ததுன்னால நான் சாகலை அது சாகலைன்னா நான் செத்திருப்பேன்'னு சொன்னாள்.

இவ்வளவுக்குப் பிறகும் அவள் பயப்படாமல் காதலைனச் சந்திக்கப் போனாள். அப்போ அவளுக்கு மாதாந்திர தீட்டு வந்துவிட்டது. தீட்டுடன் காதலனைச் சந்திக்க அவ விரும்பவில்லை. அதனாலே பேசாமல் வீட்டுக்குத் திரும்பிச் சென்றாள். அதைத்தான்

'அது வந்ததினால் நான் வரலை அது வரலைன்னா நான் வந்திருப்பேன்'னு அந்தப் பெண் சூசகமாய்ச் சொன்னாள். அதைப் புரிந்துகொண்ட அவனும் 'அது வராதவரை நான் காத்திருப்பேன்' என்றான்.

மரமேறி மரம் பூசி...

ஒரு பெண்மீது காதல் கொண்ட இளைஞன் அந்தப் பெண் கடை வீதியில் தனது தந்தையுடன் போகும் போது ஒரு விடுகதை மூலமாக வினவுகிறான்.

ஒரு மரம் ஏறி
ஒரு மரம் பூசி
ஒரு மரம் பிடித்து
ஒரு மரம் வீசிப்
போகிறவன் பெண்ணே....
உன் வீடு எங்கே?

என்றான்.

ஒரு மரமாகிய பாதக் குறட்டுக் கட்டையின் மீது ஏறி (அக் காலத்தில் அதுதான் செருப்பு) ஒரு மரமாகிய சந்தனத்தைப் பூசி, ஒரு மரமாகிய கைத்தடியைப் பிடித்து, ஒரு மரமாகிய பனை விசிறியால் விசிறிக்கொண்டு செல்பவன் என்று தனக்கு முன்னால் நடந்து செல்லும் அவளது தந்தையைக் குறிக்கிறான் என்று அவள் புரிந்து கொண்டாள். அவளும் சளைக்காமல்

'பாலுக்கும் பானைக்கு நடுவிலே
ஊசிக்கும் நூலுக்கும் அருகிலே'

என்றாள்.

அதாவது, பால்விற்கும் இடையன் வீட்டிற்கும் பானை செய்யும் குயவன் வீட்டிற்கும் நடுவில், ஊசி செய்யும் கொல்லன் வீட்டுக்கும் நூலை நூற்கும் நெசவாளன் வீட்டிற்கும் அருகே தன் வீடு இருக்கிறது என்று அவள் குறிப்பிட்டாள்.

அவள் பதில் சொன்ன விதத்தில் அவளுக்கும் தன் மேல் விருப்பம் இருக்கிறது என்று அவனுக்குப் புரிய மறுநாளே அங்கு போனான், அவள் அவன் காதலியானாள்.



GASA RESTAURANT

காசா உணவகம்

Take Out & Catering

we are specialist in Biriyani

Kotthu Rotti	கொத்து ரொட்டி
Idiyappa Kotthu	இடியப்பக் கொத்து
Masala Dosai	மசாலா தோசை
Buriyani	புரியாணி
Cutlad	கட்லட்
Susiyam	சூசியம்
Singapore Noodles	சிங்கப்பூர் நூடில்ஸ்





அறுசுவை உணவிற்கும்,
விசேட புரியாணிக்கும்
நீங்கள் நாடவேண்டிய இடம்

2950 , Kennedy Road,
Unit # 3
Scarborough
ON. M1V 1T1
416 321 1219

50 New Delhi Dr,
Unit # 51
Markham,
ON. L3S 0B5
905 471 6300

Combo for 20 People

BIRIYANI
(Mutton, Beef, Chicken)
Thandoori Chicken
Egg, Red Onion,
Vattilappam or
Fruit Salad

PUTTU PIRATTAL
(Squid, Scrap, Shrimp)
Thandoori, Chicken, Egg
Red Onion, Vattilappam or
Fruit Salad

SINGAPORE NOODLES
Thandoori Chicken, Veg.Pattis
Salad W/Dressing
Fruit Salad W/ Ice Cream

STRING HOPPER BIRIYANI
Eggplant Pirattal
Samosa, Veg.Pattis,
Salad W/Dressing
Fruit Salad W/ Ice Cream

KOTTHU ROTTI
(Mutton, Beef, Chicken)
Thandoori, Chicken,
Egg Shambol, Cutlet
Salad W/Dressing
Fruit Salad W/ Ice Cream

ROSY Heating & Cooling

உங்களுக்கு அடிக்கடி தொல்லை கொடுக்கிறதா?

Excellent Service
- 24/7 on Duty
- Just a Call Away
- Residential & Commercial
- Emergency Response
- Extra labour warranty

New Installation
- Air Conditioners & Humidifiers
- High Efficiency Furnaces
- Programmable Thermostats
- Water Heaters
- BBQs & Stove Gas lines

Maintenance
- Cleaning and Safety Inspection
- Precision Tune-Up
- Regular Yearly Maintenance

A/C or Heating Problems?

BIG 10% SEASONAL DISCOUNT GURANTEED

Save energy !!

Highly Trained & Licensed Gas Technicians

$ave money

Call: Sarath (Shelton)
(647) 831- ROSY (7679)
Email: rosyhvac@yahoo.ca

சடங்குகளுக்குள் விஞ்ஞானம்

எண்ணிலடங்கா சடங்குகள், மரபுகள் மற்றும் சம்பிரதாயங்கள் வழக்கங்கள் கொண்ட மதம் இந்து மதம். இவற்றில் பலவற்றிற்கு எமக்கு விளக்கமும் தெரியாது. ஏனோ தானோ என்று அவற்றைக் கடைப்பிடிப்பவர் பலர். பாட்டா பாட்டி கடைப்பிடித்து, அப்பா அம்மா கடைப்பிடித்து வந்ததால் நாமும் கடைப்பிடிப்போமே என்று கடைப்பிடிப்போர் இன்னும் பலர். இதெல்லாம் சுத்த மடமை என்று தூக்கிப் போட்டிட்டு தனி வழியில் நடப்பவர்கள் சிலர். எது எப்படி இருந்தாலும் பல் நெடுங்காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் இவற்றுக்குப் பின்னால் நாம் நலமுடன் வாழ்வதற்கான விஞ்ஞான விளக்கங்களும் உண்டு என்று கூறுவோர் தரும் சில விளக்கங்கள் இவை. வாங்க அவ் விளக்கங்களைப் பார்க்கலாம்.

வந்தனம்



வந்தனம் செய்வது உன்னதமான சைகையாகும். மரியாதை அளிக்கும் சைகையாக வந்தனம் செய்யும் போது, இரண்டு உங்களின் விரல் நுனிகள் அனைத்தும் அழுத்தும்போது அவற்றின் இது அந்த நபரை நீண்ட இருக்க வைக்கும்.


இந்தியர்களின் பொதுவாக இதை பயிற்சிக்கிறார்கள். ஆனால், கைகளையும் ஒன்று சேர்க்கும் பொழுது ஒன்று சேரும். அவைகள் ஒன்றாக ப்ரெஷர் புள்ளிகள் தூண்டப்படும். நாட்களுக்கு மறக்காமல்

மெட்டி



திருமணமான இந்து பெண்கள் கால் விரலில் மெட்டி அணிவது வழக்கம். அது வெறும் அலங்காரத்திற்கு மட்டுமல்ல. பொதுவாக கால் விரலில் இரண்டாவது விரலில் தான் மெட்டி அணிவார்கள். இந்த விரலில் இருந்து ஒரு நரம்பு நேராக கர்ப்பப்பை மற்றும் இருதயத்திற்கு நேரடியாக செல்கிறது. இரண்டாம் விரலில் மெட்டி அணிவதால் கர்ப்பப்பை வலுவடைந்து, மாதவிடாய் இரத்த ஓட்டத்தை சீராக்கவும் உதவும்.

பொட்டு



ஒவ்வொரு இந்துப் பெண்ணும் நெற்றியில் குங்குமம் அணிவது வாடிக்கையான ஒன்றே. நெற்றியில் தான் ஆஜ்ஞா சக்கரம் இருப்பதாக கூறப்படுகிறது. அதனால் நெற்றியில் பொட்டு வைக்கும் போது இந்த சக்கரம் தானாக செயல்பட தொடங்கி விடும். இது உடலில் உள்ள ஆற்றல் திறனை இழக்க விடாமல் செய்யும். மேலும் புத்தி ஒருமுனைப்படுதலை மேம்படுத்தும்.

மருதாணி



அலங்கார காரணத்தை தவிர, மருதாணி என்பது சக்தி வாய்ந்த மருத்துவ மூலிகையாகும். திருமணங்கள் மன அழுத்தத்தை உண்டாக்கும், குறிப்பாக மணப்பெண்ணுக்கு. மருதாணி பூசிக் கொண்டால், நரம்புகளை குளிரச் செய்யும். அதனால் தான் மணப்பெண்ணின் கைகளிலும் கால்களிலும் மருதாணி பூசப்படுகிறது.

கோவில் மணிகள்



கோவில் மணிகள் சாதாரண உலோகத்தில் செய்யப்படுவதில்லை. காட்மியம், ஜிங்க், லெட், காப்பர், நிக்கல், க்ரோமியம் மற்றும் மாங்கனீஸ் போன்ற பல உலோகங்களை கொண்டு செய்யப்படுபவை தான் மணிகள். கோவில் மணியை செய்ய ஒவ்வொரு உலோகத்தையும் சரியான அளவில் கலக்க வேண்டும். அதன் பின்னணியில் இருக்கும் விஞ்ஞானம் என்னவென்று தெரியுமா? மணியை ஒலிக்க செய்யும் போது ஒவ்வொரு உலோகமும் ஒவ்வொரு தனித்துவமான ஒலியாய் எழும்பும். இது உங்கள் இடது மற்றும் வலது மூளையை இணைக்கச் செய்யும். அதனால் மணி அடித்த அடுத்த தருணமே, நீண்ட நேரம் ஒலிக்கும் கூர்மையான சத்தம் எழும். இது 7 நொடிகள் வரை நீடிக்கும் மணியில் இருந்து எழும் எதிரொலி உங்கள் உடலில் உள்ள 7 குணமாதல் மையங்களையும் (சக்கரங்கள்) தொடும். அதனால் மணி ஒலித்த உடனேயே, உங்கள் மூளை சில வினாடிகளுக்கு வெறுமையாகி விடும். அப்போது மெய்மறதி நிலையை அடைவீர்கள். இந்த மெய்மறதி நிலையில், உங்கள் மூளை சொல்வதை வரவேற்கும் பண்பை பெறும்.

அரசமரம்



பொதுவாக அரசமரத்தை பயனற்ற மரமாக பார்க்கின்றனர். அதனால் எந்த ஒரு கனியோ அல்லது திடமான மரமோ கிடைப்பதில்லை. இருந்தும் கூட அதனை பல இந்துக்கள் வழிபடுகின்றனர். புத்தர் தியானமிருந்ததும் அரச மரத்தின் கீழ்தான். (இலங்கையில் பௌத்தர்கள் வழிபடுவதால் அம் மரம் இந்துக்களின் வழிபாட்டுக்கு உரியதல்ல என்று கருதுவது தவறு.) இரவு நேரத்தில் ஆக்சிஜென் உண்டாக்கும் சில மரங்களில் அரசமரமும் ஒன்று. என்ன சுவாரசியமாக உள்ளதா? அதனால், இந்த மரத்தை பாதுகாப்பாக வைத்திடவே அதை புனித மரமாகக் கருதினர்.

துளசி



பெரும்பான்மை இந்துக்களின் வீடுகளில் துளசி செடியுடன் கூடிய துளசி மாடம் இருக்கும். அதனை தினசரி வழிபடுவார்கள். அதற்கு காரணம் துளசியில் உள்ள உயர்ந்த மருத்துவ குணங்கள். துளசி செடியின் மகத்துவத்தை புரிந்து கொண்ட புழங்கால முனிவர்கள், அது அழிந்து விடாமல் காப்பதற்காக, அதனை வழிபடும் சடங்கை உண்டாக்கினார்கள். அப்படி செய்வதால் அச்செடியை மதித்து அதனை பத்திரமாக பாதுகாத்திடுவர்.

தரையிலமர்ந்து உண்ணல்



நாம் தரையில் அமரும் போது சுகாசன தோரணையில் அமர்கிறோம். இந்த தோரணை செரிமானத்தை மேம்படுத்தும். அதனால் நாம் சுகாசன தோரணையில் அமரும் போது நம் உணவு சுலபமாக செரிமானமடையும்.

உணவுக்குப் பிந்திய இனிப்பு:




இந்தியாவில் காரசாரமான உணவுகளோடு ஆரம்பிக்கும் உணவு, இனிப்பு பண்டங்களுடன் முடிவடையும். அதற்கு காரணம் சீரான அமைப்பு மற்றும் அமிலங்களை செயல்படுத்த செய்வது காரசாரமான உணவுகள். இந்த செயற்பாட்டை குறைத்திடும் இனிப்புகள். அதனால் உணவருந்திய பிறகு இனிப்புகள் உண்ண பரிந்துரைக்கப்படுகிறது.

சூரியவணக்கம்



அதிகாலையில் சூரிய பகவானை வணங்கும் வழக்கம் இந்துக்களிடம் உள்ளது. அதற்கு அதிகாலை சூரிய ஒளி கண்களுக்கு மிகவும் நல்லது. அத்தோடு காலையில் முன்னதாக எழுந்திருப்பது உடலுக்கு ஆரோக்கியமானது.



உடற்பருமனைக் குறைக்க

சில வழிகள்

இஞ்சியைத் தோல் சீவி அரைத்து, ஒரு கரண்டி சாறு எடுத்து, அதனுடன் சம அளவு தேன் சேர்த்து ஒரு டம்ளர் இளம் சூடான நீரில் கலந்து, காலையில் வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். இஞ்சியில் உள்ள ஜின்ஜெரால் (Gingerol), ஜின்ஜிபெரின் (Zingiberine) மற்றும் தேன் ஆகியவை செரிமானத்தைத் தூண்டுவதுடன் தேவையற்ற கொழுப்பையும் எரிக்கும்.

கீழாநெல்லி, வெந்தயம், மஞ்சள், கறிவேப்பிலை, நெல்லிக்காய் சம அளவு எடுத்துப் பொடித்து, காலை, மாலை அரைக் கரண்டி நீரில் கலந்து உண்ண, உடலின் கொழுப்பு குறைந்து, எடையும் சீராகும்.

சிறுகுறிஞ்சான், நெருஞ்சில், மூக்கிரட்டை, சீரகம், திப்பிலி, மிளகு சம அளவு எடுத்துப் பொடித்து, காலை, மாலை அரைக் கரண்டி தேனில் உண்ண உடல் எடை குறையும்.

பெருஞ்சீரகத்தைப் பொடித்து, காலை, மாலை அரைக் கரண்டி எடுத்து தண்ணீர் சேர்த்து அருந்த உடல் எடை குறையும்.

எலுமிச்சைச் சாறு ஒரு கரண்டி சம அளவு தேன் சேர்த்து ஒரு டம்ளர் நீரில் கலந்து பருக வேண்டும். இதில் உள்ள வைட்டமின் சி ரத்தத்தைச் சுத்திகரிப்பதுடன் கொழுப்பைக் குறைத்து உடலின் எடையையும் குறைக்கிறது.

நடைப்பயிற்சி, நீச்சல் பயிற்சி, சைக்கிள் ஓட்டுதல், யோகா, தியானம், முதலியவற்றை மேற்கொண்டால் உடல் பருமன் நிச்சயம் குறையும்.

உண்ணவேண்டிய உணவுப் பொருட்கள்:
தக்காளி, கோஸ், பப்பாளி, வெள்ளரி, தர்பூசணி, புரூகோலி, ஆப்பிள், ஓட்ஸ், வால்நட், பாதாம், பருப்பு வகைகள், மோர்.

நீக்கவேண்டிய உணவுப் பொருட்கள்:
இனிப்புகள், வெள்ளை ரொட்டி, பட்டை தீட்டப்பட்ட தானியங்கள், துரித வகை உணவுகள், எண்ணெய் மற்றும் கொழுப்பு மிகுந்த உணவு வகைகள்.

தினமும் இரண்டு லிட்டர் தண்ணீர் அருந்த வேண்டும்.

பேப்பர் கப் ஆபத்து

ஒருவர், தினமும் இரவில், வயிற்று வலியால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். பல பரிசோதனைகள் செய்து பார்த்தபின், அவர் வயிற்று வலிக்கான காரணத்தை சொன்னார் டாக்டர். அதாவது, அவர் வயிற்றில் **மெழுகு** இருந்ததாம். அந்த மெழுகு, அவர் வயிற்றில் எப்படி வந்தது என்பதை, பல கேள்விகள் கேட்டு, டாக்டர் ஒரு முடிவுக்கு வந்துள்ளார். அதாவது, அந்த நபர் தன் ஆபீஸ் கன்டீனில் பயன்படுத்தும், பேப்பர் 'கப்'களில், டீ, காபி குடிப்பது வழக்கம்! அந்த, 'கப்'கள் மூலமாகத்தான், நண்பர் வயிற்றில் மெழுகு அதிகமாகி, வயிற்று வலிக்கு காரணமாக இருந்தது என்று கூறியுள்ளார் டாக்டர். அவர் மேலும், தற்காலத்தில் பெரும்பான்மையான அலுவலகக் கேன்டீன்களில், 'பேப்பர் கப்'களை பயன்படுத்தி வருகின்றனர். மலிவான, தரம் குறைந்த காகிதங்களால் செய்யப்படும் 'கப்'கள், தண்ணீராலோ, திரவத்தாலோ கரைந்து விடக் கூடாது என்பதற்காக, அதன் உட்புறங்களில், 'மெழுகு' பூசப்படுகிறது. இப்படி மெழுகு பூசப்பட்ட 'கப்'களில், மிகச் சூடான, டீயோ, காபியோ நிரப்பப்படும் போது, அந்த வெப்பம் காரணமாக, 'கப்'பிலிருக்கும் மெழுகு உருகி, டீ அல்லது காபியுடன் கலந்து, நம் வயிற்றுக்குள் சென்று விடுகிறது. அது, நாளடைவில், வயிற்றில் பல உபாதைகளை தோற்றுவிக்கிறது. டீ, காபி அருந்துவதற்கு, கண்ணாடி அல்லது செராமிக் 'கப்'களே சிறந்தவையாகக் கருதப்படுகின்றன. ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் டம்ளர் களையும் உபயோகிக்கலாம். ஆனால், பிளாஸ்டிக் அல்லது காகிதத்தாலான 'கப்'களை உபயோகிக்கக்கூடாது. இல்லையேல், ஆரோக்கியத்தை பலிகொடுக்க வேண்டி வரும்' என்று கூறினார் டாக்டர்.



சிறுநீரகக் கல்

ஆபரேஷன் இன்றியே அகற்றினேன்!
(தனது அனுபவத்தைத் பகிர்கிறார் ஒரு நலன் விரும்பி)

இன்றய உணவுப்பழக்கத்தினால், சிறுநீரகக் கல் பிரச்சினை என்பது பெரும்பாலானவர்களுக்கு சாதாரணமாகிவிட்டது. இதனால் உண்டாகும் வலியானது, எனது அனுபவத்தில் வேறு எந்த வலியோடும் ஒப்பிடமுடியாது. அந்தளவுக்கு வலி பின்னி பெடலெடுத்து விடும். இந்த உபயோகமான தகவலை முகநூல் நண்பர் ஒருவர் எனக்கு அனுப்பி பதிவு செய்யுமாறு கேட்டு கொண்டார்கள். இப்போது நம்மில் நிறைய நண்பர்களுக்கு இந்த பிரச்சனை இருக்கத்தான் செய்கிறது. அதனால் இது போன்ற நல்ல தகவல்கள் நாம் அனைவருக்கும் உபயோகமாக இருக்கும் என்று இன்று ஒரு தகவல் பக்கத்தில் பதிவு செய்கிறேன். உங்களுடைய நண்பர்களுக்கும் கட்டாயம் பகிருங்கள்.

எனக்கு நான்கு வருடங்களுக்கு முன், இடுப்பில் வலி ஏற்பட்ட போது முதலில் வாயு பிரச்சினையாக இருக்கும் என்று நினைத்தேன், ஆனால் வலியின் அளவு கூடிக்கொண்டே போய் தாங்க முடியாத அளவுக்கு அதிகரித்தது. மருத்துவரிடம் சென்றால் ஸ்கேன் எடுக்க பரிந்துரைத்தார்.



ஸ்கேன் ரிப்போர்ட்டில் எனக்கு, 5mm மற்றும் 9mm அளவுள்ள இரண்டு கற்கள் சிறுநீரகத்தில் இருப்பதாகவும், இதை அறுவை சிகிச்சை மூலம்தான் அகற்றமுடியும் என்றும் மருத்துவர் சொன்னார். மருத்துவத்துக்குச் செலவாகுமென்றும் சொன்னார். சரி இந்த அறுவை சிகிச்சை செய்துவிட்டால், இனிமேல் இந்த பிரச்சினை வராதா என்று கேட்டால், அதற்கு உத்தரவாதம் இல்லை, உங்களின் உணவு முறை மற்றும் நீங்கள் தினமும் அருந்தும் தண்ணீரின் அளவைப் பொறுத்தது என்றார். சரி நாளை வருகிறேன் என்று வீடு வந்தேன். இத்தனைக்கும், என் நண்பன் ஒருவனுக்கு இதே பிரச்சினை வந்ததிலிருந்து வாழைத்தண்டு சாறும், வாழைத்தண்டு பொரியலும் அடிக்கடி சாப்பிட்டு வந்தேன், இருந்தாலும் எனக்கு தண்ணீர் அருந்தும் பழக்கம் குறைவானதால் வந்துவிட்டது போலும்.

வீடு வந்து கூகுளம்மாவிடம் பிரச்சினையை சொல்லி தீர்வு கேட்டேன், அதில் பலபேர் பல ஆலோசனைகளை இலவசமாகவும், சில பேர் பணம் அனுப்ப சொல்லியும் கேட்டிருந்தார்கள். அதில் ஒரு இணையதளத்தில், ஒருவர், ஒரு பச்சைக் காய்கறி, வழக்கமாக நாம் உபயோகப்படுத்தும் ஒரு திரவம், சேர்த்துக் கொண்டால் சிறுநீரகக்கல் உடைந்து, நாம் சிறுநீர் கழிக்கும்போது வெளிவந்துவிடும் என்றும், அதற்கு கட்டணமாக $30 ஆன்லைனில் கட்டச் சொல்லியிருந்தார். வலியின் கொடுமையில், $30 கொடுக்கலாம் என்றால், ஆன்லைன் பணப்பரிமாற்றத்தில் எனக்கு உடன்பாடு இல்லை. எனவே மறுபடியும் கூகுளம்மாவிடம் சரணடர், ஒரு மணி நேரத்தேடலுக்குப் பிறகு, மேலே சொன்ன $30 கட்டி சிகிச்சை பெற்ற ஒரு புண்ணியவான் ஒருவர் அந்த காய்கறியின் பெயர், திரவத்தின் பெயரை வெளியிட்டிருந்தார் (ரொம்ப நல்லவர் போலும்).

அந்த காய்கறியின் பெயர் ஃபிரெஞ்சு பீன்ஸ் (French beans), திரவத்தின் பெயர் தண்ணீர் (அட வீட்ல நாம தினமும் குடிக்கிறதுதான்). இனி நான் மேற்கொண்ட சிகிச்சை (அந்த இணையதளத்தில் சொன்னது போல்):

(1/4) கால் கிலோ ஃபிரெஞ்சு பீன்ஸ் (பொதுவாகக் கடைகளில் கிடைக்கிறது) வாங்கி, விதை நீக்கி, தண்ணீரில் கொதிக்க வைத்து (குறைந்தது 2 மணிநேரம்), மிக்ஸியில் நன்றாக அரைத்து குடித்து விட்டு, 10 நிமிடம் கழித்து, 2 லிட்டர் நீரை (ஒரே முறையில் குடிக்க முடியவில்லையென்றால் சிறிது நேரம் விட்டு விட்டு) குடிக்க வேண்டும். இன்னும் அதிகமாக குடிக்க முடிந்தால் நலம்.

மாலை 5 மணிக்கு நான் இதைக் குடித்திருந்தேன். விடியற்காலை 3 மணிக்கு (அதுவரை அடிக்கடி நீர் அருந்திகொண்டிருந்தேன், வலியில் எங்கே தூங்குவது...) 5 சிறு கற்களாக சிறுநீர் போகும்போது வெளிவந்தது.

கல்லானது சிறுநீரகத்திலிருந்து சிறு பைப் வழியாக சிறுநீர்பைக்கு சென்றடைகிறவரையிலும் வலி கொடுமை யானதாக இருக்கும், அதன் பின் சிறுநீர் பையிலிருந்து வெளி வருகிறவரை, சிறுநீர் பாதையை அடைத்துக் கொண்டு, சிறுநீர் வரும்.., ஆனால் வராது... என்ற கதையாகிவிடும், பயந்துவிடாமல், நாம் பருகும் நீரின் அளவை அதிகரிக்க வேண்டும், சிறுநீர்பை நிறைந்து சிறுநீர் கழிப்பது கட்டுபடுத்தாத நிலைவரும், அப்போது, நாம் அதிக அழுத்தத்துடன் சிறுநீர்கழித்தால், வெளியே வந்துவிடும். கற்கள் கோணலாக இருப்பதால், உள்பாதையில் கிழித்து ரத்தமும் வரலாம், ஒரு நாளில் சரியாகிவிடும்.

மறுநாள் எடுத்த ஸ்கேனில் கற்கள் இல்லையென்று ரிப்போர்ட் வந்தது. அதிலிருந்து வாரம் ஒருமுறை இதை சாப்பிடுகிறேன். எனக்கு கல் பிரச்சினை போயே போயிட்டு.. இட்ஸ் கோன்...

நீங்களும் தாராளமாக முயற்சி செய்து பாருங்கள், கணிசமான அளவு மருத்துவச் செலவைச் சேமிக்கலாம், மேலும் இனிமேல் கல் உருவாகாமல் பார்த்துக்கொள்ளலாம். தினமும் 3 லிட்டர் வரையிலும் தண்ணீர் குடித்து விடுங்கள்.

சிறுநீரகக்கல் வலி வந்த பிறகு அது தொடர்பாக, நான் இணையதளத்தில் அலைந்தபோது படித்ததில் சில:

துளசி இலை (Basil): இந்த இலையின் சாறுடன், தேன் கலந்து ஆறு நாட்கள் உண்டால், கல் உடைந்து விடுமாம். (கல்வலி வந்த பிறகு ஆறு நட்கள் என்பது மிக அதிகமான காலம், அதனால், இதை நாம் கல் உருவாவதை தடுக்கும் முன்னெச்சரிக்கைக்காக அருந்தலாம்)

ஆப்பிள் (Apple): அடிக்கடி சாப்பிட்டாலும் கல் உருவாகாதாம்.

திராட்சை (Grapes): இதில் உள்ள, நீரும், பொடாசியம் உப்பும், கல் உருவாகுவதை தடுக்குமாம். மேலும் இந்த பழத்தில் உள்ள ஆல்புமின் மற்றும் சோடியம் குளோரைடு கல் பிரச்சினக்கு நல்ல தீர்வாக இருக்குமாம்.

மாதுளம் பழம் (Pomegranate): இந்தப் பழத்தின் விதையைப் பிழிந்து, ஒரு டேபில் ஸ்பூன் அளவு எடுத்து, அதனுடன் 2 ஸ்பூன் கொள்ளு சாருடன் (குதிரைக்கு பிடித்தது..!!) சேர்த்து சாப்பிட்டால், கல் பிரச்சினை தீருமாம்.

அத்திப்பழம் (Figs): இந்தப் பழத்தை, நீரில் கொதிக்க வைத்து வடிகட்டி, ஒரு மாதம் தொடர்ந்து, காலையில் காலி வயிற்றில், பருகினால் பலன் தருமாம்.

தண்ணீர்பழம் (Water melon): நீரின் அளவு அதிகம் உள்ள பழம், பொட்டாசியம் உப்பின் அளவும் அதிகமாம், அதிகம் உண்பதால் கல் பிரச்சினை தீருமாம்.

இளநீர்: இளநீர் அதிக அளவு சேர்த்துக் கொள்வதாலும் கல் உருவாவதை தடுக்கலாமாம்.

வாழைத்தண்டு ஜூஸ்: வாழைத்தண்டு ஜூசுக்கு உருவாகும் கல்லை உடைக்கும் (diffuse) திறன் உள்ளதாம்.

மேற்சொன்னதை எவ்வளவு உட்கொண்டாலும், குடிக்கும் தண்ணீரின் அளவு (தினமும் 2 லிட்டரிலிருந்து 3 லிட்டர் வரை) குறைந்தால் கல் உருவாவது நிச்சயம் என்கிறார்கள்.

குறிப்பு: கல் வெளியேறிய வலியைப் பொறுக்க முடியாதவர்கள் மருத்துவரிடம் சென்றுவிடுவதே நல்லது.

❀ ❀ ❀



கடற் கன்னிகளும் கற்பிதங்களும்

தர்ஷி



இங்கே பாருங்கள். இந்த அழகிய கடற்கன்னி சடலமாய் வந்து கரையொதுங்கியிருக்கும் காட்சியை! நீரில் உப்பியும் சிதையாத ரோசாப்பூகன்னங்கள்! உதடுகள் என்னவோ பேச விளைகின்றனவே. ஐ லவ் யூ சொன்ன படியே உயிர் துறந்த கன்னிகைபோல் ஒரு மயக்கம்! ஆனால் அவளின் கீழ்ப் பாகம்தான் அச்சுறுத்தும் பாம்பின் வால் போல நீண்டு... அப்பப்பா! இவள் விஷக் கன்னிகையாய் இருப்பாளோ..? விலக நிற்பது நல்லது.

இவள் அண்மையில் இந்திய குஜராத் மாநிலத்து போர்பாண்டர் கடற்கரையில் வந்து ஒதுங்கியதாகச் சொல்லி சமூக வலைத் தளங்களில் பரபரப்பான செய்தியாக உலா வந்தபடி இருக்கிறாள். இது உண்மையான கடற்கன்னிதானா என்ற கேள்வி எமக்கு எழாதபடி எம் மனங்களில் ஏற்கெனவே கடற்கன்னிக் கதைகள் நிறைய வியாபித்திருக்கின்றன - அவை கடற்கன்னிகளைக் காதலிக்க வைத்திருக்கின்றன - எப்போது ஒரு கடற்கன்னிகை தனித்த ஒரு கடற் குன்றில் அமர்ந்திருந்து மயக்கும் பார்வையுடன் கை நீட்டி அழைப்பாள் என்று ஏங்கவைத்திருக்கின்றன. அதனால் கடற் கன்னி கரையொதுங்கினாள் என்று படத்துடன் செய்தி கண்டதும் மனம் அதை உண்மையாகவே ஏற்று, சமூக வலைத்தள நண்பர்களுக்குப் பகிர்ந்துவிட்டுத்தான் மறுவேலை என்று ஆக்கிவிடுகின்றன. இதுகுறித்த இப்பரபரப்பான செய்தியின் உண்மைபற்றி நாம் ஆராயவேண்டியது ஒருபுறமிருக்க, இக் கடற்கன்னி என்ற அழகி பற்றி ஆசிய, ஐரோப்பிய, ஆபிரிக்க நாடுகள் ஈறாக உலகெங்கும் நம்பிக்கைகள் இருந்தன, புராதன இலக்கியங்களும் பேசுகின்றன என்பதுதான் சுவாரசியம்.

கடற்கன்னி பற்றிய முதலாவது கதை கி.மு 1000 வருடங்களுக்கு முற்பட்ட பண்டைய அஸ்சிரியா நாட்டுக் கதையான அட்டாகடீஸ் எனும் தேவதை பற்றியது. அழகே உருவான தேவதை அட்டாகடீஸ். அவள் பூலோகத்தில் வாழ்ந்த ஓர் இடையன் மீது மையல் கொண்டாள். அவன்மீது அவள் கொண்டிருந்த அழவற்ற காதலே அவனது உயிருக்கு உலையானது. அவள் அவனைக் காதல் புரிந்த வேளை தற்செயலாக அவனையே கொன்றுவிட்டாள். தாங்கவொணாத் துயரில் மூழ்கிய அவள் தன் செயல் குறித்துப் பெரிதும் வெட்கி கடலுக்குள் குதித்து மீனாக மாற முனைந்தாள். ஆனால் அவளது அழகிய வதனத்தை இழக்க கடலரசன் விரும்பவில்லை. அதனால் அவளது முகத்தை மீனாக்க மறுத்துவிட்டான். எனவேதான் இடுப்புக்குக் கீழே மீனாகவும் இடுப்புக்கு மேலே பெண்ணாகவும்தோன்றும் கடல் கன்னியாய் மாறிவிட்டாள். இப்படித் தோன்றிய அன்றைய கடல் கன்னிக் கதை பின்னர் கடலோடிகளால் ரோமாபுரிக்கும் கிரேக்கத்திற்கும் எடுத்துச் செல்லப்பட்டது. பின்பு அது பல நாடுகளுக்கும் பரவி உலகளாவிய கதையானது. கடலிடே ல பெருத்த ஆபத்தின் மத்தியில்



தனித்துப் பயணிக்கும் மீனவர்கள், புயல், சுழி, சுறா, திமிங்கிலம் போன்ற கடல் அரக்கர்களின் தாக்குதல் கள் பற்றிய அச்ச உணர்வுடன் தொழில் புரிகையில் தம்மைக் காக்கும் தேவதையாக இக் கடற்கன்னியை மானசீகமாக ஆராதிக்கலானார்கள்.

கிரேக்க புராணங்களில் அட்டாகடீஸ் என்ற இக் கடற்கன்னிக்கு டேர்கெட்டோ என்ற பெயரும் உண்டு. அட்டாகடீஸ் தேவ கடற்கன்னியே பூமியினதும் கடலினதும் விளைச்சலுக்கான பெண் தெய்வமென இப் புராணங்களில் வழிபடப் பட்டாள். மீனும் புறாவும் அவளது இஷ்டட விலங்குகள். புறா அன்புக்கு அடையாளமாகவும், மீன் இத் தேவதைதான் கடலின் விளைச்சலுக்கானவள் என்பதைக் குறிக்கும் அடையாளமாகவும் கருதப்பட்டது. அதனால் அம் மக்கள் அட்டாகடீஸ் கடற்கன்னித் தேவதையின் ஆலயத்தை அண்டிய ஏரிகளிலுள்ள மீன்களை உண்ணலாகாதென தவிர்த்திருந்ததுடன், அம் மீன்களை பக்குவமாகப் பாதுகாத்து அலங்கரிக்கவும் செய்தனர். இதேவேளை கடற்கன்னிகள் பற்றிய பல்வேறு கதைகளும் நம்பிக்கைகளும் உலகம் பூராவும் அன்றைய காலந் தொட்டே நிலவி வந்தன.

கிரேக்கப் பேரரசன் அலேக்செண்டேரின் தங்கை இறந்தவுடன் கடற்கன்னியாக உருப்பெற்றதாக அந்நாட்டு மக்கள் நம்புகிறார்கள். அவள் இன்னமும் கடலில் வாழ்வதாகவும் நம்புகிறார்கள். கடலில் யாரேனும் மாலுமிகளை அவள் கண்டால் தன் அண்ணன் அலேக்செண்டேர் நலமாய் இருக்கிறானா என்று வினவுவாளென்றும், யாரும் தெரியாத்தனமாக அவர் இப்போது உயிருடன் இல்லை என்று விட்டால் அந்தக் கப்பலையும் பிரயாணிகளையும் அப்படியே மூழ்கடித்து விடுவாளென்றும் இன்னு கர்ண பரம்பரையாக நம்பி வருகிறார்கள். எகிப்திலும் கடற்கன்னிபற்றிய இப்படியான ஆழமான நம்பிக்கை உண்டு. அவர்களிடமும் மீன் உடல் கொண்ட இக் கடற்கன்னிக்கு மரியாதை செலுத்துமுகமாக மீன் உணவுகளை உண்ணக்கூடாது என்ற பாரம்பரிய நம்பிக்கை நிலவுகிறது. கடற்கன்னிகள் நீரில் வாழ்பவர்களாக இருந்தாலும் இவர்கள் தரைக்கு வந்து கடற்கரையில் நடமாடுவதுண்டு என நம்பப்படுகிறது. கடற்கன்னிகள் மட்டு மன்றி ஆண்பாலான கடற்கண்ணன்களும் உண்டு எனவும் கூறுகிறார்கள்.



ஆனாலும் கடற்கன்னிகள் பற்றியே அதிகம் பேசப்படுவதற்கு காரணம் பொதுவாக கடற் தொழிலில் ஈடுபடுபவர்கள் ஆண்களாக இருப்பதால் அவர்களுக்கு இயற்கையில் ஏற்படும் எதிர்ப்பால் நாட்டமாகவே இருக்க வேண்டும். இரவுப் பொழுதைப் பெரும் பாலும் கடலுள் கழிக்கும் இம் மாலுமிகளுக்கு கடற்கன்னி ஒரு கற்பனைச் சுகத்தையாவது செய்கிறாள்.அதனால் கடற்கன்னிகளுக்கு ஆண்களிடம்மோகம் அதிகமெனவும் அவர்கள் தம் காம லீலைகளால் ஆண்களை மயக்கி கடலுக்குள் நிரந்தரமாகவே அழைத்துச் சென்று விடுவார்களெனவும் மீனவப்பெண்களுக்கு







2010இல் அபுதாபி-முத்துத் தீவில் கண்டெடுக்கப்பட்ட கடற்கன்னியின் எலும்புக்கூடு

ஒரு மனக்கிலேசமும் உண்டாம். கடல் விபத்துக்களில் காணமற் போய் விடும் மீனவர் களை இவ்வாறு கடற் கன்னி கவர்ந்து சென்றுவிட்டாள் என்று கற்பிதம் செய்து கொள்வார்கள். இவ்வாறு கற்பிதம் செய்து கொள்வது தம் கணவன்மார் இறக்கவில்லை என்ற போலி ஆறுதலையாவது அவர்களுக்கு வழங்குவதால் இக் கற்பனையை அவர்கள் ஒருவிதத்தில் விரும்பவும் செய்கிறார்கள்.



கடற் கன்னிகளின் ராஜ்ஜியமொன்று கடலுக்கடியில் நடப்பதாகக்கூட நம்புகிறார்கள். அங்கே உயர்வகைத் திரவியங்கள், தங்கம், வெள்ளி, வைரம், மாணிக்கம், முத்துக்கள் போன்ற பெறுமதிவாய்ந்த பொருட்கள் கேட்போரற்றவாறு விரவிக் கிடக்கின்றன வென்றும், அங்கே பணம் என்ற பேச்சுக்கே இடமில்லை, உடையேதும் தேவையில்லை, யாவும் யாவருக்கும் என்ற கம்யூனிச சித்தாந்தம் போல வாழ்க்கை நடக்கிறதென்றும் அரேபியக் கதைகள் கூறுகின்றன.

கடலோடிகள் தங்களுக்கு இக் கடற் கன்னிகள் வழிகாட்டியாக உதவுவது போல் வந்து மாயமான் போல ஏமாற்றிவிடுவதுண்டு என்று பல கதைகள் கூறுகிறார்கள். நடுக்கடலில் இவர்களு க்கு இக் கடற்கன்னிகளின் இனிமையான கானங்களும் அழைப்புக் குரல்களும் கேட்குமாம். இக் குரலில் மயங்கி அதைப் பின்தொடர்ந்துசெல்பவர்கள் என்ன ஆனார்களென்றே தெரியாமல் போய்விடுவார்களாம். இதற்கு நிறைய சாட்சியங்களும் இருப்பதாகக் கூறுகிறார்கள்.

அத்தோடு இக் கடற்கன்னிகள் பேராசை பிடித்த மனிதர்கள் கேட்கும் வேண்டுகோள்களை நிறைவேற்றிக் கொடுப்பதாகவும் அவ்வாறு நிறைவேற்றும் பட்சத்தில் அதற்கு இணையாக ஓர் உயிரைப் பலியாக கேட்பதாகவும்கூட பலர் நம்புகிறார்கள். இவ்வாறு நம்பி உயிர்ப்பலி கொடுப்பவர்களும் உண்டு. இதெல்லாம் இருக்க, தற்போதும் பலர் தாம்கடற் கன்



அமெரிக்க நடிகைகள் பெல்லா தேர்னும் டானி கெய்லி

னியைக் கண்டதாகவும் கடற்கன்னி இருப்பது உண்மையெனவும் சாதிக்கிறார்கள். தற்போது சமூக வலைத் தளங்கள் பிரபல்யமாகியுள்ள நிலையில் இத் தளங்களில்வேறு கடற்கன்னியைக் கண்டதாக பலப்படங்களும் வீடியோக்களும் பதிவாக்கம் செய்யப்பட்டு வருகின்றன. இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நிகழ்ந்த கடற் சண்டைகளில் குண்டடிபட்டு இறந்த கடற்கன்னியொருத்தி முல்லைத் தீவுக் கடற்கரையில் கரையொதுங்கியதை செல் போனில் படமெடுத்ததாக்கூறும் படங்கள்கூட வெளிவந்தன. 2010ல் அபுதாபியிலுள்ள முத்துத் தீவில் கண்டெடுக்கப்பட்ட இறந்துஎலும்புக் கூடான கடற்கன்னியின் உருவமென அகோரமான பற்களுடன் கூடிய ஒரு உருவமொன்று வலைத் தளங்களில் வலம் வந்தது. 2011 ல் சீனக்கடற்கரையில் ஒரு கடற்கன்னி ஊர்ந்து செல்வதுபோல் படமொன்று பிரசுரமாகி, பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இஸ்ரேலுக்கு உல்லாசப்பயணம் சென்ற ஒருவர் எடுத்த வீடியோ, தட்டையான திமிங்கில வால் போன்ற வாலுடன் கடற் பாறை ஒன்றின்மீதிருந்த கடற் கண்ணி, சத்தம் கேட்டு அவரைத் திரும்பிப் பார்த்துவிட்டு பாறையில் கைகளை ஊன்றி ஏறி கடலுக்குள் பாய்ந்து மறைவதான காட்சியொன்றைக் காட்டுகிறது. (www.youtube.com/watch?v=Jvh 9CdH1Nao)

இப்படியான கதைகளின் உச்சமாக, கடற்கன்னியின் உடல் கண்டெடுக்கப்பட்டதாக டிஸ்கவரி தொலைகாட்சியில்கூட ஒரு நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டது. இதைத் தொடர்ந்து பெரும் சர்ச்சை மூண்டு, ஆராட்சியாளர்கள் மற்றும் பொதுமக்கள் எழுப்பியிருந்த கேள்வியை அடுத்து அமெரிக்க அரசாங்கமே 'கடற்கன்னி என்ற ஓர் உயிரினம் இருப்பதற்கான ஆதாரம் எதுவும் இது வரை கண்டுபிடிக்கப் படவில்லை' என அசாதாரணமான உத்தியோக பூர்வ அறிவிப்பொன்றைச் செய்ய நேர்ந்தது. கடலில் மனிதரை ஒத்த உருவில் திரியும் கடற்பசு எனும் Manaee அல்லது கடற் பன்றி எனும் - Dugong போன்ற விலங்குகளை இருளில் அல்லது கலங்கலான நீருக்குள் கண்டுவிட்டோ இவ் விலங்குகளின் சிதைந்த எலும்புக்கூடுகளைக் கண்டுவிட்டோ கடற்கன்னியென எண்ணுகிறார்கள் என்கின்றனர் கடற் கன்னியை மறுப்போர்.

ஆனாலும் கடற்கன்னி இருப்பது எப்படி இதுவரை ஆதாரபூர்வமாக உறுதி செய்யப்படவில்லையோ, அது போலவே இல்லை என்றும் கூறமுடியாதுதானே என்று வாதிடுகின்றனர் சிலர். இப்படியெல்லாம் ஆராயும்போது உங்கள் மூளையில் அடங்காத ஒரு குறுகுறுப்பு இருந்துகொண்டே இருக்கும் - அதெல்லாம் சரி, ஆரம்பத்தில் 'கரையொதுங்கிய கடற்கன்னி' என்று ஒருஅதிசயமான படத்தைக் காட்டிவிட்டு இப்போது ஆதாரம் ஏதும் இதுவரை இல்லை என்கிறாரே இந்தக் கட்டுரைக்காரர், அப்போ அந்தப் படம் என்னவாம்? - என்ற கேள்வி உங்களை உறுத்திக் கொண்டுதான் இருக்கும். அதற்குப் பதில் இதுதான். இந்த உருவங்கள் போலி. Joel Harlow என்பவரால் Pirates of the Caribbean-On Stranger Tides என்ற பிரபல்யமான திரைப்படத்திற் காக அமைக்கப்பட்ட பொம்மை உருவங்களைப் பயன்படுத்தி நிஜ உடல் போல் செய்யப்பட்ட போலி வேலைப்பாடே. சந்தேகமானால் இந்தப் படத்தைப் பாருங்கள். அப் படத்துக்காகச் செய்த உருவங்கள் திரைப்படத்துக்கான வேலைத்தளத்தில் கதிரைகளுக்கு அருகே வைக்கப்பட்டிருக்கின்றன. இது இவ் வலைத்தள பிரபலந் தேடிகளின் உருமாற்ற ஏமாற்று வேலைகளுக்கான ஒரு மோசமான உதாரணமென்பதைத்தவிட வேறு என்ன சொல்ல முடியும்? எவ்வாறாயினும் கடற்கன்னிகள் யாவரையும் கவர்ந்திழுக்கத்தான் செய்கிறார்கள். அதனால் கடற்கன்னிகளை வைத்தே பல வியாபாரங்கள் நிகழ்கின்றன. கடற்கன்னிகள் நடனம் என்று பிரபல நடனங்கள் அமெரிக்காவில் நிகழ்ந்தேறி வருகின்றன. கடற்கன்னியரின் உண்மை போல் தோற்றமளிக்கும் நீர் நடனங்களும் பெரும் செலவில் நடத்தப்பட்டு மலைக்க வைக்கின்றன. கடற் கன்னி நீச்சலுடை தயாரித்து கடற்கன்னி போல் நீந்தப் பழக்கும் நீச்சல் கிளப்புகளும் பல முளைத்து கடற்கன்னிப் பிரியர்களைக் களிப்பிலாழ்த்தி பணத்தையும் கறந்து கொள்கின்றன. பிரபல ஹொலிவூட் நடிகைகள் கடற்கன்னி வேடம் தரித்து கடலோரச் சுத்தம் பேணப் பிரசாரம் செய்கிறார்கள். கடற் கன்னிகள் எப்போதும் எம் கனவுக் கன்னிகள்தான்.



அவசரத்தில் ஒரு கதை கேளு!

"ஓய் எழுத்தாளர் எண்டிறவர் நீர்தானே"

"ஓமோம் என்ன விஷயம்"

"எனக்கு அவசரமாய் ஒரு கதைவேணும்."

"அவசரமாவோ?"

"மினக்கெட நேரமில்லை. பஸ்ஸுக்குள்ள ஏறினால் பஸ்சாலை இறங்கிறதுக்குள்ள வாசிச்சு முடிச்சிடுறமாதிரி..."

"யார் நீர் ?"

"வாசகன்"

"ஓஹோ. அவசரவாசகனோ"

"எப்பிடியும் வைச்சுக்கொள்ளும். எனக்கு உடன ஒரு கதை வேணும்"

"ம்... உடன் காப்பி, உடன் நூடுள்ஸ் மாதிரி...?

"ஆ அப்பிடித்தான்"

"சரி எப்படிப்பட்ட கதை?"

"அதாவது கதை ட்டூ ஹெவியாய் இருக்கக்கூடாது.. லைட்டாயிருக்கவேணும். ஒரு பார்வையில ஒரு பந்திய அப்படியே பொஸுக்கெண்டு படிச்சிடிற மாதிரி. மற்றது கிளுகிளுப்பாய் இருக்கவேணும். சஸ்பென்ஸ் இருக்கவேணும்"

நல்லகாலம் இந்தக் கிளுகிளுப்பு, கலகலப்பு,குளுகுளுப்பு, சிலுசிலுப்பு, சஸ்பென்ஸ், திறில், காதல், கூதல் எல்லாம் சின்னச் சின்ன டப்பாவில அடைச்சு கடையில வித்திருந்தால் சுகமாயிருக்கும். இந்த பீடாக்காரன் செய்யுமாப் போல ஒவ்வொண்டிலேயும் ஒவ்வொரு கிள்ளுப் போட்டு மடிச்சுக் கொடுத்தால் அப்பிடியே வாயில போட்டுச் சப்பித் துப்பிப்போட்டு போய்ட்டே இருப்பான்.

"என்ன யோசிக்கிறீர்"?

"ஓகே, பிள்ளையார் சுழி போட்டிட்டன்"

"எதுக்கு?"

"கதைக்கு"

"சரி சொல்லும்"

"கண்கள்...."

"கண்களா?"

"அழகான கண்கள்" "யாருக்கு?"

"அந்தப் பெண்ணுக்கு"

"எந்தப் பெண்?"

"அந்த பஸ்சில போய்க்கொண்டிருக்கிற பெண்ணுக்கு"

"பஸ் எங்க போகுது?"

"றோட்டில"

"ஓய், பஸ் ரோட்டில போகாமல் என்ன வானத்திலயா போகும்? கதையச் சொல்லுமோய்!

"இது தான் கதை. கொஞ்சம் பொறுமையாய் கேளும்"

"நேரமில்லை ஐயா, கெதியான விஷயத்துக்கு வாரும்"

" அவள் ஒரு அழகான பெண்"

"பொம்பிளையா? பெம்பிளளையைப் பற்றின கதையா...? அப்ப சரி சொல்லும்"

"அவளது கண்கள் அழகானவை"

"முதல்லேயே சொல்லிட்டீரையா"

"தலை மயிர்..."

"கறுப்பெண்டுதானே போறீர்?"

"இல்லை, அது காற்றிலே பறக்கிறது. யன்னலூடாக பாய்கின்ற அந்தி நேரச் சூரி ஒளியில் அது பறப்பது ஒரு வெள்ளிப் படலம் போலத் தலையைச் எற்றிப் பளபளக்கிறது.

"எங்கட மணிரத்தினத்தின்ரை பக்லைட் ஷொட்ஸ் போல"



பாஸ்கி

"ஓம், அளவது உதடுகள்..."

"வெற்றிலை போடமலே சிவந்த உதடுகள் அவளுக்கு"

கெடுத்திட்டீரே! கொஞ்சம் கிளுகிளுப்பே போச்சுது. அது என்ன வெத்தில போடமலே சிவந்த உதடடுகள்! நாகரீகமா எழுதுமையா"

"லிப்ஸ்டிக் பூசாமலே சிவந்த உதடுகள்! இப்படி வைச்சுக்கொள்ளுவமா?

"ஆ இது ஓகே. சரி சொல்லும்.

"அந்த அந்திப்பொழுதில் பஸ் ஓட்டத்தின் ரம்மியமான ஓசைக்கு ஏற்றாற்போல் அவள் குலுங்கிச் குலுங்கிப் போய்க் கொண்டிருக்கிறாள்."

"இந்த பஸ் இரைச்சல் ரம்மியமா ஓசையா உமக்கு?"

"ஒரு அழகான பொண்ணுக்கு அருகே இருந்து பயணம் செய்யும் எந்த இளைஞனுக்கும் பஸ் இரைச்சலென்ன, எந்த இரைச்சலும் ரம்மியமாகத் தான் தோன்றும்".

"பொறும், பொறும், அருகேயிருந்து பயணம் செய்யும் இளைஞனா..?

" கட்டிளம் காளை, கன்னிப் பையன்! அவனது மூக்கு மிகவும் எடுப்பாயிருக்கிறது. தலைமயிர் அலட்சியமாய்ப் பறக்கிறது. மீசை அழகாகக் ட்ரிம்ப்பண்ணப்பட்டிருக்கிறது. ஒரு ஸ்டையிலாக காலின் மேல் கால் போட்டபடி சாய்ந்திருந்தான்அவன் ."

"அட இது எங்கட ஹீரோ" வாசகன் உற்சாக மூடில் கத்தினான். "எப்பிடி எங்கட ரஜனிகாந்த் மாதிரி இருப்பானா?"

"இப்பதானே கலியாணமாகாத இருபத்தைந்து வயது இளைஞனெண்டு சென்னேன். ரஜனிகாந் கலியாணமாகி, பிள்ளைக்கும் கல்யாணமாகி... வயது அறுபதுக்கு மேலே!"

"சரி சரி, நீர் கதையைச் சொல்லும்"

அவனது கையிலே ஒரு புத்தகம். காலிலே ஷூ. கைவிரலிலே மோதிரம்"

"அப்ப கால் விரலிலே..?"

"இப்பதானே காலிலே ஷூவெண்டு சொன்னேன். ஷூவைக் கழட்டி உமக்கு காட்டிறதாகால்விரலில என்னவெண்டு ?

"ஒரு இங்கியூசிட்டியில கேட்டால் முட்டாள் பட்டம் கட்டுறீர். சரி கதையைச் சொல்லும்"

"புத்தகத்திலிருந்து பார்வையைச் சற்றுத் திருப்பி யன்னலூடாக இயற்கையை நோட்டம் விட்டான் இளைஞன். எதிர்த்திசையில் வேகமாய் ஓடுகின்ற மர இலைகள் தீட்டிய பச்சை ஸ்கிறீனின் பின்னணியில் நெற்றி, மூக்கு, உதடு, நாடி என்று பக்கப்பார்வையில் வரையப்பட்ட அழகுப் பதுமையாய், இடையே அவள் காட்சியை மறைத்திருந்தாள். அந்தக் காட்சியில் பதித்த கண்ணை எடுக்க முடியாமல் அவன் லயித்திருந்த போது...

"போது....?"

"ஒரு புகை மூட்டம்"

"எங்கே..?"

"அவளுக்கு மறுபுறத்தில் இருந்து பயணம் செய்தவன் உறுஞ்சி இழுத்து ஊதித்தள்ளிய சிகரெட் புகை, பச்சைப் பின்புலத்தை மறைத்து அந்த அழகான காட்சியைக் குலைத்துவிடவே, ரசனை கலைந்து இளைஞன் மீண்டும் புத்தகத்துள் மூழ்கினான்.

"இது யார் இன்னொருவனா?"

"ஓம். புகை யன்னல் வரை சென்று பாதி வெளியே பறக்க மீதி உள்ளே திரும்பி காற்றோடு சேர்ந்து முகங்களில் அடித்தது."

"நிறுத்தும் நிறுத்தும்! எனக்கு புதுசாய் முளைச்சவன் யாரேன்டே புரியல்லே. நீர் புகையைப் பற்றிப் புராணம் பாடுறீர். யார் இது மூன்றாம் ஆள்?

"இவன் இன்னொருவன். ஒரு பக்கம் அவன் மறுபக்கம் இவன்"

"ஒரு பெண்ணும் இரண்டு ஆண்களுமா..?"

"ஓம் இவன் கொஞ்சம் வித்தியாசமானவன்."

"எப்படி வித்தியாசமானவன்?"

"இவனது பார்வை சரியில்லை"

"ஏன்?"

"இவனுக்கு திருட்டு முழி!."

"அட"

"அவன் நீண்ட கிருதா விட்டிருந்தான். புட்டிப்பால் குடித்த குழந்தையின் கடையாவாய் இருமருங்கிலும் பால் வடியுமே, அதைப்போல இவனுக்கு மீசை வழிந்து தாடியோடு வந்து தொடுபட்டுக்கொண்டது".

"இவன் வில்லன்!" வாசகன் திறிலோடு முணுமுணுத்தான். பின்னர் தொடர்ந்து கேட்டான் "ஒல்லியாய் நீண்டு இருப்பானா?"

"ஓம்"

"வில்லனேதான்!" வாசகன் வீரிட்டான். "மொடேர்ன் வில்லன் இப்படித்தான் இருப்பான். அவனுக்கு ஒரு கூலிங்கிளாஸ் போடுமையா!"

"அறிவிருக்கா உமக்கு, திருட்டு முழி எப்பிடித்தெரியும்"?

"அதுவும் சரிதான். அப்ப கூலிங் கிளாசை கழட்டிடும். கதை சூடு பிடிக்குமாப் போல இருக்குது . சொல்லும்"

"கெமரா இப்போது அவன் பக்கம் திரும்புகிறது"

"நீர் என்ன கதை எழுதுகிறீரா படமெடுக்கிறீரா?

படக்கதைபோலச் சொன்னால்தானே உமக்கெல்லாம் ருசிக்கும்?"

"சரி படமாவே காட்டிடும்"

"அவள் பார்வை அவனது புத்தகதை நோட்டம் விடுகிறது"

"எவனது?"

"என்னையா! ஞானசூனியமாய் இருக்கிறீரே. ஒருத்தன் மட்டுந்தானே புத்தகம் வைச்சிருக்கிறான்".

"நீர் பொதுப்பட "அவன்" எண்டு தேட?

"கொஞ்சம் யோசிச்சால் என்ன? குளூ சொல்லி இருக்கிறனே. முதலில சொன்ன இளைஞன்தானே புத்தகம் வைத்திருக்கிறான்?

"இங்கபாரும், வாசிக்கவே நேரமில்லை, யோசிக்க ஆருக்கு ஏலும்? யோசிக்காமல் வாசிக்கக்கூடிய மாதிரிச் சொல்லும்"

"ஒருத்தன் இளைஞன், மற்றவன் கிருதாக்காரன். இப்ப சரி தானே? இனிக்கேளும்" அவளுக்கு அது என்ன புத்தகமென்று அறிவதில் ஏதோ ஒரு ஆர்வம் போலும்"

"புரியுது புரியுது. காதல் கணை இப்போது பெண்ணின் பக்கமிருந்து பாயுது. அது தான் சரி. இப்பத்தக் காலத்தில பெண்கள் தான் லைனடிக்கிறாளவை"

"அவள் ஆர்வத்துடன் புத்தகத்தின் பெயரை அறிய சற்று எட்டிப்பார்க்கிறாள்."

"கதாசிரியரே அடுத்த கட்டத்தை நானே சொல்லவா? அவன் அவளைப் பார்க்க, அவள் சிரிக்க, அவன் பரவாயில்லை நீங்கள் வாசிச்சிட்டுத் தாங்கோ எண்டு புத்தகத்தைநீட்ட, அவள் "தாங்ஸ்" எண்டு வாங்கிற கட்டத்தில இரண்டு பேர்ற்ற விரல்களும் குளோஸப் காட்சியில முட்டுப்பட... எப்பிடி! சரிதானே கதாசிரியரே. இனி இரண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் பார்க்க, அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள் கதைதான்! எப்பிடி பிடிச்சிட்டனல்ல விஷயத்தையெண்டு பார்த்தீரே?

"பொறும் இப்ப நீர் கதாசிரியரோ, நான் கதாசிரியரோ?"

"நீர்தான்"

"அப்ப நீர் ஏன் குறுக்கால பாயுறீர்? என்னை எழுதி முடிக்க விடும்.

"நீர் இழுத்தடிக்கிறீர்"

"இல்லை நான் இப்ப முடிக்கப்போறன்".

"சரி முடியும்"

"ஐயோ! என்ர பேர்ஸ்!"

ஓய், நான் வெறும் வாசகனய்யா, உம்மட பேர்சை நானா எடுத்தன்?"

"இல்லை இது அவளுடையது. அவள் புத்தகத்தை நோட்டம் விட்டுக்கொண்டிருந்தாளா, திடீரென்று ஞாபகம் வந்து பேர்ஸைத் தேடினால் காணவில்லை. பதறிப்போய் விட்டாள். இளைஞன் புத்தகத்திலிருந்து பார்வையைத் திருப்பினான். கிருதாக்காரன் திருட்டு முழி முழித்தான்."

"சபாஷ் கதாசிரியரே! கதையை ஒரு திறில்லாத் திருப்பிட்டீர். கமோன், கதாநாயகன் கமோன்! ஒரு இளம் பெண்ணை இப்பிடி பரிதவிக்கவிடுவியா? எழும்பு, கிருதாக்காரனை ஒரு உலுக்கு உலுக்கு. இது தான் சான்ஸ் விடதே!" வாசகன் குஷியாய் கத்தினான்.

"கொஞ்சம் பொறும் நான்தானே கதாசிரியன்."

"சரி, சொல்லித் துலையும்!"

"கிருதாக்காரன் திருட்டு முழி முழித்தானா, பிறகு தலையைச் சொறிந்தான். பிறகு தடுமாறிக் கொண்டு அவளிடம் சொன்னான்.

"என்ன சொன்னான்?"

"நீ வெளிக்கிடேக்க என்ர கையிலதான் பேர்சைத் தந்தநீ. நான் தான் மறந்து போய் மேசையில விட்டிட்டு வந்திட்டன்" என்றான் கிருதாக்காரன். அதற்கு அவள் "நல்ல காலம், நான் ஏங்கிப்போய்ட்டன். கள்ளருக்குப் பயந்து என்ர தாலியக் கழட்டி அதுக்குள்ள வைச்சிருந்தனான்" என்றாள். அவன் அவளது கையைப் பற்றி, பயப்படாதே அது வீட்டில பத்திரமாய் இருக்கும்" என்று சமாதானம் சொன்னான்."

"பொறும் பொறும் ! கிருதாக்காரன் என்ன சொன்னான் – திரும்பிச் சொல்லும்"

"மேலே சொன்ன வரிகளைத் திருப்பிப் படிச்சுப் பாரும். அதையேதான் சொன்னான்."

"எனக்கு ஒண்டுமே புரியேல்ல. கிருதாக்காறன்தானே வில்லன்?"

"வில்லனா?" அவன்தான் அந்தப் பெண்ணிண்ட புருஷன்."

"ஓய்! நீர் இப்ப என்னட்ட உதை வாங்கப் போறீர். கிருதாக்காரன்தான் அவளிண்ட புருஷனா? அவன் திருட்டு முழியன் எண்டெல்லா சொன்னீர்?"



"திருட்டு முழியனெல்லாம் உலகத்தில கலியாணமே பண்ணிறதில்லையா? என்ன கதையய்யா இது?"

"அப்போ அந்த இளைஞன்..?

" அவனுக்கென்ன? அவன் தன்ர பாட்டில புத்தகத்தை வாசிச்சுக்கெண்டு பணயம் செய்யிறான்.

"அவன் அழகான இளைஞனெண்டு பெரிசா வர்ணிச்சீர்!"

" அழகான இளைஞனா இருந்தால் அருகில இருக்கிற பொண்ணக் காதலிக்கத்தான் வேணுமெண்டு சட்டமா?"

வாசகன் சிலகணம் பேசவில்ல. என்னை ஏற இறங்கப் பார்த்தான். பின்னர் சொன்னான் "நீயெல்லாம் ஒரு கதாசிரியன் உனக்கெல்லாம் ஒரு கதை. எங்கேயெண்டாலும் போய்க் குப்பையைக் கொட்டய்யா. நான் வாறன்."

அவன் போய் விட்டான். நான் பேனையை மூடி வைத்துவிடுகிறேன். அவசரக்கதை எனக்குசரிப்பட்டு வராது.



War crimes are serious violations of the rules of customary and treaty law concerning international humanitarian law that have become accepted as criminal offenses for which there is individual responsibility. Colloquial definitions of war crime include violations of established protections of the laws of war, but also include failures to adhere to norms of procedure and rules of battle, such as attacking those displaying a peaceful flag of truce, or using that same flag as a ruse to mount an attack on enemy troops. The use ofchemical and biological weapons in warfare are also prohibited by numerous chemical arms control agreements and the Biological Weapons Convention. Wearing enemy uniforms or civilian clothes to infiltrate enemy lines for espionage or sabotage missions is a legitimate ruse of war, though fighting in combat or assassinating individuals, even if he or she is a military target, behind enemy lines while so disguised is not, as it constitutes unlawful perfidy. Attacking enemy troops while they are being deployed by way of a parachute is not a war crime. However, Protocol I, Article 42 of the Geneva Conventions explicitly forbids attacking parachutists who eject from disabled aircraftand surrendering parachutists once landed. Article 30 of the 1907 Hague Convention IV - The Laws and Customs of War on Land explicitly prohibits belligerents to punish enemy spies without previous trial. War crimes include such acts as mistreatment of prisoners of war or civilians. In 2008, the U.N. Security Council adopted Resolution 1820, which noted that "rape and other forms of sexual violence can constitute war crimes, crimes against humanity or a constitutive act with respect to genocide"; see also war rape. War crimes are sometimes part of instances of mass murder and genocide though these crimes are more broadly covered under international humanitarian law described as crimes against humanity.



War crimes also included deliberate attacks on citizens and property of neutral states as they fall under the category of non-combatants, as at the Japanese attack on Pearl Harbor. As the attack on Pearl Harbor happened without a declaration of war, without explicit warning, and went out of proportion, all military and civilian casualties at the harbor were officially non-combatants and the attack was declared by the Tokyo Trials to go beyond justification of military necessity and therefore constituted a war crime.

War crimes are significant in international humanitarian law because it is an area where international tribunals such as the Nuremberg Trials and Tokyo Trials have been convened. Recent examples are the International Criminal Tribunal for the Former Yugoslavia and the International Criminal Tribunal for Rwanda, which were established by theUN Security Council acting under Chapter VIII of the UN Charter.

Under the Nuremberg Principles, war crimes are different from crimes against peace which is planning, preparing, initiating, or waging a war of aggression, or a war in violation of international treaties, agreements, or assurances. Because the definition of a state of "war" may be debated, the term "war crime" itself has seen different usage under different systems of international and military law. It has some degree of application outside of what some may consider to be a state of "war", but in areas where conflicts persist enough to constitute social instability.

The legalities of war have sometimes been accused of containing favoritism toward the winners ("Victor's justice"), as some controversies have not been ruled as war crimes. Some examples include the Allies' destruction of Axis cities during World War II, such as the firebombing of Dresden, the Operation Meetinghouse raid on Tokyo (the most destructive single bombing raid in history) and the atomic bombings of Hiroshima and Nagasaki;[30] and the mass killing of Biharies by Kader Siddique and Mukti Bahini[31] before or after victory of Bangladesh Liberation War in Bangladesh between 1971 and 1972.

In regard to the strategic bombing during World War II, it should be noticed that at the time, there was no international treaty or instrument protecting a civilian population specifically from attack by aircraft,[32] therefore the aerial attacks on civilians were not officially war crimes. Because of this, the Allies at the trials in Nuremberg and Tokyo never prosecuted the Germans, including Luftwaffe commander-in-chief Hermann Göring, for the bombing raids on Warsaw, Rotterdam, and British cities during the Blitz as well as the indiscriminate attacks on Allied cities with V-1 flying bombs and V-2 rockets nor the Japanese for the aerial attacks on crowded Chinese cities. Although there are no treaties specific to aerial warfare, Protocol 1, Article 51 of the Geneva Conventions explicitly prohibits the bombardment of cities where civilian population might be concentrated regardless of any method. (see Aerial bombardment and international law).

Controversy aroused when the Allies re-designated German POWs (under the protection of the 1929 Geneva Convention on Prisoners of War) as Disarmed Enemy Forces (allegedly unprotected by the 1929 Geneva Convention on Prisoners of War), many of which then were used for forced labor such as clearing minefields By December 1945, six months after the war had ended, it was estimated by French authorities that 2,000 German prisoners were still being killed or maimed each month in mine-clearing accidents. The wording of the 1949 Third Geneva Convention was intentionally altered from that of the 1929 convention so that soldiers who "fall into the power" following surrender or mass capitulation of an enemy are now protected as well as those taken prisoner in the course of fighting.



Raise the Minimum driving Age!



by: Meliny G

In 2006 alone, crashes by teens caused a cost of more than $34 billion in medical treatment, property damage and other costs. Facts say that 16 year olds have higher crash rates than drivers at any other age. Per mile, drivers in this age category are two times as likely in comparison to drivers' ages 18 and 19, to crash.

Road crashes continue to be a significant cause of death among teenagers. From these facts, one can conclude that 16 year olds are involved in a frightening number of crashes because of the immaturity and temptations ultimately caused by their underdeveloped mind. Raising the minimum age of drivers, would result in fewer crashes on the road, caused by carless teenagers.



At the age of sixteen, one's hormones will begin to settle, as he or she slowly begins to mature. One can obviously conclude that not all eighteen years olds are mature themselves. However, you can safely say, that the majority of eighteen years olds are drastically more mature than 16 year olds. Before one has fully matured, he or she will have an indecisive mind driven by impulse. With poor judgment, due to their' immature decision-making skills, sixteen year olds have caused a numerous amount of accidents to have taken place. Increasing the minimum driving age to eighteen years of age could decrease the amount of crashes because of the underdevelopment of their mind.

Teenagers are often making decisions without considering the consequences because of the lack of maturity, and a mind driven by impulse. This leads to a rebellious behavior, that they are finally feeling superior. This behavior is ultimately from the hormonal imbalance within a teenager's brain beginning to mature. At the age of eighteen, one is already put with significant responsibilities such as attending university or college, and deciding their career.

At this point a teenager has no escape in being mature, in order to live this age. Therefore, raising the age by two years, would give one's mind two years to fully mature and be given such significant responsibility, of driving as well.

Primary causes of crashes are; texting, alcohol, drugs and street racing. These are temptations a sixteen year old will get for various reasons. These reasons include "trying" to be cool and rebellious. As a teen turns 16 and is allowed to drive, he or she will feel triumphant. This is because they will feel "free" from parent control with the ability to transport themselves.

Raising the age would allow many parents to have control over their kids for two extra years, and help them understand the consequences from being tempted by such things while driving. Not only this, but within two years a teenagers mindset of being "rebellious" and "cool" will be demolished as they have already experienced the rush many times. Teenagers will be able to begin to understand the stupidity and immaturity.

As a sixteen year old, I can safely say that almost half of my grade has been tempted, and has done these "temptations" multiple times. Though it may not all be while driving, one can conclude that the mindset of being rebellious and tempted is there. One thing can lead to another. The statistics among alcohol-related driving is alarming. "Individuals aged 16-25 in Canada constituted 13.7% of the population in 2009, yet they made up almost 31.1% of the alcohol related traffic deaths" (madd.ca). "Motor vehicle crashes are the leading cause of death among 15-25 year olds, and alcohol is a factor in 50% of these crashes" (madd.ca). If raising the minimum age of drivers to 18 decreases these statistics, why not raise it?

By raising the minimum age of drivers, future drivers will be allowed to begin driving with a more developed, mature mind, which cannot easily be persuaded by temptations. One will not have the need to feel rebellious and superior, due to their mature age and new environment (university/college).

Not only will the safety of our teens be increased, but the safety of the many other drivers on the road. Teens will have two extra years to further understand the significance of safe driving. Driving is not merely a rite of passage, but an activity that involves both the lives of the driver as well as other road users.




என்ன, ஆதிமனிதன் காதல் உங்களை அசத்தி விட்டதா சென்ற இதழில்? கொஞ்சம் பழய காலம் சென்று திரும்பி வந்துவிட்டோம். என்றாலும் நிகழ்காலத்தில் தானே நாம் வாழ்ந்தாக வேண்டும்.

நிகழ் காலத்தில் நம் மனதில் ஏற்படும் ஈடாட்டங்களுக்குப் பின்னால் எம் ஆதிகால வாழ்க்கை இருக்கிறதென்பதைப் புரிந்துகொள்ளத்தான் அதுபற்றிப் பார்த்தோம். இப்போது காதல் பற்றிய இயற் விதிக்கும் சமூக விதிக்கும் இடையேயுள்ள முரண்பாட்டையும் புரிந்துகொண்டிருப்பீர்கள்.

என்ன, சமூக விதி எம் விழிப்பு மனதில் காவல் காத்தபடியிருக்க இயற்கை விதி எம் நினைவிலி மனதில் தருணம் பார்த்தபடியிருக்க, காவல்காரன் தூங்கும்போது எட்டிப்பார்க்கும் களவாணிபோல இயற்கையின் உந்தல்கள் அவ்வப்போது தலைநீட்டிவிட - வந்தது தொல்லை! சட்டி பானை உடையும். குடும்பச் சண்டை வெடிக்கும். கோடேறி டைவோர்ஸ்வரை போகும். அதன் பிறகு என்ன,

கி வைத்த உருவகத்தைக் குலைக்காதிரு என்று ஒவ்வொரு கணமும் அது எம்மை நெறிப்படுத்திக்கொண்டே இருக்கிறது.



ஆனால் நாம் வெளியாருடன் உறவாடும்போது எமக்குள் இருக்கும் அந்த உள்மனம் என்ற அதிகாரி தலைகாட்டுவதில்லை. வெளியே எம் மனதின் வரவேற்பறையில் இருக்கும் ரிஷப்ஷனிஸ்ட் தான் வசீகரப் புன்னகையுடன் அவர்களுடன் குலவிப் பேசுவாள்.

காதல் பண்ணப் பழகலாமா?

அட்வைஸ்-3

சட்டி சுட்டதடா கை விட்டதடா
புத்தி கெட்டதடா நெஞ்சைத் தொட்டதடா...

என்று ஆலயமணிப் படத்து கண்ணதாசன் பாடலை சௌந்தரராஜன் குரலெடுத்துப் பாடித்திரிய வேண்டியதுதான்.

உயிருக்குயிராயக் காதலித்தவர்கள் திருமணமான ஒருமாதத்திலேயே பிரிவதும், அக் கல்யாண வீடியோக்காறன் ஆறுமாதம் முக்கி முக்கி எடிட்பண்ணிவிட்டு டீவீடியுடன் போய்ப் பணம் கேட்கையில் ''எனக்கு உதைக் கண்ணிலும் காட்டாத, அங்க போய்க் கேள்'' என்று மற்றவரிடம் விரட்டிவிடுவதும் வேடிக்கைக் கதைகளாகிவிட்ட இன்றய சகஜங்கள்.

அந்த 'உயிருக்கு உயிர்' உறவுகள் உருவான கதையை உன்னிப்பாய்ப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும்.

உயிரே, உயிரே, வந்து என்னோடு கலந்துவிடு
உயிரே, உயிரே, என்னை உன்னோடு கலந்துவிடு
நினைவே, நினைவே எந்தன் நெஞ்சோடு கலந்துவிடு

என்று வேண்டுமானால் இவர்கள் காதலித்தபோது பாடித் திரிந்திருக்கலாம், ஆனால் அங்கு உடல்கள் கலந்தாலும் இவர்களின் மனங்கள் கலப்பதற்கு முடியாத ஒரு பெருஞ்சுவர் இவர்களைப் பிரித்து வைத்திருப்பதை இவர்களே புரிந்துகொண்டிருக்கவில்லை. உண்மையில் அது ஒரு சுவர் இல்லை, இரு சுவர்கள் - ஒவ்வொருவருக்கும் தனித்தனிச் சுவர்கள்.


ஒருவரை ஒருவர் விரும்பித்தானே திருமணம் செய்தனர், ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டுதானே ஒன்றாய் வாழ முடிவெடுத்தனர் - பின்னர் ஏன் இந்தச் சுவர்கள்? இவை எப்படி எழும்பின? எப்போது எழும்பின? - என்று வியக்கிறீர்களா? உண்மையில் அவர்கள் காதலிக்கும் முன்னரே அவை எழும்பிவிட்டன!

ஒவ்வொருவரும் தன்னை இன்னாரென்று அடையாளப்படுத்தும்போதே, நான் இப்படித்தான், என் எல்லைகள் இவை, மற்றவர் என்னிலிருந்து எவ்வளவு தூரம் தள்ளி நிற்க வேண்டும், என்னை இப்படித்தான் பார்க்கவேண்டும், இப்படித்தான் மதிக்க வேண்டும், எது எது எனக்குப் பிடிக்கும், எது எது எனக்குப் பிடிக்காது என்று வரையறைகள் போட்டுக்கொள்கிறோம்.

இதைத்தான் நாம் ஈகோ என்கிறோம். இந்த ஈகோ, மிக மிடுக்கான ஒரு அரசனுக்கு மட்டுமல்ல, மிக நைந்துபோன பரம ஏழையான ஒரு ஆண்டிக்கும் உண்டு. அந்த எல்லைக்குள் நீங்கள் புக முனைந்தால் பூனை போல் இருப்பவனும் உங்கள்மேல் புலிபோலப் பாய்வான். அந்த எல்லைக்குள் இருக்கும் விடயங்களை எவருக்காகவும் அவனோ அவளோ மாற்றிக்கொள்ள மாட்டார்கள்.

இப்படியான ஈகோவை நமக்குள் இருக்கும் இன்னொரு மனமே கட்டியெழுப்பி செயற்படுத்துகிறது. அது எமக்கே புரிவதில்லை, எம் கட்டுப்பாட்டிலும் இல்லை. சினிமாவில் இதை கெரக்டருக்குள் இருக்கும் இன்னர் கெரக்டர் (Inner-character) என்று சொல்வர்.

அம்மா இறந்திருக்கும் சோகத்தில் அவள் தலைமாட்டிலிருந்து அழுகின்ற போதிலும் எம் ஒரு கை தன்னையறியாமல் எம் தலையைக் கோதி சீர்செய்கிறதே - நான் பெண்ணாயிருந்துவிட்டால் நான் ஒரு புறம் அழுதுகொண்டிருக்க, என் கரம் ஒரு நடிகையின் உதவியாளன்போலத் தன்பாட்டிற்கு பேர்சைத் திறந்து லிப்ஸ்டிக்கை எடுத்து உதட்டை அடிக்கடி டச் -அப் பண்ணி விடுகிறதே - இதைச் செய்வதெல்லாம் அந்த இன்னர் கெரக்டரை செதுக்கி வைத்திருக்கும் மற்றைய மனம் தான். நீ எந்த சோகத்திலும் இரு, ஆனால் நான் செதுக்



காதலிக்கும்போதோ, எம் ஈகோ இருந்த இடம் எமக்கே தெரிவதில்லை. நாம் மனது முழுக்க காதலால் நிரம்பியிருப்பதைப்போல் மிதப்போம். அந்த மிதப்பில் நாம் காதலிப்பவரது ஈகோவும் எம் கண்ணுக்குத் தெரியாது. எம் இரு ஈகோ அதிகாரிகளும் அறையைப் பூட்டிக்கொண்டு ஆழ்ந்து தூங்கிவிட, ரிஷப்ஷனிஸ்டுக்கள்தான் ஒருவரை ஒருவர் உச்சி குளிரப் புகழ்ந்தபடி உல்லாசமாய்ச் சல்லாபம் செய்வார்கள்.

ஆனால் திருமணமான அடுத்த நாள் எம் கண்களை மறைத்திருந்த கனவுத்திரை மறைய - இருவரும் மனதுக்குள் எழுப்பியிருந்த கருங்கற் சுவர்கள் ஒருவருக்கொருவர் தெரிய - உள்ளேயிருக்கும் ஈகோக்கள் ஒருவரை ஒருவர் மிஞ்சியவராக உறும ''இவ்வளவு திமிரா உனக்கு,'' என்று தொடங்கிவிடும் தாக்குதல்! ஒவ்வொருவரது சுவர்களையும் மற்றவர் தாக்கித் தரைமட்டமாக்குவதுதான் இருவரது ஈகோக்களினதும் ஒரே குறி ஆகிவிடும். பிறகு..

நிலவைப் பார்த்து வானம் சொன்னது
என்னைத் தொடாதே
நிழலைப் பார்த்து பூமி சொன்னது
என்னைத் தொடாதே...

என்று ஒருத்தரைப் பார்த்து ஒருத்தர் பாடிக்கொண்டு பிரிந்து செல்லவேண்டியதுதான்!

தனித்தனி மனிதர்களாக நாம் இருக்கும்போது எமக்கு இருந்த தனித்தனி மனங்கள், குடும்பம் என்றானவுடன் பொது மனமாக மாறத் தவறுவதுதான் இங்கு ஏற்படும் முதலாவது முட்டுக்கட்டை.

பொது மனம் என்பது, விட்டுக் கொடுப்பு, சகிப்புத் தன்மை, பொறுப்புணர்வு என்பவற்றோடு, தன் நலனை மொத்தக் குடும்பத்தின் நலனுக்கு கீட்படுத்தும் மனப் பக்குவமாகும். இந்த மனபக்குவம் மேற்குலகில் வாழும் எம் தற்கால இளைஞர் யுவதிகளுக்கு மிக மிகக் குறைவு.

அவர்களுக்கும் பெற்றோருக்குமான தலைமுறை இடைவெளி மட்டுமன்றி, பேச்சு மற்றும் சிந்தனை மொழி வேறுபாட்டால் ஏற்பட்ட பரிவர்த்தனை இடைவெளியும் கூடவே சேர்ந்து குழிபறிக்க - பெற்றோர் எத்தனையைச் சகித்துக்கொண்டு ஒற்றுமையாய் வாழ்ந்தார்கள் என்ற படிப்பினை இவர்களுக்கு கிடைப்பதில்லை.

அதைவிட இவர்களுக்கு மேற்கத்தேயப் பள்ளிகளும் நடப்புகளும் கற்றுக்கொடுக்கின்ற பாடம் இதற்கு நேரெதிராக உள்ளது. அது தனி மனித உரிமை பற்றியே வலியுறுத்துகிறது. 'உன்னை நீ முதன்மைப்படுத்து,' என்றே சொல்கிறது. 'யாருக்கும் தலை வணங்காதே,' என்கிறது. இவர்களுக்கு

உன்னையறிந்தால் நீ உன்னையறிந்தால் உலகத்தில் போராடலாம்
உயர்ந்தாலும் தாழ்ந்தாலும் தலை வணங்காது நீ வாழலாம்

என்ற வேட்டைக்காரன் பாடல் தான் பிடிக்கும்.

நலமிதொரு குடும்பம் பல்கலைக் கழகம்
அன்புமணி வழங்கும் சுரங்கம் வாழ்க வாழ்க

என்ற தங்கப்பதக்கப் பாடலெல்லாம் புரியாது. என்ற தப்பான புரிதல் இவர்களுக்கு தனிமையத்துவம் என்ற தத்தமக்கான வட்டங்களுக்குள் வாழ்கின்ற `Individualism' பற்றியே உணர்வூட்டியுள்ளது. மனிதன் ஒரு சமூக விலங்கு என்பதும் தனி மனிதன் சமூகத்தின் ஒரு அங்கமே என்பதும் சமூகமே தனி மனிதனையும் பேணுகிறது என்பதும் புரியாமல் தனிமனிதர்களே சமூகத்தைத் தாங்குவதாக ஸண்ண வைக்கிறது.

இதுவே குடும்பத்துக்குள்ளும் தலைதூக்கி, குடும்ப நலனிலிருந்து விடயங்களை ஆரம்பிக்காமல், தனது நலன்,

காதல் பண்ண...

தனது உரிமை என்பவற்றை குடும்பத்துள் நிலை நிறுத்துவது பற்றிய முனைப்பையே இவர்களுக்கு ஏற்படுத்துகிறது. இந்தத் தனித்தனி வளையங்களைத் தீண்டினாலே இவர்களுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வருகிறது.

இவர்கள் வாழ்க்கையில் எல்லாவற்றையுமே தனித் தனியாகவே வகுத்துக்கொள்கிறார்கள். ஏதோ நண்பர்கள் சேர்ந்து கொட்டேஜ் போனால் தனித்தனியாய் பில்கட்டி பொதுச் செலவுகளைப் பிரித்துக்கொள்வோமே, அதைப் போல வீட்டுச் செலவுகளுக்கு யார் யார் எவற்றுக்குப் பொறுப்பெனத் தனி அட்டவணை.

பல குடும்பங்களில் மனைவியின் சம்பாத்தியம் கணவனுக்கோ, கணவனின் சம்பாத்தியம் மனைவிக்கோ தெரியாது. அவர்கள் அதை எப்படிச் செலவு செய்கின்றனரென்றும் தெரியாது. அவர்கள் எங்கெங்கே போய் வருகின்றனரென்பதுகூட தெரியாது - தெரிந்துகொள்ள விளைந்தாலோ அது தலையீடு. இதன் உச்சம் என்னவென்றால்..., அதைச் சொல்லவேண்டாமே! குடும்பமாய் இருப்பதுபோல் வெளியே காட்டிக்கொண்டு உள்ளே லொட்ஜ் வாழ்க்கை! பிள்ளைகளைக் கேட்கவும் வேண்டாம். கேட்கக்கூடிய அருகதையுடனும் அவர்கள் இல்லை.

இந்த நிலமையில் காதல் எங்கே வாழ்கிறது? இவையாவும் குடும்பம் என்ற ஒருமைப்பட்ட மனதை ஈட்டுவதிலேற்பட்ட தோல்வியால் விளைந்தது. ஆணும் பெண்ணும் இரு வேறுபட்ட உருப்படிகள். ஆணிடம் இல்லாதது பெண்ணிடம் உண்டு, பெண்ணிடம் இல்லாதது ஆணிடம் உண்டு. அவர்களின் மனங்களும் வேறு வேறு. பெண் சிந்திக்கும் விதம் வேறு, ஆண் சிந்திக்கும் விதம் வேறு. அவர்களின் செயற்பாடும் வேறு வேறு. ஆண் செயற்படும் பாங்கு வேறு, பெண் செயற்படும் பாங்கு வேறு. இவ் வேறுபட்ட இருவர் சேர்ந்த குடும்பம் மட்டும் எப்படி ஒன்றாக முடியும்? எப்படி குடும்பம் என்ற ஒரு மனம் இரு வேறுபட்ட மனங்கள் மத்தியில் தோன்ற முடியும்?

ஆம் முடியும்! அது எப்படி முமடியும் என்பதை தொடர்ந்து சிந்திப்போம் என்று கூறி

இருமனம் கொண்ட திருமண வாழ்வில்
இடையினில் நீயேன் மயங்குகிறாய்

என்று அவர்கள் பாட்டைப் பாடி விடைபெறுகிறேன் - அடுத்த இதழில் சந்திப்போம்.

காதலித்தால் நண்பர்களை இழப்பராம்...

காதலுக்காக எதையும் இழக்கத்த தயார் என்று சில இளைஞர்கள் கூறுவார்கள். உண்மையிலேயே காதலித்தால் குறைந்தபட்டம் 2 உண்மையான நண்பர்களை இழக்கநேரடும் என்று ஆய்வில் கண்டுபிடித்துள்ளனர். லண்டன் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் நடத்திய புதிய ஆய்வில் தான் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது. ஆணோ அல்லது பொண்ணோ யாராக இருந்தாலும் சராசரியாக அவர்களுக்கு 5 நண்பர்கள் இருப்பார்கள். அந்த 5 பேரில் ஒருவர் வாழ்க்கைத்துணையாக வந்துவிட்டால் எஞ்சியிருப்பது 4 பேர். அவர்களில் நிச்சயமான நீங்கள் 2 நண்பர்களை காதலுக்காக இழக்க நேரிடும் என்று ஆய்வை நடத்திய பேராசிரியர் கூறுகிறார்.

தவறாக அணையுமிடம்

தவறணையகம்!

- கனக மனோகரன்

வாழ்க்கையில் தகமைகள், திறமைகள், செம்மைகள், செழுமைகள் மட்டுமல்ல கொடுமைகள் கூட முகவரிகளை ஈட்டிக்கொடுப்பதுண்டு. ''அடோல்ப் ஹிட்லருக்கு அவனது கொடூரமான மனமும் கொடுஞ்செயல்களும் தான் உலகளாவிய ஒரு முகவரியை தேடித்தந்திருக்கின்றது அல்லவா?

வயது படிப்படியாக ஏறும் போது முதுமை கூட ''முகவரியை'' - முகத்திலே வரிகளை -தரும். இவை நெற்றியிலே நிரந்தரமான நீளக்குறிகளாகிவிடும்.

ஒரு நிமிர்ந்த ஞானக்கிறுக்கன், அவன் எழுதுவதையே தொழிலாகக் கொண்டவன். அவன் விரிந்த உலகத்தையே கிறங்கவைத்தவன். அவன் கிறுக்கல்களும் எழுத்துக்களும் உலகத்தையே அசையவைத்தது. கிறுக்கங்களாக ''கலைத்துவத்துடன்'' எழுதுவது அவன் தொழிலாகி விட்டது!

ஒருவன் இந்தக் கலைஞனைப் பார்த்து இந்த கிழவன் என்ன செய்கிறான் எனக் கேட்டுவிடுகிறான். அவர் தான் அறிஞர் பேர்னாட்ஷோ. உடனே அவர் கோபத்தில் கொட்டிய வாசகம், ''இந்த வயது முதிர்ந்த கிழவனின் கிறுக்கல்களை கடவுளால்கூட உருவாக்க முடியாது.'' இவை ஆத்திரத்தில் வெளிவந்த வாசகங்கள்.

மூதறிஞர்களின் அனுபவப்பகிர்வுகள் ஆழமானவை. இளமையிற் படிக்கிறோம்! ஆனால் முதுமையில் தான் புரிந்து கொள்கிறோம். இது மூதறிஞரின் அனுபவப் பகிர்வு. அனுபவ முதுமை ஆழமாக அனேக தவல்களைத் தரவல்லது.

'கண்டறியாதவன் பெண்டிலைக் கண்டானாம், காடு மேடெல்லாம் கொண்டு திரிந்தானாம்'' இது ஒரு பழமொழி. இந்தக் கண்டறியாதவன் கண்டதை, உள்ளம் கொண்டதைக் காடுமேட்டில் அல்ல, பலர் நாடும் இந்த ஏட்டில் சற்று பதிவு செய்ய விரும்புகிறேன்... இது ஒரு அனுபவப்பகிர்வு.

ஐம்பதுகளில் யாழ்ப்பாணத்தில் முதல்முதலாக பரமேஸ்வராக் கல்லூரி வளாகத்தில் தமிழ் மணம் கமழும் ஒரு இலக்கியத் திருவிழா நடைபெற்றது. இது அப்பொழுது நடந்தேறிய ஒரு உலகத்தமிழ் மகாநாடே. இது ஒரு தமிழ் பேரறிஞர்களின் தலைக்கூடலாக நடந்தேறியது. தமிழ்ப் பேரறிஞர்களின் சங்கமம் தான் அது.

ஈழநாட்டின் எழில்மிகு யாழ்ப்பாண நன்நகர் ஒரு குட்டிக் கூடலாக, மதுரை மாநாகரின் கோல எழிலை அந்தநாளில் கொண்டு வந்தது. அன்றைய தமிழ் கூறும் நல்லுலகத்தின் முன்னிலைப் பெருநிதிகளை எல்லாம் ஒன்று கூட வந்தது!. அசை போட்டுப் பார்க்கும் போது அது ஒரு அற்புத நிகழ்வு.

தமிழ் பேரறிஞர்கள் எல்லாம் திருநெல்வேலிப் பரமேஸ்வரா வளாகத்தில் ஒன்று கூடினர். திருநெல்வேலி ஒரு தமிழ் பெருங்கூடலாகியது. அங்கு கூடியோர் வரிசை நீண்டது.

அந்தக் காலத்தின் பேரறிஞர்களான சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை, பேராசியர் தொ. பொ. மீனாட்சி எந்தரனார், குன்றக்குடி அடிகளார், ''வாகீச கலாநிதி'' கி.வா. ஜெகன்நாதன், சிலம்புச்செல்வர் மா.பொ.சி, பெரியசாமி தூரன், அவினாசிலிங்கம் செட்டியார், என்ற வரிசையில் அக்கால தமிழக அறிவுக்கடல்கள் எல்லாம் பரமேஸ்வராக் கல்லூரி வளாகத்தில் சங்கமித்தன. ஈழத்துத் தமிழ்பேறிஞர் குழுவும், தமிழ் பண்பாட்டின், பாரம்பரியத்தின், பெருநிதியங்கள் எல்லாமே ஒன்று கூடின. அன்றைய இலங்கைத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர் குழாமும் இந்த மகாநாட்டைத் தூர இருந்து பார்த்தது! பாராமுகமாகத் தான் இருந்தது!

தனிநாயக அடிகளார், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, '''முதுதமிழ்ப்புலவர்'' மு.நல்லதம்பி, புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை, ''வித்துவான்'' வேந்தனார் ''பேரறிஞர்'' நடேசபிள்ளை, சிதம்பரப்பிள்ளை, அம்பிகைபாகன் என்ற நீண்ட வரிசையில் இந்த கூடலில் ஈழத்துப் பண்பாட்டுப் பாரம்பரியமே திரண்டது.!

இது தமிழ் கூறும் நல்லுகத்தையே எழுச்சிபெறவைத்த ஒரு ''தமிழ் விழாவாகும். பெருவிழாவாக நடந்தேறியது.

விருந்தோம்பலுக்கு தலைசிறந்த நன்நகர் யாழ்ப்பாணம், விருந்தோம்பலுக்கு மறுபெயர் யாழ்ப்பாணம் என்றெல்லாம் வாயாறப் பேசிமகிழ்ந்தவர் கி.வா.ஜெகன்நாதன். கல்கி. கி.கிருஷ்ணமூர்த்தி கூட இதை அடிக்கடி கூறியும் மகிழ்ந்துள்ளார்.

''செல்விருந்து ஓம்பி நண்பகல் வருவிருந்து பார்த்திருக்கும் அன்பர் ஒருவர் சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளையை விருந்து படைக்க அழைத்துச் சென்றுள்ளார். விழாக்கோலம் பூண்ட யாழ்நகர் தோரண அலங்காரங்களுடன் புதுமணம் கமழ்ந்தது.

சொல்லின் செல்வர் தோரண அலங்காரம், சனநெரிசல் நிரம்பிய வீதிவழியாக சென்றார். அவரை அழைத்து சென்றவர்கள் பேரூந்து நிலையத்தையும், முற்றவெளி முனியப்பர் கோயிலையும் இணைக்கும் வீதிவழியாக அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அரங்கத் தலைவர் ஒரு நகர்வலமே வந்திருக்கின்றார். நகரவீதியின் அழகுக் கோலங்களை எல்லாம் கண்டு களித்தார்.

முனியப்பர் வீதியின் இருமருங்கிலும் அப்பொழுது கள்ளுக்கொட்டில்கள் நிறைந்திருந்தன. கள்ளுக்கொட்டில்களில் ''நறவம் மாந்தித் திளைத்தவர்களையெல்லாம்'' சொல்லின் செல்வர் கண்டு திரும்பினார். அப்பொழுது அங்கு ஒரு ''ஓம்முருகா'' கள்ளுத்தவறணை இருந்ததும் அவர் கண்ணிலே பட்டது.

பேர்ப்பலகைகளில் கண்ட தமிழ் ''சொல்லின் செல்வரை'' சற்றுக் குடைந்தது! அவரது தமிழ் மனம் மகாநாட்டிற்கு திரும்பியது. தவறணை பற்றி அலச முற்பட்டார் ரா.பி. சேதுப்பிள்ளை. தவறணை என்ற சொல் இங்கு வழக்கில் இருக்கிறது. தமிழ்நாட்டில் இந்தப் பதம் இல்லையே என ஏங்கினார்.

அன்றை அரங்கிற்கு, இந்த தவறணை ஆய்வோடு வந்த தலைவர் தாமதமாகி விட்டார். சொல்லின் செல்வரை தவறணை ஆய்வும் உலாவும் தாமதமாக்கிவிட்டது! மகாநாடு தலைவர் இல்லாமலே நடந்துகொண்டிருக்கிறது!

மகாநாட்டு நிகழ்ச்சியில் தனிநாயக அடிகளார் தலைவர் இல்லாத நிலையில் ஆற்றொழுக்குப் போலப் பேசிக்கொண்டிருக்கிறார். தாமதமாக தவறணை ஆய்வோடு வந்த ரா.பி. சேதுப்பிள்ளை பேச்சை அனுபவித்தார். பேச்சு முடிந்ததும் மேடையில் தோன்றிய சொல்லின் செல்வர் அமைதியாக, ''தமிழன் தலைவருக்காகக் காத்திருக்கமாட்டான் என்பதற்கு இன்றைய நிகழ்வு நல்ல உதாரணம்,'' எனக்கூறி தனிநாயகத்திற்கு ஒரு ''சபாநாயகம்'' வேண்டுமா? என்ற குறிப்போடு தனது தவறணை பற்றிய சொற்பத ஆய்வை சொல்லி முடித்தார்.

''தவறணை தமிழகத்திலேயே இல்லாத ஒரு சொற்பதம் என்று கூறி தவறணை தமிழ் சொல் அல்ல. தவறாக அணைகின்ற இடம்தான் தவறணை என்பது தான் அவர் குறிப்பு.

விளையாட்டு

பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் ஸ்கொட்லாண்ட்-2014

பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டித் தொடர் ஸ்கொட்லண்டின் கிளாஸ்கோ நகரில் 23-07-2014 புதன் கிழமை பொநலவாய நாடுகளின் நிரந்தர தலைமையின் பிரதியான எலிசபெத் மகாராணியால் உத்தியோகபூர்வமாகத் தொடக்கி வைக்கப்பட்டது.

இவ் வமைப்பின் சுழற்சிமுறை நடப்புத்தலவரானஸ்ரீலங்கா ஜனாதிபதி அரசியற் காரணங்களுக்காக இதில் பங்கு கொள்ளவில்லை.

இந்தப் போட்டித் தொடர் 20ஆவது போட்டித்தொடர். இதில் 71 நாடுகளிலிருந்து 4947 போட்டியாளர்கள் பங்குகொண்டார்கள். 3-0-08-2014 வரை 17 விளையாட்டுகளுக்கான மொத்தம் 261 போட்டிகள் நடைபெற்றன.

இப்போட்டிகளில் முதல் 5 இடங்களைப் பெற்ற நாடுகளின் விபரங்கள் வருமாறு:

நாடு	தங்கம்	வெள்ளி	வெண்கலம்
[illegible]	[illegible]	[illegible]	[illegible]
அவுஸ்ரேலியா	49	42	41
கனடா	32	16	34
ஸ்கொட்லாந்து	19	15	19
[illegible]	15	[illegible]	[illegible]

இங்கிலாந்து 28 ஆண்டுகளுக்குப் பின் இப்போட்டிகில் முதலிடம் பிடித்துள்ளது.

2014 பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டி நறுக் தகவல்கள் சில

1) ஸ்ரீலங்காவின் சைக்கிளோட்ட வீரர்கள் போட்டிக்கு முந்திய பயிற்சிக்காலத்தில் அதிவேக நெடுஞ்சாலைகளில் நுழைந்து பயிற்சியிலீடுபட்டவேளை பொலிசாரினால் தடுத்து நிறுத்தப்பட்டு பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டார்கள்.

2) சுழற்சி முறைத் தலைமைக்கான தலைவரான ஸ்ரீலங்கா ஜனாதிபதி அரசியல் காரணங்களுக்காக கலந்து கொள்ளவில்லை. இவருடைய வருகையை எதிர்த்து ஐரோப்பிய வாழ் ஈழத்தமிழர்கள் ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தத் தயாராக இருந்தனர். தலைவர் இல்லாமலேயே போட்டிகள் தொடங்கின.

3) முதற் தங்கப்பதக்கத்தை இங்கிலாந்து வீராங்களை ஜோடி ஸ்டிம்சன் வென்றார்.

4) கொமன்வெல்த் தீபம் 10 மாதம் 71 நாட்கள் தனது பயணத்தை முடித்துக்கொண்டு விளையாட்டுத் திடலை வந்தடைந்தது.

5) இத்தீபத்தை இறுதியாக கொண்டு சென்று எலிசபெத் மகாராணியிடம் கையளித்தவர் சேர். கிறிஸ்ரோபர். அன்று கொப். இவர் ஸ்கொட்லாந்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 6 தங்கப்பதக்கங்களும் ஒரு வெள்ளிப்பதக்கமும் ஒலிம்பிக்கில் சைக்கிள் ஒட்டப்போட்டியில் வென்றவர். இவர்தான் இதுவரை ஒலிம்பிக்கில் சைக்கிள் ஒட்டப்போட்டிகளில் அதிக பதக்கங்களை வென்றவர்.

6) தமிழ்நாடு வேலூரைச் சேர்ந்த சிவலிங்கம் சதீஸ்குமார் (வயது 22) பழுதூக்கும் போட்டியில் 149 கிலோ எடையைத் தூக்கி புதிய சாதனை ஒன்றை ஏற்படுத்தியுள்ளார்.

7) 104 போட்டியாளர்களுடன் 45 அதிகாரிகளுடனும் பங்குபற்றிய இலங்கை அணி ஒரு வெள்ளிப் பதக்கத்தை மட்டுமே வென்றது.

8) பங்குபற்றிய 71 நாடுகளில் 35 நாடுகளே ஏதாவது ஒரு பதக்கத்தையாயினும் வென்றுள்ளன. 3 நாடுகள் வெறுங்கையுடனேயே திரும்பிச் சென்றுள்ளன.

அலைஸ் கோச்மன் டேவிஸ் முதல் தங்கம் வென்ற கறுப்பினத்தவள்

1948 இலண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் 1.68 மீற்றர் (5.51 அடி) உயரத்தை தாண்டிப் பாய்ந்து சாதனை படைத்துத் தங்கம் வென்றவள். முதலாவது கறுப்பினப் பெண்மணிதான் இந்த அலைஸ் கோச்மன் டேவிஸ்.

இவர் தங்கப்பதக்கத்துடன் நாடு திரும்பியதும் இவர் வாழ்ந்த ஜோர்ஜியா மாநில அரசு 175 மைல் வாகனப் பேரணியில் இவரைக் கொண்டு சென்று கௌரவித்தது.

கறுப்பினத்தவர் பல வழிகளிலும் பிற்படுத்தப்பட்டிருந்த காலத்தில் இவரது சாதனை அனைதுக் கறுப்பின அமெரிக்கர்களுக்குமே உந்துசக்தியாக அமைந்தது.

இரண்டாம் உலகப்போர் காரணமாக 1944ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவில்லை அது நடைபெற்றிருந்தால் அதிலும் தங்கப் பதக்கம் வென்றிருக்க முடியும் என்று தனது மன உறுதியை வெளிப்படுத்தியிருந்த இவர் தனது 90 ஆவது வயதில் காலமானார்.

ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற முதல் கறுப்பினத்தவன் (அமெரிக்கர்) ஜோன் பக்ஸ்டர் டெய்லர் வென்ற ஆண்டு 1908.

வெற்றிக்கு வழி கூறும் பேர்னாட்ஷா



நான் இளைஞனாக இருந்த போது 10 காரியங்கள் செய்தால் அதில் ஒன்பதில் தோல்வி அடைவதைப் பார்த்தேன். எனக்கு தோல்வி அடையப்பிடிக்கவில்லை. 9 தடவை வெற்றி பெற என்ன செய்ய வேண்டும்? என யோசித்தபோது எனக்கு ஒரு உண்மை "பளிச்" சென விளங்கியது.

90 முறை முயன்றால் 9 தடவை வெற்றி கிடைக்கும் என்பதுதான் அது. ஆகவே முயற்சிகளின் எண்ணிக்கைகளை அதிகப்படுத்திக் கொண்டேன். வெற்றிபெற்றேன். - என்று சொன்னவர் உலக மேதை பெர்னாட்ஷா.

எப்படிப் பிடிக்கிறது மீனை இப் பாம்பு
பார்த்தீர்களா எதிர்பார்த்திருக்குமா
மீன் அதனால் எப்போதும் விழிப்பாய்
இருக்கவேண்டும் எங்கிருந்தும் வருவான்

எதிர்!





இதோ எங்கள் சினிமா!

– திரை விலக்குபவர் பாஸ்கி ரி ராஜ் –

என்ன, படம் பார்க்க ரெடியா? தியேட்டர் லைட்டுகளை அணைக்கலாமா? அதெப்படி ஒரு குட் லெக்ஷர் தன்னும் தராமல் உங்கள ஸ்ரெய்ட்டா ஸ்கிறீனுக்குப் விடுறது? கொஞ்சம் இருங்க.

முதல் இரண்டு இதழ்களில ஒரு சில சினிமாக் கூறுகள அவ்வப்போ சொன்னேனே, ஞாபகமிருக்கா? Inciting Incident, Desire, Object of Desire, Gaps, Point of No Return... இந்த மாதிரி. இனியும் சொல்லிட்டே வருவேன். அதுகள அப்பிடியே புடிச்சிட்டீங்கெண்டு வையுங்க. உங்களுக்கு இனி யாரும் வந்து எந்தப் படத்தைப் பற்றியும் பீத்த ஏலாது. சரி, இந்தத்தடவை சொல்லுறதாய் சென்ற தடவை சொன்னத சொல்லிடுறேன்; அதுதான் Love Interest - காதல் நாட்டம்!

நீண்ட கால சினமாவில, நம்ம ரசிகப்பெருமக்களுடைய சைகோலஜிய அவதானிச்சதில, முக்கியமானதொரு சினிமாக் கூறு என்று இனங்காணப்பட்ட அம்சம்தான் இந்தக் காதல் நாட்டம். பிரதான பாத்திரத்தை ரசிகர்கள் விரும்ப வைக்கும் ஒரு மறைமுக உத்தியாகும் இந்தக் காதல் நாட்டம். ஒருத்தி ஒர காலிப்பயலைத் துரத்தித் துரத்திக் காதலித்தாளானால், அவன் எத்தனை முரடனாயிருந்தாலும் அவனில் ஏதோ விரும்பத் தக்க அம்சம் உள்ளதென்றுதானே அர்த்தம்? ஸோ, நாங்களும் சேர்ந்து அவனை விரும்பிவிடுவோம்! காதல் நாட்டம் என்ற விடயம் இல்லாமலே படம் செய்ய இயலாதா? செய்யலாம். ஆனால் கதாபாத்திரம் மீதான பிடிப்பை இன்னொன்று ஈடுசெய் வேண்டும். சிறுவர்களை இனிப்பால் இலகுவாகக் கவருவதற்குப் பதில் உப்பைக்கொண்டு கவருவதானால் வேறு ஏதோ சுவாரசியமாகப் பண்ணியாகவேண்டும். சரி, இதுபற்றிய விடயங்கள் வரத்தானே போகுது. அப்பப்ப பேசுவோம். இப்ப படத்துக்கே போயிடலாம், வாங்க!

அஞ்சான்

நடிகர்கள்: சூரியா, சமந்தா, வித்யூத், சூரி, மனோஜ் வாஜ்பாய்
இசை: யுவன் சங்கர் ராஜா
தயாரிப்பு: யுடிவி, திருப்பதி பிறதேர்ஸ்
இயக்கம்: லிங்குசாமி

“எதிரிக்குக்கூட துரோகி இருக்கக்கூடாது,” என்றபடி முடியும் அஞ்சான், ஒரு துரோகி ஒழிப்புப் படமாக அவிழ்ந்துள்ள, ஸ்டார் வால்யுவை நம்பிப் படைக்கப்பட்ட அடிதடி மசாலா! மசாலாப் படங்களின் அந்த வெற்றியின் ரகசியம் - என்டடைன்மென்ட் வால்யு - பற்றி ஏற்கெனவே முன்னய இதழில் சொல்லியிருக்கிறேன். அந்த என்டர்டைன்மென்ட் வால்யு அஞ்சானிலும் காட்சி அமைப்புகள், இசை, ஹீரோவுக்கான அசத்தலான கெட்-அப் கொடுக்கும் மேக்கப், ஹீரோயினின் கிளாமர் உடைகள், சண்டைக் காட்சிகள் என்ற வகை வகையான வகையறாக்களால் சோடிக்கப்பட்டுள்ளது. அதுவே பாதித் தூரம் படத்தை ஓட்டிவிடுவதுதான் மசாலாக்களிலுள்ள வசதி. ஆனால் கெடுதி - அதற்காக் கொட்ட வேண்டிய கோடிக் கணக்கான பணம். அதையும் மீறி வசூல் வரவேண்டுமே! மறுபாதியை ஓடிக் கடப்பதற்கு முதலில் நல்ல திரைக்கதை - ஸ்கிறீன் பிளே - வேண்டும். ஒரு திரைப்படத்தின் எலும்புக்கூடு அதுவேதான்! அதில் ஊனமிருந்தால் படமே தள்ளாடிவிடும். இங்கே சூரிய ஊன்றுகோலுடன் தள்ளாடித் தள்ளாடி வருவதைச் சொல்லவில்லை. பின்னே எதைச் சொல்கிறேனா? முதலில் படத்தின் பிரச்சினை - அதாவது - Conflict என்ன? நண்பனைக் கொன்ற நயவஞ்சகர்களைப் பழிவாங்குவது. அப்போ அநத் நட்பு முதலில் உயிருக்குயிரான நட்பாக உருவாகியிருக்க வேண்டும். - அது இல்லையே!

வில்லனுடனான மோதல் வலிந்து உருவாக்கப்படுகிறது. “வேலியில இருந்த ஓணானைக் கச்சைக்குள்ள விட்டிட்டுக் குடையுது குடையுதென்றால்...? டக்கரான ஒரு வில்லனைக் குண்டுக்கட்டாய்த் தூக்கி வந்து சொறிஞ்சுபோட்டு சும்மா விட்டால் விடுவானா? இந்த வீண் வம்பால் வில்லனின் கோபம் நியாயமாகிவிடுகிறதே! அத்தோடு நண்பனின் கொலைக்கான முதலாவது சந்தேக நபர் அவனென்பது பளிச்சென்று தெரிய, பிறகு ஏன் ஒரு சஸ்பென்ஸ் மூட்? இன்னொருபுறம் பொலிஸ் அதிகாரியின் மகளைக் கடத்தி - காதலித்து, அவரை



ஒரு வில்லனாக உசுப்பேத்திவிட்டுட்டு... அப்படியே ஆள் மிஸ்ஸிங்! (ஏன் கூடப் பணம் கேட்டானா நடிக்க..?)

பல தமிழ்ப் படங்களில் இப்படியொரு பிழை திரும்பத் திரும்ப நடக்கிறது. அது என்னவென்றால், “உண்மையில் என்ன நடந்தது,” என்பதை ஒருவர் மூலம் சொல்ல வைப்பது. சொல்பவனது மனநிலையிலும் சார்பு நிலையிலுமிருந்து அப்படி அவன் சொல்வானா என்று கொஞ்சமும் சிந்திக்காமல், பார்க்கும் பார்வையாளர்களுக்கு படம் எடுத்தவர் என்ன நடந்ததென்பதைச் சொல்ல எத்தனிப்பதுதான் அந்தத் தவறு. நண்பனுக்குத் துரோகம் செய்த சகாவே, தன்னைத் தானே மோசமானவனாகச் சித்திரித்து சூடு வாங்கிச் சாவதற்கு வழிகோலும் வகையில் நடந்ததை ஒப்புவிக்கிறான். ஆனால் இத்தகைய லொஜிக்கல் தவறுகளை நாம் பொருட்படுத்துவதில்லை - அதனால் அவர்களும் பொருட்படுத்துவதில்லை. திரும்பத் திரும்ப நடக்கிறது.

அதுசரி, நான் குறிப்பிட்ட காதல் நாட்டம் செய்யும் வேலையைப் பார்த்தீர்களா? ரௌடியைக் காதலிக்கும் காதலி! அதுவே அவனை ரௌடியே இல்லையென்று ஆக்கிவிடுகிறதில்லையா? இந்த டெக்நிக் நீங்கள் பார்க்கும் தொண்ணூற்றைந்து வீதப் படங்களிலும் வரும். நான் இதுதான் அது என்று சும்மா கைகாட்டி விட்டிருக்கிறேன். அவ்வளவுதான்!



VIP

வேலையில்லாப் பட்டதாரி

நடிகர்கள்: தனுஷ், அமலாபால், விவேக், சதீஷ்
இசை: அனிருத் ரவிச்சந்திரன்
தயாரிப்பு: தனுஷ்
இயக்கம்: வேல்ராஜ்

இதுவும் ஸ்டார் வால்யு கொண்ட மசாலாதான்! “ஒரு பானை வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு ஒரு தனுஷ் பதம்,” என்றவாறு அந்த மன உளைச்சல், விரக்தி, கோபம், எல்லாம் ஆரம்பத்தில் பொருத்தமாகவே சூப்பராகத்தான் இருந்தன. தனுஷ் இயல்பாகவே பிச்சு உதறக்கூடிய பாத்திரம். அவர் பிச்சு உதறும் வரை உதறட்டும் என்று அவர்பாட்டுக்கு விட்டாற்போல் படத்தின் பாதிப் படம்வரை இந்த நிலைமையை சித்திரிப்பதற்கான எஸ்டாபிளிஷ்மென்ட் தான்! தனுஷை Object of Desire ற்கு உந்தித்தள்ளும் அந்த Inciting Incident வரவே இல்லை. இடையிலே காதலிக்கு பிறந்தநாள் பரிசு வாங்குவதற்காக மட்டும் அவர் ஒரு திடீர் வேலையில் சேர்ந்து சம்பளம் பெற்ற கையோடு தூக்கி வீசிவிடுவது - இது

ஒன்றும் வேலை இல்லாப் பிரச்சினை இல்லை, தான் நினைத்த வேலை வேண்டும் என்கின்ற பிரச்சினை என்பதைக் காட்டிக் கொடுத்து விடுகிறது.

பாதிக்குப் பிறகு தாயின் மரணத்தின் வாயிலாக அவளது நுரையீரலை அங்கமாற்றம் செய்துகொண்ட ஒரு தொழிலதிபரின் மகளின் தயவால் தனுஷுக்குக் கிடைக்கிறது அந்த "படிப்புக்கேற்ற வேலை." "சுவீப் டிக்கெட் தீர்வு" என்பது இதைத்தான்! எல்லாம் இழந்துபோன நிலையில் ஒருவனைக் காப்பாற்ற கதாசிரியருக்கு இலகுவான வழி அவனுக்கு ஒரு சுவீப் டிக்கெட் விழ வைத்து விடுவது. அப்படி ஒரு சுவீப் டிக்கெட் விழுந்ததுபோல் தனுஷுக்கு வேலை கிடைக்கப் பண்ணி விட்டதால் அந்த Object of Desire சப்பென்று போய்விடுகிறது. அத்தோடு படம் ஒடிந்து, படத்தின் விடயம் திசை திரும்பி இப்போது அவனுள் புதைந்தி ருந்த எஞ்ஜினியரிங் திறமை மற்றும் நேர்மை என்பவற்றை வெளிப்படுத்தும் படம ாக இரண்டாவது படமொன்று நடக்கிறது. இதற்குக் குறுக்காய் நிற்கும் அந்த ஜுஜுபி வில்லனைக் கம்கட்டுக்குள் மடக்குவதுதான் படத்தின் குறிக்கோளாக இறுதிக் கட்டத்தில் எமக்குத் தெரியவர, "இதற்காகவா ராசா இத்தனை துன்பம்," என்று படத்தின் ஆரம்பத்தை எண்ணி நம்மை நாமே நோக வைக்கிறது.

இங்கும் பாருங்கள். காதல் நாட்டம் கதாநாயன்மேல் எமக்கு ஒரு விருப்பத்தை இலகுவாக ஏற்படுத்திவிடும் அதே காரியத்துக்காக மட்டுமே பயன்பட்டிருக்கிறது. (மற்றப்படி கதாநாயகிக்கு வெறும் வெட்டி வேலைதான் - சில டான்ஸ் சில ரொமான்ஸ்.)

மசாலாப் படங்களிலிருந்து விலக முயன்ற இந்த வேலை தெரிந்த பட்டதாரியை வழுக்கி விழுத்திவிட்டீங்க - போங்கடா!

ஜிகிர்தண்டா

நடிகர்கள்: சித்தார்த், லக்சுமி மேனன், சிம்ஹா, கருணாகரன்
இசை: சந்தோஷ் நாராயணன்
தயாரிப்பு: கதிரேசன் குறுப் கொம்பனி
இயக்கம்: காத்திக் சுப்புராஜன்

தென்கொரியப்படமான டேர்ட்டி கார்னிவல்" படத்தைத் தழுவி எடுத்துள்ளதாக விமர்சிக்கப் பட்டாலும் ஜிகர் தண்டா ரசிக்க வைக்கிறது. (எத்தனை பேர் கொரியப் படம் பார்க்கப் போகிறார்கள்?) என்ன, ஒரிஜினாலிட்டிக்கான முழுமை யான பாராட்டை கார்த்திக் சுப்புராஜனுக்கு வழங்க முடியாவிட்டாலும், பட ஆக்கத்துக்கும் உழைப்புக்கும் மெச்சலாம். படம் நிறைய டுவிஸ்டுகள்! கதையில் மட்டுமல்ல, படத்தின் ஜோர்னரிலும், வேகத்திலும், முடிவிலும் டுவிஸ்ட்டு. அதி க டுவிஸ்டுகள் படத்தைச் சிதைத்துவிடவும் கூடும் - ஆனால் அப்படி நேரவில்லை - அங்கே கெட்டித்தனம் தெரிகிறது. குறுந் திரைப்படப் போட்டியில் ஏற்பட்ட சவால் (Inciting Incident) எப்படியாவது ஒரு தாதாவின் இரத்தம் சொட்டும் உண்மைக் கதையொன்றை எடுத்து விடவேண்டுமென்ற உத்துதலை நாயகனுக்கு ஏற்படுத்திவிட (Object of Desire) உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு தாதாவை வேவுபார்க்கும் விபரீத விளையாட்டில் தொடங்கும் கதை, தாதாவிடம் மாட்டிக்கொண்டபோது "முடிந்தது கதை!" என்ற நிலைக்குப்போய் அங்கே அசால்ட்டாக ஒரு ட்டேர்ன் அடித்து அத் தாதாவுக்கே சினிமா ஆசையாக ம றுவது சற்று ரிலாக்ஸ் கொடுக்கிறது. ஆனால் தாதாவின் கதாநாயனாகும் ஆசை உண்மைக் நாயகனின் கரியருக்கே உலைவைக்கும் சவாலாக புதிய உருப் பெறுகிறது. அந்த மிரட்டலுக்கான எதிர்ப்பைத் தனது திரைப்படத்தில் ஏற்படுத்தும் டுவிஸ்ட்டின் மூலம் காட்டி தாதாவையே கமேடியனாக்கிவிடுகிற திறமை அந்த மிரட்டலுக்குப் பயந்திருந்ததை அர்த்பூர்வமாக்கிவிடுகிறது. கொலைகளிலும் சிரிக்க வைக்க முடியுமெனக் காட்டியிருக்கிறார் டைரக்டர்.



இதை ஒரு காமெடிப் படமாகவோ, திறிலராகவோ, வகை பிரிக்காமல் திறில் பகுதியில் திறிலாகவும் காமெடிப் பகுதியில் காமெடியாகவும் செய்து வித்தியாசம ான ஃபீல்களை ஏற்படுத்தியுள்ளார். ஆனால் படத்தின் நீளம்தான் பொறுமை சோதிக்கிறது. எடுக்கப்பட்ட ஷொட்டுகள் மீதான ஆசை கட்பண்ண விடவில் லைபோலும். (இரக்கமற வெட்டுபவன்தான் சிறந்த டைரக்டராவான்!) இப் படத்தில் கைவிடப்பட்ட ஒன்றே ஒன்று காதல்தான்! அக் காதல் ஏன் வந்தது, அதற்கு என்ன வலு, என் பங்கு, இறுதியில் என்ன ஆச்சு - எதற்குமே பதிலில்லை. Love Interest என்ற வழமையான, நாயகனுக்கு வலுச்சேர்க்கின்ற காரியத்தையும் அது ஆற்றவில்லை. இதுபோக, மாமூல் போர்மூலாக்களைத் தாண்டியும் படமெடுக்கலாமென்ற நம்பிக்கையில் எடுக்கப்பட்ட படம் என்பதுதான் இப் படத்தின் முக்கியத்துவம்.



சதுரங்க வேட்டை
நடிகர்கள்: நட்ராஜ், இஷாரா
இசை: ஷான் ரோல்டன்
தயாரிப்பு: மனோ பாலா
இயக்கம்: வினோத்

சதுசங்க வேட்டை

ஏமாறத் தயாராக உள்ள மக்களின் பேராசை, மூடத்தனங்களை ஆராயாமலே நம்பவைத்துவிடுகிறது. இதுவே ஏமாற்றுபவர்களின் வலுவான ஆயுதமாகவும் இருக்கிறது. ஏமாற்றுவதற்கு எத்தனையோ வழிகள்- பேராசையின் அளவுக்கும் மூடத்தனத்தின் தரத்துக்கும் ஏற்ப வெவ்வேறு வழிகள்! இவற்றை எடுத்துக் காட்டுகிறது படம். ஏமாறுபவர்களிலிருந்தே ஏமாறுபவர்கள் உருவாகிறார்கள். அதனால் அவர்களுக்கு ஏமாற்றுவதற்கும் ஒரு நியாயம் கிடைத்து விடுகிறது. அது அவர்களுக்கு தவறா+கப் படுவதில்லை. பதிலாக, தம்மை ஏமாற்றிய சமூகத்தி ற்கு தாம் வழங்கும் பதிலடி என்று அதை எடுத்துக்கொண்டு தம்மைத் தாமே நியாயப்படுத்திக் கொள்கிறார்கள். இதெல்லாம் சொல்கிறது படம்.

ஆனால் அது டாக்குமென்டரியாக, பிரசாரமாக, சம்பவக் கோர்வையாக அல்லாது - திரைக்கதை ஒன்றாக சீரமைக்கப்பட்டு, திரைப்படமாக முகிழ்ந்தி ருக்கிறதா என்று பார்த்தால், "ஆம் ஆனால் இல்லை" என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. "ஆம்" என்பதைப் பார்வையாளர்களுடனான திரைப்படத்தி ன் கனெக்ஷன் மற்றும் எதிர்வினை என்பன நியாயப்படுத்தி நிற்கின்றன. அது நாம் தினமும் பார்க்கின்ற, கேட்கின்ற ஏமாற்று வேலைகளை அந்தக்கணமே நினைவுபடுத்திச் செல்கின்றது. பல பார்வையாளர்களுக்கு அவற்றில் சில சொந்த அநுபவங்களாக வாய்த்திருப்பதற்கான வாய்ப்பும் நிறையவே. ஆனால் அவ் ஏம ாற்றுக்களில் ஏமாறுபவர்களை விழவைப்பதற்கான ஏற்பாடுகள் போதாமையும், அவர்கள் ஏமாறுவதற்கான படிப்படியான கட்டங்கள் செதுக்கப்படாமையும், சொடுக்குப் போடுவதுபோல் எல்லோரையும் இலகுவாக ஏமாத்திவிடலாமெ ன்ற "அதீத சூரத்தனைத்தை" கதாநாயகனுக்கு வழங்கியிருக்கிறது - இது இல்லை என்று எண்ண வைக்கிறது.

இப்படத்தில் காதல் நாட்டம் என்ற உத்தி கச்சிதமாய் வேலை செய்திருப்பதை அவதானித்தீர்களா? "வில்லனான கதாநாயகனிடம்" நமக்கு ஒரு பிடிப்பை ஏற்படுத்துவதில் கதாநாயகிக்கு அவனில் ஏற்படும் காதல் ஒரு இலகுவான சாதனமாக செயற்பட்டுள்ளதல்லவா?

சன்ற இதழில் ஒரு திரைப்படத்துக்கு ரிப்பீட்டட் ஆடியன்ஸை வரவைக்கும் விடயங்களில் "புத்திக் கூர்மை"யும் ஒன்றெனச் சுட்டிக்காட்டியிருந்தேன். அது இத் திரைப்படத்தில் சிறப்பாகச் செயற்பட்டுள்ளது. அதுவே இப்படத்தின் வெற்றிக்கும் வழிகோலியது.



நேற்று இன்று

நடிகர்: விமல், பிரசன்னா, நந்தகி, அருந்ததி
இசை: ரெஹான்
இயக்கம்: பத்மாமகன்
தயாரிப்பபு: எஸ். மாலதி, எஸ். தணிகைவேல்

வீரப்பன் படம்! தவறு வீரப்பனுக்குப் பின்னால் தொடுக்கப்பட்ட படம். வீரப்பனை உளவுபார்க்க அனுப்பப்பட்டவன் வீரப்பனின் ஆளாக ம றிவிட்டானென சந்தேகிக்கும் பொலிஸ் வீரப்பனைக் கொன்றபின் உளவாளியைக் கொல்ல சில பொலிசாரை அனுப்புகிறது. அக் காட்டுக்குள் ஒரு விபச்சாரி. அவளுன் கூத்தடித்தபடிவீரப்பன் ஒளித்து வைத்த புதையல் பணத்தையும் சுருட்டிக்கொண்டு உளவாளியைத் தேடிப் பிடித்துக் கொல்கிறது. ஆனால் அவ் உளவாளி தவறு செய்யவில்லை என்று அறிந்த ஒரு நல்ல பொலிஸ், கிடைத்த பணத்தில் ஒரு பங்கைத் தி ருடி உளவாளியைப் புதைத்த இடத்தினருகே தாட்டு வைத்துவிட்டு, அவனின் தங்கைக்கு கடிதம் எழுத அவள் ஒரு குடிகார வுமனைசரான காரோட்டியைக்குப் பணம் கொடுத்து அதை எடுக்க வருகிறாள். கொண்டுவந்த பணம் இடையில் தொலைய, கொண்டுபோய்ச் சேர்த்தால் தன்னுடன் 3 தடவை படுக்க வேண்டுமென்ற அசிங்கமான கோரிக்கைக்கு இணங்குகிறாள். போய்ச் சேர்ந்து புதையலை எடுத்தபின் இப்போது அவனது கூலியைக் கொடுக்கப் பணம் வந்துவிட்டதால் அக் கோரிக்கைக்கு இணங்கத் தேவையில்லை. ஆனால் அவளோ அவனுடன் முன் ஆசனத்தில் அமர்ந்து அவனின் காதலியாக ஆகிவிடுகிறாள். பாருங்களேன். அத்தனை மோசமான பேர்வழியை லவ் பண்ண வைத்தவுடன் எல்லாம் கழுவப்பட்டு நல்லவனாய்த் தெரிகிறான் நமக்கு - இதுதானே அந்த லவ் இன்ரஸ்ட் என்ற சினிமா டெக்னிக்கின் மாஜிக்! இது இப்படியாகிப்போக, அங்கே காட்டில் விபச்சாரப் பெண்ணாய் வந்தவள் இன்னொரு பொலிஸ் உளவாளி என்று காட்டி பொலிஸ் குழுவின் பணச் சுருட்டலைப் பிடித்துவிடுவதாக கடைசியில் ஒரு திருப்பம் வேறு!

இரண்டு கதை - ஒன்று நேற்று, மற்றது இன்று; இரண்டிலுமே பச்சை ஆபாசம் தான் நிரம்பியிருக்கிறது கதையைச் செலுத்துவதற்கு. அதைமட்டும் எடுத்துவிட்டால் கதை எஞ்ஜின் கோளாறுகண்ட அவனது கார் போல எங்கோ ஒரு காட்டுக்குள் குலுங்கி நின்று அசைய மறுக்கும். வெறும் வீரப்பன் என்ற பிரபலமான கொள்ளைக்காரனின் பெயரை இணைத்துக்கொண்டு மீதிக்கு இரண்டு பெண்களைக் காட்டி ஓடவைத்துவிடலாமென்ற மொக்கைக் கணக்கு.

நல்லது மக்களே. திரைப்பட ரசனையில் இந்தமுறை Love Interest - காதல் நாட்டம் பற்றி அறிந்துகொண்டோம். அதை முன்னர் அறிந்த மற்றய விடயங்களோடு அடுக்கி வைத்துக்கொள்ளுங்கள். அடுத்த தடவை இக் காதல் நாட்டத்தைப் போலவே திரைப்படத்தில் இன்னொரு பங்காற்றுகின்ற Buddy என்கின்ற கூட்டாளி பற்றிப் பார்ப்போம்.

உடலோவியம்!





மனிதன் ஓவியம் வரைவது நமக்கெல்லாம் தெரிந்த கலை. ஆனால் மனிதனையே ஓவியமாக்குவது இங்கு புதிய கலை. ஒரு மனிதனில் ஓவியம் வரைவதல்ல. பல மனிதர்களைச் சேர்த்து வைத்து ஓவியம் புனைவதுதான் இங்கு விசித்திரம். அப்படி அனைவரையும் கூட்டமாக ஒன்று குவித்துவைத்து அவர்கள்மேல் ஓவியம் வரைவதல்ல – அதுகூட சுலபமெனலாம். ஆனால் இங்கே தனித்தனி மனிதர்கள் மீது அவர்கள் உடம்பில் அமையவேண்டிய ஓவியத்தின் குறித்த பகுதியை மட்டும் வரைந்து, அவர்கள் இறுதியாக என்ன வடிவத்தை அமைக்கப் பேகிறார்களோ, அப்படி அமைக்கும்போது மொத்த ஓவியமாக வெளிப்படச் செய்கிறார்கள். இப்படி இவர்கள் உடம்பில் தனித்தனியாக ஒரு காட்சியின் பகுதிகள் வரையப்பட்டிருக்கும்போது, கலைந்திருக்கும் அவர்களைப் பார்ந்தால் என்ன உடலில் வரைந்திருக்கிறார்களென்று புரியாத புதிராகத்தான் இருக்கும். உதாரணத்துக்கு ஒருவர் ஒரு கார் டயரின் ஒரு மூலையை மட்டும் உடலில் வரைந்து வைத்திருப்பார். அது ஏதோ ஒரு கறுப்புப் பூசியிருப்பதுபோல இருக்கும். ஆனால் அவர்கள் திடீரென ஒன்று கூடி ஒரு வடிவமாய் காட்சி தரும்போது, அவர்கள் அனைவரது உடம்பில் வரையப்பட்ட பகுதிகளெல்லாம் ஒன்று சேர்ந்து நாம் எதிர்பார்க்காத ஓர் ஓவியமாக காட்சிதரும். இந்தக் கலையில் வியக்க வைப்பது என்னவென்றால் எவரெவரது உடலில் ஓவியத்தின் எந்தெந்தப் பகுதியை வரைவதென்பதை முற்கூட்டியே திட்டமிட்டும் கச்சிதமான கணிப்பும், அவர்கள் இம்மியும் இடம் மாறாமல் தத்தம் நிலையில் நின்று அந்த ஓவியத்தை வியத்தகு வகையில் வெளிப்படுத்தும் முறையுமே. பாருங்கள், நவீனத்துவம் கலையில் எப்படியெல்லாம் செயற்படுகின்றதென்று! ஆம், கலைக்கு எல்லையே இல்லை!







கூந்தல்



கூந்தலை அழகு படுத்துவதற்கு தொன்றுதொட்டு எத்தனையோ பிராயத்தனங்களை மனிதகுலம் எடுத்து வருகிறது. இதற்கான எத்தனையோ ஆராய்ச்சிகள், சோதனைகள் எல்லாம் நிகழ்த்தி விதம் விதமான தைலங்கள் அழகு நிலையங்களின் ஷோகேஸ்களில் அடுக்கிக் கிடக்கின்றன. இருந்தபோதிலும் எம் அத்தனை பிராயத்தனங்களையும் மீறி முடி உதிர்வது எம்மை விஞ்சிய இயற்கையின் சவாலாகி நிற்கிறது.

எனவே தலை முடியின் இரகசியம் என்ன என்ற அடிப்படை அறிவுயடனேயே நாம் அதைப் பராமரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

நம் ஒவ்வொரு முடியும் Hard Protien என்று சொல்லப்படும் Keratin ஆல் உருவாக்கப்படுகின்றது.

இந்தமுடியானது Hair

ical எனும் சிறிய குழாயில் இருந்து வளர்கிறன்றது. எமது தலையில் சுமார் 500000 முடிகள் உள்ளன. அவை ஒரு நாளில் 0.33 மில்லிமீற்றர் (1/60) வளர்கின்றது. இந்தக் குழாய் இரண்டாவது தோல்படை என்று சொல்லப்படும். D-ermis எனும் பகுதிக்கு ஆழமாக செல்லுகின்றது. இந்த முடியின் வேர் Dermal குருதிக்குழாயுடன் தொடர்பு கொள்ளுகின்றது. குருதிக்குழாய்களிலிருந்து எல்லாவிதமான ஊட்டச்சத்துக்களைமும் தலைமுடி பெற்றுக்கொள்கின்றது.

21 வயது வரை எமது உடல் ஊட்டச்சத்தை இயற்கையாக பெற்றுக்கொள்கிறது . அதற்குப்பிறகு நாம் தான் ஊட்டச்சத்தை அதற்கு வழங்க வேண்டும்.இந்த வயதிற்குப் பிறகே தலைமுடி உதிர்வது அதிகமாகக் காணப்படும். இலங்கை மக்களுக்கு கருமையான தடித்த முடி வளர்வதற்குக் காரணம் நாம் வெப்பமான நாட்டில் பிறந்ததால் தான். ஆனால் இன்று குளிர் நாட்டில் கனடாவில் வாழும் பிறக்கும் சந்ததியினருக்கு முடியின் அடர்த்தி குறைந்து கருமைகுறைவாகவும் இருக்கின்றது.

சில காரணிகால் தான் எமக்கு இளநரை தலைமுடி உதிர்வு ஏற்படுகின்றது.

1 காலநிலை

2 வயது

3 பரம்பரை இயல்பு

4 வைட்டமின் குறைபாடு

5 சுடுநீரில் நீராடல்

6 மனஅழுத்தம்

7 உணர்ச்சிகர அதிர்ச்சி

— சுஜிதா —

ஒருவரின் தலைமுடியையும் அவருடைய முகத்தின் தோலையும் வைத்து அவர் எந்த எவ்வளவு சுகதேகியானவர் எனக்கணிப்பிடலாம்.இனி எவ்வாறு நாம் எமது தலைமுடியை பாதுகாக்கலாம் குன்று பார்ப்போம்.

1 ஊட்டச்சத்துக்களை எடுக்கவேண்டும் (Organic Vitamins)-Vitc, VitB12 ,Protien Powder, Omega3, Iron, Biotien

2 தலைமுடி மசாஜ்(கிழமைக்கு ஒருதடைவை)

3 குளிர்காலத்தில் தொப்பி அணிதல்

4 சில பசளைகள் விட்டு தலைமுடிக்கு மசாஜ் செய்தல்.

புரோட்டின் என்பது நமத உடலுக்கு மிக முக்கியமான சத்தாகும்.

தலைமுடி வளர்ச்சியும் தோலின் தன்மையையும் புரதம் நிர்ணயிக்கிறது.

இதில் உள்ள கரட்டீன் என்ற புரதம் தலைமுடி உருவாவதற்கு மூலகாரணமாக அமைகின்றது.

புரதம் உண்ணும் போது தலைமுடி உதிர்தல், வழுடி வளர்ச்சி குறைபாடு போன்றவைகளைக் கட்டுப்படுத்தி நன்றாக முடி வளர உதவுகின்றது.


செவ்வாயில் நாசா

2004 ஜனவரியில் ஒப்பேர்சுனிட்டி என்ற ரோபோ செவ்வாய்க் கிரகத்தில் கால் பதித்தபோது, நாசா விஞ்ஞானிகள் அதன் ஆயுளை வெறும் 90 நாட்களென்றே கணக்கிட்டிருந்தார்கள். ஆனால் அதுவோ அந்த மூன்று மாதங்களை மளமளவென்று தாண்டித் தன்பாட்டுக்கு ஓடி ஓடி ஆராய்ச்சியைத் தொடர்ந்து கொண்டே போக, மூக்கில் விரலை வைத்தபடி விஞ்ஞானிகள் பார்த்துக்கொண்டே இருக்க, அதுவோ பல வருடங்களையும் தாண்டி இப்போது பத்தாவது வருடத்தையும் கண்டுவிட்டு ஜம் என்று நிற்கிறது.



இந்த ஒப்பேர்ச்சுனிட்டி ரோபோவின் அண்ணனான ஸ்பிரின்ட் என்ற ரோபா ஒப்பேர்ச்சுனிட்டிக்கு இரண்டு வாரம் முன்னதாக செவ்வாயில் தரையிறங்கியிருந்தது. அதுவும் எதிர்பார்ப்பை மீறி 2010 வரை அயராது உழைத்து, துரதிர்ஸ்ட வசமாக இடக்கு முடக்காக ஏதோ படுகுழிக்குள் மாட்டி முடங்கிப் போனது.

ஆனால் அதன் தம்பி ஒப்பேர்சுனிட்டியோ, இன்றுவரை சளைக்காமல் வேலை செய்தபடியே இருப்பதுடன் புதிய பல ஆதாரங்களை அனுப்பியபடியே உள்ளது. அது தற்போது அனுப்பியிருக்கும் ஆதாரங்கள், செவ்வாய்க் கிரகத்தில் உயிரினங்கள் வாழும் சூழல் இருந்திருப்பதற்கான சாத்தியங்களை மேலும் வலுவூட்டுகின்றன.



தற்போது அது அனுப்பிய ஆதாரங்கள், முன்னய காலத்தில் செவ்வாயிலிருந்ததாக அறியப்பட்ட ஈரலிப்புத் தன்மையை விட பழமை வாய்ந்ததாகவும், அமிலத்தன்மை குறைவானதாகவும் காணப்படுவதாக தெரிவிக்கின்றன. இவையே அங்கு நுண்ணுயிர்கள் வாழ்வதற்குச் சாதகமாக கண்டறிந்த ஆதாரங்களில் மிக நெருங்கியவை . இப்படியாக ஒப்பேர்சுனிட்டி ரோபோ அனுப்பி வைத்துக்கொண்டிருக்கும் புதிய ஆதாரங்கள் என்றாவது ஒரு நாள், அங்கு உயிர் வாழ்ந்த உயிரினமொன்றைக் கண்டுபிடிக்க வைத்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

இன்னொன்று. 2030ல் மனிதர்களை செவ்வாய்க் கிரகத்துக்கு அனுப்பி வைக்கத் திட்டமிட்டுள்ளது நாசா. ஒப்பேர்ச்சுனிட்டி ரோபோ தரும் புதிய ஆதாரங்கள் அத் திட்டத்தை விரைவுபடுத்திவிடக் கூடும் என்றும் எதிர்பார்க்கிறார்கள். என்ன, "சந்திரனுக்குப் போறவங்கெல்லாம் முன்னால ஏறு, செவ்வாய்க்குப் போறவங்கெல்லாம் பின்னால ஏறு," என்று கூவி அழைத்தபடி ஸ்பேஸ் பஸ் ஒன்று விண்வெளிக்குப் புறப்படுவது மனக்கண்ணில் தெரிகிறதா? பாவம் நீங்கள். அதுக்கு மில்லியன் டொலர் டிக்கட்டாயிருக்கும். ஸோ வாட்? என்கிறீர்களா? அது சரி! ஹெலியில மாப்பிள்ளை இறக்கும் நமக்கு இதெல்லாம் ஜுஜுப்பி!



நலம் தரும் முத்திரைகள்

இந்தக் கட்டுரையில் நாள்பட்ட நோய்களுக்கான முத்திரைகளைப் பற்றி ஆராய்வோம்

நாள்பட்ட நோய்கள்:

1. நீரிழிவு நோய்
2. உயர்ந்த அழுத்தம்
3. வயிற்றுப் புண்
4. பக்கவாதம்
5. மூட்டு வலிகள், முதுகுவலி
6. ஆஸ்துமா
7. சைனஸ் நோய்
8. அலர்ஜிகள்
9. மன இறுக்கம்
10. மைகிரேன் தலைவலி
11. போதைப் பழக்கம்

மேலே பட்டியலிடப்பட்ட நோய்கள் பெரும்பாலும் பலவருடங்களாக உள்ள தவறான உணவு முறைகள், வாழ்க்கை முறைகள், வாசமுறைகள், உணர்வு நிலைகள் ஆகியவற்றாலேயே உருவாகியிருக்கும். இவற்றை ஒரே நாளில் சரி செய்து விட முடியாது. தொடர்ந்து செய்யும் முத்திரைப் பயிற்சிகளால் படிப்படியாக குறைக்க முடியும்.

முதலில் நீரிழிவு நோய்க்கான முத்திரைகளைப் பற்றி ஆராய்வோம்.

இந்த நோயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரக்கூடிய விசேட முத்திரைகள் 5 உள்ளன. இவை எல்லாவற்றையும் செய்யவேண்டிய அவசியம் இம்முத்திரைகள் வேறு பல நோய்களுக்கும் உதவக்கூடியதான இருப்பதால் உங்கள் தேவைக்கு ஏற்ப தெரிந்து கொண்டு செய்யலாம்.

1. சூரிய முத்திரை
2. பிராண முத்திரை
3. அபான முத்திரை
4. ஞான முத்திரை
5. லிங்க முத்திரை

சூரிய முத்திரை

இது சூரியனை குறிக்கின்றது. இந்த முத்திரை நமது உடலில் உள்ள செல்களும் உறுப்புகளும் நலமாக இயங்க வெப்ப சக்தியைக் கொடுக்கின்றது. உடலில் வெப்பநிலை சீராக இருந்தால்தான் நமது உடல் நலமும் சீராக இருக்கும். இந்த நிலை சீராக இருந்தால் நீரிழிவு நோய் முதலிய நோய்கள் அணுகாமல் பார்த்துக்கொள்ளலாம். அத்துடன் இந்த நோயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரலாம்.

செய்யும் முறை:




மோதிரவிரலை(நான்காவது) மடித்து அதன் நுனிப்பகுதியால் பெருவிரலின் கீழ் பாகத்தை (3ஆவது கோடு இருக்குமிடம்) தொடவும். அதிக அழுத்தம் வேண்டாம். இலேசாக தொட்டுக்கொண்டு இருந்தால் போதும். அடுத்து பெருவிரலை மடித்து மோதிரவிரலின் மேல்வைத்து மிதமான அழுத்தம் கொடுக்கவும்.

மற்றய 3 விரல்களும் வளைவின்றி நேராக இருக்கட்டும்.

இரு கைகளிலும் ஒரே நேரத்தில் செய்யவேண்டும். தரையில் அமர்ந்தோ, அல்லது ஒரு நாற்காலியில் அமர்ந்தோ இந்த முத்திரையைச் செய்யலாம். குறைந்த பட்சம் இந்த முத்திரையை 8 நிமிடங்கள் செய்யவேண்டும்.

இந்த முத்திரையால் அடையக்கூடிய பிறநன்மைகள் உடல் உறுதியாகும். செரிமான சக்தி அதிகரிக்கும், இதயம் வலுப்படும். தைராய்டு குறைபாடு மறையும். உடல் எடை குறையும். கொலஸ்ராலின் அளவும் குறையும்.

பிராண முத்திரை



பிராணசக்தியே உயிர்க்குறுதி. உடலை இயக்குவதும் உடலுக்கு உயிர் ஊட்டுவதும் இந்த பிராணனே. பிராண சக்தி உடலில் குறைபடும் போது உடல் வலுவிழக்கும். உடலின் செயல்திறன் குன்றும் நோய்களும் உருவாகும். இந்த நிலையை தடுக்க பிராணமுத்திரையை தொடர்ந்து செய்து வரவேண்டும்.

செய்யும் முறை:

பெருவிரலின் நுனிப்பகுதியால் மோதிரவிரல், சுண்டுவிரல்(சிறுவிரல்) ஆகியவற்றின் நுனிப்பகுதிகளை தொடவும். ஏனய 2 விரல்களும் வளைவின்றி நேராக இருக்கட்டும். இரண்டு கைகளிலும் ஒரே நேரத்தில் செய்யவும். இந்த முத்திரையை தரையில் அமர்ந்தோ, அல்லது நாற்காலியில் அமர்ந்தோ செய்யலாம். ஆனால் நாற்காலியில் அமர்ந்து செய்யும் போது கால் பாதங்கள் இரண்டும் தரையைத் தொட்டபடி இருக்கவேண்டும். நீண்ட நாட்களாக நோய்வாய்ப்பட்டு படுத்தபடுக்கையில் இருப்பவர்கள் இந்த முத்திரையை படுத்துக்கொண்டே செய்யலாம். ஒரு நாளில் 48 நிமிடங்கள் முடிந்தால் செய்யவும். இதை 3 நேரமாக பிரித்தும் செய்யலாம்.

இந்த முத்திரையால் பெறக்கூடிய வேறு பல நன்மைகள். உடலும் மனமும் அமைதியடையும். உடலில் சக்தி பெருகும். மனவலிமை அதிகரிக்கும். கண்பார்வை கூர்மையடையும். கண்நோய்கள் மறையும்.

அபான முத்திரை




பிராணவாயுவுக்கு அடுத்த படியாக மிகமுக்கியமான வாயு அபானவாயு வாகும். அதை சீர்செய்யும் முத்திரையே அபான முத்திரை. இந்த முத்திரை நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதில் மிக முக்கிய இடத்தைப் டுக்கிறது. உடலில் உள்ள கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதே அபானனின் மிக முக்கியமான பணியாகும். அபான வாயு ப்போதும் மது உடலில் சமனான் நிலையில் இருக்வேண்டும்.

செய்யும் முறை:

நடுவிரல் மோதிரவிரல் இரண்டையும் பெருவிரலின் மேற்பாகத்தில் மிதமான அழுத்தம் கொடுக்கவேண்டும். ண்டுவிரல் ட்டுவிரல் இரண்டும் வளைவின்றி நேராக இருக்கவேண்டும். இரண்டு கைகளும் ஒரே நேரத்தில் செய்யவும். தரையில் அமர்ந்தும் செய்யலாம் அல்லது ஒரு நாற்காலியில் அமர்ந்து கால் பாதங்கள் நிலத்தைத் தொட்டபடி இருந்தும் செய்யலாம். இந்த முத்திரையை 45 அல்லது 48 நிமிடங்கள் செய்யவும். ஒரே நேரத்தில் தொடர்ந்து செய்யாமல் மூன்றாகப் பிரித்ம் செய்யலாம். இந்த முத்திரை செய்வதால் பெறக்கூடிய வேறு பல நன்மைகள் மலச்சிக்கல் மறையும். வாயுத்தொல்லைகள் அகலும். பல்வேறு வலிகள் குறையும். சுவாசக்குழாய்கள் உறுதியாகும். இன்னும் பலநன்மைகள் இதனால் பெறலாம்.

ஞான முத்திரை



ஞனமுத்திரைக்கு 'சின்முத்திரை' 'சின்மயமுத்திரை' என்று வேறு பெயர்களும் உண்டு. மனதையும் எண்ணங்களையும் பக்குவப்படுத்தி நம்மை ஞானப் பாதையில் கொண்டுசெல்ல உதவும் ஒரு முத்திரை இது.

செய்யும் முறை:

பெருவிரலின் நுனிப்பகுதியை சுட்டுவிரலின் நுனிப்பகுதியால் தொடவும். பிற 3 விரல்களும் வளைவின்றி நேராக இருக்கட்டும். இரண்டு கைகளிலும் ஒரே சமயத்தில் செய்யவும்.

தரையில் சம்மணமிட்டு அமர்ந்து செய்யலாம். அல்லது ஒரு நாற்காலியில் அமர்ந்தும் செய்யலாம். ஆனால் பாதங்கள் தரையை தொட்டுக்கொண்டு இருப்பது அவசியம்.

ஒரு நாளில் 48 நிமிடங்கள் செய்யும்போது தான் ஞான முத்திரையின் பலன்கள் கிடைக்கும். இந்த முத்திரை செய்வதால் பெறக்கூடிய பலன்கள் மனமும் சிந்தனையும் ஒருமுகப்படும்.நினைவாற்றல் அதிகரிக்கும். மூளை று றுப்பாகும். இரவு படுக்கப்போகும் முன் செய்தால் மனம் அமைதி பெறும். அருமையான தூக்கம் வரும்.

லிங்க முத்திரை



'லிங்க' ஒரு சமஸ்கிருதச் சொல். லிங்க முத்திரை என்று பெயர் வருவதற்கு காரணம் இது உடலின் வெப்பத்தை கூட்டுவதற்கு வெப்பநிலையில் கருத்தைக் கொண்டுவருகின்றது. இந்த முத்திரையை பொதுவான ஆஸ்துமா நோயாளிகள் செய்யக்கூடாது.

செய்யும் முறை:

இந்த முத்திரையை நிலத்தில் அமர்ந்தோ அல்லது நாற்காலியில் இருந்து கொண்டோ செய்யலாம்.

இரு கைகளையும் உடம்பின் முன்பகுதியில் வைத்துக்கொள்ளவும். பின்பு இருகைகளையும் படத்தில் காட்டியபடி பிணைத்துக்கொள்ளுங்கள். இடது பெருவிரல் மேல்நோக்கி நேராக இருக்கவேண்டும். அந்த விரலை வலது கையின் ஆள்காட்டி விரல் (2ஆவது விரல்) பெருவிரலும் ற்றி இருக்கவேண்டும். 15 நிமிடங்கள் இந்த முத்திரையில் இருக்கவும். இந்த முத்திரை செய்வதால் நீரிழிவு நோய் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படுவதுடன் தடிமலுக்கு நிவாரணம் கொடுக்கின்றது. உடலின் நோய் திர்ப்பு சக்தியைக் கூட்டுகின்றது. அத்துடன் உடல் டையயும் குறைக்க உதவுகின்றது.

அடுத்த இதழில் உயர் இரத்த அழுத்தத்தை குணப்படுத்தும் முத்திரைகளைப் பற்றி விளக்குகின்றேன்.

கூகுளில் ஆபாசத் தளங்களைத் தடுப்பது எப்படி?



நாம் வீட்டில் இல்லாத போது குழந்தைகள் ஆபாச தளங்கள் பார்க்காமல் தடுக்க வழி இருக்கிறது. முதலில் கூகிள் தளம் சென்று உங்கள் யூசர் நேம், பாஸ்வேர்ட் கொடுத்து லொக் இன் செய்யுங்கள். பிறகு settings தேர்வு செய்து search settings கிளிக் செய்யுங்கள். அல்லது http://www.google.com/preferences ஒபன் பண்ணுங்கள். Safe search Filtering சென்று உங்களுக்கு தேவையானவாறு நிறுவுங்கள்.


அடுத்து Safe SearchFiltering கீழே உள்ள Lock safe search கிளிக் செய்துகொள்ளுங்கள். Locking Process நடைபெறும். பிறகு Safe search Locked என்று தோன்றும்.

சரியாக Lock ஆகா விட்டால் மீண்டும் ஒரு முறை சென்று Lock safe search கொடுங்கள். அவ்வளவுதான் இனி ஆபாசம் சம்மந்தமான எந்த தகவலும் தடுக்கப்பட்டுவிடும். இதன் பிறகு google search பக்கத்தில் நீங்கள் Lock செய்த அடையாளமாக வண்ண பந்துகள் தோன்றும்.

நீங்கள் இதனை Unlock செய்ய வேண்டுமா? ஏன்? சரி உங்கள் இஷ்டம். மீண்டும் Search setting சென்று unlock என்று மாற்றிவிடுங்கள்.

-MJM Sarthar

நிலவில் மனிதனா?



அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான "நாசா" வெளியிட்ட வீடியோ படம் ஒன்றில் நிலவில் மனித உருவம் நடப்பதுபோன்ற காட்சிகள் உள்ளன. அது வேற்றுக் கிரக வாசியாக இருக்கலாமோ என்று சந்தேகிக்கப்படுகிறது. இதுதொடர்பான விவாதங்கள் இணையத்தில் சூடுபிடித்துள்ளன.

நிலவில் உயிரினங்கள் இருக்கின்றனவா என்பதைப் பற்றி நாசா பல ஆண்டுகளாக ஆய்வு செய்து வருகிறது. அதுதொடர்பாகச் சில வீடியோ காட்சிகளை நாசா சமீபத்தில் வெளியிட்டது. அதில் நிலவில் ஓர் உருவம் நடப்பதுபோன்ற காட்சிகள் இருக்கின்றன.

இந்த வீடியோ காட்சிகளை ஒருவர் "யூ டியூப்" தளத்தில் பதிவேற்றினார். பதிவேற்றிய சில நாட்களிலேயே சுமார் 20 லட்சத்துக்கும் அதிகமான பார்வையாளர்கள் அதைப் பார்த்திருக்கிறார்கள். இது ஒளியைக் கொண்டு செய்யப்பட்ட மாயம் என்றும் அந்த வீடியோ காட்சியை எப்படி பல்வேறு விதத்தில் விளக்க முடியும் என்பது குறித்தும் ஒரு கட்டுரையை அந்த வீடியோ காட்சியுடன் சேர்த்து யூ டியூப் தளம் வெளியிட்டுள்ளது.

அந்த வீடியோவில் மனித உருவம் போன்ற ஒன்று நடப்பது போன்ற காட்சிகள் இருக்கின்றன. இதைப் பார்த்த பலர் விண்வெளியில் வேற்றுக் கிரக வாசிகள் இருக்கலாம் என்று கமெண்ட் செய்துள்ளனர். இந்த வீடியோ காட்சி குறித்து இதுவரை நாசா எதுவும் சொல்லாத நிலையில், பெரும்பாலான பார்வையாளர்கள் இதை புகைப்பட ஜாலம் என்று கூறி ஹஏலியன்" கருத்தை மறுத்துள்ளனர்.

பிளாஸ்டிக் அரிசி



ஆட்டில கை வைச்சு, மாட்டில கை வைச்சு மனிசனிலேயே கை வைச்சுட்டாம்பா - என்று நாங்கள் தலையில அடிச்சுக்கொள்ளு வோமே, அப்பிடி ஒரு விடம் இது! எங்கள் வயிற்றை நிரப்புகிற சோற்றிலேயே வைச்சான் பாரு கை! ஆமாம், பிளாஸ்ரிக் அரிசி செய்து மலிவு விலையில் கூவி விற்கிறார்களாம் சீனாவில்.

உருளைக் கிழங்கு, வத்தகக் கிழங்கு (ஸ்வீட் பொட்டாட்டோ) , பிளாஸ்டிக் என்பவற்றைக் கலந்து இந்த செயற்கை அரிசியைத் தயாரிக்கிறார்களாம். முதலில் உருளைக் கிழங்கை அரிசி மணி வடிவில் சுண்டி எடுத்துக் கொள்வார்கள். பின்னர் பிளாஸ்டிக் மற்றும் செயற்கைப் பதார்த்தங்களை கலக்கிறார்கள்.

சீனாவின் ஷாங்ஹை மாகாணத்தில் இந்தப் போலி அரிசி விற்ப னை பெருமளவில் மேற்கொள்ளப்படுகிறது. அது பிற நாடுகளு க்கும் இரகசியமாக ஏற்றுமதி செய்யப்படுவதாக அஞ்சப் படுகி றது. எதற்கும், மலிவாய்க் கிடைக்கிறதே என்று எதையும் ஆரா யாமல் வாங்குகிற பழக்கமுடையவர்கள் இனி மாற்றிக்கொள்வ து நல்லது!

இனிய வாசகர்களே!

நம்மவர் பக்கத்திற்காக நீங்கள் அனுப்பும் நிகழ்ந்த, நிகழவுள்ள நிகழ்ச்சிகள் பற்றிய விபரங்களை படங்களுடன் எமது மின்னஞ்சலுக்கோ, அலுவலகத்திற்கோ அனுப்பிவைக்கலாம். நீங்கள் அனுப்பும் விபரங்களை முடிந்தளவு சுருக்கமாகவும், தட்டச்சுசெய்தும் அனுப்புங்கள்.

நீங்கள் அனுப்பும் விபரங்களை தயவுசெய்து மாதத்தின் மூன்றாவது வாரத்தின் முடிவுக்கு முன்னர் அனுப்பிவையுங்கள்.

நன்றி.

முகவரி



கடந்த இரு இதழ்களில் முதியோர் நலன் பகுதியில் நாம் சிலபல ஓய்வூதியத் திட்டங்கள் பற்றிப் பார்த்தோம். அவை குறித்து எம்மிடம் பலர் தொடர்பு கொண்டு சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொண்டார்கள். அத்துடன் இத் தகவல்களைத் தருவதற்கு பாராட்டுத்தெரிவித்த அன்பர்களுக்கு நாமும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். இந்த இதழில் நாம் கனடாவில் கிடைக்கின்ற முதியோர்களுக்கான பொருளாதார உதவிகள் பற்றிய தகவல்களைப் பகிந்து கொள்வோம். இப் பொருளாதார உதவிகளை உரியவகையில் ஈட்டிப் பயன்பெற்றுக் கொள்ளுங்கள்.

முதியோர் பொருளாதார–திட்டமிடல் உதவிகள்

பொருளாதார உதவி

ஒன்ராரியோ வேர்க்ஸ் - Ontario Works

ஒன்ராரியோ வேர்க்ஸ் எனும் உதவி நிலையம் கனடாவின் ஒன்ராரியோ மாநிலத்தில் உணவு, வாடகை போன்ற அடிப்படைத் தேவைகளுக்கான நிதி உதவிகளை வழங்கி வருகிறது. இவ்வாறு நீங்கள் பெறக்கூடிய நிதியுதவியின் அளவு உங்கள் குடும்பத்தவரின் எண்ணிக்கை, உங்கள் வருமானம், உங்கள் சொத்து விபரம் மற்றும் வீட்டு வசதிகள் என்பவற்றைக் கொண்டு தீர்மானிக்கப்படும். இதுகுறித்த ஆலோசனைகளை நீங்கள் உள்ளூர் வேலைவாய்ப்பு மற்றும் சமூக சேவைகள் (Employment and Social Services) அலுவலத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வீடு, வாகன புனரமைப்புத் திட்டம் - Home and Vehicle Midification Program

இது ஒன்டாரியோ மார்ச் ஃப்டைம்ஸ் (Ontario March of Dimes) எனும் நிறுவனத்தால் நடத்தப்படுகிறது. இத்திட்டத்தின் வாயிலாக, நடமாட இயலாதவர்கள் வீடுகளில் பாதுகாப்பாகத் தம் அன்றாட செயற்பாடுகளைச் செய்வதற்கும், சமூக நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்கும் ஏற்ற ஏற்பாடுகளைச் செய்து தருமுகமாக அவர்களது வீடுகளையும் வாகனங்களையும் மாற்றி அமைத்துக் கொள்ள நிதியுதவி வழங்கப் படுகிறது.

இத்தகைய தேவை உடயவர்கள் இந் நிறுவனத்தைத் தொடர்பு கொள்வதானால் 1- 877 369 - 4867 என்ற தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்புகொண்டு, இலக்கம் 2 ஐ அழுத்துவதன் மூலம் இது தொடர்பான இந் நிறுவனத்தின் ஆலோசகரிடம் பேசலாம். அத்தோடு www.marchofdimes.ca என்ற இணையத் தளத்தில் இந் நிறுவனத்தின் விபரங்களை அறியலாம்.

உலகப்போரில், படைகளில் பங்கு பற்றிய முதியோருக்கு பல ஓய்வூதியத் திட்டங்களும், உதவித்திட்டங்களும், கனடா அரசாங்கத்தாலும், மற்றும் சமூக நிறுவனங்களாலும் வழங்கப்படுகிறது.

அவற்றில் சில:

ஆற்றல் குறைபாடு ஓய்வூதியங்களும் விருதுகளும்-

Disability Pensions and Awards (Veterans Affairs Canada)

Phone: 1-866-522-2122 - www.veterans.gc.ca)

இவ்வுதவிகளில் திருப்தி இல்லாதவர்களுக்காக வாதிடுவதற்கான ஓய்வூதிய வழக்கறிஞர் பணியகம்

Bureau of Pensions Advocates

Phone: 1-877-228- 2250

உலகப்போர்ப் படையினர் முதியோர் கொடுப்பனவு

War Veterans Allowance

Phone: 1866-522-2122 www.veterans.gc.ca

இராணுவத்தினருக்கான ஒன்ராறியோ உதவி ஆணையம் -

Soldiers' Aid Commission of Ontario (Royal Canadian Legion - Ontario Provincial Command.)

Phone: 905 841 7999, www.on.legion.ca

கருணை நிதியம் Benevolent Funds

Phone: 1-866-522-2122 - www.veterans.gc.ca)

எம்மவரில் உலக போரில் ஈடுபட்ட முதியவர்கள் அரிதாகையால் இது பற்றி அதிகவிபரம் தவருவதை தவிர்த்து ஏனைய முதியோர் விடையங்களைப் பற்றி பேசுவோம். அவ்வாறு யாரும் இவ்வமைப்புக்களை நாடவேண்டுமாயின் அருகே தரப்பட்ட தொலைபேசி மற்றும் விபரங்களைப் பயன்படுத்தவும்.

பொருளாதார திட்டமிடல்- Financial Planning

எமது தாயகத்தில் நாம் பொருளாதாரத்தை திட்டமிட்டு வாழ்க்கை நாடாத்துவதில்லை. அங்கு எம் சமூகத்தில் உறவுகளில் சார்ந்து வாழும் நாம் இக்கட்டான காலகட்டங்களில் அவர்களிடமிருந்து உதவிகளைப் பெற்று நெருக்கடிகளைச் சமா ளித்துக்கொள்கிறோம். முதுமை எய்திய போதும் எம்மை எம் உறவுகளும் சமூகமும் தம்மால் இயன்றவரை கவனித்து கொள்கின்றன. துரதிஷ்ட வசமாக ஒரு சிலர் நிர்க்கதியாக கைவிடப்படுவதும் உண்டு.

ஆனால் கனடாவில் எமது வாழ்க்கைமுறை வேறு. அங்குபோன்ற சமூக வாழ்க்கை இங்கில்லை. எல்லோரும் தனித் தனி வாழ்க்கை வாழ்கிறோம். ஒரே குடும்பத்துக்குள்ளேயே தனித்தனியாய் வாழ்கிற நிலையும் உண்டு. இதில் பிள்ளைகளில் பெற்றோர் தங்கியிருப்பது பல குடும்பச் சங்கடங்களுக்கு வழிகோலுகிறது. அதனால் முதுமைக் காலத்தில் நம்மைப் பேணிக்கொள்வதற்கான ஏற்பாடுகளை நாம் முன்னரே செய்து வைப்பதே விவேகம். அவ்வகையில் சில திட்டங்களை இங்கே பார்ப்போம்.

பதிவு செய்யப்பட்ட ஓய்வுகால சேமிப்புத்திட்டம் Retirement Savings Plan(RRSP)

ஆர்.ஆர்.எஸ்.பியில்பணம்இடுவதைபிரத்தியேகமாகஓய்வுகாலத்துக்கான சேமிப்புக்கான மார்க்கமாக பலர் தெரிவு செய்கின்றனர். ஆர்.ஆர்.எஸ்.பி பங்களிப்புத்தொகைவரிக்கழிவு பெறுவதுடன்அத்தொகைக்குப்பெறப்படும் வட்டிக்கும் வரி விலக்கு உண்டு. இருப்பினும் ஆர்.ஆர்.எஸ்.பியிலிருந்து அறவிடப்படும் தொகைக்கு வரி செலுத்த வேண்டும். சட்டப்படி நீங்கள் 71 வயதினை அடையும் வருடத்தின் கடைசி நாளுக்கு மேல் ஒரு ஆர் ஆர் எஸ்பியினை வைத்திருக்கமுடியாது.

பதிவு செய்யப்பட்ட ஓய்வுகால வருமான நிதியம் Registered Retirement Income Fund(RRIF)

ஆர்.ஆர். ஐ. எஃப் என்பது நீங்கள் ஓய்வு பெறும் போது உங்களுக்கு வருமானத்தை வழங்கும் ஒரு நிதியமாகும். ஆர்.ஆர் .எஸ்.பியினைப் போன்றே ஆர்.ஆர்.ஐ.எஃப் உம் ஒரு காப்புறுதி நிறுவனம் அல்லது ஒரு வங்கி போன்று உங்களுக்கும் அதனை வைத்திருப்பவருக்கும் இடையேயான ஓர் ஒப்பந்தமாகும்.

வரிவிலக்கு சேமிப்புக்கணக்கு- Tax Free Savings Account (TESA)

இந்த தனித்துவமான வங்கிக் கணக்கு உங்கள் வாழ்நாள் பூராகவும் குறிப்பிட்ட தொகை பணத்தை வரிவிலக்கோடு ஒதுக்கி வைக்க உங்களுக்கு இடமளிக்கின்றது. ஒவ்வொரு கலெண்டர் ஆண்டிலும் அவ்வாண்டிற்கான உங்கள் ரி எஸ் எஃப் ஏ, டொலர் பெறுமதி அளவு பணத்தை நீங்கள் இவ்வாறு வரிவிலக்குடன் சேமிக்கலாம். அத்தோடு கடந்த வருடத்தில் பயன்படுத்தப்பட்டபடாத ரி எஸ் எஃப் ஏ பங்களிப்பு தொகையையும் சேர்த்து இவ்வாறு சேமிக்க முடியும். இவ்வாறு சேமிப்பதால் உங்கள் ஏனய உதவித் திட்டங்ளோ நலன்கனோ பாதிக்கப்படாது. உதாரணத்துக்கு உங்களது ஓ ஏ எஸ். ஜிஐஎஸ் அல்லது ஈஐ நலன்கள் போன்ற அரசு நலன்கள் மற்றும் வரவுகள் பாதிக்கப்படாது.

வாழ்நாள் பூராவும் கற்றல் திட்டம்-Lifelong Learning Plan

இத் திட்டம் உங்களுக்கும் உங்கள் வாழ்க்கைத் துணைக்கும் பயிற்சி அல்லது கல்விக்கு கட்டணம் செலுத்துவதற்காக உங்கள் ஆர் ஆர் எஸ் பிகளிலிருந்து பணம் பெற உங்களுக்கு அனுமதியளிக்கின்றது. இத்திட்டத்திலிருந்து இந்தக் காரணத்திற்காகப் பணம் பெறும் போது உங்கள் ஆர் ஆர் எஸ் பி யினுள் அத்தொகையைத் திரும்பச் செலுத்துவதற்கு 10 ஆண்டுகள் அவகாசம் இருக்கின்றது. இவ் அநுகூலத்தைப் பயன்படுத்தும் மாணவர்கள் தாம் 71 வயதடையும் ஆண்டின் இறுதிக்குள் ஒரு கல்வித்திட்டத்தைப் பூர்த்தி செய்திருக்கவேண்டும்.

அத்தனையும் முடிவில்லா அவலப் பயணம்தான்!

ஏத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
அத்தனையும் வெறுமனே
அவலமாய் போய்முடிய
"என்று அமைதிவரும்"
என்ற உணர்வோடு
வெந்து தமிழினம்
வெறுவாய் மெல்கிறது!

இனவாதம் மதவாதம்
எல்லாமே வேரூன்றி
'நச்சூப் பொய்கையாய்'
நாடெல்லாம் சீரழிந்து
போன நிலைமையிலே
விசாரணைகள் நடக்கிறது
வெட்டித்தனமான
குரல்களால் என்ன பயன்?

மூலை முடுக்கெல்லாம்
மனிதப் படுகுழிகள்
மூச்சிழந்துபோன அரசியலே
முகமிழந்து போனதினால்
நீதிக்கே இடமில்லை;
நீதித்துறையே குடைசாய்ந்து
நிர்மூலமாகிக் குறைகுடமாய்
போயுளது!

மக்கள் சக்தி
மல்லாந்து சரிந்து வெறும்
வறுமைப் பிடிக்குள்
வகைறியா வாழ்க்கையுடன்
ஆண்ட தமிழனமே
அலைமோதி விடுதலைக்கு
ஏங்குவதை உலகம்
எடுத்தெறிந்து பார்க்கிறது

காவல் எனக்கூறி இராணுவத்தை
மூலைமுடுக்கெல்லாம்
குவித்துக் கொலை வெறியை
நாட்டும் அரசியலால்
நாடெல்லாம் மக்கள்
நடைபிணமாய் போனதுடன்
அகதிகளாய் அலையும்
அவமானம் தொடர்கிறது

நாலுதிசையிலும் நடக்கும்
காரியங்கள்
நாட்டுக்கு நல்லதல்ல;
அரசியல் இப்போது
அலட்சியப் பாதையிலே
தளர்நடைபோட்டுத்
தடுமாறும் சூழ்நிலையில்
அத்தனையும் முடிவில்லா
அவலப்பயணம்தான்!

ஆ.சி. செல்வன்



சற்குரு முட்டாள்களே அதிசயங்களை நம்புவர்

என் சிறு வயதில் யார் யாரோ நிகழ்த்திக் காட்டிய அதிசயங்களைப் பார்த்து இருக்கிறேன்.

வாழ்க்கையின் மர்மங்களைப் புரிந்து கொள்ளும் ஆர்வம் காரணமாக, ஆவிகளைப் பிடித்து பாட்டில்களில் அடைப்பதாகச் சொன்னவர்கள், பொம்மையை நடந்து காட்ட வைத்தவர்கள், கை தட்டியே முட்டைகளை உடைத்தவர்கள் என்று பலர் என் கவனத்தைக் கவர்ந்தார்கள்.

வாழ்க்கையின் கணங்களை முழுமையாகக் கவனிக்கத் தெரியாத முட்டாள்கள்தான் வேறு அதிசயங்களை நாடிப் போவார்கள். இப்படித்தான் ஒரு குறிப்பிட்ட வேப்ப மரத்திலிருந்து இனிப்பான பால் வருகிறது என்ற சேதி ஈர்த்தது. ஆயிரக்கணக்கானவர்கள் அந்த மரத்தைச் சுற்றி கூடி இருந்தார்கள். ஒரு சாரார் அதை மாரியம்மனின் அருள் என்று சொன்னார்கள். வேறு சிலரோ, யேசுவே அந்த அதிசயத்தை நிகழ்த்திக் காட்டுவதாகச் சொன்னார்கள்.

அந்த வேப்பமரத்தின் பாலைச் சுவைத்துப் பார்த்தேன். அதில் கசப்பு இல்லை இனிப்பும் இல்லை. சொல்லப்போனால், எந்தச் சுவையுமே இல்லை.

இனிப்பான பால் வந்திருந்தால்கூட, அது வேப்பமரம் செய்த தவறு என்றுதான் நினைத்திருப்பேன். அதை அதிசயமாக்கி வழிபட ஆரம்பித்துவிட்டவர்களை என்ன சொல்வது?

'கோயிலுக்குப் போயிருந்தேன். சாமி சிலை மீது வைத்த பூ தானாகவே என்னை ஆசிர்வதிப்பதுபோல விழுந்தது' என்று அதிசயப்பட்டுச் சொல்பவரைக் கவனித்திருக்கிறேன். பசை போட்டுப் பொருத்தாத பூ, புவியீர்ப்பு விசையில் கீழ் நோக்கி வருவது இயல்புதானே? அதில் பிரமிப்பதற்கு என்ன இருக்கிறது?

இதைவிடப் பெரிய அதிசயங்களை நான் கண்டிருக்கிறேன். ஒரு பொருள் திருடு போய்விட்டாலோ, குழந்தைக் காணாமல் போய்விட்டாலோ, அது அங்கே இருக்கிறது என்று சொல்லும் நபர்களையும் பார்த்திருக்கிறேன். அவர்களுக்கும், குற்றவாளிகளுக்கும் தொடர்பு உண்டோ என்று கூட யோசித்திருக்கிறேன். துப்பு கிடைக்காத வழக்குகளில், அவர்கள் உதவியை நாடி போலீஸ்காரர்களும் வந்திருக்கிறார்கள்.

பிற்பாடு இந்த நிகழ்வுகள் எனக்கும் சாத்தியம் என்று உணர்ந்தேன். ஆனால், ஒன்றிரண்டு முறை அதைப் போன்ற விஷயங்களில் ஈடுபட்டு, உயர்வான சக்தியை விரயம் செய்தபோது, எனக்கே என் மீது வெறுப்பு வந்தது. விட்டுவிட்டேன்.

அக்தர் பாபா பிழிந்த பால்.

எனக்கு 21, 22 வயது இருக்கும். அக்தர் பாபா என்பவரைச் சந்திக்கும் வாய்ப்பு வந்தது. அவர் ஒரு எலுமிச்சையைப் பிழிந்தார். அதிலிருந்து பால் வந்தது. அதை அருந்தக் கொடுத்தார். ஒரு ஸ்பூன் அளவுதான் அருந்தியிருப்பேன். அடுத்த மூன்று நாட்களுக்குப் பசியும் இல்லை. தூக்கமும் இல்லை. முழுமையாக விழித்திருந்தேன். அது என்ன என்று அவரிடம் கேட்டேன். அவர் பதில் சொல்லாமல் சிரித்தார். உண்மையில், எனக்குப் பேரதிசயமாகத் தோன்றியதெல்லாம் வேறு அம்சங்கள்.

என் பள்ளி வயதில் ஒரு கோடை விடுமுறை. என்னை அப்போது பார்த்தவர்கள் எனக்குக் கிறுக்குப் பிடித்துவிட்டது என்றே நினைத்தார்கள். ஏதாவது ஓர் எறும்பு தென்பட்டால், ஒரு பூதக் கண்ணாடியைக் கையில் பிடித்துக் கொண்டு, அதனுடன் தரையில் ஊர்ந்தே பின் தொடர்வேன். புள்ளி போல் இருந்து கொண்டு அது எப்படி அவ்வளவு வேகமாக நடக்கிறது என்று ஆராய்வதே என் வேலை. அது ஏதாவது ஓட்டைக்குள் போய்விட்டால், அடுத்த எறும்பைத் தேடிப் போவேன். சில எறும்புகளுக்கு ஆறு கால்கள் இருந்தன. சிலவற்றுக்கு எட்டு கால்கள் இருந்தன. அவற்றை எப்படி ஒருங்கிணைத்து

அவை கச்சிதமாக இயக்குகின்றன, எப்படி நினைத்த திசையில் நடக்கின்றன என்று இன்றுவரை ஆச்சர்யப்பட்டுக் கொண்டேதான் இருக்கிறேன். மனிதன் கண்டுபிடித்த எந்த இயந்திரமும் எறும்புக்குக் கிட்டேகூட வர முடியாது.

புள்ளியளவே உள்ள சிறு பூச்சிகளுக்கு எங்கே சிறகுகள் இருக்கின்றன. அவற்றை இயக்கி அவை எப்படிப் பறக்கின்றன? மரங்கள் ஏன் மேல் நோக்கி வளர்கின்றன? கையளவு மண்ணையும் நாற்றமெடுத்த சாணத்தையும் தாவரத்திடம் கொடுத்தால், அதை எப்படி நறுமணம் வீசும் ஒரு பூவாக மாற்றிக் காட்டுகிறது?

இந்தப் பூமியில் தினம் தினம் இதுபோல் நிகழ்ந்து கொண்டே இருக்கும் கணக்கில்லாத அதிசங்களைக் கண்டு இன்றைக்கும் பிரமிக்கிறேன்.

குரு தந்த விளக்கம்

ஒரு குருவிடம் சீடன், "உங்களை ஆச்சர்யப்படுத்திய அதிசயம் எது?" என்று கேட்டான்.

குரு சொன்னார், "ஒவ்வொரு விடியலிலும் பூமி புதிதாகி இருக்கிறது. அதைக் கவனிக்கத் தவறுவது நாம்தான். வாழ்க்கை உனக்கான பொக்கிஷங்களை வைத்துக் கொண்டு காத்திருக்கிறது. அது சிறு புன்னகையாகவோ, பெரிய வெற்றியாகவோ எதிர்ப்படலாம். கணத்துக்குக் கணம் உன்னைச் சுற்றியுள்ளது எல்லாம் மாறிக்கொண்டே இருக்கிறது. எது வாடிக்கையானது என்று அலட்சியமாக நினைக்கிறாயோ, அதையே முழுமையான கவனத்துடன் வேறு கோணத்தில் பார். முற்றிலும் புதிய வாய்ப்புகளும், புதிய நம்பிக்கைகளும் கொண்ட சந்தர்ப்பமாக அது மலரும்."

முழுமையான ஈடுபாட்டுடன் ஊன்றிக் கவனித்தால், இந்தப் பிரபஞ்சத்தில் சிறு சிறு விஷயம் கூட பேரதிசயம்தான். அரைகுறை மனதுடன் எதையும் நான் அணுகியது இல்லை. அப்படி வாழ்ந்து கொண்டு இருப்பதாலேயே, வாழ்க்கை ஒரு கணம்கூட எனக்கு சலித்துப் போகவில்லை.

ஆங்கிலக் கவிஞர் எலியட் 'எல்லாவற்றையும் முதல் தடவை பார்ப்பதுபோல் கவனி' என்று சொன்ன வாக்கியத்தில் நிறைய அர்த்தம் பொதிந்திருக்கிறது.

வாழ்க்கையின் கணங்களை முழுமையாகக் கவனிக்கத் தெரியாத முட்டாள்கள்தான் வேறு அதிசயங்களை நாடிப் போவார்கள்.

உண்மையான அதிசயம் எது?

ஒவ்வொரு மனிதனும் வேதனைகளற்று, அமைதியாக வாழ்வதற்கு வழி காட்டுவதுதான் இப்போது தேவையான அதிசயம். அவனையும் சுற்றி உள்ளவர்களையும் ஆனந்தமாக வைத்துக் கொள்வதற்கு வழி செய்வது, உன்னதமான அதிசயம்.

மனித சக்தியின் மேன்மையை உணராதவர்கள்தான் மற்ற சக்திகளைப் பற்றிப் பேசிக்கொண்டு இருப்பார்கள். மற்ற எந்த சக்தியைவிடவும் மனித சக்தி மிகத் தீவிரமானது. பல அதிசயங்களை நிகழ்த்தவல்லது!

நம்மவர் பக்கம்

நூல் வெளியீடுகள் நூல் வெளியீடுகள் நூல் வெளியீடுகள்

திருக்கோணேஸ்வரம் - நூல் வெளியீடு

திருக்கோணேஸ்ரம் ஆலயத்தின் வரலாறு உள்ளிட்ட தொகுப்பாக, திருகோணமலை திருகோணேஸ்வர ஆலய பரிபாலன சபையால் "திருக்கோணேஸ்வரம்" என்ற நூல்திரட்டு வெளியிடப்பட்டுள்ளது. இதன் தொகுப்பாசிரியராக கணபதிப்பிள்ளை அருள் சுப்பிரமணியம் செயற்பட்டுள்ளார். இலங்கையில் தயாரிக்கப் பட்ட இந் நூலுக்கு அண்மையில் கனடா திருகோணமலை சங்கத்தினர் கனடாவில் வெளியீட்டு விழா நடத்தியிருந்தனர்.



காலம்: செப்டம்பர் 6, 2014 மாலை 5மணி
இடம்: ஐயப்பன் கோவில் - 635 Middlefield Rd

புலம் பெயர் இளந் தலைமுறைத் தமிழர் மத்தியில் இலகுவானதும் விரும்பிப் படிக்கும் விதத்திலும் தமிழ்க் கல்வியைக் கற்பிக்குமுகமாக திரு. அருள் சுப்பிரமணியம் "தமிழ் படிப்போம்," வாசிப்போம் எழுதுவோம் (ஆண்டு 2-3) ஆகிய இரு பயிற்சி நூல்களை வெளியீடு செய்கிறார். இந் நூல்கள் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிற்கும் வகையில் ஒலியியல் முறையில் (ஃபோனிக்ஸ் முறையில்) உருவாக்கப் பட்டுள்ளன. வீட்டிலிருந்தே கற்க உதவுவன. ஆங்கலப் பொருள் விளக்கமளிக்கப் பட்டுள்ளதால் இலகுவில் புரிந்து கொள்ளவும், சொற்கள் அசைகளாகப் பகுத்துக் கற்பிக்கப் படுவதால் இலகுவாக வாசிக்க- எழுதக் கூடிய விதத்திலும் சிரத்தையெடுத்துத் தயாரிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கிறார் நூலாசிரியர்.





சங்க நிகழ்வுகள் சங்க நிகழ்வுகள் சங்க நிகழ்வுகள்

பொக்ஸ் குரோவ் முதியோர் நலன்புரிச் சங்கம்


மார்க்கம் மாநகரில் 9th & 14th line க்கு அண்மையிலுள்ள "Box Grove Seniors Community wellness Club" உறுப்பினர்கள் படத்தில் காணப்படுகின்றனர். இப்பகுதியில் வாழும் முதியோர்களின் நலன் கருதி கடந்த வருடம் அக்டோபர் மாதம் பதினைந்து அங்கத்தவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த முதியோர் மன்றம் முதியோர்களுக்கான அத்தியாவசிய சேவைகளை வழங்கி துரிதமாக வளர்ச்சி அடைந்து வருகின்றது. இதன் காரணமாக அதன் அங்கத்தவர்களின் எண்ணிக்கை இன்று எழுபத்தி மூன்றாக அதிகரித்துள்ளது.





நிதியுதவி படக்காட்சி

கனடா - நாவாந்துறை சென் மேரிஸ் கிளையின் நிதியுதவிக்காக தெனாலிராமன் திரைப்படம் 2014 புரட்டாதி 6ம் திகதி பிற்பகல் 1மணிக்கு வூட்சைட் சினிமா திரையரங்கில் காண்பிக்கப் படவுள்ளதென அதன் அமைப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். டிக்கெற் 5 டொலர் டிக்கெற் வாங்குவதன் மூலம் இந் நிதியுதவிக்குப் பங்களிக்கும்படி கேட்டுக் கொள்கின்றனர்.



இரண்டு தசாப்தங்களின் பின்னர் யாழ்தேவி ரயில், யாழ்ப்பாணத்திற்கான பயணத்தை ஒக்டோபர் மாதம் மீள ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ரயில்வே திணைக்களம் குறிப்பிடுகின்றது.

ஒக்டோபர் மாதத்தின் இரண்டாம் வாரத்தில் யாழ்ப்பாணம் நோக்கி யாழ்தேவி பயணத்தை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் கூறினார்.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ரயில் தண்டவாளங்கள் மற்றும் நவீன சமிக்ஞை கட்டமைப்புகளின் பணிகள் முடிவடையும் தறுவாயை எட்டியுள்ளதாகவும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டினார்.

புதிய ரயில் பாதையின் பணிகள் பூர்த்தியடைந்த பின்னர், மணித்தியாலத்திற்கு 120 கிலோமீற்றர் வேகத்தில் பயணிகள் இலகுவாக யாழ்ப்பாணத்திற்குப் பயணிப்பதற்கான வாய்ப்பு கிட்டியுள்ளது.

இந்த புனரமைப்புப் பணிகளுக்காக இலங்கை மத்திய வங்கி 85 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதுடன், இந்திய அரசாங்கம் கடனுதவி மற்றும் தொழிநுட்ப உதவிகளையும் வழங்கியுள்ளது.

யாழ்தேவியின் கதை...

யாழ்தேவி என்பது ஒரு காலத்தில் ஒவ்வொரு யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கையிலும் பிணைந்திருந்தது. வடக்குத் தமிழர்களின் வாழ்வில் ஒன்றாக கலந்திருந்தது.

ஆனால் 90ம் ஆண்டுக்கு பிந்திய இளைய சந்ததிக்கு இது பற்றி தெரிந்திருக்க வாய்ப்பில்லை. 90ம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்கான சேவையை யாழ்தேவி நிறுத்த நேர்ந்தது.

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான உறவுப் பாலமாக யாழ்தேவி இருந்தது. இது ஒரு கடுகதி ரயில்.

இதன் வரலாறும் மிக வேகமானதுதான்.

பிரித்தானியர் ஆட்சியில் இலங்கை இருந்தபோது முதன்முதலாக 1864 ஆம் ஆண்டு ரயில் சேவை இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது.

ஆனால் 1902 ஆம் ஆண்டுதான் யாழ்ப்பாணத்துக்கு ரயில் வரத் தொடங்கியது. சாமான்களை காவும் குட்ஸ் ரயிலும், கடிதங்களை கொண்டு வந்து சேர்க்கும் மெயில் ரயிலும் இவற்றில் அடக்கம்.

மெயில் ரயில் ஆமை வேகத்தில் நகர்ந்து வரும். ஒவ்வொரு புகையிர நிலையத்திலும் நின்று கடிதப் பொதிகளை ஏற்றி வரும் என்பதால் இந்நிலை. பின்னேரம் 05.00 மணிக்கு காங்கேசன்துறையில் இருந்து புறப்படுகின்ற மெயில் ரயில் கொழும்பை வந்து சேர மிக அதிக நேரம் எடுத்து விடும். இது பிரயாணிகளுக்கு பலத்த எரிச்சலை கொடுத்து வந்தது.

இச்சிரமங்களைத் தவிர்ப்பதற்காகத்தான் 1956 ஆம் ஆண்டு யாழ்தேவி ஆரம்பிக்கப்பட்டது. மிக வலுவான எஞ்சின்கள் கனடாவில் இருந்து வரவழைக்கப்பட்டன. இதன் முதல் பயணம் மிகவும் உணர்வுபூர்வமயனது. பிரிட்டனிடம் இருந்து இலங்கை சுதந்திரம் அடைந்து எட்டு வருடங்கள். ஆனால் அப்போதே இன முறுகல்கள் முளைத்து விட்டன. இதனால் இரு இனங்களுக்கும் இடையில் ஐக்கியத்தையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்துகின்ற அறைகூவலாக யாழ்தேவி நேர்மையான சிங்கள அரசியல்வாதிகளால் குறிப்பாக இடதுசாரிகளால் பார்க்கப்பட்டது. குறிப்பாக This is Life line of this country என்று யாழ்தேவியின் அறிமுகத்தை மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்றார் முக்கிய இடதுசாரித் தலைவர்களில் ஒருவரான பீற்றர் கெனமன்.

யாழ்தேவி தொடங்கப்பட்ட காலத்தில் ரயில்வேயின் பிரதம முகாமையாளராக இருந்தவர் ரம்பல என்பவர். அதன் பின் கே. கனகசபை இப்பதவியில் இருந்தார். இவர் யாழ்தேவியை மெருகூட்டினார். அக்காலத்தில் ரயில் வேயில் அதிக வருமானத்தை உழைத்த பெருமையையும் யாழ்தேவி பெற்றது. இலங்கைப் பிரதமராக இருந்த தஹநாயக்க யாழ்தேவியில் பயணம் செய்து அவரின் நெருங்கிய நண்பர்களில் ஒருவரான சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி அதிபர் ஒரேற்றர் சுப்பிரமணியத்தின் வீட்டை வந்தடைந்துள்ளார். தந்தை செல்வா யாழ்தேவியில் பயணித்துத்தான் கொழும்பைச் சென்றடைவார்.

கொழும்பில் மதியச் சாப்பாட்டை சாப்பிட்டு யாழ்தேவியில் ஏறினால் இரவுச் சாப்பாட்டை யாழ்ப்பாணத்தில் வீட்டில் சாப்பிடலாம். தென்னிலங்கைக்கு வேலை வாய்ப்புக்களை பெற்றுச் சென்ற தமிழ் இளைஞர்கள் மற்றும் யுவதிகள் வெள்ளிக்கிழமைகளில் திரும்பி வந்து மீண்டும் ஞாயிறு புறப்பட்டு திங்கட்கிழமை வேலைக்கு செல்கின்றமை வழக்கமாக இருந்தது.

யாழ்தேவியில் சந்திக்கின்ற இளைஞர்களும், யுவதிகளும் பிரயாண இடைவெளியில் பேசிப் பழகி, காதல் கொண்டு பின்னர் வீட்டாரின் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்ட சுவாரஸ்யங்கள் பல. யாழ்ப்பாணத்தை யாழ்தேவி வந்தடைந்ததும் முட்டி மோதும் போட்டர்களும், டக்ஸி ஓட்டுனர்களும், சிற்றுண்டி மற்றும் கடலை வியாபாரிகளும்... அப்பப்பா எத்தனை பேர். எத்தனையோ குடும்பங்களுக்கு இவ்விதம் வாழ்வாதாரமாகவும் இருந்தது யாழ்தேவி.

இலங்கையில் இருந்த மற்றய ரயில்களுடன் ஒப்பிடுகையில், யாழ்தேவி பல விதங்களில் வித்தியாசப்பட்டு இருந்தது. பயணிகளுக்கு பரிமாறிய உணவுகள் யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய உணவுகள். இவற்றின் தரமும், சுவையும் எப்போது நேர்த்தியாக பேணப்பட்டு வந்தன. யாழ்தேவி கடந்து செல்கின்ற பாதைகளில் பத்து நிமிடங்கள் வரைகூட கம கம சாப்பாட்டு வாசனை இருக்கும். யாழ்தேவியின் பணியாளர்கள் நேர்த்தியான உடையுடன் காணப்படுவார்கள். மற்றய ரயில்களின் பணியாளர்களின் சேவைத் தூரம் அதிக பட்சம் அநுராதபுரம்தான். அதற்கு அப்பால் வேறு பணியாளர்கள் பொறுப்பெடுப்பார்கள். ஆனால் யாழ்தேவியின் பணியாளர்கள் யாழ்ப்பாணத்தில் தொடங்கிய வேலையை கொழும்பில்தான் நிறைவு செய்து கொள்வார்கள். பயணிகளின் தேவைகளை உணர்ந்து, உடனுக்குடன் நிறைவேற்றுபவர்களாக இவர்கள் காணப்பட்டமை ஆச்சரியமான உண்மை.

கொழும்பு கோட்டையில் இருந்து புறப்படுகின்ற ரயில் 256 மைல்களைக் கடந்து யாழை அடையும். ராகம, பொல்கஹவெல, குருநாகல், மாஹோ, அநுராதபுரம், மதவாச்சி, வவுனியா, ஆனையிறவு, யாழ்ப்பாணம் ஆகியவற்றை வந்தடைந்து நிறைவாக கே.கே.எஸ். என்கிற காங்கேசன்துறையில் பயணத்தைப் பூர்த்தி செய்யும்.

யாழ்தேவி எஞ்சினின் உறுமல் சத்தம் வலிகாமத்தில் இருந்த வீடுகளுக்கு மிகவும் பரிச்சயமானது. மீண்டும் யாழ்தேவி புதுப் பொலிவுடன் காங்கேசன்துறை வரும் நாள் தொலைவில் இல்லை.

யாழ்தேவி பாடல்


யாழ் தேவி ரெயில் ஏறி வருவேனே உனை தேடி
பெண்ணே உன் முகம் காணவே
சுன்னாக மின்சாரம் கள்ளூறும் உன் கன்னம்
அதில் ஊர்வேன் எறும்பாகவே
முல்லை பூக்காரி என் கை சேர வா நீ
காங்கேசன்துறை பக்கம் போவோமடி அங்க
பனந்தோப்புக்குள்ள ஒடியல் கூழ் காய்ச்சி
அத ஒன்றாக ஊத்தி நீ தாடி பிள்ள
நீ தாவணி சோலை கிளி
இந்த மச்சானின் மல்லி கொடி

காரை நகரில் மாலை வயலில்
கண்ணாம் புச்சி விளையாடினோமே
சாரல் மழையில் வாழை இலையை
குடையாய் பிடித்து நனைந்தோமடி
உன் கூந்தல் துளி போதும்
என் வாழ்வின் தாகம் தீரும்
உன் சேலை நுனி போதும்
என் ஜீவன் கரை சேரும்
கொடிகாமம் மாந்தோட்டம் போவோமடி அங்க
தோள் சாய்ந்து புளி மாங்காய் தின்போமடி
நீ வாய் பேசும் வெள்ளி சிலை
உன் அழகிற்கு இல்லை விலை

வல்லை வெளியில் பிள்ளை வயதில்
துள்ளி முயலாய் திரிந்தோமடி
ஈச்சம் காட்டில் கூச்சம் தொலைத்து
லட்சம் முத்தம் பகிர்வோமடி
உன் ஒற்றை மொழி போதும்என் நெஞ்சில் பூக்கள்
உன் கத்தி விழி போதும்என் ஆயுள் ரேகை நீளும்
உன் காதல் என்ற சிறையில்நான் ஆயுள் கைதி ஆனேன்
உன் சுவாசம் நீங்கும் வரையில் நான் சுவாசம் கொண்டு வாழ்வேன்
நாம் ஊர்விட்டு ஊர் சென்று வாழ்ந்தாலும்
யாழ் மண் வாசம் மனம் விட்டு போகாதே
யாழ் தேவி ரெயில் ஏறுவோம்
எங்கள்இதயத்தின் மொழி பேசுவோம்

-சதீஸ்
(யாழ்தேவி இசைத் தொகுப்பிற்காக)




Mayas Furniture
அனைத்து தளபாடங்களும்,
சோபாக்களும் மலிவு விற்பனை
தொடர்புகளுக்கு:- 416 669 1214
MATRESSES
UPTO 50% OFF
Posturepedic
7 zone latex
இப்பொழுது சர்வதேச பணமாற்று
சேவையும் வழங்கப்படுகின்றது